BILINGUAL FORTNIGHTLY

ஒரு பேப்பர்
ORU PAPER

Paper - 04 Issue - 78 07 Friday September 2007 விற்பனைக்கல்ல

• நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
• வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
• உங்களுக்கு தேவையான **Tax Advice,** வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை **Accountancy Services**களுக்கும் நாட வேண்டிய இடம்...

Forward Consultants
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052



தேடினாலும் கிடைக்காது!

VISION
TRAVEL & TOURS
உலகின் அனைத்து இடங்களுக்கும் மலிவான விலையில் பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு.....
SHIPPING | TRAVEL & TOURS | AIRFREIGHT TO WORLDWIDE
Part of Serendip Lanka Travels
Tel : 020 8772 7991-2 Fax : 020 8772 7993

EuroDebt
08001218193
07949455366
24 மணி நேர இலவச அழைப்பு
கடனில் இருந்து விடுபட ஒரு வழி தேவையா?
வீட்டு உரிமையாளரோ அல்லது வாடகைக்கு வசிப்பவரோ எவராயினும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம். உங்கள் கடனில் இருந்து நீங்கள் மீள இலவச ஆலோசனைகளும், அபிப்பிராயங்களும் எம்மால் வழங்கப்படுகின்றன.

Coffee Cascadee & Sri Lankan Takeaway
100 இடியப்பம், சொதி, சம்பல் £ 16.00
£15.00 அதிகமான order செய்தால் 2 Mileக்குள் Free Delivery
134 Forest Road, Walthamstow
London E17 6JQ
தொடர்புகளுக்கு:
Eesan(Uma) 077 8973 5057
020 8257 1030

ABBEY TRAINING. NET
- OFF Licence/ Restaurant வியாபாரத்தில் ஈடுபடுவதற்கும் அனைவருக்குமான Personal Licence எடுத்து தருவோம் அத்துடன்
- NCPLH CERTIFICATE COURSE
- Supervisor Course For OFF Licence and Restaurants (DPS)
- உங்கள் வியாபார ஸ்தாபனத்துக்கான புதிய off licence / restaurant premises licence எடுத்து தருகிறோம்.
- LIFE IN THE UK - பிரித்தானிய பிரஜா உரிமைக்கான வகுப்புகள்
- எல்லா Course களையும் தகுதிவாய்ந்த விரிவுரையாளர்களுடன் நடத்துகிறோம்.

38 London Road, Tooting SW17 9HP
தொடர்புகொள்ள: Thavanessan
020 8640 9908 / 07956 913 164 / 07960 665 575

RAJA& CO SOLICITORS
10 Upper Tooting Road, Tooting Bec
London SW17 7PG
Tel: 020 8772 4900 Fax: 020 8682 9425
We provide following Legal Services:
Conveyancing:-
Buying and Selling
Houses Flats & Business
Criminal Cases
Civil Litigation
Family
Immigration
We hold Legal Aid Franchise in Immigration & Crime

தமிழும் PARTY SERVICES BEST DECORATIONS
பிறந்த நாள் விழாவிற்கு Balloon Decorations செய்து தரப்படும்.
We are specialist in Manavarai & Hall Decorations
Chair for Hire, Photos & Video, சப்பரம், சிறுவண்டி
DJ for all occassions
Next Day Delivery
Contact: RAHU
Tel: 020 8552 9336 | Mob: 07957 632 656
342 High Street North, Eastham, London E12 6PH

Mortgagelink
The National Mortgage Network
எந்தவிதமான Deposit இல்லாமல் வீடு வாங்கவேண்டுமா?
இலண்டனிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் புதிதாக கட்டப்படும் வீடுகள் வாங்க விரும்பினால், 5% Deposit + Stamp Duty £2000 அளவில் வீடுகட்டுபவர்களிடமிருந்து வெற்றுக் கொடுப்போம். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
Mob: 07930 626 585 | Tel: 020 8946 5566
Your home is at risk if you do not keep up repayments on a mortgage or other loans secure on it.

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
Had an accident – Not your fault
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட....
- Personal Injury Compensation (eg. back, neck & Shoulder pain etc)
- Repair / Total Loss Value of your vehicle
- Loss of Earnings
- Hire Care for Mini Cab Drivers
- Replacement Car = Credit Hire (terms & Conditions apply)

Your Premium will not be affected
NO WIN - NO FEE
Tel: 020 8665 7667 Fax: 020 8684 7177
Mob: 07950 953 514 Call Free: 0800 032 6798

Key to Success
Wishing to buy a business? Or Selling your business?
We can also arrange business finance for freehold & leasehold purchases or Re - Mortgages upto 85% loan to values.
We specialise in Commercial Sales
Business urgently required selling in confindence, strictly no sale no fee & no upfront charges.
32 High Street, Ewell Village, Surrey KT17 1RW
Tel: 020 8942 1235 / Mob: 07957 594 881 /
Fax: 020 8942 1234

ஒசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

Specialist in
Residential Mortgages
100%
Commercial Mortgages
Leasehold + Freehold

Looking to
Invest in Sri Lanka
"Good Time to Buy"
New + Old Properties | Finance arranged

ANGELS
+ Mortgages + Loans
+ Letting Management
+ Insurance + Building Insurance
Properties and Financial Services Ltd.

தொடர்புகளுக்கு: சரஸ்வதி ராமையா
74 Lee High Road, Lewisham SE13 5PT
Tel: 020 8852 1683 / Fax: 020 8852 1621
Email:info@ angelsproperties.co.uk / Web: www.angelsproperties.co.uk

South London Tamil Welfare Group
தெள் லண்டன் தமிழர் நலன் நிறை அமைப்பு
Enhancing the quality of life of tamil community

வேலை தேடுவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

தமிழர்களுக்கான இலவச வேலை வாய்ப்புப் பயிற்சி. உங்களுடைய திறமைகளுக்கேற்ப ஆழ்ந்த பயிற்சியை வழங்கி, உங்கள் வேலை வாய்ப்புத்திறனை மேம்படுத்த உதவுகிறோம்.

- வேலை தேடுதல்
- CV தயாரித்தல்
- நேர்முகத் தேர்வுக்கான பயிற்சி
- ஆங்கிலம்
- கணணி

முதலியவற்றில் பயிற்சிகள் அளிக்கப்படும்
மேலதிக விபரங்களுக்கு இம் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

Tel: (HQ) 020 8542 3285 or (Mob) 07880 926 805.

South London Tamil Welfare Group
Ambassador Suit 3
Justin Plaza 3
341 London Road
Mitcham, Surrey CR4 4TY

Supported by LONDON DEVELOPMENT AGENCY

தரிசனம்
உலகத் தமிழரின் உணர்வுகளை
ஒளிப்படுத்த ஒரு தொலைக்காட்சி

Tharisanam TV : Europe
TUNING PARAMETERS
Satellite Name : Eutelsat HotBird (13oE)
Frequency : 11.470 GHz
Polarization: Vertical
Symbol Rate : 27.500
FEC: 5/6
www.tharisanam.tv

தரணியெங்கும் தமிழ் ஒளி பரவிட...

Further details:

020 8920 2111

மதுரம்

தமிழன் என்று சொல்லடா
தலைநிமிர்ந்து நில்லடா..

TBO Tamil Box Office movie channel.
Mathuram TV is a new tamil television channel for the Europe!
Information can be found on
www.mathuramtv.tv

Special Introduction Offer
£99*
*Conditions apply

72 Chase Side, Southgate, London N14 5PH Fax: 020 8886 7508

புலவு

தமிங்கிலத்துக்கு விடைகொடுங்கள்

பெயரைத்தான் தமிங்கிலத்தில் வைத் துள்ளீர்கள் என்றால் பிரசுரிக்கும் ஆக்கங்களிலும் ஆங்கிலத்தை தாராளமாய் கலந்துள்ளீர்கள். இதன் மூலம் தமிழ் மொழிச் சீரளிவுக்கு வழி கோலியுள்ளீர்கள் எனக் குற்றஞ்சாட்டுகிறேன். இதனைத் திருத்தாவிடின் ஒரு பேப்பர் ருக்கு எதிராக போராட்டம் நடாத்த வேண்டிவரும்.

— கேதீஸ்வரன்

ஆதரம் உண்டா?

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஒதுவது தான் உண்மையான பக்தி. இங்க காசு பண்ணுறதுக்காக தேர் எண்டும் திருவிழா எண்டும் அதைக் 'காணிவல்' ஆக்கி விட்டாங்கள். அதை நினைச்சு வயிறெரிஞ்சு கொண்டிருக்கிறம்.

அது காணாதெண்டு உதைப் பெரிசுபடுத்தி படம் எடுத்து அதைப் பத்திரிகையிலும் போட்டு எங்கட வயித்தில எரியிற நெருப்பில எண்ணைய் வாக்கிறியள்.

வாயிலை வேலைக் குத்திக் கொண்டு கரடுமுரடான , நிலத்திலை கிடந்து உருண்டாத்தான் கடவுள் கருணை காட்டுவார் எண்டு எங்கையாச்சும் தேவாரம் திருவாசகத்திலை சொல்லி யிருந்தா எனக்கும் காட்டுங்கோ. நானும் சேர்ந்து ஆடுறன்.

-பக்தன்

தேரோடும் வீதிகள்

போகிற போக்கைப் பார்த்தால் ஒரு காலத்திலை லண்டன் றோட்டு களிலை கார்களை விட தேர்கள் தான் ஓடும் போல தெரிகிறது.

எனக்குப் பழைய பாடல் ஒன்று ஞாபகம் வருகிறது. அதை மாற்றிப் பாட வேண்டும் போலத் தென்படுகிறது. தேரோடும் லண்டனிலே ....

— ரவீந்திரன்

லண்டனில் ஒசிப்பேப்பர்கள்

உங்களை மாதிரி ஆக்கள் பேப்பர் அடிக்கத் தொடங்கியதாலோ என் னவோ கனடாவைப்போல இங்கும் இலவசப் பத்திரிகைகள் அதிகரித்து விட்டன. சில பத்திரிகைகளோ இலவசமாய் விளம்பரங்களையும் பிரசுரிக்கத் தொடங்கி விட்டன. பத்திரிகை அச்சடிக்க பணத்தை எப்படி புரட்டுகிறீர்கள் என்றுதான் தெரியவில்லை.

— சிவக்கண்ணன்

வரம் பெற்ற எழுத்தாளர்

அழகு தமிழில் அளவாய் நகைச்சுவை கலந்து ஆக்கங்களைத் தரும் பாலச்சந்திரன் அண்ணையை மீண்டும் ஒரு பேப்பர் ரில் கண்டதில் மகிழ்ச்சி.

பேனாவும் பேப்பரும் கையில் கிடை த்து விட்டால் யாரும் எழுதலாம். ஆனால் அடுத்த ஆக்கம் எப்போது வரும் என்று வாசகர்கள் எதிர்பார் க்கும் விதமாக எழுதுவதென்பது ஒரு கலை. ஏன் வரமென்று கூடச் சொல்லலாம். அந்த வரம் பாலா அண்ணைக்கு வாய்த்திருக்கிறது. அவரிடமிருந்து அதிக அளவான ஆக்கங்களைப் பெற்றுப் பிரசுரிக்க வேண்டியது ஒரு பேப்பர் ரின் பொறுப்பு. சரியா

— கமலராணி

அழகான கட்டுரை

சென்ற ஒரு பேப்பர் ரில் சிநேகிதி வெளி நாடுகளிலுள்ளவர்களிடம் ஊரில் இருப்பவர்கள் பணம் பறிக்கும் விதத்தினையும் தாய் தன் தாயைப் பராமரிக்கும் விதத்தினையும் கிளறிக் கிளறிப் புட்டுக் காட்டியிருந்தார். நூற்றுக்குநூறுவீதம் உண்மையான கருத்து. அதுமட்டுமன்றி பிள்ளைகள் வெளிநாடுகளில் படும்பாடு பற்றியும் விரிவாக எழுதியிருந்தார்.

ஆனால் சிறு குறை. அவரது எழுத்து நடை சிறிது நெருடலாக அமைந்திருந்தது. மகள் தாய் தகப்பனுக்கு எழுதும் போது நீங்கள் உங்களுக்கு என மரியாதையாக எழுதியிருக்கலாம்.

— சிவராசா

சபேசனின் கட்டுரைகள்

ஒரு பேப்பர் ரில் வரும் வி..சபேசனின் கட்டுரைகள் அருமை. அவரது இயல்பான எழுத்து நடையில் அரசியல் விடயங்களை இலகுவில் விளக்குகிறார். அவர் போன்ற வர்களின் ஆக்கங்களை தொடர்ந்து பிரசுரியுங்கள்.

— ரமணா

சினிமாப் பேப்பரா?

வரவர ஒரு பேப்பர் சினிமாப் பேப் பராக மாறிக் கொண்டு வருகிறது. சென்ற இதழில் கடைசிசினிமாப்பக்க ங்களைத் தவிர இன்னும் 15,16, 20,45ம் பக்கங்களில் மேலும் சினிமா பற்றிய விடயங்கள் உள்ளன. தர மான வாசகர்களுக்காக ஒரு பேப்பர் ரை வெளியிடுங்கள்.

சினிமாவுக்கென தென்னிந்தியாவிலி ருந்து ஏராளமான பத்திரிகைக் வெளிவருகின்றன. நீங்கள் ஒரு வித்தி யாசமான பத்திரிகையாக இருக்க முயற்சி செய்யுங்கள்

— அன்ரன்

சனி மாற்றம்

சனி மாற்றம் குருப்பெயர்ச்சி போன்ற விடயங்களை உங்கள் பத்திரிகையில் ஏன் பிரசுரிப்பதில்லை?

அதனையும் பிரசுரித்து என் போன்ற சனிபகவான் பக்தர்களை குளிர்ச்சிப்படுத்துங்கள்.

நான் சொல்வது முன்பெல்லாம் இதுகளைப் பற்றி நக்கலாய் எழுது வீர்கள் அதைத்தான் திரும்பவும் பிரசுரியுங்கள்.

— சனியன்தாசன்

ஆங்கிலம் வேண்டாம்

தமிழ்நாடு ஆங்கில நாடாக மாறு கிறது என அங்குள்ளோர் புலம்பு வதுடன் கவிஞர் காசி ஆனந்தனும் இரத்தக் கண்ணீர் வடிக்கிறார்.

அதே போல ஒரு பேப்பர் ரும் போற போக்கைப் பார்த்தால் தனி ஆங்கிலப் பத்திரிகையாக மாறும் போலும்.

அத்துடன் சிலர் ஆங்கில விடயங் களைக் கூட்டும் படியும் ஆலோசனை கூறுகின்றனர். இதற்கு யாரைக் கட்டி அழ என் யோசிக்கின்றோம்.

சிலர் தமது பெயர்கள் அடிபடு வதற்கும் மதிப்புக்கும் கண்டதையும் கூறுகின்றனர். அதையெல்லாம் காதிலை வாங்கிக் கொள்ள வேண்டாம்.

— சிவராசா

ஏனிந்த ஆராய்ச்சி

யார் இந்த ரஜனிகாந்? கர்நாட காவிலிருந்து பஞ்சம் பிழைக்க தமிழ்நாட்டிற்கு வந்த ஒருவர்.

அவரைப் பற்றி பக்கம் பக்கமாக ஆராய்ந்து என்ன தான் சாதிக்கப் போகிறீர்கள். வெகுவிரைவில் 'ஒரு சினிமா' எடுக்கும் எண்ணம் எதாவது இருக்கிறதா?

தயவு செய்து புலத் தமிழருக்குப் பிரயோசமான ஆக்கங்களுக்கு முக் கியத்துவம் கொடுக்கும் ஆக்கங் களுடன் பத்திரிகையை வெளியிடும் படி கேட்டுக் கொள்கிறேன்.

— இமயவன்

நல்லாப்போகுது

ஊரில இருக்கிற எல்லாருக்கும் பிடிச்ச பேப்பர் உங்கட பேப்பர் தான். மூண்டு நாலு வருசமா தொடர்ந்து நிக்காம நடுங்காம வாறதும் உங்கட பேப்பர்தான்.

வரவர பக்கம் ஏத்திக் கொண்டும் போறியள். நல்ல விசயம். இன்னும் நீங்கள் வளர கடவுளை வேண்டுறன்.

— தேவகி

லா சப்பலில் லைலா

லாசப்பலில் லைலா

அரோகரா அரோகரா வழிக்கு அரோகரா. என்ன இடம் மாறி வந்திட்டன் எண்டு யோசிக்காதையுங்கோ போன ஞாயிற்றுக்கிழமை பாரிஸ் பிள்ளையார் கோயில் தேரல்லோ அங்கை போனனான் அதுதான் அண்டைக்கு சனம் சொன்ன அரோகரா சத்தம் இன்னமும் காதை விட்டு போகேல்லை

அது மட்டுமில்லை பிரான்சிற்கு ஒரு பேப்பர் வர தொடங்கி ஒருவருசம் ஓடிட்டுது அதுக்கும் சேத்துதான் அரோகரா சொன்னனான். திருவிழாவுக்கு ஒரு பேப்பர் காரங்களும் வந்தவை பேப்பர் காரியளை தேடிப்பாத்தன் ஒருத்தியையும் கண்ணிலை காணேல்லை ஏன் வரேல்லையெண்டு தெரியேல்லை. ஆனாலும் ஒரு பேப்பர் ரை கண்டதும் சனம் இந்தா ஒரு பேப்பர் எண்டு வந்து எடுத்து கொண்டு போனதை பாத்தால் ஒரு வருசத்திலை பிரான்சிலை அனேகமான தமிழ் மக்கள் தங்கடை தேவையளிற்கு ஒரு பேப்பர் ரை பாவிச்சிருக்கினம் எண்டு விளங்கிச்சிது அதே நேரம் கட்டாயம் படிச்சும் இருப்பினம்தானே.

இந்த வருசம் தேருக்கு முந்தின வருசங்களை விட கனக்க வெள்ளை காரரும் வந்திருந்திச்சினம் காரணம் அவையளுக்கு எங்கடை தேர்த்திருவிழா ஒரு காணிவேல் மாதிரி வேடிக்கை பாக்கிற ஒரு நிகழ்வு மாதிரி போச்சுது.மேளதாளத்திற்கு ஒரு வெள்ளைக்காரி ஆடின ஆட்டம் இருக்கே பாக்க ஆயிரம் கண்வேணும் ஆனால் அங்கை வந்த அத்தனையாயிரம் கண்ணும் அவாவைத்தான் பாத்தவை.

இதே ஒரு தமிழர் ஆடியிருந்தா அவருக்கு சாமி வந்திட்டுதெண்டு யாராவது அருள்வாக்கு கேட்டிருப்பினம். தேர்த்திருவிழா முடிஞ்சுறோட் டிலை உடைச்சு கிடந்த கொஞ்ச தேங்காயை பொறுக்கி கொண்டு வீட்டை போய் ஒரு சம்பல் அரைச்சு சாப்பிடுவம் எண்டு வெளிக்கிட ஒரு கொஞ்சப்பேர் காரிலை வந்து வாளோடை இறங்கிச்சினம். ஊரிலை தேர்முடிஞ்சு அடுத்தநாள் தீர்த்தம் முடிய பின்னேரமளவிலைதான் வாழைவெட்டு திருவிழா நடக்கிறது வழமை.ஆனால் இஞ்சை தேரண்டே வாழை வெட்டபோகினமாக்கும் அதையும் பாத்திட்டு போவம் எண்டு நிண்டால்,வந்தவை வாழை வெட்ட வரேல்லை ஆளை வெட்ட வந்தவையாம் ஏதோ கோஸ்ரி சண்டையாம் எண்டு பிறகுதான் தெரிஞ்சுது.

என்ரை பிள்ளையாரே உன்னட்டை உடைச்ச தேங்காய்ச் சொட்டு பொறுக்க வந்த இடத்திலை லைலாக்கு வந்த சோதனையா எனக்கு மல்லோ மாறி வெட்டு விழ போகுதுதெண்டு பயத்திலை கண்ணை மூடி பிள்ளையாரே காப்பாத்து எண்டு கும்பிட என்ன அதிசயம். பிரான்சிலை தமிழாக்களின்ரை நிகழ்வுகள் எல்லாத்திலையும் இப்பிடி ஏதாவது நடக்கும் எண்டு தெரிஞ்சு காவல் நிண்ட பாரிஸ் பொலிஸ். வாளோடை வந்தவையை பாய்ஞ்சு பிடிச்சு கொண்டு போட்டுது. என்னை காப்பாத்தினது கடவுளா காவல்துறையா எண்டு பட்டி மன்றம் நடத்தாமல் இரண்டு பேருக்குமே மனசுக்கை நன்றி சொல்லிபோட்டு வெளிக்கிட்டன்.

ஆனால் போராலை பாதிச்ச எங்கடை சனத்தை காப்பாத்த உதவின பதின்நாலு மனிதாபிமான பணியாளர்கள் இலங்கை அரசாங்கத்தின்ரை பொய் பிரச்சாரத்தாலை பிரான்சிலை கைது செய்யப்பட்டிருக்கினம் எண்டது எல்லாருக்கும்தெரியும்.

அவையின்ரை விடுதலையை வேண்டி எங்கடை பக்க நியாயத்தை பிரான்ஸ் மக்களுக்கும் பிரான்ஸ் அரசாங்கத்துக்கும் சொல்லுறத்துக்கு இந்த மாதம் 12ம் திகதி பாரிசிலை ஒரு ஒன்றுகூடல் ஒண்டை நடத்த சில தமிழ் அமைப்புகள் முடிவெடுத்திருக்கினம் அதுக்கான ஒரு பிரசுரமும் அங்கை குடுத்தவை அனுமதி இன்னமும் கிடைக்கவில்லையெண்டாலும் கட்டாயம் கிடைக்கும் எண்டு நம்பிக்கை இருக்கு அது பற்றின விபரங்கள் கட்டாயம் உங்களை வந்தடையும்

தமிழர் ஒவ்வொருத்தரும் கட்டாயம் கலந்து கொள்ளவேண்டிய நிகழ்வு எண்டபடியால் நானும் கட்டாயம் வருவன் நீங்களும் வாங்கோ அங்கை சந்திப்பம்

- அன்புடன் லைலா

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, SEPTEMBER 07, 2007, ISSUE 78

பொருண்மியத்தை ஆயுதமாக்குவோம்!

'தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பற்றி தான் அறிந்திருந்தும் சிங்கள மக்களின் வாக்குக்களே தனக்கு முக்கியமானவை. எனவே அவர்களுக்கு ஏற்புடைய தீர்வொன்றைப் பற்றி மட்டுமே தன்னால் சிந்திக்க முடியும்' எனவும் 'சமஸ்டி முறைமை என்பது சிங்கள மக்களுக்கு கெட்ட வார்த்தை போலிருப்பதால் அதுபற்றி தான் அக்கறைப்படவில்லை' எனவும் திரு. மகிந்த இராஜபக்ச இந்திய ஊடகமொன்றிற்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். இது போன்ற கருத்துக்களை முன்பிருந்த சிங்களத் தலைவர்களும் பூடகமாகத் தெரிவித்து வந்திருக்கிறார்கள். ஆனால் சிங்கள மக்களின் உண்மையான நிலைப்பாட்டை வெளிப்படையாகத் அறிவித்திருக்கும் மகிந்த பாராட்டுக்குரியவர். 2005ம் ஆண்டில், அவர் பதவியேற்ற சிலகாலத்தில், அவரை ஒரு யதார்த்தவாதி என திரு. பிரபாகரன் அவர்கள் தனது மாவீரர் தின உரையில் குறிப்பிட்டமை இங்கு பொருத்தமாகவே உள்ளது.

தமிழர்களின் அரசியல் உரிமைகள் என வருமிடத்தில், சிங்கள மக்கள் இன்னமும் விட்டுக் கொடுக்காத மனப்பாங்கில் இருக்கிறார்கள் என்பது மீண்டும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அவர்கள் மத்தியில் தமிழர்களின் போராட்டம் பற்றிய நியாயத்தை விளக்குவதற்கு பரப்புரை செய்யப் புறப்பட்டவர்களும் காலத்தை விரயமாக்கினார்களே தவிர வேறெந்தப் பலனையும் காணவில்லை. வல்லாதிக்க நாடுகளினதும் அவர்களது அரசு-சாரா நிறுவனங்களினதும் உபதேசங்களும் சிங்கள மனோபாவத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை.

யுத்தத்தால் சிறிலங்காவின் பொருளாதாரம் தளர்வடைகின்றபோது சிங்கள மக்களின் மனநிலையில் சற்று மாற்றம் தெரிவதும் பின்னர் சமாதான காலத்தில் பொருளாதாரம் தேறும்போது மீள பழைய நிலைக்குச் செல்வதும் கடந்தகால அனுபவங்கள். இதன் அடிப்படையில் அவர்கள் மீது பொருளாதார நெருக்குவாரத்தை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களது யுத்த வெறி தணிக்கப்படலாம். அல்லது யுத்தம் புரிவதற்கான அவர்களது ஏதுநிலையை அகற்றலாம் என்ற கருத்து தமிழர் மட்டத்தில் முனைப்புப் பெற்று வருகிறது.

ஏற்கனவே சிறிலங்காவின் பொருளாதாரம் தளர்ச்சி அடைந்து வருகின்ற நிலையில் நாட்டின் நிதி நிலையைச் சீர் செய்ய வெளிநாட்டு வைப்பகங்களில் கடன் பெற்றுக் கொள்ளும் நிலைக்கு சிறிலங்கா அரசு தள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் சிறிலங்காவுக்கு வருவாயை ஏற்படுத்திக் கொடுக்கிற எல்லாவிதமான நடவடிக்கைகளையும் புலம் பெயர்ந்த தமிழர்கள் உடன் நிறுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

தமிழர் தரப்பை பலப்படுத்துவதில் காட்டும் அக்கறை போன்று சிங்களத் தரப்பை பலவீனப்படுத்துவதிலும் அறிவுபூர்வமாகச் சிந்தித்து செயற்படுவோம்.

ஒரு பேப்பர்

வணக்கம்!

என்னதான் இருந்தாலும் உங்களை நேரில் சந்திக்கிறது மாதிரி வராது. நேருக்கு நேர் இன்ரறக்ரிவ் ஆக உங்களது பூராயங்களை கேட்பது எங்களுக்கு மகிழ்ச்சியை தருகிறது. போன ஞாயிற்றுக்கிழமை பரிஸ் லாசப்பலில் தெருவோரத்தில் வைத்திருந்த ஒருபேப்பர் பதாகைக்கு அருகில் எங்களை சந்தித்து உங்கள் கருத்துக்களைத் தெரிவித்த அனை வருக்கும் நெஞ்சார்ந்த நன்றி. லைலாவைத்தான் காணேல்லை. ஆக்களுக்கு முகங்கொடுக்க பயந்திட்டாவோ அல்லது உருமாற்றியபடி வந்தாவோ தெரியேல்லை. நீங்கள் ஒரு பேப்பரில் வைத்திருக்கும் அபிமானம் எங்களை யோசிக்க வைக்கிறது. (எப்பிடி உங்கட எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிறது எண்டுதான்)

அடிக்கடி சொல்லிற விசயந்தான் .. திரும்பவும் நினைப்பூட்டுகிறோம்... உங்கட ஆக்கங்கள் ஆசிரியர் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு தேவையேற்படின் அவை சுருக்கப்பட்டு, அல்லது திருத்தப்பட்ட பின்னரே பதிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படும். இது சரிப்பட்டு வராது எண்டிற ஆக்கள் உங்கட ஆக்கங்களை அனுப்ப வேண்டாம் என தாழ்மையாக கேட்டுக் கொள்கிறோம்.

லண்டனில் புதிதாக சில தமிழ் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. இவற்றின் பதிப்பாளர்களுக்கு வணக்கம் கூறி வரவேற்றுக்கொள்கிறோம், யாம் பெற்ற துன்பம் இந்த வையகமும் பெறவேண்டாமோ?

எமது இணையத்தளம் பரீட்சார்த்தமாக கடந்த இரண்டு மாதமாக இயங்குகிறது. நாள்தோறும் அதனை பார்வையிடுபவர்களின் தொகை அதிகரித்து வருகிறது. பேப்பரில் இடவசதியின்றி பிரசுரிக்க முடியாதவற்றை (படங்கள் உட்பட) அங்கு பிரசுரிக்க இருக்கிறம்.

வட-அமெரிக்கா - ஐரோப்பா அடங்கலாக உங்கள் பகுதிகளில் நடந்த அல்லது நடைபெற இருக்கிற சமூக நிகழ்வுகள் பற்றி அறியத் தாருங்கோ. அவற்றை பிரசுரிக்கவும் சமூகத்திற்கான ஊடகமாகச் முழுமையாகச் செயற்பட்டும் ஒருபேப்பர் எப்போதுமே தயார்க இருக்கிறது.

நாங்கள் பேப்பரை எல்லா இடமும் வைக்கிறதும், ஆனால் அதை ஒரு இடமும் காணேல்லை அடிக்கிறதை நிப்பாட்டிப் போட்டியளோ எண்டு நீங்கள் கேட்கிறதும் தொடர்ந்து கொண்டிருக்கிற தாலை, எங்கை எங்கை பேப்பரை வைக்கிறனாங் கள் எண்ட விபரத்தை வெளிப்படுத்திறம். அங்கை போய் எடுங்கோ. அல்லது சந்தாராராய் சேர்ந்து கொள்ளுங்கோ.

ரீன்ஸ் பேப்பரிலை எழுதிற தர்மிளா தனது புதிய கட்டுரை மூலம் என்னவோ ஒட்டு மொத்த தமிழரை மானத்தையும் வாங்கீட்டதாய் குற்றம் சாட்டிற ஆக்களின்ர கவனத்துக்கு. உங்களுக்கு அவவின்ர கருத்து பிடிக்கேல்லை எண்டா உங்கட கருத்தை எழுதி அனுப்புங்கோ. அதை விட்டுட்டு அந்த கட்டுரையை நிப்பாட்டும் படி சொல்லிறதிலை நியாயம் இருக்கிறதாய் எங்களுக்கு தெரியேல்லை.

மீண்டும் சந்திப்பம்

ஒரு பேப்பர் காரன்கள்+காரிகள்

EDITORIAL

Children of War

Last week the Government of Sri Lanka (GOSL) decided to 'liberate' some more Tamils through yet another 'humanitarian mission' using bombs and shells. This time this privilege was given to the Tamils living in the Musali region of Mannar.

This costal region, consisting of twenty or so small fishing hamlets, is a war destroyed community trying to stay afloat, by shallow water fishing off their coastal areas. During the last two years they have been economically deprived by fishing restrictions, but were left alone without the Sri Lankan Army (SLA) camps and check points.

The GOSL systematically destroyed these people in the eighties and nineties like it did all over the Tamil Northeast. SLA camps and check points dotted this region too. They strangled the people in every possible way. By doing so the GOSL tried its best to pacify them, but failed miserably.

After the Ceasefire Agreement of 2001 the people of this region, both Tamils and Moslems, were trying their best to make a peaceful existence without harming anyone.

Most of the international aid workers know these people well, as they have worked with them since the Ceasefire.

This is the community GOSL 'liberated' last week. As usual, they were bombarded and shot at during this 'liberation'. When people tried to run away to sanctuaries such as churches they were ambushed by SLA's Deep Penetration Unit (DPU). After one of these ambushes, the highly decomposed bodies of two children were identified by the local people. These two children were among the twelve civilian victims killed in one DPU attack. They were a four year old girl Puvisuvetha and a four year old boy Rehushan Selvakumar.

GOSL is waging a war against Tamils especially against Tamil children

In Jaffna this week, three children, all of them are under thirteen years of age, from the same family, sought protection with Human Rights Commission, due to death threats issued allegedly by paramilitary armed men operating with the SLA.

On the 13th of August Sri Lanka Air Force (SLAF) bombed a civilian area in Vavuniya and destroyed Maruthoadai Tamil Mixed School.

None of these above said crimes were deemed worthy of any news space, not even as short news stories on the margins of inside pages of (non Tamil) Colombo press.

Amnesty was the only organisation to condemn these crimes. We could not find a single press release or any other information in UNICEF's website regarding these crimes.

The official GOSL line of burying the dead, wounded and the internally displaced Tamils, especially children in 'liberation' spin statistics cannot blur the fact that the GOSL is waging a war against Tamils especially against Tamil children.

During the last twelve months, almost a fifth of those killed in the Eastern operations were Tamil children. In the last two weeks, they comprised more than ten percent of those injured and killed.

The GOSL and its friends remark that the Tamils make a practice of sending children to war thus insinuate that Tamil children killed by SLA are all child soldiers. This is an abominable lie. The two children who were killed in DPU attack were in a vehicle with their families trying to escape bombardment by the SLA.

In reality the SLA does not care whether its victims are children or not. The fact is that it bombs and shoots at figures it considers suspicious, with full knowledge that there are children and there are schools on its 'liberation' path. Therefore, SLA that fires at children is an army that kills children.

The majority of Tamil families in the Northeast are below the poverty line, because of the GOSL imposed war and economic sanctions. And as we all know, children are the first to suffer.

If it's dead and it's Tamil, it's a Tiger

This then is not a series of unfortunate mistakes, as it is being portrayed by the GOSL and its friends in the international community, but rather reflects the GOSL's contempt for the lives of Tamil children and its terrifying indifference to their fate.

We may brand the Government of Mr Rajapakse as anti-Tamil and thus its indifference to the sufferings of the Tamils as natural. 'I was elected primarily by a Sinhala constituency' Mr Rajapakse recently said.

But is it true that the majority of Sinhalese are indifferent to the sufferings of Tamil children just like Mr Rajapakse?

A good number of Sinhalese celebrate the 'liberations' of Tamils by their Army, and even those that do not, continue to ignore the killings of Tamil children by their soldiers.

Yet the majority of Sinhalese claim to practice one of the most progressive and ethical religions of the world: the teachings of Lord Buddha. A society meant to hold ethical considerations in high regard should at least ask itself: Is it permissible to shoot at civilians who are escaping bombardments, especially when some of those people will be children?

It must be so, as we continue not to see any letters of condemnation of these attacks written to the news editors of the Sinhalese dominated Colombo media, by the Sinhalese readers.

It is becoming clear that the Tamil children are almost always fired, bombed and blown up during SLA offensive operations.

The killings are justified as if it's dead and it's Tamil, it's a Tiger. If the dead consist of Tamil children, then they too are Tigers.

That is the truth, and with institutions such as UNICEF, which are supposed to safeguard every child's health, education, equality and safety, seeming to turn a blind eye to these crimes, who knows how long our children will suffer.

தமிழ்க் கூட்டமைப்பினரிடம் இன்னும் ஊக்கம் வேண்டும்

நாடு மிக முக்கியமானதொரு கால கட்டத்தில் நிற்கின்றது. ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அரசியல், இராணுவ, சமூக விவகாரங்களில் மிகச் சிக்கலானதொரு நேரத்தைத் தமிழினம் கடக்கும் வேளை இது.

இந்தச் சமயத்தில் தேசியரீதியில் தமிழரினத்தின் ஜனநாயகப் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் தலைவர்களின் செயற்பாடும் போக்கும் சர்ச்சைக்கும் அதிருப்திக்கும் உள்ளாகியிருக்கும் நெருக்கடியான சந்தர்ப்பம் இது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் வடக்கு, கிழக்குத் தமிழர்களின் 24 பிரதிநிதிகளில் 22 பேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள். மற்றைய இருவரான அரசுடன் இணைந்திருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அவரை ஒத்த தி. மகேஸ்வரன் எம். பியும் தமிழ்த் தேசியத்தைப் பிரதிபலிப்பவர்கள் என்று கூறமுடியாது. அவர்களை விட்டுவிடுவோம்.

இந்த 24 பேரையும் விட, முஸ்லிம்கள் தவிர்ந்த ஏனைய தமிழ் பேசும் எம்.பிக்களில் மனோ கணேசன் நீங்கலாக இ. தொ. கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் முதல் கொண்டு மலையக மக்கள் முன்னணித் தலைவர் அமைச்சர் பெ. சந்திரசேகரன் வரை அனைவருமே, போனவாதத்தில் ஊறித் திளைத்துக் கிடக்கும் மஹ்ந்த ராஜபக்ஷ அரசுக்குக் கூசா தூக்கும் இந்தச் சமயத்தில் ஈழத் தமிழர்கள் விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடமையும் பொறுப்பும் இரட்டிப்பாகின்றன.

தமிழினத்தின் இராணுவ, அரசியல் போராட்ட சக்திகளான புலிகள் தங்கள் பொறுப்பை உயிரைத் துச்சமென மதித்து ஆற்றி வரும் வேளையில்

மறுபுறத்தில் புலிகளுக்கு பக்கத் துணையாக ஜனநாயக அரசியலில் பெரும் சக்தியாய் எழுச்சி பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பொறுப்புணர்ந்து செயலாற்ற வேண்டும்.

மட்டக்களப்பில் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் தேவாலயத்துக்குள் கிறிஸ்மஸ் ஆராதனையில் ஈடுபட்டிருந்த ஜோஸப் பரராஜசிங்கம் எம். பி. சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட கொடூரமும்

கொழும்பில் பல இராணுவ பொலிஸ் சோதனைச் சாவடிகளுக்கு மத்தியில், பட்டப் பகலில், நட்ட நடு வீதியில் வைத்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் சுட்டுக் கொல்லப்பட்ட பயங்கரமும் தமிழர் மனதை ஆழமாகக் குடையும் வேதனைகள்.

இத்தகைய ஆபத்துகளுக்கு மத்தியில்தான் பணிபுரிய வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம். பிக்கள்.

ஒருபுறம் மட்டக்களப்பிலோ, அம்பாறையிலோ, திருகோணமலையிலோ, வவுனியா மன்னாரிலோ, யாழ்ப்பாணத்திலோ தமது சொந்தத் தொகுதி களுக்குக் கூடச் செல்லமுடியாத பாதுகாப்பு இக்கட்டில் அவர்கள் சிக்கிக் கிடக்கின்றார்கள். புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னியைத் தவிர பிறஎந்த இடங்களுக்கும் அரசகட்டுப்பாட்டில் உள்ள எந்தப் பிரதேசத்துக்கும் சுமுகமாகச் சென்றுவர முடியாத பெரும் சிக்கலிலேயே அவர்கள் உள்ளார்கள் என்பது வெள்ளிடை மலை.

கொழும்பில் இருப்பதும் அவர்களுக்குச் சிக்கல்தான். அதனால் கொழும்பில் ஒரு காலும் வெளிநாடுகளில் வாழ்வுமாக அவர்களில் பலர் காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கின்றனர்.

இந்தச் செயற்பாட்டை நியாயப்படுத்துவதற்கு வெளிநாடுகளில் தமிழரின் விடுதலைப் போராட்ட எழுச்சி குறித்து பிரசாரம் செய்கிறோம் என்ற சாக்குப்போக்கு வேறு முன்வைக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத்துக்கு முன் அனுமதியின்றி மூன்று மாதங்கள் தொடர்ந்து சமுகம் தராவிட்டால் எம். பி. பதவி காலியாகிவிடும் என்ற ஒழுங்குவிதி இருப்பதனால் என்னவோ மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை நாடாளுமன்றப் புத்தகங்களில் கையெழுத்துப் போடுவதற்காகவேனும், கொழும் பைத் தமது சர்வதேசப் போக்குவரத்துக்கான மைய இடைநிலைத்தளம் (வணூச்ணண்டிவ ணீடுச்ஞிழு) ஆகப் பயன்படுத்தும் விதத்திலேனும் சில கூட்டமைப்பு எம். பிக்கள் அவ்வப்போது கொழும்பைத் தரிசித்துச் செல்லத் தவறவில்லை.

இப்படி பிறநாட்டில் தமிழர் போராட்டப் பிரசாரம் என்று பெட்டியைத் தூக்கிக்கொண்டு சதா பயணத்தில் இருக்கும் பல எம். பிமாருக்கு, தமிழர் தாயகத்தில் மக்களின் அவலநிலை தொடர்பான அடிப்படைப் புள்ளி விவரங்கள் கூடத் தெரிவ தில்லை. இந்தச் சீத்துவத்தில் ஈழத் தமிழர்கள் சார்பாக இவர்கள் ஆக்கபூர்வமான என்ன பிரசார த்தை முன்னெடுப்பார்கள் என்பது ஆண்டவ னுக்குத்தான் வெளிச்சம்.

போதாக்குறைக்கு நாடாளுமன்றத்தில் அரசுக் கவிழ்ப்பு முயற்சியிலிருந்து, அரசுக்கு சார்பான நிதிச் சட்டங்களை நிறைவேற்றுகின்ற விவகாரம் வரை 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளு மன்றத்தில் இந்த 22 பேர் அணியை எந்தத் தரப்புமே ஒரு பொருட்டாக மதிக்காத நிலையும் காணப்படுகின்றது.

கைதுசெய்யப்படுவோரை பொலிஸார் 24 மணி நேரத்துக்குள் நீதிமன்றில் ஆஜர் செய்யவேண்டும் என்ற குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை அண்மையில் திருத்தப்பட்டது. கைது செய்யப்படு வோரை 48 மணிநேரம் தடுத்துவைக்கும் அதிகாரத் தைப் பொலிஸாருக்கு வழங்கும் விதத்தில் அச்சட்டம் திருத்தப்பட்டது. அந்தத் திருத்தத்தால் அதிகம் பாதிக்கப்படப்போகின்றவர்கள் இன்றைய கட்டத்தில் தமிழரே என்பது தெளிவு. ஆனால் இச்சட்டத்திருத்தம் மீதான வாக்கெடுப்பின் போது அதைஜே.வி.பி.முதற்கொண்டுஐ.தே.கட்சி வரை எதிர்த்து வாக்களித்தபோதும் அதை அடையாளத்துக்குத் தன்னும் எதிர்ப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் 22 எம். பிக்களில் ஒருவர் கூட நாடாளுமன்றத்தில் இருக்கவில்லை.

அரசுக்கு எதிரான விடயங்கள் வாக்கெடுப்புக்கு வரும் சமயங்களில், அதை எதிர்த்து வாக்களிக்கத் தமிழ்க் கூட்டமைப்பு எம். பிக்கள் நாடாளுமன்றில் இருக்கமாட்டார்கள் என்று பகிரங்கமாகக் கூறிக் கணக்குப் போடுகின்றார் அரசுத் தரப்பின் பிரதம கொறடா ஜெயராஜ் பெர்னாண்டோப்புள்ளே.

அதேசமயம் அரசைக் கவிழ்க்கும் முயற்சியா, கூட்டமைப்பினரை எங்களுக்கு ஆதரவாக ரிரான் அலஸ் கூட்டி வருவார் என்று எதிர்க்கட்சித் தலைவர் கணக்குக் காட்டுகின்றார்.

இவ்வாறு ஒவ்வொரு தரப்பினதும் போடுதடி போல கூட்டமைப்பினர் இருக்கின்றனரே தவிர, தமிழரின் அரசியல் போராட்டத்தில் ஓர் ஜனநாயக அதிர்வை ஏற்படுத்துகின்ற உந்து சக்தியாக அவர்கள் இல்லை. என்ற பலவீனம் தோற்று கின்றது.

விடுதலைக்காக வீறுகொண்டெழுந்த இனத்தின் பிரதிநிதிகள் என்ற ஆவேசம் இவர்களிடம் அடங்கிப் போய்விட்டதா என்று எண்ணும் நிலையைத் தோற்றுவிக்காமல் ஊக்கத்துடன் செயலாற்றும் பொறுப்பு இன்று அவர்களுக்கு உண்டு. வரலாற்றுக் கடமையை ஏற்றவர்கள் பலவீனத்தில் தூங்கிவிட முடியாது. தூங்கிவிடக் கூடாது.

அன்பு நெறியினில்

அரசாள

அகிலமெலாம் தமிழர்

உறவாட

துன்பங்கள் யாவும்

பறந்தோட

தூய மனங்கொண்டு

கவிபாட...

Editorial, Eelam Nation

The dawn of the east is its doom

The facade of rehabilitation, rebuilding and reconstruction of the devastated eastern province, with the attendant economic and social repression of the Tamil speaking people is a classic example of the progressive and continuous erosion of civil liberties for the sake of security for political, military and opportunistic convenience. Compounding it is the culture of incompetence and corruption rendering impossible any positive outcome.

It becomes worse when motivated by racist considerations and the extension of the desire on the part of successive Sri Lankan governments over the years to transform the ethnic demographic pattern of the eastern region especially in the Trincomalee district. What was hitherto done by a process of settling Sinhala people in these areas is now being done by a process of ethnic cleansing in that the displaced people who had traditionally lived in the in the Sampur and Muttur areas are denied access to their own homes and means of livelihood, these being declared a high security zone.

In an objective analysis of the situation in the east, the executive director of Sri Lanka's National Peace Council, Jehan Pereira in his recent paper captioned: "Sri Lanka – Civil Administration and Development are Priorities in the East", has this to say: "We did not encounter a population that felt itself liberated and empowered by the outcome of the recent military operations. Instead we saw and heard accounts of loss of livelihood, prolonged displacement, looted homes, fear of assassinations and abductions, and the humiliating treatment of people. Our observations belie the claim made on political platforms that normalcy and reconstruction are, and will soon be, the features of the liberated east, and that provincial elections can soon be held to consolidate democracy and good governance in the region". *(Transcontinental, Friday 24 August 2007).*

The problem is largely four fold. The denial of their traditional homes to the thousands displaced in Sampur and Muttur, the two hundred thousand or more displaced in the other parts of the east, the victims of the 2004 Tsunami still languishing without even recourse to basic life for the past three and a half years and overall the return of normalcy in the east. If those affected by the Tsunami are still in the same plight as they were in 2005 (in sharp contrast to those affected in the Southern areas), with all the international aid given to the government for their rehabilitation, what chance do the other displaced persons have?

We are told that Rajapakse's prime exhibits now the coalition of the three great leaders of the Tamil people, were taken out of the show case, dusted and sent to the east as a public relations exercise. Their revelations are much the same as Rajapakse's empty promise of a political settlement, indeed with the consensus of all political parties. The fourth great leader Karuna the rebel turned democrat apparently has been put in cold storage to be thawed for bigger, better and higher things despite his being overheard saying that his contribution to the "liberation" of the east should be recognized and rewarded.

A recent circular issued by the military commander of the east on rural development states: "Rural development of areas liberated by the forces after the humanitarian operations where there is a civil population must be done under the supervision of the police stationed in the area, as well as the armed forces." Further, on the constitution of village level committees the circular stipulates: "It will be mandatory to include in these committees a member of the armed forces/STF [police paramilitary units], a police officer, and Grama Niladhari [village official] serving in the respective village". And goes on to say: "the president of the villages committee is to be either a member of the police or the military"…… "Please note that in future NGOs should not be permitted to do as they please in these areas as before"

Following this is another circular from the Secretary of Nation Building and Estate Infrastructure Development dated 17 August 2007 addressed to the District Secretaries in the east who are also Government Agents on the deployment of NGOs and INGOs encompassing the entire gamut of civilian life. This circular is a perfect recipe for inaction and chaos. Designed to keep the NGOs and INGOs out of any meaningful and sustained development in the east and clumsily crafted it is both illogical and insane in that it will leave a conscientious District Secretary in a quandary as to where to start.

For obvious reasons the government of Rajapakse and his brothers lack the motivation, political will and the positive inclination to re build the east. With the NGOs and INGOs intimidated and effectively kept out there will be no development in the east for the Tamil speaking people.

ஒரு பேப்பர் ORU PAPER

GREAT OPENING OFFERS

GREAT PRODUCTS

GREAT VARIETY

GREAT PRICES

This brochure represents just a few of the over 800 items we have in the store. For the true experience of shopping for your home, Art & Magic is one name you have to remember! From furniture to sofas, cushion covers to bedspreads, carpets to wall hangings, toys to gifts, bar paraphernalia to complete bars, candles to incense sticks, we have it all.

CORONA TRIO

REGULAR PRICE ~~£395.00~~

OFFER PRICE **£295.00**

Bedside - W21 x D15 x H26 | Wardrobe - W41 x D23 x H74 | 2x2 Chest - W36 x D19 x H47

Special Prices valid only at Tooting Store for a very limited period.

Art&Magic

FURNISHINGS • FURNITURE • LIGHTING GIFTS

www.artandmagic.co.uk

FURNISHINGS • FURNITURE • LIGHTING • GIFTS

DINING SETS

ARRIANA ROUND +4 CHAIRS (36")

~~£135.00~~ **£95.00**

NORFOLK DINING SET

~~£249.99~~ **£179.99**

TILE-TOP DINING SET TERRACOTA (4 CHAIRS)

~~£199.99~~ **£149.99**

CORONA 4' DINING SET

43" x 32"

~~£139.99~~ **£99.99**

GLASS DINING SET WITH 6 CHAIRS

~~£329.99~~ **£299.99**

LIVEN UP YOUR LIVING ROOM

ASTRA TV-VIDEO UNIT

~~£89.99~~ **£69.99**

CARA COFFEE TABLE

~~£99.99~~ **£49.99**

HALEY TV-VIDEO UNIT

~~£89.99~~ **£49.99**

ELENA COFFEE TABLE

~~£249.99~~ **£49.99**

HATTIE HI-FI UNIT

~~£89.99~~ **£49.99**

TOKYO COFFEE TABLE

~~£299.99~~ **£199.99**

TRINITY TV-VIDEO UNIT

~~£89.99~~ **£64.99**

NAPOLL NEST

~~£249.99~~ **£169.99**

TRIXIE TV-VIDEO UNIT

~~£89.99~~ **£49.99**

CORONA COFFEE TABLE

~~£99.99~~ **£69.99**

MONTE CARLO HI-FI STAND

~~£149.99~~ **£139.99**

CORONA LAMP TABLE

~~£49.99~~ **£34.99**

FURNITURE RANGE - SOL & CORONA

SOL 3-DRAWER BEDSIDE CHEST

~~£59.99~~ **£39.99**

CORONA 2+2 DRAWER CHEST

~~£149.99~~ **£99.00**

SOL 4-DRAWER CHEST

~~£99.99~~ **£79.99**

CORONA 5-DRAWER CHEST

~~£199.99~~ **£159.99**

SOL 5+2 DRAWER CHEST

~~£159.99~~ **£119.99**

CORONA 4-DRAWER CHEST

~~£179.99~~ **£139.99**

CORONA WARDROBE 1 DRAWER

~~£249.99~~ **£179.99**

CORONA BOOKCASE

~~£179.99~~ **£139.99**

BEDS

ALBANY BUNK 3'

~~£159.99~~ **£129.99**

SPLIT

ALTON BED

4'6"

~~£89.99~~ **£49.99** ~~£99.99~~ **£69.99**

BRODIE BUDGET BUNK

~~£149.99~~ **£89.99**

HUDSON 3'

~~£89.99~~ **£29.99**

VALENCIA 4'6"

~~£299.99~~ **£199.99**

FURNISH YOUR HOME IN STYLE - ECONOMICALLY!

RED PASHA RUG

~~£49.99~~ **£34.99**

CUSHIONS WITH CUSHION COVERS

~~£15.00~~ **£10.00 FOR 3**

CORRIE COMPUTER DESK

~~£69.99~~ **£49.99**

SHAGGY RUG BOXES

~~£69.99~~ **£49.99**

SOFA THROWS

~~£4.99~~ **£3.99**

BERMUDA BAR CHAIR

~~£29.99~~ **£24.99**

CREAM RUG

~~£24.99~~ **£19.99**



LARGE MIRROR

~~£19.99~~ **£14.99**

~~£69.99~~ **£49.99**

LEAPED RUG

~~£29.99~~ **£24.99**

FOOTBALL CHAIRS (EACH)

~~£59.99~~ **£49.99**



KIDS SNOOKER TABLE

~~£49.99~~ **£39.99**

CONTESSA MIRROR (EACH)

~~£39.99~~ **£29.99**

TOOTING

51-53 Mitcham Road, Tooting Broadway, London SW17 9PB
Tel.: 0208 6724512

WALWORTH ROAD

343-345, Walworth Road, London SE17 2AL
Tel.: 0207 7030881

HOUNSLOW

5-7, High Street, Hounslow TW3 1RH
Tel.: 0208 5778926

சிலாவத்துறை நாடகம்



வி. சபேசன்
(ஒரு பேப்பருக்காக)

கிழக்கைக் கைப்பற்றிவிட்டதாக சொல்லிக் கொள்ளும் சிறிலங்கா அரசு, வடக்கிலும் மன்னாரின் சிலாபத்துறைப் பகுதியை கைப்பற்றி விட்டதாக அறிவித்துள்ளது. சிலாபத்துறை, அரிப்பு போன்ற பகுதிகளை கடந்த 01.09.07 அன்று சிறிலங்காப் படைகள் சென்றடைந்தன. இதன் மூலம் வடக்கிலும் விடுதலைப் புலிகளின் ஒரு பகுதியை கைப்பற்றி விட்டதாக சிறிலங்கா அரசு தம்பட்டம் அடித்து வருகிறது.

கிழக்கை முற்றுமுழுதாகக் கைப்பற்றி விட்டதாக சிறிலங்கா அரசு சொல்வதிலும் உண்மை இல்லை. வடக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிலாபத்துறையை கைப்பற்றிவிட்டதாக சொல்வதிலும் உண்மை இல்லை.

கிழக்கு முற்றுமுழுதாக சிறிலங்காப் படைகளின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதற்கு அங்கு நடந்து வருகின்ற சம்பவங்களே சான்று. விடுதலைப் புலிகளே கிழக்கில் இல்லையென்று கூறிய சிறிலங்கா இராணுவம் கடந்த வாரம் அம்பாறையில் விடுதலைப் புலிகளின் முகாமில் இருந்து வந்த 8 இளவயதுப் போராளிகளை கைதுசெய்திருப்பதாக கூறியுள்ளது.

கடந்த 27.08.09 அன்று விடுதலைப் புலிகள் தம்மிடம் இணைந்த வயது குறைந்த 14 பேரை யுனிசெப் அமைப்பிடம் ஒப்படைப்பதற்கு விடுதலைப் புலிகள் முன்வந்தார்கள். இவர்களை அழைத்துக் கொண்டு பொத்துவில் திருக்கோவில் வீதியில் உள்ள தாண்டியடிக்கு விடுதலைப்புலிகள் வரும் போது சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படை தாக்குதல் நடத்தியது.

அம்பாறையில் அனைத்துப் பகுதிகளையும் கைப்பற்றி விட்டோம் என்று சிறிலங்கா இராணுவம் கூறினாலும் அம்பாறையின் குறிப்பிட்டளவு காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் முகாம்களை அமைத்து நிலை கொண்டுள்ளார்கள்.

இந்தத் திடீர் தாக்குதலினால் 14 சிறுவர்களும் பல திசைகளில் சிதறி ஓடினார்கள்: இதில் 6 பேர் மீண்டும் விடுதலைப் புலிகளின் முகாம்களுக்கே திரும்பி சென்று விட்டார்கள். மிகுதி எட்டுப் பேரும் வழி தெரியாது காடுகளில் தத்தளித்த போது சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையால் கைது செய்யப்பட்டார்கள்.

இந்தச் சம்பவம் சில விடயங்களை உணர்த்துகிறது. அம்பாறையில் அனைத்துப் பகுதிகளையும் கைப்பற்றி விட்டோம் என்று சிறிலங்கா இராணுவம் கூறினாலும் அம்பாறையின் குறிப்பிட்டளவு காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் முகாம்களை அமைத்து நிலை கொண்டுள்ளார்கள். அத்துடன் சில கிராமங்களை பகலில் சிறிலங்கா அதிரடிப் படையும் இரவில் விடுதலைப் புலிகளும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள்.

குறிப்பிட்ட தாண்டியடிப் பகுதியில் பகலில் அதிரடிப்படையினர் நிலைகொண்டுவிட்டு, மாலையானதும் விலகிச் சென்றுவிடுவார்கள். இரவில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அப் பகுதியில் இருக்கும். அதனாலேயே விடுதலைப் புலிகள் சிறுவர்களை ஒப்படைப்பதற்கு மாலை வேளையை தேர்ந்தெடுத்தார்கள்.

இரண்டாம் கட்ட ஈழப் போரின் போதும் இப்படித்தான் நடந்தது. ஆரம்பித்தில் சிறிலங்காப் படையினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து அனைத்துப் பகுதிகளையும் கைப்பற்றினார்கள்.

காடுகளுக்குள் சிறு சிறு குழுக்காளாக பின் வாங்கிய விடுதலைப் புலிகள் பின்பு மெது மெதுவாக கிராமங்களிலும் நடமாட்டத்தை தொடங்கினார்கள். அப்பொழுதும் பல கிராமங்களில் நிலைகொண்டிருந்த அதிரடிப் படை இரவு வேளைகளில் அங்கிருந்து விலகிவிடும்.

இவ்வாறு காடுகளிலும், இரவு நேரங்களில் கிராமப்புறங்களிலும் நடமாடியபுலிகள் பின்புசிறிய சிறிய கரந்தடித் தாக்குதல்கள் மூலமும், வடக்கில் நடந்த பெரும் சமர்களின் மூலம் கிழக்கில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை பெருப்பித்தார்கள்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத சிலாவத்துறை, அரிப்பு போன்ற பகுதிகளுக்கு தன்னுடைய படையினரை நடைபயணம் செய்ய வைத்துவிட்டு, சிறிலங்கா அரசு தன்னுடைய சிங்கள மக்களை ஏமாற்றி உள்ளது.

இன்று கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை என்று அனைத்துப்பிரதேசங்களிலும் விடுதலைப் புலிகளின் சிறிய சிறிய தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. பெரும்பாலானவை கண்ணிவெடி மற்றும் கிளைமோர் தாக்குதல்களாக இருக்கின்றன. ஒட்டுக்குழுக்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

ஒட்டுக்குழுக்கள் ஒரு பக்கம் தங்களுக்குள் மோதிக்கொள்ள மறுபக்கம் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களும் நடைபெறுகின்றன அன்று நடந்த அதே சம்பவங்கள் கிழக்கில் மீண்டும் நடக்கத் தொடங்கியுள்ளன. விரைவில் கிழக்கும் மீண்டும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வரும் என்று உறுதியாக நம்பலாம்.

கிழக்கில் சிறிலங்காப் படைகளின் பிடியில் இருந்து சில பகுதிகள் கைநழுவ ஆரம்பித்துள்ள இந்த வேளையில், சிறிலங்கா அரசு வடக்கில் ஒரு நாடகத்தை ஆடி முடித்திருக்கிறது.

அதுதான் சிலாவத்துறையை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதாக சிறிலங்கா அரசு வெளியிட்டிருக்கும் அறிக்கை. சிறிலங்கா அரசு ஒரு மோசடியான ஏமாற்று நாடகம் செய்திருக்கிறது என்பதை வரைபடத்தைப் பார்த்தே இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

வவுனியாவில் இருந்து மன்னாரை நோக்கிச் செல்கின்ற ஏ 30 பாதையும், மதவாச்சியில் இருந்து மன்னாரை நோக்கிச் சொல்கின்ற ஏ 14 பாதையும் சிறிலங்காப் படைகளின் கட்டுப்பாட்டில் நீண்டகாலமாகவே இருக்கின்றன.

இந்தப் பாதையின் வடக்குத் திசையிலேயே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி இருக்கிறது. இந்தப் பாதையிலும், அதற்கு அண்டிய பகுதிகளிலும் இருந்தபடிதான் சிறிலங்காப் படைகள் மடுவை நோக்கி தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

1990ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் சிலாவத்துறையில் இருந்து படைத்தளம் மீது ஒரு பாரிய தாக்குதலைத் தொடுத்தனர்.

அந்தத் தாக்குதலில்தான் மேயர் டாம்போ கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டார். மேயர் டாம்போ ஓட்டி வந்த வெடிமருந்து நிரப்பிய வண்டி இடையிலேயே சிறிலங்காப் படைகளின் தாக்குதலுக்கு இலக்காகி வெடித்துச் சிதறியது. அத்துடன் சிறிலங்கா வான் படையினர் மிகக் கடுமையான வான் தாக்குதல்களிலும் ஈடுபட்டனர்.

சிலாவத்துறைத் தாக்குதல் விடுதலைப் புலிகளுக்கு வெற்றியைக் கொடுக்கவில்லை. விடுதலைப் புலிகள் பின்வாங்க நேர்ந்தது. அதன் பிறகு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சண்டைகள் எதுவும் இப் பகுதியில் நிகழவில்லை.

சிலாவத்துறையை ஒரு வழங்கல் பாதையாகப் பலிகள் பயன்படுத்திய போதிலும் அது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியல்ல.

சிறிலங்காப் படைகள் 1999ஆம் ஆண்டு பல கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட 'ரணகோச' நடவடிக்கை மூலம் மடு, பள்ளமடு போன்ற பகுதிகளை கைப்பற்றியிருந்தன. பின்பு அந்தப் பகுதிகள் அனைத்தும் விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் மூன்றின் மூலம் மீட்கப்பட்டன. ஆனால் அப்பொழுதும் விடுதலைப் புலிகளின் படையணிகள் மதவாச்சி மன்னார் வீதியை தாண்டிச் செல்லவில்லை.

ஆகவே மதவாச்சி மன்னார் வீதிக்கு தெற்குப் புறமாக இருக்கின்ற, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத சிலாவத்துறை, அரிப்பு போன்ற பகுதிகளுக்கு தன்னுடைய படையினரை நடைபயணம் செய்ய வைத்துவிட்டு, சிறிலங்கா அரசு தன்னுடைய சிங்கள மக்களை ஏமாற்றி உள்ளது.

இதை வேறுவிதமாக விளக்குவது என்றால் மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச சபைகளில் மாந்தை மேற்கு, மடு ஆகிய இரண்டு பிரதேசசபைப் பகுதிகளின் பெரும்பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. மன்னார் நகரம், நானாட்டான், முசலி ஆகிய மூன்று பிரதேச சபைக்குள் அடங்குகின்ற பகுதிகளின் பெரும்பகுதி சிறிலங்காப் படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

இதில் முசலி பிரதேச சபைப் பகுதிக்குள் அடங்குகின்ற சிலாவத்துறை, அரிப்புப் பகுதியிலேயே சிறிலங்காப் படைகள் தமது 'பாரிய படை நடவடிக்கையை' செய்திருக்கின்றன.

சிலாவத்துறை, அரிப்பு போன்ற பகுதிகளில் சிறிலங்காப் படைகளின் நிலைகள் இல்லாத இடங்களில் விடுதலைப் புலிகளின் நடமாட்டங்கள் இருந்தது உண்மை. சிலாவத்துறையை ஒரு வழங்கல் பாதையாகவும் விடுதலைப் புலிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படுகிறது. ஆனால் இவ்வாறான பகுதிகள் இலங்கைத் தீவு முழுவதும் இருக்கின்றன. அதற்காக அப் பகுதிகள் அனைத்தும் இராணுவரீதியாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என்று வரையறுக்க முடியாது.

ஆனால் இந்த நடவடிக்கை மூலம் சில நன்மைகள் இருப்பதாக சிறிலங்கா அரசு கருதுகிறது. விடுதலைப் புலிகள் மன்னார் மீது தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சம் சிறிலங்கா அரசுக்கு இருக்கிறது.

அப்படி விடுதலைப் புலிகள் மன்னாரில் இருக்கின்ற தள்ளாடி போன்ற படைத் தளங்களை தகர்ப்பார்களாயின் மன்னாரின் தெற்குப் பகுதி நோக்கி விடுதலைப் புலிகளின் படையணிகள் வேகமாக நகர்ந்து முன்னேறி விடலாம். அல்லது சிலாவத்துறைப்பகுதியில் தமது படைகளை அனுப்பி மன்னார் மீது பல முனைத் தாக்குதலைகளை விடுதலைப் புலிகள் தொடுக்கலாம்.

மன்னாரின் தெற்குப் பகுதியிலும் பாரிய படைத் தளங்களை நிறுவுவதன் மூலம் இவைகளை தடுத்து விட்டதாக சிறிலங்கா அரசு கருதுகிறது. இதைக் கருத்தில் கொண்டே சிலாவத்துறை நோக்கி படைகளை சிறிலங்கா அரசு நகர்த்தியுள்ளது.

அத்துடன் வடக்கிலும் ஒரு பகுதியை கைப்பற்றி விட்டதாக பெரும் பிரச்சாரங்களை மேற்கொண்டு சிங்களவர்களையும் குசிப்படுத்தலாம் என்று நம்புகிறது.

இப்படி சிறிலங்கா அரசு பல கணக்குகளைப் போட்டாலும், விடுதலைப் புலிகளின் நகர்வுகளால் அவைகள் பிழைத்துப் போகும் என்பதுதான் உண்மை

பொய்மேல்

பொய்யை

பேசுவதால்

பொய்யது

மெய்யாய்

ஆகிடுமோ?

ஒரு பேப்பர்
ORU PAPER

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள்
யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
லண்டன்
சேயோன் - சுவேதிகா
மணி - ஜோசப்
கனடா
தயா - பொன்.விவேகானந்தன்
பாரிஸ்
சிறி - வண்ணை
ஜேர்மனி
சபேசன் - சுதந்திரா
சுவிஸ்
ரேமன் - சந்துரு
பொற்றுப்பாசிரியர்
- கோபி -
விளம்பரம்
கௌரி - நிதி - சிந்து
அச்சு
சுகி - நிதி
வடிவமைப்பு
jasmine studio
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி
இணையத்தள வடிவமைப்பு
ரஜீவன்
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி – நிர்வாகம்
உஷா - முருகானந்தன்
வழங்கல்
உதயகுமார்-ராஜு-கரன்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 8640 4604
020 8286 9327
பாரீஸ் 01 7289 8165
சுவிஸ் 043 500 0277
தொலைநகல் (Fax)
020 8640 6972

ஆக்கங்கள் மற்றும்
அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3L J
Surrey

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

சற்று மாறுதலுக்காக. . .

மனிதனாக வாழ்ந்திட வேணும் மனதில் வையடா!

சேயோன்
(ஒரு பேப்பர்)

மேற்குறித்த தலைப்புவரி பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரத்தின் 'சின்னப்பயலே' என்னும் பாடலில் வரும். கொஞ்ச நாட்களாக என் வாய் முணுமுணுக்கிற வரியாக இது இருக்கிறது. என்ன காரணம்?

நான் மனிதனாக இல்லையா? எனக்கு நானே இந்த வரிகளைச் சொல்லிக் கொண்டிருக் கின்றேனா, அல்லது என் அயலில் உலவுபவர்கள் சிலர் மனிதத்தன்மையற்று நடக்கின்றார்களா? எதனால் நான் இந்த வரிகளையே முணுமுணுத்துக் கொண்டு திரிகின்றேன்?

மனிதனாக வாழ்தல் என்றால் என்ன? என்னும் கேள்வியை நான் எழுப்புகிறேன். விடை தேட முயல்கிறேன்.

மனிதன் என்பது ஆண்பால் என்பதனால் மனிதர் என்றே குறித்துக் கொள்வோம். சரி, மனிதராக வாழ்தல், அப்படி என்றால் என்ன? மனிதத்தன்மையுடன் வாழ வேண்டும் அது தானே? மனிதத்தன்மை என்று எதைச் சொல்வோம்? இந்தக் கேள்விக்கு என்ன பதில்?

உண்மை, நேர்மையுடன் வாழல். தனக்கான கடமையைச் சரிவர நிறைவேற்றல், உழைத்து வாழல், மற்றவரை மதித்தல், பிறரை நேசித்தல், சிறுமை கண்டபோது பொங்கி எழல், எளிமையாக எவரையும் அணுகல், அப்படித் தன்னையும் பிறர் அணுகக் கூடியவராக உணர வைத்தல், பிறர் உணர்வுகளை மதித்தல், நீதிக்கும் நியாயாத்திற்கும் போரிடல், பொறுமை, சகிப்புத்தன்மையைக் கொண்டிருத்தல், பிறர் கருத்துக்குக் காது கொடுத்தல், சுயத்தை (Ego) காலம், இடம் அறிந்து கைக்கொள்ளல், தேடல் கொண்டிருத்தல், தன் அனுபவங்களையும் தன் அறிவையும் பிறர் அனுபவங்களையும் பிறர் அறிவையும் பெற்று சுயமாகச் சிந்தித்தல், பகுத்தறிவுடன் எதனையும் பார்த்தல்.. (இன்னும் வேறேதாவது இருக்கிறதா? இருந்தால் சொல்லுங்கள்)

இந்தப் பத்தி எழுதுகிற சேயோனாகிய யான், மேற்குறித்த குணங்களில் பலவற்றைக் கொண்டிருக்கவில்லை என்பதை இங்கு ஒப்புக் கொள்ள வேண்டும். ஆனால் இவை முழுமையாக இருப்பவர் இந்த உலகில் இல்லை என்பதையும் சொல்ல வேண்டும். காந்தியைச் சிலபேர் சொல்வார்கள். ஆனால் எனக்குத் தெரியாது.

நண்பர் ஒருவர் எனக்குச் சொன்னார்: ஒரு அய்யர் கோயிலில் அபிசேகம் ஒன்று செய்யச் சொல்லி தன்னைக் கேட்டதாகவும், தான் காரணத்தைக் கேட்டபோது, இம்மாதம் 'மோற்கேஜ்' கட்டக் காசில்லை என்று அய்யர் சொன்னதாகவும், நக்கல் சிரிப்புடன் சொன்னார்.

எனக்கும் சிரிப்பு வரப் பார்த்தது. ஆனால் உடனேயே நிறுத்தினேன். உறுத்தல்தான் வந்தது. அந்த அய்யர் பாவம். கோயிலை நம்பி, அங்கு வரும் பக்தர்களை நம்பி, 'மோற்கேஜ்ஜில்' வீடு வாங்கியிருக்கிறார். அந்த மாதம் அவருக்கு வருமானம் வரவில்லை. பாவம்தானே அவர்.

அவருக்குத் தெரிந்த ஒரே தொழில் அய்யர் தொழில். அவரைப் பிற வேலைக்கு ஏவினால் அவரால் இயலுமா? கள் இறக்கும் தொழில் செய்யும் ஒருவரால் கள்ளைத்தான் இறக்க முடியும். கடலில் மீன் பிடிக்க முடியாது. அப்படித் தான் இதுவும். அதனைப் புரிவது கடினமல்ல.

ரூற்றிங் வீதியில் தமிழ்ப்பெண் ஒருவர் என்னிடம் பிரசுரத்தை நீட்டுகிறார். அது சாத்திரம், சோதிடம் பார்ப்பதற்கான விளம்பரம். அந்தப் பெண்ணிடம் பேச்சுக் கொடுக்கிறேன்: அந்தப் பெண்ணின் துணைவர் தான் சாத்திரம், சோதிடம் பார்ப்பவர். அதுதான் தங்களுடைய தொழில். உழைப்புத் தேடி இந்தியாவிலிருந்து வந்திருக்கிறோம்.

அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தபோது ஏழ்மை, இயலாமை எல்லாம் தெரிந்தன. எனக்கு சோதிடம், சாத்திரம் எதிலும் நம்பிக்கை கிடையாது. என்றாலும் சாத்திரம் பார்க்கப்போக வேண்டும் என்று அக்கணம் நினைத்தேன். அவர்களுக்குத் தெரிந்த தொழில் அது ஒன்றுதான். அதற்கு என்னாலான சிறு பங்கு பத்து பவுண்ட்.

அந்தப் பெண்ணின் கையில் கொடுத்தி ருக்கலாம். ஆனால் அது பிச்சையாக மாறிவிடும். அத்துடன் உழைத்து வாழவேண்டும் என்ற அவர்கள் எண்ணத்தை மதிப்பதும் ஆகாது. இல்லையா?

நாங்கள் எங்கள் பிள்ளைகளின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம். அதற்கு என்ன செய்கிறோம்? கேக் வைத்து மெழுகுதிரி நட்டு, அதில் நெருப்பு வைத்து, ஊதி அணைத்து... என்று 'வெள்ளைக்காரப்' பண்பாட்டில் செய்கிறோம். வெள்ளைக்காரர் உச்சரிக்க வேண்டும் என்று பெயர் வைக்கிற அடிமை மனோ பாவம் கொண்ட ஈனப்பிறவிகள் நாங்கள்.

எங்கள் பிள்ளைகளின் பிறந்த நாளை, பிறருக்கும் பயன்படுமாறு எம்மவருக்கும் ஏதும் கிடைக்கத்தக்கதாக கொண்டாடலாம். ஊரில், எனக்கு இருபது வயதாகும் வரை கோயிலுக்கு எனது ராசி நட்சத்திரத்துக்கு ஏற்ப அம்மா 'பெட்டி' கொடுத்தார். பெட்டி என்பது உழுந்து, பயறு, அரிசி, சர்க்கரை, தேங்காய் ஆகியன. எனது நட்சத்திரத்தன்று மோதகம், வடை, சர்க்கரைப் புக்கை ஆகியன அம்மனுக்கு படைக்கப்பட்டன. அதனால் அந்த அய்யர் குடும்பமும் பயன டைந்தனர்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் எனது ஊருக்கை போனேன். எங்களூர்க் கோயில் அய்யர் வீட்டுக்குச் சென்றேன். பஞ்சத்தில் அடிபட்டிருக்கிறது அவர்கள் குடும்பம். அய்யர் மெலிந்துபோய் இருக்கிறார்.

சாப்பிடச் சொல்லி வேண்டினார். வில்லங்கம் தாங்காமல் ஓமென்றேன். தங்களுக்குரிய சாப்பாட்டைக் குழைத்து திரணையாக்கி ஒரு திரணை எனக்குத் தந்தார் அய்யரம்மா. எனக்கு நெஞ்சு வலித்தது.

நான் ஒன்று செய்தேன். எனது பெற்றோரின் இறப்புக்குத் திவசம் செய்பவனல்ல நான். என்றாலும் அந்த வருடத்திலிருந்து செய்தேன். எப்படி? வருடத்தில் ஒருமுறை அம்மா, அப்பா பெயரில் அந்தக் கோயிலில் அன்னதானம் ஒழுங்கு செய்தேன். அவ்வூரின் ஏழைகள் சாப்பிட ஏதுவாக இருந்தது. அய்யர் குடும்பத்துக்கும் ஒரு தொகைப்பணம் கிடைக்க வழி வந்தது.

மனிதனாக இப்படியும் வாழலாம் அல்லவா?

எந்தச் சமயம் சிறந்தது?

இராம. கே. நாதன்
(ஒரு பேப்பர்)

சென்ற இதழில் எந்தச் சமயம் சிறப்பானது என்ற தொனியில் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது. இந்தக் கேள்வி ஒரு தேவையற்ற கேள்வி. இது மதங்களிடையே பிணக்கை உண்டாக்கவும், அம் மதங்களைச் சார்ந்தவர்களிடையே பிளவை உண் டாக்கவும் எழுப்பப்பட்ட கேள்வியாகவே எனக்குப் படுகிறது.

ஏனெனில் இது எந்த மொழி சிறந்தது என்று கேட்பதற்கு ஒப்பானதாகும். எவருக்கும் ஒரு தாய் மொழி உண்டு. அந்தத் தாய்மொழி அதைப் பேசுப வர்களின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. எந்த மொழியும் அந்த மொழியைச் சார்ந்தவர்களி டையே கருத்துப் பரிமாறிக் கொள்ள உதவுகிறது. தம் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு உப யோகமாகிறது. ஒரு மொழி அதைப் பேசும் மக்க ளுடைய தேவைக்கமைய வாழும் காலத்திற் கமைய சூழ்நிலைக்கமைய வேறுபடுகிறது. அதனால் எந்த மொழி சிறந்தது எனக் கேட்பது மடமையாகும்.

பிறக்கும் போதே ஒருவர் ஒரு மொழியுடன் பிறப்ப தில்லை. அவரது பெற்றோர்கள் எந்த மொழியில் பேசினார்களோ அந்த மொழியிலேயே அவர் பேசுவதற்குப் பழக்கப்படுவார். அவரிடம் போய் எந்த மொழி சிறந்தது எனக் கேட்பது ஒரு அவசியமற்ற கேள்வியாகும்.

சமயங்களும் அதைப்போன்றதே. ஒருவர் ஒரு சமயத்தைச் சார்ந்துள்ளார் என்றால் அது அவரு டைய குடும்பம், சுற்றம், சூழல் என்பதைப் பொறுத்தே உள்ளது. ஒருவர் தனது சமயத்தைத் தெரிந்தெடுத்துப் பிறப்பதில்லை.

தமிழ்ப் பெற்றோருக்குப் பிறந்த ஒருவன் எப்படி தன்னையும் தமிழன் என்று கூறிக்கொள்கிறானோ, அதேபோன்று ஒரு இந்துப் பெற்றோருக்குப் பிறந்த பிள்ளை இந்துவாகவே பிறக்கிறது. எனவே ஒரு சமயத்தில் பிறந்த ஒருவர் தனது அறிவு முதிர்ச்சியடையும் வரை தனது பெற்றோருடைய சமயத்தையே சார்ந்திருக்கிறார்.

எல்லாச் சமயங்களினதும் நோக்கமும் மனித னாகப் பிறந்தவன் இறுதியில் இறைவனை அடைவ துவே. இந்துவாக இருந்தால் என்ன, கிறிஸ்தவ னாக இருந்தாலென்ன, புத்த சமயத்தைத் தழுவி யிருந்தாலென்ன இவையாவும் இறுதியில் இறைவனடி சேருதலே பிறப்பின் நோக்கம் எனக் கூறுகின்றன. அதற்கான வழியைக் காட்டுகின்றன.

இந்த வழிகள்தான் வித்தியாசப்படுகின்றன. ஒரு பாதையிலிருந்து மறு பாதை வித்தியாசப்படு வதுபோல் சமயங்கள் கூறும் மார்க்கங்களும் வேறுபடுகின்றன. மார்க்கங்கள் வேறுபடினும் நோக்கம் ஒன்றுதான். எந்தப் பாதை சிறந்தது எனக் கேள்வி எழுப்புவது மடமையாகும்.

நீ தெரிந்தெடுத்த பாதை கரடுமுரடானது, எனது பாதை சுலபமானது ஆதலால் உனது பாதையை விட்டுவிட்டு எனது பாதைக்கு வா என அழைப்பது தேவையற்றது. ஒல்வொருவரும் தேர்ந்தெடுத்த பாதையில் அவர்கள் செல்லட்டும். ஏனெனில் இந்தப் பாதைதான் சிறந்தது என்று கூறுவதற்கு யாருக்கும் உரிமை கிடையாது.

சில வேளைகளில் தாமாகவே ஒருவர் தன் பாதை துன்பங்கள் நிறைந்தது என்று கருதினால் அவர் வேறு பாதையைத் தேடலாம். அதில் தவறொன்று மில்லை. ஆனால் பிறர் கட்டாயப்படுத்தும் போதோ, மதமாற்றம் செய்ய முயற்சிக்கும் போதோ தான் பிளவுகள் உண்டாகின்றன.

ஏனெனில் எந்தப் பாதை சிறந்தது என்று கூறுவதற்குப் பிறருக்கு உரிமை கிடையாது; ஏனெ னில் இது எந்தத் தாய்மொழி சிறந்தது என்று கூறுவதற்கு ஒப்பானதாகும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தாய் மொழி உண்டு. அம்மொழிகள் ஒவ்வொன்றும் வித்தியாசமானவை. ஒவ்வொரு வகையிலும் வேறுபட்டவை.

ஒரு மொழி மற்றைய மொழியிலும் பார்க்க சிறந்தது என்று கூறுவது போன்றதுதான் ஒரு சமயம் வேறொரு சமயத்திலும் பார்க்க சிறந்தது என்று கூறுவது. ஒரு மொழி எங்கே தோன்றியதோ அல்லது எவ்வாறு மக்களால் பேசப்படுகிறதோ அதற்கேற்ப அந்த மொழி மாறுபடும், வளர்ச்சி பெறும் அல்லது காலப்போக்கில் வழக்குக்குன்றி அழிந்துவிடும். சமயமும் அதேபோன்றுதான். எந்தச் சமயத்தில் ஒருவர் பிறந்தாரோ அந்தச் சமயத்தை அவர் சார்ந்திருத்தலே உலக நியதி.

தமிழ் நாட்டிலே தமிழனாகப் பிறந்த ஒருவர் தேவை கருதி ஆங்கிலம் கற்பதில் ஒரு தவறும் இல்லை. ஆனால் அதே நேரத்தில் ஆங்கிலம் தமிழிலும் பார்க்கச் சிறந்த மொழி ஆகையினால் நான் ஆங்கிலேயனாக மாறிவிடுகிறேன் என்று சொல்லிவிட முடியாது.

ஆங்கிலத்தைப் பேசுவதனாலும், படிப்பதனா லும் ஆங்கிலேய உடை, நடை, பாவனை களினாலும் ஒருவன் ஆங்கிலேயனாக மாறிவிட முடியாது. ஆங்கிலேயனாகப் பாவனை செய்யலாமேயொழிய ஆங்கிலேயனாக மாறிவிட முடியாது. சமயமும் அதே போன்றுதான்.

மற்றச் சமயங்களிலுள்ள நல்ல கருத்துக்களை ஏற்றுக் கொண்டு, தம் சமயத்திலுள்ள சமூகக் கேடுகளை விளைவிக்கும் மூட நம்பிக்கை களையும், கொள்கைகளையும் களைந்து மனிதாபி மானத்துடன் வாழக் கற்றுக் கொள்வதே சிறந்தது. அதை விடுத்து எனது சமயத்திலும் பார்க்க மற்றைய சமயமே சிறந்தது என்று சமயம் மாறுதல் ஒரு கொப்பிலிருந்து மறு கொப்பிற்கு உணவு தேடிப் பாயும் மந்தி அங்கும் உணவைக் காணாமல் ஏங்கும் நிலையையே அடைவர்.

ஆகவே எது சிறந்த சமயம் என்று, தேடி அலையாமல் வாழ்க்கையைச் சீரான வழியில் நடத்துவதற்கு ஏற்ற போதனைகள் என்ன, கட்டுப்பாடுகள் என்ன, சித்தாந்தங்கள் எவை என்பதை சரிவர அறிந்து அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதே, ஒரு தனி மனிதன் மேம்பட வழிவகுக்கும். அத்துடன் சமூகம் மேம்படும். நாடு மேம்படும்.

To Be Heard..... Talk or Shoot?

Shanthi Sachithanandam

MONTAGE

Bathed in the glare of the media and a high-pitched war rhetoric, the military operations in the East were the visible war efforts to most of us in this country and abroad during the past few months. But simultaneously, elsewhere in the East, the government had stealthily opened up another war front away from all the publicity and fanfare. This particular battle was part of a longer term strategy than anything that had been envisaged by the security forces in the North-East. Extraordinary gazette notification was its hardware that carried ammunition in the form of legality, which was deadlier than the biggest multi barrel rocket launcher. Once ground control is consolidated, it is going to use the so called agents of development as its forces of occupation.

It is none other than the declaration of the Muttur East/ Sampur area within the Trincomalee district as a high security zone, and also as a special development zone.

On 30th May 2007 the Sri Lankan government enforced the Muttur East/ Sampur high security zone of around 5000 acres of land comprising of 12 GS divisions, through an extraordinary gazette notification. "No person shall enter the area comprising the Muttur (East) / Sampur High security zone, in any boat or vessel or any other manner, or having entered, remain within or ply any boat or vessel within the Muttur (East) / Sampur High Security zone, except under the written authority of the Competent Authority. .." said the notification. And Maj. Gen. Parakrama Pannipitiya, Commander, Security forces – East, was instituted as the competent authority. With the stroke of a pen, over 15,000 Tamil people who had occupied these areas for generations, were rendered homeless. 28 villages were lost and along with them, access to deep sea fishing, cultivable lands, and cattle grazing areas, not to speak of the local agriculture tanks, schools and hospitals. And this was done while the people were displaced in another district, having been there for over one year .

The HSZ notification is a regulation made by the President invoking section 5 of the Public Security Ordinance. This section is there to execute regulations which are temporary in nature, as deemed necessary for National security. How could the President, under this section, bring into force a regulation which could permanently take away from communities their very basis of existence? Then, one could argue that any government has the jurisdiction to designate areas for development projects. But, when this development leads to the displacement of communities from their lands of habitation, this certain right begins to tread on dubious grounds; more so if it involves the decimation of the economic, social and cultural life of any minorities, clan groups or tribes. For, in the case of such vulnerable communities, this act disrupts the 'geo-social entity' so essential for their existence. And no government shall endanger an ethnic minority, which is really tantamount to ethnic cleansing.

Tap on the shoulder of any Sri Lankan Tamil (note, ANY) to pose the question on the bona fides of this recent declaration. The answer, without any doubt, will identify it as the latest move in the long line of the colonization process carried out during the past sixty years or so by consecutive Sri Lankan governments for the dilution of the demographic constituency of the Tamils in the North-East. This list will begin with the Gal Oya scheme in the then Batticaloa district in the 1950s, afterwards continue through Kantale, Morawewa (changed from the name Mudalikulam), Gomarankadawela (changed from the name Kumaran Kadavai) and Padavisirpura (changed from the name Padaviyal Kulam) schemes, all within the Trincomalee district. On 16th April 1988 a similar extraordinary gazette notification displaced 13,288 Tamil families living in and around 42 villages, though not ancient villages as in Muttur East, in Weli Oya (changed from the name Manal Aru) in the Mullaitivu district. 9,289 Sinhala families were settled there instead, ostensibly under the Mahaweli Development Programme.

> No government shall endanger an ethnic minority, which is really tantamount to ethnic cleansing

Not only development programmes, even the discovery of ancient Buddhist places of worship provided equal enough excuse to 'Sinhalize' the area, completely denying the Tamils their own Buddhist heritage. The Seruwila colonization scheme under the Mahaweli system B project, was one such case, again within the Trincomalee district.

Connect all these schemes, and an astonishingly congruent wedge bifurcating the contiguous Tamil territory of the North-East will emerge. What a coincidence! A coincidence made possible by the strategic placement of only Sinhala officers as Government Agents and authorized land officers in Trincomalee district. Progressively, these senior posts in civil administration are being turned over to the armed forces. In Sri Lankan English parlance, "Easy No ?" At present, both the Government Agent of Trincomalee and the Governor of the North and East are ex- officers of the Army and Navy respectively. It is strongly rumoured that the same fate also awaits the post of the Chief Secretary of the Eastern Provincial Council.

The Muttur East HSZ declaration, therefore, is one part of the strategy to prise the whole of Trincomalee district from the North-East Province. Why else would the authorities bother to rename the fishing village of Ilangaithurai Muhathuvaram, situated at the tip of the adjacent coast, as "Lanka Patuna"? And swiftly announce, even before the war is over and normalcy returned, that 675 sq.km of this land is to be acquired for the creation of a special development zone?

> They rode rough shod over Tamil opinion and bulldozed through with their own project, joking all the way

Ever since the gazette notification, the members of Parliament of the Tamil National Alliance have expressed their objections inside and outside of the Parliament. The Tamil press continues to be filled with long articles of lament by both regular columnists and other individuals. The Federation of Tamil Organizations of the Trincomalee District, the Batticaloa District Inter Religious Peace Union, the New Democratic Party, all issued statements of condemnation. The New Democratic Party referred to the HSZ as a tactic to provide protection to the projects of the State, not for the people as claimed by the government.

The Muttur Pradeshiya Sabha unanimously passed a motion denouncing the HSZ. This motion mentioned the fact that as a body, it had repeatedly appealed to President Rajapaksa, the Governor of Eastern Province, the Government Agent of Trincomalee , Minister of Resettlement Rishad Badurdeen, and the Minister of Disaster Relief Services Amir Ali, to facilitate resettlement. They also alleged that the government suddenly went back on its initial assurance of allowing resettlement once de-mining was over.

In June on the International day of the refugees, thousands of people from the Muttur East region now displaced in Batticaloa district, staged a silent march through the main town of Batticaloa carrying placards which stated in particular that they will not settle anywhere other than in their own villages. They handed over a signed petition to the district representative of the UNHCR. On the 25th July, total Hartal was observed in the North-East despite the intimidation by the Military, STF and the renegade Tamil groups.

Thus, the totality of the Tamil Nation now in turmoil, the government in the guise of Prime Minister Ratnasiri Wickremanayake chose to respond. The Prime Minister categorically stated in Parliament that this notification will never be revoked. He might also have wanted to humour those present. " Even Katunayake and Kolonnawa are declared as HSZs. People continue to live there. The government has not violated their land rights.." he said indignantly. Surely, he must know that HSZs in the North-East mean total expulsion? Are people from Katunayake and Kolonnawa languishing in refugee camps, sometimes for over 15 years, like those in Jaffna, Vavuniya and Trincomalee districts as a result of HSZs? That is why we thought that he was cracking a joke.

But then we have heard these jokes many times before. When the Sinhala Only Bill was brought before the Parliament, when the whole house debated on the colonization schemes in the North-East, when all the Tamil parties staged a walkout in protest of the proposals for the 1972 constitution, when the 6th Amendment was passed rendering the Tamil parties illegal, we heard them over and over again. Every time, armed with political power and backed by the judiciary, they rode rough shod over Tamil opinion and bulldozed through with their own project, joking all the way. Perhaps this was the reason for Prabhakaran to conclude that not voices but the frequency of a gunshot was all that the Sinhala South could hear.

Muttur East people demand that their existence is ensured through the assurance of the continuance of their geo-social entity. How can they make themselves heard? Are their voices sufficient, or should they resort to Guns? Do please tell them.

INSIGHT SYSTEMS

பிரஜாவுரிமை பெறுவதற்குரிய **LIFE IN THE UK** பாட வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகின்றன. கிழக்கு லண்டன் பகுதியில் இதுவரை கற்பித்த மாணவர்களில் 98%ற்கு மேலானவர்களை தேர்ச்சியடைய வைத்துள்ள பெருமைக்குரிய அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் இலகுமுறையில் கற்கை நெறி. குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை. தமிழில் உதவிக் குறிப்புக்கள். ஒவ்வொரு வகுப்பு முடிவினிலும் அத்தியாய முடிவினிலும் பயிற்சிப் பரீட்சைகள். வெகு விரைவில் கம்பியூட்டர் வகுப்புக்களும் ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்புகளுக்கு: **07908 866 300**

The Tamil Fighters, are they freedom fighters or terrorists

Charles Somasundrum
ORU PAPER

It is unfortunate that most foreign writers and journalists tend to describe the Tamil freedom fighters of Eelam as 'terrorists'. The west has, particularly after the 7/11 incident in New York, USA, tended to describe any individual or organisation not with the establishment, as a terrorist or a terrorist organisation. Journalists and newspapers are happier with labelling individuals or organisations.

This brings me to a recent article by Karen Parker, the American Human Rights lawyer that I read recently. Karen Parker holds that if one was to use the same yardstick with which Americans describe the Tamil freedom fighters as terrorists, George Washington, the first American President, could be termed a terrorist. Most students of American history are aware of what is described as the 'Boston Tea Party', when a group of American rebels, dressed as Native Americans, boarded a tea clipper in the Boston harbour and dumped the crates containing processed tea leaves into the water. This incident is what was said to have started the American freedom movement that was soon to develop into a war of independence. Today, journalists would have referred to them as 'terrorists'.

As Eric Margolis says, in an article published on Saturday 27th August 2006 in Toronto Sun.com, under the title 'The Tamils of Sri Lanka are fighting for their independence after decades of oppression'. To quote Mr Margolis 'Terrorism is generally defined as "attacks on civilians for political purposes". Mad dogs who blow up airliners, trains and schools are terrorists, no question. But under this definition, then what do we call the Allied mass slaughter of civilians in Dresden, Hamburg, Tokyo, Osaka, Nagasaki and Hiroshima?

Or, Russia's massacre of 100,000 Muslim Chechens a decade ago. Israel's 1982 bombardment of Beirut that killed 18,000 civilians. U.S. destruction in 1991 of Iraq's water treatment plants, creating an epidemic that killed thousands of children'

Eric Margolis has given these many instances of inter state 'terrorism' in order to show that the word 'terrorism' is often misused. No one today, refers to America or Britain or Russia or Israel as terrorist states. Yet, the media and these very states are prepared to label the Tamil freedom fighters as 'terrorists' without any justification whatsoever. Some of these states have gone further, and even proscribed the LTTE within their countries.

The Tamils of Sri Lanka are fighting for their independence after decades of oppression

Continuing, Mian Ridge says 'Most Buddhist monks are known for their love of peace, harmony and a philosophical acceptance of fate- but as the bloody war that has ravaged Sri Lanka for 25 years enters a new and terrible phase, Mr Rathana and his fellow hard-line monks are urging the president Mahinda Rajapakse, to keep the promise upon which he came to power in late 2005; to crush the Tamil Tigers with military force.' (my emphasis).

These hard-line monks are at the heart of Sinhala-Buddhist ethno nationalism. They view the Tamils as outsiders in the island. They consider the entire island as granted to the Sinhala Buddhists by the Buddha as their personal and private habitat. The hard-line monks have their own political party the Jatika Hela Urumaya (JHU). The word Jatika in the name of the party does not mean 'national' as most journalists appear to believe. Jatika stands for 'race' or 'racial'. The lay ethno nationalist party the Janatha Vimukthi Peramuna (JVP) which also supports the government has a name that means Janatha (Peoples') Vimukthi (Victory) Peramuna (Army). Of course, the Janatha (People) refers to the Sinhala people!

'Tamil Insight' of 9th September 2006 reported the gunning down of Dr Ketheeswaran Loganathan , Deputy Head of the government's Peace Secretariat. As the 'Insight' story goes 'reportedly hours before being shot to death, Ketheeswaran was on the phone to the President's inner junta to express his disgust over the killing by government forces and stated that he no longer believed in government peace negotiations.' He is also said to have added that he had inside information on the execution of NGO staff and, after a heated exchange, threatened to resign and make public his reasons. That threat clearly signed his death warrant!

Simon Jenkins writing in the Guardian regarding the Iraq war has these comments that are equally applicable to the Sri Lankan military.

'When bombing from the air kills non combatants, as it does to an appalling degree, there should at least be a military inquiry.'

'If soldiers enter a house by the front door and kill the civilians inside, then they are hauled before world opinion and condemned. If a dropped bomb enters the same house through the roof and has the same effect, it is dismissed as collateral damage.'

The lack of world media interest in the civil war in Sri Lanka has led to a dearth of adventurous journalists who can make on the scene reports that will arouse 'world opinion'.

I shall end with the following reference from a book titled 'Ethnic Warfare in Sri Lanka ', by William Clarance (former head of the United Nation High Commission for Refugees (UNHCR). Mr Clarance was commenting on military retaliation after a suicide bomb attack wounded Lt Gen Fonseka the Armed Services chief in Colombo. The attack provoked the Sri Lankan Air Force to carry out retaliatory strikes of supposed LTTE positions in the far off east.

Mr Clarance says 'To maintain that this is something less than civil war is too strenuously semantic understandably, it is serious warfare and future historians may well choose to note that Eelam War IV started with deadly attacks by both sides on clearly defined military targets, while at the same time each tried to put the blame for the resumption of hostilities on the other.'

Can any rational person, in the light of all evidence to the contrary, still insist that the Tamil freedom fighters are 'terrorists?:

When in Rome be a Roman

By: Kanagar Raveendiran

I am a Hindu, not a strong Hindu, but I respect not only my relegion but all other religions that are practiced all over the world.

I have been to almost all the religious worshiping places of the majorreligious sections in various parts of the world, and havea fair knowledge of how people behave in their respective places of worship.

Although people may argue that Hindus have a unique way of worshiping their gods, it makes me to come to a conclusion that Hindu gods are merciless towards their devotees. This is the only eligion that allows it's followers being self tortured by various ways, such as fire walking, rolling on sun baked sand, piercing parts of the body with sharp objects, carrying earthenware pots containing burning camphor and worst of all, hanging on flexible poles with metal hooks pierced through the skin in the back.

So much noise is created during worshiping time in a Hindu temple by beating the drums, ringing the bells and shouting various mantras as if the god they are praying is deaf. Most of us do not realise the fact that a quiet serene place is the ideal environment to meditate and pray.

One cannot guess the religion of a person when he or she emerges out of their respective places of worship. When a Hindu comes out of the kovil we can easily spot them by the prominent patch of holy ash, the sandal pottu and the flowers tucked on their ears.

This sounds funny in a western land. With the ever increasing opening of Hindu temples all over the UK, the annual Ther festival is allowed to parade the busy streets of London. No body has given any thought that life is moving fast here and the pace of a slow moving Ther is no match for the fast moving motorised vehicles that are carrying people who are always in a hurry, especially on a weekend or a Bank Holiday. Can these things go ahead in a country like Saudi Arabia?

Aadi Vel in Colombo and the Perahera in Kandy are different from this, because all communities in Sri Lanka look forward for these annual events in a country where time stands still to most of the people who have time in their hands to indulge in pomp and pageantry.

Most of the Hindu kovils in Sri lanka are blessed with wide open areas surrounding the temples and the majestically decorated Ther pulled by devotees, taking their own time, without disrupting the normal life on the streets, is a sight to see,

The good old saying 'When you are in Rome behave like a Roman' still stands. I would like to ask from those opposing my views - are they prepared to tolerate a re-enactment of 'Notting Hill Carnival', parading the main street in Jaffna or scantly clad ladies from the west basking in the sun on the palm fringed beach at Keerimalai?.

Religious and cultural activities should be confined to in-doors.

Imagine a newly married couple marching the streets like in Jaffna or South India, with the accomplishment of drummers and other musicians!.

God is nature and nature is god. When the nature gets angry with the mankind, the end result is disasters such as earth quakes, tsunamis, cyclones, floods, tornadoes, volcanic eruptions and destruction by fire.

There is no life after death. There is life before death. There is no hell or heaven. This earth is hell or heaven, depending on what human beings are doing with their one and only life on this beautiful planet earth.

SRI SATHIYASAIBABA PRASANNA
Sri Malayala Bhagawathi Astrlogical Centre
Pandit Boopathy Sastry

25 years experience in astro Palmist.
(Malayalam & Nepali Manthiram expert)

An expert pandit at service, past, present and future of your life, will be read over to you from your numerology, face reading, palm reading & horoscope reading prediction in Business, Education, Job, Love, Marriage, Family problem, Sickness, Promotion, Visa, Court, lottery, abroad, money, Removal of enemy. All types of black magic and evil things removed. **All Matters will be kept in secret.**
Spoken languages: Tamil, Hindi, Telugu, Kannada & English.

ஸ்ரீமத் சதியசாயி பாபா பிரசன்னா
ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்
பண்டிதர் பூபதி சாஸ்திரி

25 வருடங்கள் அனுபவம் நிறைந்த இந்தியாவில் இருந்து முதன் முறை வருகை தந்துள்ள பூபதி சாஸ்திரி அவர்கள் கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் கணவன் மனைவி ஒற்றுமை, விசா பிரச்சனை, உடல் நலம், திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், தொழில், வியாபாரம், லக்சுமீகர விடயம், கண் திருஷ்டி, கோட் வழக்குகள், வாகனப் பொருத்தம், தமிழ், இந்தி, ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும். ஏவல்கள் அகற்றிக் கொடுக்கப்படும்.

Ajans Food & Wine 324, Rayners Lane, Pinner, Middlesex HA5 5EF.
Closest Tube station: Rayners Lane. Buses: H9, H10, H12
Tel: 07961651939 Opening Times: 9.30am - 8.30pm 7days a week.

ஆயிரத்தில் ஒருவன் ஐயா நீ!



உங்களில்பலர் Dr பிரயன் செனிவிரத்தின (Dr. Brion Seneviratne) பற்றி அறிந்திருக்கக்கூடும். ஈழத்தமிழர் உரிமைக்காக உலகம் முழுதும் சென்று பேசியும் எழுதியும் வரும் இவர் ஒரு சிங்கள மக(ா)ன் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழத் தமிழர்களுடைய போராட்டத்தையும் அதில் இருக்கும் நியாயத்தையும், தமிழ் மக்கள் படும் அவலங்களையும் உலக அரங்கில் எடுத்துச் சொல்லி இலங்கை அரசாங்கத்தைத் தலைகுனிய வைப்பதுடன் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இன ஒழிப்பு நடவடிக்கைகள் பற்றித் தன் சொந்த செலவில் இறுவட்டுக்கள், துண்டுப் பிரசுரங்கள் முதலியவற்றைப் பிரசுரித்து இதுவரை எந்த ஒரு தனிப்பட்ட தமிழ் மகனும் செய்திருக்காத ஒரு பெரும் விழிப்புணர்வை உலகாளவிய விதத்தில் வெளிக் கெணர்ந்திருக்கிறார்.

இதற்காக இவருக்கு கிடைத்த பரிசு இவருடைய சொந்த நிலத்தை அவுஸ்தி ரேலியாவில் உள்ள பிறிஸ்பேன் நகரசபை கைப்பற்றியது மாத்திரமன்றி, இவருடைய நிலத்தில் வளர்ந்த ஒரு பாதுகாக்கப்பட்ட ஒரு தாவரத்தை இவர் அழித்தார் என்று அடாத பழி ஒன்றைச் சுமத்தி இந்த நகர சபையினர் வழக்கொன்றைப் பதிவு செய்திருந்தனர்.

அந்த வழக்கின் முடிவில் இவர் குற்ற வாளியாகக் காணப்பட்டு செப்டம்பர் மாதம் 20ம் திகதி வழங்கப்பட இருக்கும் தண்டனைக்காக காத்திருக்கிறார். இந்த நிலையிலும் இவர் ஸ்ரீலங்காவில் நடக்கும் அட்டூழியங்களை எதிர்த்துப் பேசியும் எழுதியும் வருகிறார்.

தமிழர்களுக்கு இவர் காட்டிவரும் ஆதரவை முடக்கச் செய்வதற்காகவே இவர் மீது இப்படியான சங்கடங்கள் முன்வைக்கப் படுகின்றன என நம்பப்படுகின்றது. இதன் பின்ன ணியில் அவுஸ்திரேலியப் பிரஜா உரிமையுள்ள ஸ்ரீலங்கா அரசாங்க உயர் அதிகாரிகள் செயற்படுவதாக ஊகங்கள் எழுந்துள்ளன.

சமீபத்தில் ஒரு இணையத்தளத்தில் இவர் கூறி யுள்ள கருத்துக்கள் ஒவ்வொரு ஈழத்தமிழனும் கவனிக்க வேண்டிய செய்திகளாகும். இடம் கருதி இக் கட்டுரையின் சில பகுதிகளை மாத்திரம் சுருக்கமாக இங்கே தந்துள்ளேன்.

"பல நாடுகளுக்கு விஜயம் செய்து அங்குள்ள தமிழர்கள் முன் நான் பேசும்போது நாம் ஒன்றும் செய்யாமல் இருந்தோமானால் சிங்கள ஆயுதப்படையினால் கிழக்கிலங்கையில் நடந் தது வடக்கிலும் தொடரும் என்று கூறினேன் நாம் ஒன்றும் செய்யாமல் இருந்தோம். அதனால் வடக்கிலும் அது நடைபெறுகிறது. பின் வன்னியிலும் அது நடக்கும்.

நாம் என்ன செய்யலாம்?

நாம் எவ்வளவோ செய்யலாம். ஏனெனில் மூன்று சக்திகள் மாத்திரமே ராஜபக்சவின் நாசகாரமான போரைத் தடுத்து நிறுத்த முடியும். அவை:

1.சர்வ உலக சமூகம் - குறிப்பாக ஸ்ரீலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகள்.

2. விடுதலைப் புலிகளின் போர்த்திறன்.

3. தென் இலங்கையில் வாழும் சிங்கள மக்களின் அரசியல் தாக்கம்.

சர்வ உலக சமூகம் என நான் குறிப்பிடுவது வெளிநாட்டு அரசாங்கங்களும் அந்நாடுகளின் எதிர்க்கட்சித் தலைவர்கள், இந்நாடுகளில் வாழும் சாதாரண மக்கள், புலம்பெயர்ந்து வாழுகின்ற பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள், ஆகியோரையே.

2007ம் ஆண்டு யூன் மாதம் நான் ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அங்கே கொட்டும் மழையில் ஐ.நா. காரியாலயத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடாத்திய 15000க்கும் மேற்பட்டோர் பங்குபற்றிய கூட்டத்தில் உரையாற்றினேன்.

தமிழர்களுக்குத் தம் உரிமையை வென்டெ றுடுக்கக் கூடிய கால இடைவெளி குறைந்து கொண்டே வருகிறது. கொடூரமான சிங்கள அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களையும், அவற்றை முன்னின்று நடாத்தும், காவி உடை அணிந்த பிக்குகளினதும், தேசிய காவலர்கள் என்று சொல்லிக் கொள்வோரின் சிங்கள - பௌத்த பேரின வாதத்தை வெளிப்படுத்துவதும், அதனை பிரச்சாரப்படுத்துவதன் மூலம்தான் உலக நாடுகளின் ஆதரவை, அநுதாபத்தை தமிழர் களின் விடுதலைப் போராட்டத்திற்கு சார்பாகப் பெறமுடியும்.

நாம் சரியான முறையில் செயற்பட் டிருந்தோமானால் இந்த இனத்துவேஷிகளையும் அரசியல் பச்சோந்திகளையும் உலக அரங்கில் நிறுத்தி, இப்படியான கொடூரமான மிருகக் குணங் கொண்ட அரசாங்கத்தின் முன்னால் தனி அரசை நிறுவுவதைத் தவிர வேறு வழியில்லை என்று காட்டியிருக்க முடியும்.

நாம் அதைச் செய்யத் தவறிவிட்டோம். எமக்குக் கிடைத்த காலக்கெடு குறைந்து கொண்டே வருகிறது. அத்துடன் கிழக்கிலும் வடக்கிலும் தமிழ் மக்களை சிறிது சிறிதாக இழந்து வருகிறோம்.

இப்போது என்ன நடக்கிறது?

வடக்கிலும், கிழக்கிலும் இன்னும் எத்தனை தமிழர்கள் மிஞ்சி இருக்கிறார்கள் என்று என க்குத் தெரியாது. 10 இலட்சத்திக்குக் குறைவான தாகவே இருக்கும் என நம்புகிறேன். ஆனால் கொழும்பிலுள்ள சிங்கள ஆட்சியாளர்களும், அவர்களது கொலைவெறி பிடித்த அரச படைகளும், புத்தரைப் பின்பற்றுபவர்கள் என நம்பப்படும் மஞ்சள் அங்கி அணிந்த பிக்கு களும் சிங்கள ஆதிக்க வெறியர்களும், மீதமுள்ள ஒவ்வொரு தமிழனையும் அழித்தொழிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளார்களா என்பதுதான் இப்போது எழுந்துள்ள கேள்வியாகும். அப்படியானால் அது இன அழிப்பே அன்றி வேறொன்றுமில்லை.

இதை எம்மால் தடுத்து நிறுத்த முடியுமா?

ஆம்! முடியும். ஆனால் காலம் கடந்து கொண்டிருக்கிறது. நான் திரும்பத் திரும்பச் சொன்னதுபோல் எம்மிடம் உள்ள ஆகப் பெரிய சக்தி புலம் பெயர்ந்து, பணம்படைத்த நாடுகளில் வாழும் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் ஆகும்.

இனத்துவேசங் கொண்ட, கொலைவெறி சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து விடுதலை வேண்டி நிற்கும் தமிழர்களின் விடுதலை வேட்கையை யாராலும் நசித்துவிட முடியாது

ஈழப் போராட்டம் மற்றைய விடுதலைப் போராட்டங்களிலும்பார்க்க இரண்டுவிதங்களில் மாறுபட்டது. ஒன்று, வெளிநாடுகளில் வாழும், பயிற்சி பெற்ற திறன் வாய்ந்த தமிழ்ச் சமூகம். மற்றையது, மிகவும் திறமையான பயிற்சிபெற்ற, கட்டுப்பாடுடைய புலிகளின் தரைப்படை, ஆகாயப்படை, கடற்படைகளாகும். உலகத்தில் வேறெந்த விடுதலை இயக்கத்திடமும் இத்தகைய வலிமை கிடையாது.

புலிகளை நசுக்கிவிடப்போவதாக அரசாங்கம் கூறுகிறது. அவர்களால் அது முடியாது என்றே நான் நம்புகிறேன். இந்தப் பிரச்சனைக்கு புலிகளே மூலகாரணம் என்று இதைப்பற்றி நன்கு அறியாதவர்கள் நினைக்கிறார்கள். அது தவறு.

இந்தப் பிரச்சனைக்கு மூலகாரணம் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியவாதிகளே. இவர்கள் முன் வைக்கும் தீர்வு - கிபீர் விமானங்களும், பல்குழல் பீரங்கிகளும் இன ஒழிப்பும்தான். அவர்களுடைய கனவு இரத்தத்தில் ஊறிய ஒரு சிங்கக் கொடியினால் சுற்றப்பட்ட பௌத்த சிங்கள இலச்சினையைக் கொண்ட ஸ்ரீலங்கா வாகும். ஆனால் இதனிலும் பார்க்க ஒரு சிறந்த ஸ்ரீலங்காவை உருவாக்க முடியும். அது ஒரு பிரிவுபட்ட நாடாக இருந்தாலும் கூட.

ஒன்றை மட்டும் நான் நிச்சயமாக நம்புகிறேன். எதை அரசாங்கம் நசித்தாலும், இந்த இனத்துவேசங் கொண்ட, கொலைவெறி கொண்ட சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து விடுதலை வேண்டி நிற்கும் தமிழர்களின் விடுதலை வேட்கையை அவர்களால் ஒரு போதும் நசித்துவிட முடியாது.

ஆனால்இந்த விடுதலை வேட்கைக்கு எதிராக அரசாங்கம் உபயோகிக்கும் ஆயுதம் அழிவை உண்டாக்கும் ஆயுதங்கள் மட்டுமே. இதைத் தடுத்து நிறுத்தும் வலிமை எம்மிடம் இல்லை. ஆனால் இதை எதிர்த்துப் போராட வேண்டியது எமது தலையாய கடன் ஆகும்.

தமிழ் மக்களுடைய மனநிலை இன்னும் சுதந்திரம் பெறுவதற்கு முன்பிருந்த நிலையிலேயே உள்ளது. இது இன்றைய நிலைப்பாடுகளை கணக்கிலெடுத்து ஒரு தனி நாட்டிற்கான மனநிலையாக மாற்றப்படல் வேண்டும். இதைவிட வேறு வழி கிடையாது.

இது நாட்டைப் பிரித்து நாட்டின் அபிவிருத்தியைப் பாதிக்கும் நோக்கமல்ல. பிரிந்த நாடுகள் தனித்தனியே அபிவிருத்தி செய்யும் நோக்கம் ஆகும். இந்த மன நிலையைப் பெற்றபின் எல்லோரும் ஒன்று சேர்ந்து அதற்காகப் போராட வேண்டும். போராட்டத்தில் பங்கு பெற வேண்டும்.

இதற்கு ஓரளவு தியாக மனப்பான்மை, பெருந்தன்மை, பொறுப்புணர்ச்சி வியர்வை சிந்துதல் தேவைப்படும். இதன் பலன் நாம் எல்லோரும் பெருமை கொள்ளக்கூடிய ஒரு நாட்டின் உதயமாக இருக்கும்.

சிங்கள அரசாங்கத்தின் உண்மைக்குப் புறம் பான பரப்புரைகள் திட்டமிட்ட வகையில் மிகுந்த பணச்செலவில் சிறந்த முறையில் கையாளப் படுகிறது. தமிழர் தரப்பில் தேவையான தெல்லாம் பலம் வாய்ந்த, முறையாக ஒழுங்கு செய்யப்பட்ட பிரச்சாரமேயாகும்.

இது சிங்கள அரசாங்கங்கள் கடந்த 50 வருடங்களாக நடந்து கொண்ட விதத்தையும், தமிழர்களுக்கு எந்தவிதமான நியாயமான தீர்வையும் வழங்கும் யோசனை இல்லை யென்பதையும் உலக அரங்கின் முன் வைத்தல் ஆகும்.

சிங்கள மக்களின் மனநிலையைமாற்றுவதற்கு என்ன செய்யலாம் என்று நான் இங்கு குறிப்பிடப் போவதில்லை. ஆனால் கூடிய விரைவில் அவர்க ளுக்கு உண்மை நிலையை விளக்கி ஒரு இறு வட்டை வெளியிட இருக்கிறேன். தென் இலங்கை யில் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் ஆர்வமுள்ள சில குழுக்கள் உள்ளன. அவற்றிற்கு ஆதரவு அளிப்பது அவசியமானது.

கடைசித் தீர்வு என்ன என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. கடந்த நூறு வருடகாலத்தில் எந்த விடுதலை இயக்கமும் தோற்றுப் போனதாக சரித்திரம் இல்லை. ஸ்ரீலங்கா மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்க முடியாது.

ஜெனீவாவில் ஐ.நா அலுவலகத்தின் முன்றலில் அங்கத்துவ நாடுகளின் கொடிகளின் வரிசையின் எல்லையில் சில வெற்றிடங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று ஈழத்தின் கொடிக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது"

அவரது கருத்தின் சுருக்கம் இதுதான். இது போன்ற தமிழருக்காக, மறுக்கப்பட்ட தமிழரின் உரிமைகளுக்காக, நிகழ்த்தப்படும் மனித உரிமை மீறல்களுக்காக குரல் கொடுக்கும் விரல் விட்டு எண்ணக்கூடிய சில சிங்களச் சகோதரர்களை நாம் சரியான வகையில் புரிந்து கொள்ளவும் பயன்படுத்தவும் தவறிவிட்டோமா என்ற சந்தேகம் எழத்தான் செய்கிறது.

- இராகு

ஸ்ரீ துர்க்காதேவி ஜோதிடம்

தேவேந்திரன் சாஸ்திரி அவர்கள்

Mob: **07947 781 197**
07857 414 342

Mobile inn
320,London Road, West Croydon
Surrey CR0 2TJ
(opposite Best Food super Market)
(Near Mithus Gold House)

23 வருட அனுபவம் நிறைந்த இந்தியாவில் இருந்து முதன் முறை வருகை தந்துள்ள பண்டித் ராமராஜ் சாஸ்திரி அவர்கள் துர்க்கா அருள் கொண்டு கைரேகை மூலம் முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள், கணவன் மனைவி ஒற்றுமை,கைரேகை, திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், தொழில், வியாபாரம், லட்சுமீகர விடயம்,கண் திருஷ்டி,கோட் வழக்குகள்,வாகனப் பொருத்தம், பிறந்த பிள்ளைகளின் ஜாதகம் கணித்துக் கொடுக்கப்படும், தமிழ், இந்தி, ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும்.

Devendran Sastry

23 Years expert pandit at service, past, presents and future of your life, will be read over to you from your numerology, face reading, palm reading & horoscope reading prediction in Business, Education, job, Love, Marriage, Family problem, Court problems, Visa requirements, Sickness, Promotion, abroad, Money, Removal all type of black magic and evil things by performing prayers, Devi Upasana, Luxmi pooja also protecting from enemies and jealousy Protection for self, House Business, Spoken Languages: Tamil, Hindi & English.

Call: **07947 781 197** or **07857 414 342**

Opening Hours: 9.30am to 8.30pm 7 Days a week

முட்டாள்தனமான முடிவுகள்

உமா மகாலிங்கம்
(ஒரு பேப்பருக்காக)

சிங்கள் மக்களின் இரு பிரதான கட்சி களான சி.ல.சு.க.யும், ஐ.தே.க.யும் தங்கள் அடையாளங்களை இழந்துவரும் பரிதாபம் இலங்கையில் இன்று காணக் கூடியதாக விருக்கிறது.

ஆட்சியைப் பிடிக்கும் ஒரே குறிக்கோளுடன் கூட்டுச் சேர்ந்த சி.ல.சு.க.யும், ஜே.வி.பி.யும் உள்ளரங்கில் ஒருமுகமும் வெளியரங்கில் வேறுமுகமும் காட்டவேண்டிய அரசியல் சூழ்நிலை தென் இலங்கையில் ஏற்கனவே உருவாகிவிட்டது.

இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி அரசைக் கவிழ்க்க முயலும் ஐ.தே.க, சு.க.(மக்கள்) பிரிவை அரவணைத்துள்ளதன் மூலம், தங்களின் பாரம்பரிய சின்னமான யானைச் சின்னத்தை பறிகொடுக்க வேண்டிய நிலை உருவாகி வருகிறது.

சுமார் 50 வருடங்களுக்கு மேலாக அறிமுகமான யானைச்சின்னத்தை இலகுவில் மறந்துவிட சிங்கள மக்கள் மட்டுமல்ல, மலையகத் தமிழ் மக்களும் தயாரா என்பது சந்தேகமே

2002ம் ஆண்டு மாசிமாதம் 22ம் திகதி ஒப்பேற்றப்பட்ட, போர்நிறுத்த ஒப்பந்தத் தையும், புரிந்துணர்வு உடன்படிக்கையையும், நிறைந்த மனதுடன் உள்வாங்கியிருந்தால் இலங்கையில் இன்று கரண நேரிடும் தெருச் சண்டித்தனமான ஒரு அரசைத் தவிர்த் திருக்கலாம்.

இவ்வரிய சந்தர்ப்பத்தை இதய சுத்தியுடன் அணுகாமல், கப்ட எண்ணத்துடன் கையாண்ட காரணத்தினால், தமிழ் மக்களால் மட்டுமல்ல சிங்கள மக்களாலும் நிராகரிக்கப்பட்ட ஜ.தே.க இப்பொழுது தனது சுயரூபத்தை சிங்கள மக்கள் மத்தியில் காட்ட, அகில இலங்கை தேசிய காங்கிரஸ் கூட்டுறவு தேவைப்பட்டுள்ளது.

தென் இலங்கை அரசியலில் எத்தனை மாற்றங்கள் நிகழ்ந்தாலும் தமிழ் மக்களுக் கெதிரான நடவடிக்கைகள் எப்பொழுதும் நிரந்தரமானதாகவே உலா வந்துள்ளது கடந்த 60 வருட கால நிதர்சனம்.

தமிழையும், தமிழ் மண்ணையும் இருவிழிகளாக எண்ணும் தென் தமிழீழ மக்களை முட்டாள்களாக்கி விடமுடியும் என்ற அரசின் கணக்கு தப்புக் கணக்காகவே முடியப் போகிறது.

சிங்களக் குடியேற்றங்களால் மெல்ல மெல்ல ஆக்கிரமிக்கப்பட்ட தமிழரின் பூர்விகப் பிரதேசங்கள் இராணுவநடவடிக்கைகள் மூலம் பரந்தளவில் கபளீகரம் செய்யப்பட்டுவருவதும் ஒரு வகை இன ஒழிப்பு நடவடிக்கையே.

தமிழ் கிராமங்களின் பெயர்கள், சிங்களப் பெயர்களாக மாற்றப்படுவதும் மாவீரர்கள் துயிலும் இல்லங்கள் இடித்துத் தரைமட் டமாக்கப்பட்டு, இராணுவமுகாம்கள் நிறுவப் படுவதும் வழமையான நிகழ்வுகளாகிவிட்டன.

எனினும் தமிழ் மக்களின் மனங்களிலிருந்த நீங்காத இடத்தைப்பெற்ற இம்மாவீரர்களின் நினைவுகளை எவரும் அழித்துவிட முடியாது என்பதுடன் இது சர்வதேசச் சட்டங்களையே மீறும் செயலாகும்.

கிழக்கிலங்கை மக்களின் இடப்பெயர் வுகளால் இலாபமடைந்த அரசபடைகள் தமது அதிகாரத்தை தக்கவைக்க, அளப்பரிய சிரமங்களுக்கு முகம் கொடுப்பதாக செய்திகள் கூறுகின்றன.

இதன் காரணமாகவே, கிழக்கிலங்கையில் ஒரு உள்ளூராட்சித் தேர்தலை நடத்திவைக்க அதிவேகத்தில் அரச இயந்திரங்கள் இயங்குகின்றன.

தேர்தல் பிரச்சாரத்திற்கு முன்னோடியாக, அரசுக்கு அடிவருடும் துணைப்படைகளின் சூத்திரதாரிகளையும் தனித்து நிற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி அவர்களையும் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் மட்டக்களப்பில் கூட வைத்தது, தமிழ் மக்களை ஏமாற்ற எடுக்கும் ஒரு கபட நாடகமாகும்.

ஜனநாயக விழுமியத்துக்குள் தெரிவு செய்யப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளை மக்களுடன் ஒட்டவிடாமல் தடுத்து வைக்கொண்டு தனக்கு சாதகமான வர்களை அங்கு தலைகாட்ட வைக்கும் நடைமுறை இலங்கை அரசுக்கே சொந்தமான ஒரு தனிப்பாணியாகும்.

தமிழையும், தமிழ் வாழும் மண்ணையும் இருவிழிகளாக எண்ணும் தமிழ்த் தலைவர்கள் பிறந்த தென் நிலத்தில், மக்கள் ஏமாந்த மடையர்களாக மாறுவார்கள் என்று எண்ணுவது எவ்வளவு முட்டாள்தனம்.

அரசபடைகள் கிழக்கில் கண்ட இலகுவான அனுகூலத்தை வடக்கிலும் அடைவதற்கு பெரிய எடுப்பில் ஆயத்தங்கள் செய்யப்படுவதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தமக்கு எதிராக எடுக்கப்படும் யுத்த நடவடிக்கைகளையே காரணம் காட்டும் மகிந்தாவின் அரசு ஒருவாறு இரண்டு வருடங்களை ஓட்டிவிட்டது.

வடக்கிலும் ஒரு யுத்தத்தை மூட்டிவிட்டால் மிகுதி 3 ஆண்டுகளையும் முற்றுப்பெறச் செய்துவிடலாம் என்ற ஒரு நம்பிக்கை அரசுக்கு இல்லாமல் இல்லை.

வடக்கில் தொடக்கப்படும் யுத்தத்தின் முடிவில் தான் மகிந்தாவின் ஆட்சியின் எதிர்காலம் தங்கி இருப்பது வெட்ட வெளிச்சம். அதுவரை அவரது ஆட்சி நிலைக்குமா என்பது சிங்கள மக்களின் மனோ நிலையில் தான் உண்டு.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை, குறிப்பாக வடக்கில் வாழும் 6 இலட்சித்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் திடமான ஒரு முடிவை எடுக்க வேண்டியஒருநிலைக்குத்தள்ளப்பட்டுள்ளதை அங்கு நடக்கும் ஆள்கடத்தல்கள், படுகொலைகள், காணமல்போதல் ஆகிய சம்பவங்கள் உணர்த்துகின்றன.

ஆழ்கடலில் மீன்பிடித்து வளமான வாழ்வை அனுபவித்த தமிழர்கள் கரையில் நின்று கதறியள, சிங்களப்படைகளின் துணையுடன் சிங்கள மீனவர்கள் சீராகத் தொழில் செய்யும் காலம் எதுவரை நீடிக்கும்.

வான்பயிர் என்றாலும், வீண்பயிராகாமல் நெல் விளையும் வன்னிப்பூமி, கண்ணி வெடிகளால் விதைக்கப்பட்டு பாழடைந்து போவதற்கு ஒரு எல்லை தான் இல்லையோ?

கல்வி தான் செல்வமென்று காலம் காலமெல்லாம் கரிசனையுடன் கற்றுத்தேறிய தமிழ் மாணவர்களின் எதிர்காலம் பதுங்கு குழிகளிலும் படையினரின் அறைக்குள்ளும் பரிதாபமாகச் சீரழிவது இன்னும் எத்தனை நாட்கள்?

30 வருடங்களாக இழந்து விட்ட இலகு வாழ்கையை மீண்டும் பெறுவதற்கு எத்தனை வருடங்கள் காத்திருக்க வேண்டும்?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை கிடைக்கும் நாளே தமிழ் மக்களிற்கு விடிவு கிடைக்கும் நாளாக அமையும் என்பதும் அந்த நாள் தொலைவில் இருக்கக் கூடாது என்பதுமே அனைத்துத் தமிழரினதும் எதிர்பார்ப்பாகும்.

உன்னை அறியும் கல்வி உன் பாதைக்கு வழி காட்டும்!!

On Track Academy
(UK)

தலைசிறந்த பயிற்சி இப்பொழுது உங்கள் அருகில்

Children's Care, Learning & Development

NVQ Level 2 & 3 Training and Introductory Courses

An Opportunity

It is intended to recruit those who wish to gain knowledge and experience of children's care within a realistic work environment either through their existing jobs or by finding placement opportunities.

On Track Academy (UK) will deliver introductory courses for example 'NCFE National Award Level 1 Working with children' and NVQ Level 2 and 3 in Children's Care, Learning and Development (CCLD).

Target Group	Ideal for a wide range of people who are seeking a general introduction and training for NVQ Level 2 & 3. Training for Mature Students (or Members of Minority Culture Groups) with English as second language. Also, to Secondary School pupils.
Minimum Entry Age	14 Years
Entry Guidance	No formal prior qualifications are required, although candidates should have the minimum level of literacy required for them to comply with safety aspects of the award. No previous experience of working with children is required. The centre must check with the local Social Services the legal requirements regarding working with children and provide evidence to the External Verifier that these have been implemented.

மாலை, மற்றும் வாரக்கடைசி நாட்களில் இலண்டன் நகரில் பல்வேறு இடங்களில் நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து பயன டையலாம்.

Nearest Tube: Kentish Town /Sangam Association in Edgware

மேலதிக தொடர்புகளுக்கு

திருமதி சந்திரபாலன்

020 8952 1191 / 07957 307 296

www.ontrackacademy.co.uk

info@ontrackacademy.co.uk

வகுப்புகள்யாவும், தகுதி சான்றிதழ் வழங்கும் EDEXCEL மற்றும் NCFE நிறுவனங்களால் அங்கீக ரிக்கப்பட்டவை.

ONTRACK ACADEMY (UK) LTD - நிறுவனம் இங்கிலாந்திலும் வேல்ஸிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. No: 5662819.
Founder / Director Mrs. T. Chandrapalan

இரவி அருணாசலம் **எழுதிக் கொள்வது என்னவெனில்...**

கேட்டிருப்பாய் காற்றே

ஒப்புதல் வாக்குமூலம் என்ற தலைப்பில் கடந்த மூன்று ஒரு பேப்பர் இல் நான் சில விசயங்கள் எழுதி வந்தேன். அத்தொடரை மேலும் சில குறிப்புகள் தந்துவிட்டு நிறுத்துவதாக உத்தேசித்துள்ளேன். எனக்குப் புதியவனான ஒரு தங்கை மீரா, ஒப்புதல் வாக்குமூலம் தொடர்பாக நீண்ட வாக்குமூலம் ஒன்றை எழுதியிருந்தார். இல்லாது பொல்லாதது எல்லாம் எழுதப்பட்டிருந்தது. என்றாலும் ஒரு பேப்பர் இல் அதனை முழுமையாகப் பிரசுரிக்கச் சொன்னேன். ஒரு பேப்பர் ஏனோ அதனைச் செய்யவில்லை. எனவே புதியவன் மீரா வாக்குமூலத்திற்கு நான் பதிலளிக்க முடியாது (புதியவன் என்று ஏன் சொல்கிறேன் என்றால் மீரா என்ற பெண் பெயரில் ஒளிந்து கொண்டு ஒரு புதிய ஆண்தான் இதனை எழுதுகிறார் என்பதனால் புதியவன் என்கிறேன்.)

மற்றவற்றை விடுவோம் ஒன்றை மீரா எழுதுகிறார் சுய விளம்பரம் அல்லது விலாசத்திற்காகத்தான் இதனை நான் எழுதுகிறேனாம் இப்படி இவர் எழுதியதனால் நான் வெருண்டடிச்சு இந்த வாக்குமூலத்தை நிறுத்தவில்லை.

"என் மீது அக்கறை கொண்ட நண்பர்கள் சிலர் உனக்கு ஏன் தேவையில்லாத வேலை? இதனால் என்ன பிரயோசனம்?" என்று கேட்கிறார்கள். அந்த வாக்கியத்தில் உண்மை இருக்கிறது. அதனால் நிறுத்துவோம் என யோசிக்கிறேன். எனவே மீரா கண்டுபிடித்த சுய விளம்பரம் அல்லது விலாசத்திற்காக சிலவற்றை எழுதி முடிக்கிறேன்.

தமிழ்த் தேசியத்தில் அக்கறை கொண்ட நண்பர்கள் சிலரும் வருந்தினார்கள். அவர்களுக்கு நான் ஒன்று சொல்வேன். உங்கள் எவரிலும் பார்க்க தமிழ்த் தேசியத்தில் ஆழந்த அக்கறைகொண்டவன் நான். எனது சகல செயற்பாடுகளும் தமிழ்த் தேசியத்திற்காக இயங்க வேண்டும் என்ற முனைப்பாடுடன் செயல்படுபவன் நான். எனது எல்லாவகை எழுத்தும் தமிழ்த் தேசியத்திற்காக என இயங்குபவன் நான். என் மூச்சு நிற்பதற்கிடையில் மறதி என்னை ஆக்கிரமிப்பதற்கு இடையில் தமிழ்த் தேசியத்தை வளப்படுத்தும் எழுத்தை எழுதி முடிக்க வேண்டும் என ஆர்வம் கொண்டவன் நான்.

அஞ்சாதீர்கள், உங்கள் யாபேரிலும் பார்க்க தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்ப்பவன், வளம்சேர்ப்பவன் நான். என் மனதில் கள்ளம், வஞ்சகம், அதிகாரம், யாரையும் வீழ்த்த வேண்டும் என்ற எண்ணம் எதுவும் இல்லை வெறுமனே சிறு குறிப்பைப் பார்த்து விட்டு தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவன் என்று முத்திரை குத்தாதீர்கள். தமிழ்த் தேசியத்தில் அக்கறை கொண்ட நண்பர்களுக்குச் சொல்கிறேன், மனதில் சுத்தம், புனிதம் வைத்துச் சொல்லுங்கள், நான் செய்கிறேன்.

தமிழ்த் தேசியத்தில் அக்கறை கொண்டோருக்கு ஒரு தகவல். ஐ.பி.சி தமிழின் 10வது ஆண்டு மலரில் முன்னர் ஐ.பி.சி தமிழில் பணி புரிந்த ஒருவர் கட்டுரை எழுதியிருக்கிறார்.

அவர் பற்றிச் சிறு குறிப்புச் சொல்ல வேண்டும். 2000ஆம் ஆண்டளவில் அவர் பணி புரிகின்றார். அவர் சில நிகழ்ச்சியைத் தயாரிப்பவராகவும் செய்தியை வாசிப்பவராகவும் பணி புரித்தார்.

பொதுவாக அறிவிப்பாளர்களிடம் செய்திகள் எழுதிக் கொடுக்கப்படுவதுண்டு. அதை அப்படியே வாசிக்க வேண்டியதுதான் அவர்கள் பணி. ஆனால் இவர் செய்திக்கு மேல் வேறு பணி புரிவார். செய்தியை மாற்றி எழுதிவிட்டு வாசிப்பார். உதாரணமாக தமிழ்த் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் என்று செய்தியில் எழுதப்பட்டு இருந்தால், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் என்று மாற்றி எழுதி வாசிப்பார். என்ன காரணத்துக்காக அப்படி மாற்றி எழுதி வாசிக்கிறார் என்று ஊகிப்பது கடினமல்ல.

அதே போல இன்னொரு சம்பவம் 1997யூன் 9 இல் ஐ.பி.சி ஆரம்பிக்கிறது அந்த வருடத்திலிருந்து ஒவ்வொரு வருடமும் நவம்பர் 26ஆம் நாள் அன்று நமது தேசியத தலைவரின் பிறந்த நாளை ஐ.பி.சி.யில் சிறப்பாகக் கொண்டாடுவதுண்டு முழுநாளும் கொண்டாடுவோம். நான் தலைவரைப் போற்றி இரண்டு முன்று நிகழ்ச்சிகள் தயாரிப்பேன்.

1999 நவம்பர் 26 ஆம் நாள் வந்தது. பிரபாகரனின் பிறந்த நாளை ஐ.பி.சி.யில் கொண்டாடக்கூடாது என்று இவர் நிர்வாகத்துக்கு அறிவித்து விட்டார். நிர்வாகமும் ஒரு சில காரணங்களால் பெரிதாகக் கொண்டாடு வதில்லை என்று தீர்மானித்தது ஒரு நிகழ்ச்சி மாத்திரம் செய்வோம் என்று அந்நிகழ்ச்சியை என்னைத் தயாரிக்கச் சொல்லிக் கேட்டிருந்தது. நான் கொண்டாட வேண்டும் என்று போராடிப் பார்த்தேன், சரி வரவில்லை.

நான் ஒன்று செய்தேன், யசோதா மித்திரதாஸ் மதியம் இரண்டு மணிக்கு உங்கள் விருப்பம் நிகழ்ச்சி செய்தார். அதில் முதலாவது பாடலாக உலகத் தமிழர்களின் விருப்பம் என்று அறிவித்து பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே என்று நமது தேசியத் தலைவரின் பிறப்பு, வாழ்வு, போர், புகழைப் பாடும் பாடலை ஒலிபரப்பினோம். உடனே இவர் நிர்வாகத்திடம் போய் துள்ளியடித்தார்.

நிர்வாகம் இனி இப்படி நடக்காது என்று உறுதி கூறி எங்களையும் கண்டித்தது. ஆனால் மாலை ஆறு மணிக்கு தேசியத்தலைவர் பற்றிய எனது நிகழ்ச்சி இருக்கின்றது. அந்த நிகழ்ச்சிக்கு வரலாற்று நாயகனுக்கு ஒரு வாழ்த்து என்று தலைப்பிட்டோம். யாரால் நாம் தலை நிமர்ந்தோம் என்று தொடங்கி நிகழ்ச்சி போயிற்று.

நான் நிகழ்ச்சியை எழுதித் தயாரிக்க, கூடிக் குரல் கொடுத்தார் யசோதா மித்திரதாஸ். அரை மணி நிகழ்ச்சியாக மாலை ஆறு மணிக்கு ஒலிபரப்பாயிற்று வரலாற்று நாயகனுக்கு ஒரு வாழ்த்து அவ்வளவுதான். வெளியிலிருந்து இவர் நிகழ்ச்சியை கேட்பது எங்களுக்குத் தெரிகிறது.

விறுவிறுவென்டு ஒற்றையை எடுத்து ஏதோ எழுதினார். அதை பணிப்பாளரின் மேசையில் வைத்தார். சந்தைக்கு கடகத்தைக் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு போவது போல் தனது இசைப் பேழைகளை ஒரு பெட்டிக்குள் வைத்துத் தூக்கிக் கொண்டு போனார்.

அந்தக் கடிதத்திற்குப் பதிலாக நிர்வாகம் என்ன செய்தது? தொலைபேசி எடுத்து அவருக்குப் பணிந்து, மீண்டும் பணிக்கு வருமாறு கெஞ்சியது.

தேசியத்தில் அக்கறை கொண்டாரே, இவர் இப்போது ஆண்டு மலரில் கட்டுரை வடிக்கிறார். உங்கள் தேசியம் எங்கே போயிற்று?.

சரி, இனி நான் என் சுய விளம்பரத்தை, விலாசத்தை சொல்லத் தொடங்குகிறேன்.

- வரும்

இளைஞர்களிடையே எழுச்சியை ஏற்படுத்துமா இவர்களின் உதயம்

UKTSU பிரித்தானிய தமிழ் மாணவர் ஒன்றியம்

புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் குறிப்பாக பிரித்தானியாவில் எம் தமிழர்களில் பெரும்பாலானவரகள் தமிழ் மொழியைப் பேசுவதையே அவமானமாகவே கருதுகின்றனர். குறிப்பாக வளர்ந்து வரும் இளம் தமிழ்ச் சமுதாயத்தின் மத்தியிலே தமிழ் மொழி பேசுவது மிகவும் அருமையானதாகக் காணக்கூடியதாக உள்ளது. இதில் பெற்றோரின் பங்கை மிக முக்கியமான தாக கருதலாம்.

இவர்கள் தமது பிள்ளைகள் ஆங்கிலத்திலேயே பேசவேண்டும் என விரும்புகின்றனர். தமிழ்மொழி என்பது தேவையற்ற மொழியானதாகவே இவர்கள் கருதுகின்றனர். இதனால் தமது வீடுகளில் தம் பிள்ளைகளுடன் சாதாரணமாகக் கதைக்கும் போதுகூட தமிழில் பேசாது ஆங்கிலத்திலேயே உரையாடுகின்றனர்.

நம் தாய்மொழியான தமிழை மறப்பது எம் தாயை மறக்கும் நிலைக்குச் சமமானதே! எனவே இவ்வாறு சென்றால் நாளை தமிழ் மொழியானது புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் அழிந்துபோகும் அபாயம் உள்ளதுடன் கலாசாசார நிகழ்வுகள் என்னவென்று புரியாத கேளிக்கைகளாக மாறக் கூடிய சந்தர்ப்பம் உண்டு அல்லவா!.

இதனைக் கருத்தில்ற் கொண்டே பிரித்தானிய தமிழ் மாணவர் ஒன்றியம் UKTSU உருவெடுத்துள்ளது. ஒரு இனம் மொழி சிறப்புடன் வளர்வது அதன் இளம் தலைமுறையிலேயே தங்கியுள்ளது என்பதனை இவர்கள் நன்கறிந்து UKTSUவை உருவாக்கியது மகிழ்ச்சியே.

அத்துடன் தமது உருவாக்கத்தின் முதல்படியாக பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான சவால் (University Savaal) என்னும் பொது அறிவு நிகழ்வையும் பிரித்தானியாவின் புத்திசாலிப்பிள்ளை (Britain's Brainest Pillai) என்னும் சிறுவர்களுக்கான பெது அறிவையும் வெற்றிகரமாக நடாத்தி முடித்தனர்.

மேலும் அவர்கள் தங்கள் சேவையை விரிவுபடுத்தும் நோக்குடன் பிரித்தானியாவில் உள்ள ஏனைய பல்கலைக்கழகங்களில் பயிலும் தமிழ் மாணவர்களின் பங்களிப்பையும் எதிர்பாத்திருக்கின்றனர். ஆகவே இதன் பொருட்டு எதிர்வரும் 3ஆம் திகதி November மாதம் வெஸ்ரேன் தாளம் (Western Thaalam) என்னும் முத்தமிழையும் பிரதிபலிக்கும் கலை நிகழ்சி ஒன்றையும் புதுப்பொலிவுடன் ஏற்பாடு செய்துள்ளனர். எனக் கூறினர் அத்துடன் மூளைத்திறமைக்கு முன்னுரிமை கொடுக்கும் போட்டி நிகழ்ச்சியும் (Games Zone) நடைபெற உள்ளது. எனவும் தெரிவித்தனர்.

இதில் பங்கு பற்ற விரும்புகின்றவர்கள் வயது வேறுபாடின்றி admin.uktsu@googlemail.com என்னும் மின்னஞ்சலினூடாக தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுள்ளனர்.

தாயகத்தில் கல்விகற்க முடியாது அல்லல்ப் படும் வறிய மாணவர்களுக்கு இலவச இளையோர் அறிவுக்கழகம் ஒன்றையும் ஆரம்பிக்க உள்ளதாகவும் தெரிவித்தனர். இதற்கு அனைத்து தரப்பினரின் ஆதரவையும் எதிர் பார்த்துள்ளனர். இவர்களின் பணி தொடர எமது வளமான நல் வாழ்த்துக்கள்.

- அ.மயூரன்

Tamsons
Accountancy & Tax Consultancy Ltd.



* Accountancy & Auditing
* Business Start up Advice
* Business Plans & Cash Flow Forecasts
* Personal tax Affairs & Self Assesment
* Company Tax Affairs & Company Tax Return (CT600)
* Preparing VAT, Payroll for the Sole Trader
* Partnership & Limited Companies

Company Formation *
Attending VAT & PAYE visits *
CIS Voucher & Construction *
Industry Services *
Tax Investigations *
Solicitors Accounts *
& Accounts Reports *

65, Southlands Road, Bromley, Kent BR2 9QR
Tel: 020 8313 0800

சாய்ந்த கோபுரங்கள்...

உன்னைத் திருத்திக்கொள்...

இளங்கோ
(ஒரு பேப்பருக்காக)

உன்னைத் திருத்திக் கொள் உலகம் தானாகத் திருந்தி விடும் என்ற இச் சொற்றொடர் தனி மனித ஒழுக்கத்தை வலியுறுத்தும் பொருட்டு காலம் காலமாக சொல்லப்பட்டு வருகிறது.

தனிமனித ஒழுக்கமும் பண்பு நலன்களும் ஒவ்வொரு மனிதனுக்கும் கட்டாயம் தேவை என்றாலும் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஏற்படும் அந்த உணர்வுகள் ஒரு போதும் சமூக மாற்றத்தை ஏற்படுத்தி விடாது.

ஏனெனில் அனைவரும் அவ்வாறு நினைத்து விடப் போவதில்லை. ஒருவர் திருந்தி, பின்னர் அவரது குடும்பம் திருந்தி, அதன் பின் சமூகம் திருந்தி, நாடு திருந்தி, உலகம் திருந்தி.. இவை நடக்கக் கூடியதா? வெறும் கற்பனை வாதத்திற்கு இது உதவுமே தவிர நடைமுறை சமூக வாழ்வுக்கு ஒரு போதும் உதவாது. அப்படியானால் சமூகத்தில் உள்ள குறை பாடுகளைத் திருத்த முடியாதா?

முடியும். ஆனால் தனி மனித மாற்றத்தால் அது முடியாது, சமூக மாற்றத்தால் அது முடியும்என்பதுடன் அந்த சமூக மாற்றம் தனி மனிதனையும் மாற்றும்.

தனி மனித மாற்றத்தால் உலகம் மாறியிருக்கிறது என்பதற்கு எவ்விதச் சான்றுகளும் இல்லை. ஆனால் சமூகமாற்றங்கள் தனி மனிதர்களை மாற்றியிருக்கின்றன என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.

குறிப்பாகத் தமிழீழத்தை எடுத்துக் கொண்டால்சாதிய ஏற்றத்தாழ்வுகள் பல சமூகங்களில் இருந்தாலும் யாழ்ப்பாணச் சமூகத்தினரிடம் அது சற்று அதிகமாகவே இருக்கிறது.

சாதி பார்க்கக் கூடாது அது தவறு என ஆன்மீகப் பாணியில் சொல்லிக் கொண்டிருந்தால் அது அவர்களைத் திருத்திவிடாது. காலம் காலமாக வாழையடி வாழையாக அது கற்பிக்கப் பட்டு வருகிறது.

சாதியம் தவறு என உணர்ந்து சமரச நோக்கோடு வாழ்பவர்கள் முற்படுத்தப் பட்ட சாதியிலும் இருக்கிறார்கள். அவர்கள் விதி விலக்குகளே தவிர விதிகள் அல்ல. விதி விலக்குகளால் விதிகள் அவ்வளவு எளிதில் மீறப்பட்டு விடுவதில்லை. அவர்களால் தங்கள் குடும்பத்தினரையே மாற்ற முடியாமல் இருக்கும்போது ஒரு சமூகத்தை நிச்சயம் மாற்றிவிட முடியாது. இறுதியில் குடும்ப அழுத்தங்களுக்கு அவர்களும் பணிந்து போய்விடுகிறார்கள்.

இந்நிலையில் ஈழத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் சாதிய ஏற்றத்தாழ்வுகளை தணித்திருக்கின்றன.

தமிழீழ அரசு சாதியையும் சீதனத்தையும் சட்டம் கொண்டு வந்து ஒழிக்க முற்பட்டது நல்ல முயற்சி. இது ஒரு சமூகமாற்றம். புலம் பெயர்ந்த சமூகத்தால் சாதியம் என்பது கட்டிப் பாதுகாக்கப் படுகிறது என்றாலும் ஈழத்தில் முன்பு இருந்ததைக் காட்டிலும் பல மடங்கு குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

சாதியத்திற்கு எதிராக, உயர் சாதித் திமிரைக் காட்டுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்டங்களை ஒரு அரசு கொண்டு வரும்போது சாதி எதிர்ப்பாளர்களை அது மகிழ்விக்கிறது என்பதற்கும் மேலாக மற்றுமொரு நன்மை அங்கே நடக்கிறது.

ஆம் சாதியவாதிகள் அச்சப் படுவார்கள் சாதி பார்ப்பது தேசக் குற்றம் என்றொரு நிலைக்கு அவர்கள் தள்ளப் படுவார்கள். ஈற்றில் சாதியம் சமூகத்தில் இருந்து மறைவதற்கும் வழிவகுக்கும்.

பிரான்சுப் புரட்சி நிலவுடமை ஆதிக்க வாதிகளைத் தகர்த்தது ஒரு சமூக எழுச்சியால்தான். கறுப்பின மக்களுக்கு எதிரான வெள்ளையர்களின் நிறவெறி தனிமனித பண்பு நலன்களால் குறைக்கப்படவில்லை.

இடைவிடாது நடந்த போராட்டங்களாலும், சிந்திய இரத்தங்களாலும், மார்டின் லூதர் கிங் போன்றவர்களின் உயிர்த் தியாகங்களாலுமே அவை குறைக்கப்பட்டன.

அதன் பலனாக மேலை நாட்டு அரசுகள் நிறவெறிக்கு எதிராகக் கொண்டு வந்த கடுமையான சட்டங்களே இன்று பல வெள்ளை இனத்தவர்களைநிற ஒடுக்குமுறைக்கு எதிராக குரல் எழுப்பும் அளவிற்கு மாற்றியிருக்கின்றன.

அனைவருக்கும் சமமான கல்வி வேலை வாய்ப்பு என நாட்டில் சமவுடமை பூத்துக் குலுங்கினால் நளடைவில் இவையெல்லாம் மறைந்து போவதற்கு வாய்ப்பு உள்ளன.

குறிப்பாக Anti – Discrimination Commission எனும் மனிதர்களை வேறுபாட்டோடு நடத்துவதற்கு எதிரான ஆணைக்குழு அமுலாக்கப் பட்டு அதை மீறுபவர்களுக்கு கடுமையான தண்டனைகளும் வழங்கபடுகின்றன.

அதைப்போன்று விபச்சாரம் எனப்படும் பாலியல் வணிகத் தொழிலை எடுத்துக்கொண்டால். தனிமனித ஒழுக்கத்தை வலியுறுத்துவதாலோ அல்லது அதில் ஈடுபடும் பெண்கள் மீது வெறுப்பைக் கக்குவதாலோ அவை மறையப் போவதில்லை. அதற்கான சமூகக் காரணிகளை ஆராய வேண்டும்.

தமிழ் நாடு போன்ற இடங்களில் பாலியல் தொழில் செய்யும் ஏழைப் பெண்களின் கதைகள் கல்லையும் கரைய வைக்கும். பணக்கார முதலைகளின் பசிக்கு பாவம் அவர்களின் வறுமை பயன்படுகிறது. தனிவுடமைதான் ஒரு குறிப்பிட்ட மக்களை பெரும் பணக்காரர்களாகவும் வேறு சில மக்களை அன்றாட வாழ்க்கையை ஓட்ட முடியாத அளவுக்கு ஏழைகளாகவும் மாற்றுகிறது.

அனைவருக்கும் சமமான கல்வி வேலை வாய்ப்பு என நாட்டில் சமவுடமை பூத்துக் குலுங்கினால் நளடைவில் இவையெல்லாம் மறைந்து போவதற்கு வாய்ப்பு உள்ளன.

நாம் வாழும் உலகம் எத்தனையோ வகையான அடக்குமுறைகளையும் மனித இழிவுகளையும் சந்தித்திருக்கின்றன.

அவைகள் இன்று புதிய வடிவத்தில் தொடர்ந்தாலும் முன்பு நிலவிய ஆண்டான் அடிமை முறை, நிலவுடமை ஆதிக்கங்கள் போன்றவைகள் தற்போது இல்லை. அன்றைய அடிமையுடைமைச் சமூகத்தில் அடிமைகளைக் கொல்வதற்கும் அவர்களின் உடமையாளர்களுக்கு உரிமை இருந்து வந்திருக்கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அதற்கெதிரான போராட்டங்கள் வலுப்பெற்றன.

1860 ஆம் ஆண்டு அப்போது அமரிக்க அரசுத் தலைவராக இருந்த அபிரகாம் லிங்கன் அவர்கள் அடிமை முறையை ஒழித்துக் கட்டுவதற்கு கடுமையான சட்டங்களைப் பிறப்பித்தார்.

தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அனைத்து அடிமைகளும் முற்றாக விடுதலையடைய வேண்டும் (Emancipation Proclamation) என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அதனை மீறுபவர்கள் சட்ட விரோதிகளாகக் கருதப் பட்டனர். விளைவு அடிமை முறை அதன் பின்னர் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டது.

எனவே ஒருவரின் உள்ளம் திருந்துவதால் உலகம் திருந்திவிடாது மாறாக சமூக, அரசியல் மாற்றங்களே அந்த அந்த ஒருவரையும் திருத்தும் வல்லமை பெற்றவை.



Herba Naturelle´s
Natural Health clinic

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இயற்கையான மாற்று சிகிச்சை முறைகள்:

* Herbal Medicine
* Acupuncture
* Aroma therapy
* Homeopathy
* Psycotherapy
* Osteopathy
* Nutritional therapy
* Reflexology
* Indian Head Massage
* Chiropody
* Sports Massage

ஆகியன வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு சிகிச்சை முறையையும், தகுதி பெற்ற பயிற்றப்பட்ட, நீண்ட கால அனுபவமுள்ள சிகிச்சையாளர்கள் வழங்குவார்கள்.

மேலதிக விபரங்களுக்கு:

Natural Health Clinic
351a Whitehorse Road
Croydon CRO 2HS

Call: 0208 6648720

வெளிவந்துவிட்டது
இலவச மருத்துவ இதழ்
"ஆரோக்கிய வாழ்வு"
பெற்றுக்கொள்ள தமிழ் கடைகள்
ஆலயங்களை நாடலாம்

சரியான பாதையில் ஜே.வி.பி

மணிவாசகன்
(ஒரு பேப்பருக்காக)

இன்றைக்குச் சிறிலங்காவிலே இனவாதம் கக்குகின்ற கட்சிகள் என்றதுமே எம் நினைவில் வருவது ஜாதிக ஹெல உறுமயவும் ஜனதா விமுக்தி பெரமுன என்கின்ற ஜே.வி.பியும் தான்.

ஆனால் இலங்கையின் அரசியலையும் ஜே.வி.பி.யின் கடந்த காலத்தையும் பின்நோக்கிப் பார்த்தால் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகச் சரியான பாதையிலே செல்லுகின்ற அரசியல் கட்சியாகவே ஜே.வி.பியைப் பார்க்க வேண்டி இருக்கிறது.

முதலாவதாக மக்கள் விடுதலை முன்னணியின் வரலாற்றைத் திருப்பிப் பார்த்தால் அவர்கள் ஜன நாயகத்திலோ பாராளுமன்ற அரசியலிலோ எப்போதுமே நம்பிக்கை கொண்டவர்களல்ல என்பது புலப்படும்..

ஒரு மருத்துவ பீட மாணவனாக ரஸ்யாவிலே கல்வி கற்றுக்கொண்டிருந்த ஜே.வி.பியின் ஸ்தாபகர் றோஹண விஜேவீரா அவர்கள் மாக்சியத் தத்துவங்களால் கவரப் பட்டவராய் இருந்தார். கியுபப் புரட்சி அவரைப் பெரிதும் கவர்ந்திருந்தது. குறிப்பாக புரட்சியாளர் சேகுவேராவின் வழியை அவர் பெரிதும் விரும்பினார்.

ரஸ்ய அரசு தொடர்பான விமர்சனங்களை முன்வைத்த காரணத்தால் அவரால் தன்னுடைய கல்வியைத் ரஸ்யாவில் தொடர முடியாமல் போனது. அதைத் தொடர்ந்து இலங்கை அரசியலில் நாட்டம் காட்டத் தொடங்கிய விஜேவீரா இலங்கையின் ஜனநாயக ஆட்சி முறையால் ஏழை மக்கள் எந்தப் பலனையும் பெறப் போவதில்லை, ஆயுதப் புரட்சி மூலமே மக்கள் விடிவு பெறலாம் என்ற பிரச்சாரத்தை இளைஞர்கள் மத்தியில் குறிப்பாக பின்தங்கிய கிராமப் பகுதிகளில் இரகசியமாக முன்னெடுத்தார்.

இதன் அடுத்த கட்டமாக 1971ம் ஆண்டிலே சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியைத் தூக்கியெறிவதற்காக ஒரு ஆயுதப் புரட்சிக்கு ஏற்பாடு செய்தார். சரியான திட்டமிடலில்லாத காரணத்தால் சிறிமாவோ அரசாங் கத்தால் அந்தப் புரட்சி ஒடுக்கப்பட்டது. கொடுங்கரங் கொண்டு ஒடுக்கப்பட்ட இந்தப் புரட்சியில் பத்தாயிரத் திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். றோஹண விஜேவீரா உள்ளிட்ட பல்லாயிரக் கணக்கானோர் சிறை களில் அடைக்கப்பட்டனர்.

1977ம் ஆண்டில் பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு வெளியில் வந்த விஜேவீராவின் மனதில் புரட்சியின் மூலம் நாட்டைக் கைப்பற்றும் எண்ணம் கருகிவிடவில்லை. ஆனால் பெரும்பாலான உறுப்பினர்கள் கொல்லப்பட்ட நிலையிலும் சுனந்த தேசப்பிரிய, விக்டர் ஐவன் உள்ளிட்ட பலர் கருத்து முரண்பாடுகளினால் வெளியேறிய நிலையிலும் உடனடியாக இன்னொரு புரட்சியை நடத்த முடியாதென்பதை உணர்ந்து காலங் கனியும் வரை ஜனநாயக அரசியல் என்ற முகமூடியைப் போட்டுக் கொண்டு காலங்தள்ள முடிவு செய்தார்.

1983 இல் அரசால் கட்டவிழ்த்து விடப்பட்ட கலவரத்திலிருந்து தமது முகத்தை சர்வதேச அரங்கில் காப்பாற்றிக் கொள்வதற்காக அந்தப் பழியை ஜே.வி.பி மற்றும் இடது சாரிக் கட்சிகளின் தலையில் போட்டு அவற்றைத் தடை செய்யும் கைங்காரியத்தை ஜே.ஆரின் அரசாங்கம் செய்ததால் இரண்டாவது புரட்சியை தான் எதிர்பார்த்ததற்கு முன்னதாகவே ஆரம்பிக்க வேண்டிய நிலை ஜே.வி.பிக்கு ஏற்பட்டது.

1980களின் இறுதிப்பகுதியில் சிங்களப்பிரதேசங்களை ஒரு காகிதத் துண்டின் மூலம் கட்டுப்படுத்தும் அளவிற்கு அவர்கள் பலம் பெற்றிருந்தார்கள்.

ஆனால் உள்வீட்டுப் பிரச்சினைகள் காரணமாக அந்தப் போராட்டமும் நசுக்கப்பட்டதுடன் விஜேவீரா உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் பலரும் கொல்லப்பட்டனர். சிலர் நாட்டை விட்டுத் தப்பியோடினர்.

இந்த நிலையில் 'பழைய குருவி கதவைத் திறவடி' பாணியில் மீண்டும் ஜனநாயகம் பேச வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.

தவிர்க்க முடியாத நிலையில் ஜனநாயக அரசியலில் கால் வைத்திருந்தாலும் அடுத்த புரட்சிக்கான காலம் கனியும் வரை காத்திருக்கும் ஒரு அமைப்பாகவே ஜே.வி.பி யை பார்க்க வேண்டி இருக்கிறது.

தமது திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு இலங்கையின் போர்ச் சூழல் மிகவும் உதவியாக இருக்கும் என்பதை நன்கு உணர்ந்து வைத்திருப்பதால் யுத்தம் நீடிக்க வேண்டும் என்ற எண்ணமும் மக்களிடம் யுத்த மனநிலை முன்னிலைப் படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணமும் அவர்களிடம் மோலோங்கிக் காணப்படுகிறது.

அத்துடன் முதலிரு சந்தர்ப்பங்களைப் போலன்றி இம்முறை ஒரு குறிப்பிடத்தக்க மக்கள் செல்வாக்கைப் குறிப்பாக நகரப் பகுதிகளில் பெற்றுவிட வேண்டு மென்பதிலும் குறியாக இருக்கின்றனர்.

சிங்கள மக்களிடம் அரசியல் ரீதியாகக் குறுகிய காலத்தில் செல்வாக்குப் பெறுவதற்கான வழி இனவாத சிங்களக் கோசமே என்பது அனைவரும் அறிந்ததே. பண்டாரநாயக்காவின் தனிச் சிங்களச் சட்டம் என்ற கோசம் கட்சியைத் தொடங்கி சில காலத்திலேயே அரசுக் கடடிலில் அமரும் அளவிற்கு அவர்களை உயர்த்தியதும் தெரிந்ததே. எனவே ஜே.வி.பியும் இன வாதத்தையே தன்னுடைய அரசியல் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி வருகிறது

அது மட்டுமன்றி சிறிலங்கா அரசாங்கம் போர்ச் சூழல் காரணமாக பின்புலத்தை விசாரிக்காது பலரையும் இராணுவத்தில் சேர்த்து வரும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பல ஜே.வி.பியினர் இன்றைக்கு சிறிலங்கா இராணுவத்திற்குள் நுழைந்து விட்டனர்.

அத்துடன் 80களின் இறுதிப்பகுதியில் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட போதிலும் ஜே.வி.பியின் ஆயுதங்கள் பெருமளவிலே கைப்பற்றப்படவில்லை.

அந்த ஆயுதங்கள் எங்கே என்பதும் அவற்றை அரசிடம் கையளிக்காமல் எதற்காக ஒளித்து வைத்திருக்கிறார்கள் என்பதும் நியாயமான கேள்விகளே. ஆனால் தமது அரசுக் கதிரைகளை ஜே.வி.பியினர் தாங்கிக் கொண்டிருப்பதால் இது தொடர்பான விசாரணைகளை நடத்த சிறிலங்கா அரசுகள் தயங்குவதும் இவர்களுக்கு வாய்ப்பான ஒரு விடயமாகவே இருந்து வருகிறது.

இவை எல்லாவற்றையும் கவனிக்கின்ற போது இம் முறை ஜனநாயகப் போர்வையில் ஆட்சியைக் கைப் பற்றிப் பின் தமது திட்டத்தை நிறைவேற்றுவது அல்லது முன்னரைப் போலல்லாது இராணுவம், அரச நிர்வாகம், தொழிற்சங்கங்கள் என்பவற்றுக்குள் பெருமளவில் ஊடுருவி சரியான திட்டமிடலுடன் ஆயுதப் புரட்சியின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவது என்ற இரட்டை அணுகு முறையுடன் ஜே.வி.பி செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதே உண்மை.

கண்மணி அன்போடு...

சின்ன வயதில் சும்மா இருக்காமல் ஒரு பெண்ணுக்கு கடிதம் கொடுக்கப் போக அவளது அண்ணன்கள் 'கவனித்த' கவனிப்பில் கடிதம் எழுதுவ தையே கை விட வேண்டி வந்தது. அதன் பின்னர் ஒருநாள் இரவு திடீரென கனவில் தமிழ்த்தாய் தோன்றி 'மகனே தனிப்பட்ட கடிதங்கள் கிடக்கட்டும்? நீ ஏன் பகிரங்கக் கடிதங்கள் எழுதக் கூடாது? உனக்காக இந்தத் தமிழ் சமூகமே ஏங்கித் தவிக்கிறது. வா வந்து இலக்கியச் 'சேவையைச்' செய் என வேண்டிக் கொண்டதன் விளைவுதான் நான் பத்திரிகை உலகையே 'ரட்சிக்க'ப் பயணப்பட்டது.

'பகிரங்கக் கடிதங்கள்' என்றாலேயே உடனே பேனாவைத் திறந்துவிடுகிற நான், தனிப்பட்ட கடிதங்கள் விஷயத்தில் மட்டும் படு சோம்பேறி என்பதையும் சொல்லியாக வேண்டும்.

எனக்குத் தெரிந்து ஒரு கடிதமே ஒரு கட்சியை இரு கட்சியாக்கிய அதிசயமும் இந்தத் தமிழ் மண்ணில் நடந்தேறியிருக்கிறது.அதுதான் 'உளவுத் துறை' தி.மு.க.வின் நிரந்தரத் தலைவர் கலைஞருக்கு அனுப்பிய கடிதம். பாவம் வை.கோ.

எண்பதுகளின் இறுதிப் பகுதியில் ராஜீவ் - ஜெயவர்த்தனே என்கிற இரு சுயநலமிகள் தங்களது சொந்த நலனுக்காக ஈழத் தமிழர் வாழ்வின் மீது 'ஒப்பந்தம்' என்கிற பேரிடியை இறக்கிய நேரம். அரசு 'அள்ளி வழங்கிய' அவமானமும் வேதனையும் தாங்காது, தங்களது நேசத்துக்குரிய தமிழக மக்களைப் பிரிந்து கப்பலேறும் முன் 'பாலம்' இதழுக்கு கி.பி.அரவிந்தன் எழுதிக் கொடுத்துவிட்டுப் போன 'எங்கள் நினைவுகளை உங்களிடம் கையளித்துள்ளோம்' என்கிற அக்கடிதம் எம்மை வாய்விட்டு அழவைத்த ஒன்று.

வெள்ளையனுக்கு எதிராகக் கப்பலையே விட்ட வ.உ.சி. தனது வாரிசுக்கு வேலை ஏற்பாடு பண்ணச் சொல்லி பெரியாருக்கு எழுதிய கடிதம் இன்னமும் பலர் அறியாதது.

சமீபத்தில் கூட ஒரு சுவரொட்டியைப் பார்த்து தலையே சுற்றிவிட்டது.

ஒரே நேரத்தில் 'தணிக்கை செய்யப்பட்டது' என்கிற முத்திரையோடு ஒரு இந்து தீவிரவாத இயக்க நபரிடமிருந்தும், அவர்களால்' தீவிரவாதத்தை நோக்கித் தள்ளப்பட்ட இசுலாமிய நண்பரிடமிருந்தும் வந்த விமர்சனக் கடிதங்கள் என்னை ஆச்சர்யத்தில் அமிழ்த்திய ஒன்று.

எத்தனை கடிதங்களை வாசித்தாலும் எத்தனையோ கடிதங்களை எழுதினா லும் இன்றைக்கும் என்னால் மறக்க முடியாத கடிதம் ஒன்று உண்டு. அநேகமாக அது அண்டன் செக்காவ் என்பதாகத்தான் ஞாபகம். அந்தக் கதை இதுதான்:

தனது பேரனைப் பாதுகாக்க வழியின்றி நகரத்திலுள்ள ஒரு பணக்கார வீடொன்றில் கொண்டுபோய்ச் சேர்க்கிறார் தாத்தா. அவர் தனது பேரனை விட்டுவிட்டு ஊர் திரும்பிய ஓரிரு நாட்களிலேயே சித்திரவதை செய்ய ஆரம்பிக்கிறது அப்பணக்காரக் குடும்பம். பல நாள் அடி, உதை, பட்டினிக ளுக்குப் பிற்பாடு எப்படியோ அவர்களது கண்களுக்குத் தப்பித்து கடிதம் ஒன்றினை எழுதுகிறான் அப்பேரன்:

அன்புள்ள தாத்தாவுக்கு,

நீ விட்டுவிட்டுப் போன சில நாட்களிலேயே இங்குள்ளவர்கள் மிரட்ட ஆரம்பித்து விட்டனர். அவர்கள் தினந்தோறும் அடிப்பதையும், சூடு வைப்பதையும் என்னால் தாங்க முடியவில்லை. நான் இன்றோடு சாப்பிட்டு மூன்று நாட்களாச்சு. எப்படியாவது உடனே வந்து என்னை நமது கிராமத்துக்கே கூட்டிக் கொண்டு போய் விடு. மிக அவசரம்."

என்று எழுதிவிட்டு பின்புறம் திருப்பித் தனது தாத்தாவின் முகவரியை எழுதுகிறான் அப்பேரன். இப்படியாக?..

பெறுநர்:

தாத்தா,

கிராமம்.

அவ்வளவுதான்.

கடிதங்களைப் பற்றி நான் இன்னும் அதிகமாக எழுதப் போக இனிமேல் எழுத வேண்டாம் என்று நீங்கள் எனக்குக் கடிதம் எழுதுவதைத் தவிர்ப்பதற்காய் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

- பாமரன்

ஸ்ரீ கணபதி ஜோதிட நிலையம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம் **அர்ஜூனா ராஜூ குருஜி ஜெங்கம்மா**

கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாகக் கணித்து வழங்குவார். இவரை ஒரு முறை சந்தித்துப் பாருங்கள். பெயர் வசிகம், தொழில் வசிகம், கையெழுத்து வசிகம், காதல் வசிகம், கணவன் மனைவி பிரச்சனை தீர, திருமணப் பிரச்சினை தீர, தொழில் முடக்கம், வியாபார வசிகம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, அனைத்து விதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும். ஆயுர் வேத மருந்துகள் சகல விதமான வியாதிகளுக்கும் நாடி பார்த்து மருந்து தரப்படும்.

07951 631 883 / 020 8470 5209

1st Floor, Sai Hair Dressers, 345 A High Street North, Manor Park, London E12 Open Seven days a Week

பெண் பேசும் வார்த்தை...
அன்பும் அறனும் உடைத்தாயின் ...



காவியா
(ஒரு பேப்பருக்காக)

'திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகின்றன' என்பது ஒரு பழையமொழி -

ம்ம்ம்... உண்மைதான் போலும்! ஏனெனில் இடி, மின்னல், புயல் கூட வானத்தில் தான் தோன்றுகின்றன என்று அலுத்துக் கொள் கிறார் ஒருவர். திருமணம் ஒன்றுதான் எதிரி யோடு ஒன்றாகத் தூங்கிக் கொண்டு செய்யும் ஒரே யுத்தம் எனச் சொல்கிறார்கள்.

'திருமணம் என்பது யாரோடு வாழலாம் என்பதைக் கண்டுபிடிப்பதல்ல - யாரில்லாமல் வாழமுடியாது என்பதை அறிவது தான்' எனச் சொல்கிறார் டாக்டர் ஜேம்ஸ் டாப்சன்

திருமணத்தைப் பற்றிக் கேலியாக, நகைச் சுவையாக உணர்வுப் பூரணமாகப் பல விளக்கங்கள் இருந்தாலும் வெற்றி பெறும் திருமணம் என்றால் என்ன என்று அறுதியிட்டுக் கூற முடிவதில்லை.

'யாரோ ஒருவர் உனக்கென்று உலகத்தின் எந்த மூலையிலாவது பிறந்திருப்பார் என்று கூறுகிறார்கள். அந்த சரியான ஒருவரைத் தேடிக் கண்டுபிடிப்பதுதான் வெற்றிகரமான திரும ணத்திற்கு வழி என்று சொல்ல முடியுமா?

திருமணத்திற்குத் தயாராயிருப்பவர் அல்லது அவரது பெற்றோர்கள் அலைந்து திரிந்து பத்துப் பொருத்தங்களும் பார்த்து அந்த தேவதையையோ அல்லது ராஜகுமாரனையோ கண்டுபிடித்துத் திருமணமும் நடக்கிறது என வைத்துக் கொள்வோம். உண்மையிலேயே அவர்களது வாழ்க்கைப் பயணம் இனிதாக நடைபெறுகிறதா? இருவரும் எல்லா விஷயங் களிலும் மனமொத்துப் போகிறார்களா? இப்படிப் பல வினாக்கள்.

ஆரம்ப மோகம் குறையக் குறைய இருவ ருக்கும் மற்றவரிடம் உள்ள குறைபாடுகள் தெரிய வருகின்றன. பல விஷயங்களில் கருத்து வேற்றுமைகள் வரும்போது 'அவசரப்பட்டு விட்டோமோ?' என்று கழிவிரக்கம் கொள்கி றார்கள். சில நேரங்களில் அந்த பந்தங்க ளிலிருந்து விடுபடுவதற்கான வழிகளை யோசிக்க ஆரம்பிக்கிறார்கள்.

எனவே முதலில் வெற்றிகரமான திருமணத் திற்கு, தேர்ந்தெடுக்கும் துணையைப் பற்றி, அவரது விருப்பு வெறுப்புகள் பற்றி திருமணத் திற்கு முன்னரே நன்கு அறியவேண்டும். அதற்கு ஒரே வழி அந்தத் துணையோடு மனம் விட்டுப் பேசுவதுதான். பல்வேறு விஷயங்களில் இருவரும் தகவல்களைப் பரிமாறிக் கொண்டு மனமொத்த தம்பதிகளாக வாழமுடியும் என்ற முடிவுக்கு வந்த பின்னரே திருமணத்தை நிச்சயிக்க வேண்டும்.

மனமுதிர்ச்சியுறாத பருவத்தில் உடல் கவர்ச் சியை மட்டுமே முக்கியமாகக் கொண்டு தீர்மானிக்கப்படும் திருமணங்கள் பெரும் பாலும் தோல்வியையே தழுவுகின்றன.

திருமணம் என்பது ஒரு ஆண் ஒரு பெண்ணோடு இணைந்து வாழ்வது மட்டுல்ல. அதற்கும் மேலான ஒரு பந்தம்.

வெற்றிகரமான திருமணம் என்பது ஒரு சுவையான சமையல் குறிப்பு போன்றது. அது சுவையாக இருக்க வேண்டுமென்றால் அன்பு, பொறுப்புணர்ச்சி, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதல், அக்கறை, ஒற்றுமை இவ்வளவும் சரியான விகிதத்தில் கலந்ததாய் இருக்க வேண்டும்.

ஒரு திருமணம் வெற்றியடைவது ஆண் பெண் இருவர் கையிலும் தான் இருக்கிறது.

பெற்றோர்கள் ஏற்பாடு செய்யும் திருமணங் களில் என்றில்லை. ஒருவரை ஒருவர் சந்தித்து மனம் விட்டுப் பேசி நடக்கும் திருமணங்களும் எப்போதும் வெற்றி அடைவதில்லை.

ஒருவரோடொருவர் பேசும் போது மற்றவர் தன்னைப் பற்றி உயர்வாக நினைத்துக் கொள்வதும் இல்லாத பெருமைகளையெல் லாம் சொல்லிக் கொள்வதும் சந்தோசமான திருமண வாழ்விற்கு முதல் எதிரி என்பதை மறந்து விடக் கூடாது.

திருமணம் நடந்து வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கிய பின்தான் அவர்களது உண்மை யான உருவம் புலப்பட ஆரம்பிக்கும். வேற்று மைகள் வெளிப்படும். நிழலுக்கும் நிதர்சனத் திற்கும் உள்ள வித்தியாசங்கள் புரியும்போது எப்படி வாழ்நாள் முழுவதும் இந்த பந்தத்தைத் தொடரப் போகிறோம் என்ற கவலையும் வருத்தமும் ஏற்படும்.

ஒரு திருமணம் வெற்றிகரமாக அமைய உங்கள் துணையை அவர்களது குறை நிறை களோடு ஏற்றுக் கொள்ளும் பக்குவம் தேவை. சின்னச் சின்ன விஷயங்களில் உங்கள் துணையிடம் நீங்கள் காட்டும் அக்கறையும் பரிவுமே உங்கள் வாழ்க்கையை மணக்கச் செய்யும்.

திருமணம் என்பது ஒரு ஆண் ஒரு பெண்ணோடு இணைவது மட்டுமல்ல, அதையும் தாண்டிய ஒரு பந்தம் அது பார்னெட் ப்ரிக்னர் கூறியதுபோல 'வெற்றிகரமான திரும ணம் என்பது சரியான துணையைக் கண்டு பிடிப்பது மட்டுமல்ல. சரியான துணையாக இருப்பதும் கூடத்தான்'

திருவள்ளுவர் சொல்வதும் அதைத்தான்.

அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'

FORWARD
REAL ESTATES
Sales, Lettings, Management

PROPERTY & FINANCE CONSULTANTS
With 25 years of combined experience of providing services to the business and community.

1 LANCELOT PARADE, LANCELOT ROAD, WEMBLEY, MIDDLESEX HA0 2AJ TEL: 020 8900 9052
www.forwardrealestates.co.uk and e-mail address:mail@forwardrealestates.co.uk.

HOMEOWNERS/LANDLORDS!
WE REQUIRE YOUR PROPERTIES FOR SALES/RENT TO OUR WAITING, READY AND ABLE BUYERS AND QUALITY TENANTS. WE PROVIDE COMPREHENSIVE SERVICE FROM REFERENCING TO MANAGEMENT
INAUGURAL OFFER 0.6% ON SALES - 5% ON LETTINGS * Limited Time Only

HARROW £479,950
The property benefits from 2 W.C, cloakroom, lounge, dinning room, office, kitchen, utility, 3 bedrooms, bathroom, fitted garage and gas CH. The property is offered in good condition

WILLESDEN £245,000
Forward Estates are pleased to offer for sale this 2 bedroom end of terrace house. The property benefits from double glazing, gas central heating, modern kitchen and bathroom, large rear garden, off street parking for 2 cars. The property is offered in good condition throughout and early inspection is highly recommended



LAUNDERETTE AND DRY CLEANERS - EDGWARE £240,000
Forward Estates are pleased to offer for sale this well established business opportunity. The property benefits from 10 shops, 2 self contained flats and 1 bedsit. The shops are let on 14 + 2 leases and the flats and bedsit on assured shorthold tenancies. The property is situated on a busy parade in Edgware and is highly recommended for investment purposes

3 BED HOUSE – RAYNERS LANE, HARROW £1250 PER MONTH
Forward Estates are pleased to offer for sale this 3 bedroom terraced property. The property benefits from gas central heating, double glazing, modern kitchen, bathroom, garage, garden. The Property is situated in Rayners Lane and is in good condition

Try us, be surprised!!! 020 8900 9052
FindaProperty.com

ஆ! நீங்கள் மட்டும் திறமா?

வெளிச்சத்துக்கு வந்துள்ள அமெரிக்க உளவுத்துறை விவகாரங்கள்

கியூப அதிபர் பிடல் கஸ்ரோ

சி.ஐ.ஏயின் தலைவர் வி. ஹேடன்

மற்றைய நாடுகளில் மனிதவுரிமை விவகாரமாகட்டும்.. ஒடுக்கப்படட மக்களின் விடுதலைக்காகப்போராடும் விடுதலை இயக்கங்களாகட்டும் இவர்களுக்கெல்லாம் சட்டாம் பிள்ளையாக தன்னை காட்டிக் கொள்ளும் 'சனநாயகத்தின் காவலன்' அமெரிக்காவின் உளவுத் துறையின் வண்டவாளங்களை அவர்களாகவே வெளியிட்டுள்ளார்கள். கடந்த யூன் 26ம் தேதி 'அதிகாரப் பூர்வமாக' இந்த திருகுதாளங்கள் அடங்கிய ஆவணத்தை வெளியிட்டு வைத்தவர் வேறு யாருமல்ல சீஐஏ இன் இப்போதைய தலைவர் மைக்கேல் வி. ஹேடன்.

1950 முதல் 1970 வரை சி.ஐ.ஏ. ஆல் நடாத்தப்பட்ட அராஜகங்கள் 'தணிக்கை' செய்யப்பட்ட 702 பக்க அறிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது.

ஆள் கடத்தல், சர்வதேச தலைவர்களை கொல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், அமெரிக்கர்களையே உளவு பார்த்த சம்பவங்கள், சோவியத் யூனியனுக்கும், சீனாவுக்கும் நடந்த கடிதப் பரிமாற்றங்களை ரகசியமாக பிரித்துப் பார்த்த நிகழ்வுகள், இடதுசாரிகளை களையெடுக்க உலகம் முழுக்க மேற்கொள்ளப் பட்ட முயற்சிகள் போன்ற விடயங்களை ஆதாரத்துடன் விவரித்தபோது மேற்கத்தைய வரலாற்று ஆய்வாளர்கள் திகைத்துப் போனார்கள்.

'இதில் பெரும்பாலானவை அசிங்கமான வைகள்தான்.. ஆனால், இதுதான் சி.ஐ.ஏ.வின் வரலாறு' என்கிறார் ஹேடன்.

அமெரிக்க சனநாயகத்தை எங்களுக்கு கற்பிக்க முனையும் அதன் அடிவருடிகளும் அதிர்ந்து போயிருப்பார்கள். மகிந்த-கோத்த பாய-பசில் சகோதரர்கள் கருணா, டக்ளஸ் போன்ற ஒட்டுக்குழுத் தலைவர்கள் கூட மூக்கில் விரலை வைக்கக்கூடியளவுக்கு விடயங்கள் நடந்தேறியிருக்கிறது.

இந்த ஆவணங்களில் உள்ள விஷயங்கள் ஏற்கனவே பத்திரிகைகளில் ஊகத்தின் அடிப்படையில் வெளியானவைதான். சர்வதேச தலைவர்களால் குற்றம் சாட்டப்பட்டவைதான்.

ஆனால், 'அதிகாரப்பூர்வமாக' ஒப்புதல் வாக்குமூலம் வந்திருப்பது இப்போதுதான்.

பிறநாடுகளின் உள்நாட்டு விஷயங்களில் தலையிடுவதையும், களையெடுப்பு நிகழ்த்து வதையும் சி.ஐ.ஏ. வழக்கமாக கொண்டிருப் பதாக 1974ம் ஆண்டு டிசம்பர் மாதம் 'நியுயோர்க் ரைம்ஸ்' இதழில் செய்தி வெளியானது.

ஆபிரிக்க தலைவர் ஒருவரை விஷம் வைத்து கொல்லும் முயற்சி நடந்ததாகவும், கியுப அதிபர் பிடல் காஸ்ட்ரோவை கொலை செய்ய 150 ஆயிரம் டொலர் வரை ஒரு மேர்பியா கூட்ட தலைவருக்குத் தர சி.ஐ.ஏ. முன்வந்ததாகவும் இந்த ஆவணம் தெரிவிக்கிறது.

காஸ்ட்ரோவைபோலவேகொங்கோ நாட்டின் தலைவர் பற்றிக் லுமும்பாவையும், டொமினியன் குடியரசை சேர்ந்த ட்ரூஜிலோவையும் கொல்ல சி.ஐ.ஏ. திட்டமிட்டது. அதுபோலவே இருவருமே 1961ம் ஆண்டு கொல்லப் பட்டார்கள். ஆனால், லுமும்பா 'இறந்ததில்' பங்கில்லை... ட்ரூஜிலோ கொல்லப்பட்டதில் சி.ஐ.ஏ.வுக்கு 'தெளிவற்ற' தொடர்பிருப்பதாக இந்த ஆவணம் அம்பலப்படுத்துகிறது.

பல ஆண்டுகளாகவே தன்னை கொல்ல சி.ஐ.ஏ. சதி செய்வதான பிடல் காஸ்ட்ரோவின் குற்றச்சாட்டையும் இந்த ஆவணம் ஒப்புக் கொண்டுள்ளது.

1960 - 1965 ஆகிய ஐந்து ஆண்டுகளுக்குள் எட்டு முறை பிடல் காஸ்ட்ரோவை கொலை செய்ய சி.ஐ.ஏ. முயற்சி செய்ததற்கான திட்ட வட்ட ஆதாரங்கள் முதல் பகுதியில் உள்ளன.

ஆனால், 1975 ஆகஸ்ட் மாதம், ஜோர்ஜ் மெக்கோவர்னிடம் ஒரு பட்டியலை காஸ்ட்ரோ கொடுத்தார். அதில் தன்னை இருபத்து நான்கு முறை கொலை செய்ய முயற்சி நடந்ததாக தேதிவாரியாக குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், சி.ஐ.ஏ. இருபத்து நான்கு முறை அல்ல, எட்டு முறை மட்டுமே 'முயற்சிகள்' மேற்கொண்டதாக கூறுகிறது. இதிலும் பல திட்டங்கள் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளுடன் நின்று விட்டதாக சொல்கிறது. இதில், பாதாள உலக மேர்பியா கும்பல் மூலம் இரண்டு முறை காஸ்ட்ரோவை அழிக்க திட்டம் வகுக்கப்பட்டது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

சுருக்கமாக சொல்ல வேண்டுமானால், நவீன ஆயுதங்கள் முதல், விஷ மாத்திரை, விஷ பேனா, நச்சு பாக்டீரியா பவுடர்கள் வரை கற்பனை செய்ய முடியாத அளவு, சகல வழிகளிலும் காஸ்ட்ரோவை கொலை செய்ய சி.ஐ.ஏ. தந்திரங்களை கையாண்டுள்ளது அம்பலமாகி இருக்கிறது. குறிப்பாக சுருட்டுப் பிரியரான காஸ்ட்ரோவுக்கு விஷ சுருட்டு கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்ட விஷயம் மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது.

இந்த ஆவணங்களின்படி, காஸ்ட்ரோவை கொலை செய்யவேண்டும் என்பது சி.ஐ.ஏ.வின் நோக்கமாக முதலில் இருக்கவில்லை. மக்களிடம் அவருக்குள்ள நற்பெயரை களங்கப்படுத்தும் முயற்சியே முதலில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

உதாரணமாக 'தாடிக்காரர்', 'விலங்கு களின் முடியை தாடியாக கொண்டவர்...' என்பது மாதிரியான கேலி வார்த்தைகளை அதிகமாக கசிய விட்டிருக்கிறார்கள்.

தமது வண்டவாளங்களை இப்போது ஏன் சி.ஐ.ஏ. வெளியிட வேண்டும் என்ற கேள்வி நியாயமானதே

1960ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் ஆகஸ்ட் வரை குறிப்பாக அந்த ஆண்டின் பிற்பகுதியில் காஸ்ட்ரோவின் பேச்சுக்களை திரிக்கும் வேலையில் சி.ஐ.ஏ. இறங்கியிருக்கிறது.

தனது திட்டங்களையும், செயலையும் நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த அவ்வப்போது ரேடியோவில் காஸ்ட்ரோ உரையாற்றுவார். அப்போது அவர் பேசும் மைக்கில் ரசாயன பவுடரை தெளிக்கலாமா...என்று யோசித்ததாக உயரதிகாரிக்கு அனுப்பிய செய்திக் குறிப்பில் ஒரு சி.ஐ.ஏ. அதிகாரி குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், அது யோசனையுடன் நின்றுவிட்டது.

அதேபோல் உரை நிகழ்த்துவதற்கு முன் சுருட்டுப் பிடிப்பது காஸ்ட்ரோவின் வழக்கம். அப்போது அவருக்கு விஷ சுருட்டு கொடுக்கலாமா என்றும் முயற்சி செய்திருக்கி றார்கள். இதற்கெல்லாம் உச்சமாக காஸ்ட்ரோ அணியும் சப்பாத்திற்குள் நச்சு ரசாயனத்தை தெளிக்கலாமா என ஒரு சி.ஐ.ஏ. ஏஜெண்ட் யோசித்திருக்கிறார்.

குறிப்பாக வெளிநாடுகளுக்கு காஸ்ட்ரோ சுற்றுப்பயணம் செய்யும்போது, உணவு விடுதி சிப்பந்தி மூலம் இந்த திட்டத்தை செயல்படுத்த முயற்சி நடந்துள்ளது. ஆனால், இதுவும் 'சரியானபடி' நிறைவேறவில்லை.

இதன் தொடர்ச்சியாக 'விபத்து' மூலமாக கியுபாவில் உள்ள முக்கியமான மூன்று தலைவர்களை 'அழிக்க' முடியுமா என 1960களில் சி.ஐ.ஏ. முயற்சி செய்துள்ளது. 'முன்னோட்டமாக' காஸ்ட்ரோவை கொல்ல திட்டம் வகுக்கப்பட்டது. கடன் தொல்லையால் அவதிப்பட்ட ஒரு கியுப குடிமகனை இந்தத் திட்டத்துக்கு தேர்ந்தெடுத்தார்கள். பல கட்ட மூளைச் சலவைக்குப் பின் குடும்ப சூழ் நிலைக்காக கார் மூலம் விபத்து ஏற்படுத்த அந்த கியூபன் ஒப்புக் கொண்டான். ஆனால், இந்தத் திட்டம் செயல் வடிவம் பெறவில்லை.

இதே காலகட்டத்தில் சி.ஐ.ஏ.வின் மருத்துவ பிரிவு 1960ம் வருடம் ஆகஸ்ட் 16ம் தேதி, விஷ சுருட்டுகள் அடங்கிய பெட்டியை சி.ஐ.ஏ. ஏஜென்டிடம் கொடுத்துள்ளது.

அதில் உள்ள எந்த சுருட்டை எடுத்து காஸ்ட்ரோ தன் உதடுகளில் வைத்தாலும் உடனே மரணம் நிகழும். அந்தளவு சக்தி வாய்ந்த அந்த ரசாயன சுருட்டுப்பெட்டி, காஸ்ட் ரோவிடம் போய்ச் சேர்ந்ததா என்பதற்கான குறிப்பு இந்த 'தணிக்கை' செய்யப்பட்ட ஆவணங்களில் இல்லை.

இதுதவிர, காஸ்ட்ரோவுக்கு விஷ மாத்திரை கொடுக்கலாமா என்றும் கூட சி.ஐ.ஏ. பரிசீலித்திருக்கிறது. ஆனால், இந்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது.

இப்படி காஸ்ட்ரோவை கொலை செய்வது தவிர, அவரை பதவியில் இருந்து இறக்குவ தற்கான முயற்சிகளும் சேர்ந்தாற்போல மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

காஸ்ட்ரோவின் நம்பிக்கைக்குரிய 'விசுவாசி'யை சி.ஐ.ஏ. விலை கொடுத்து வாங்கியது. அந்த விசுவாசி மூலமாக காஸ்ட்ரோவின் நடமாட்டங்கள், திட்டங்கள் உடனுக்குடன் சி.ஐ.ஏ.வை வந்தடைந்தன.

'உள்நாட்டு ஆயுதப் புரட்சி' மூலமாக அவரை பதவியிலிருந்து இறக்க திட்டங்கள் வகுக்கப்பட்டன. நவீன தொழில்நுட்ப ஆயுதங்களை இதற்காக சி.ஐ.ஏ. கியுபாவுக்கு கொண்டு வந்தது. ஆனால், இந்த முயற்சிகள் எதுவுமே பலனளிக்கவில்லை...

இப்படி இந்த 'தணிக்கை' செய்யப்பட்ட ஆவணம், அமெரிக்காவின் உண்மையான முகத்தை உலகத்துக்கு வெளிச்சம் போட்டு காட்டியிருக்கிறது.

இந்த இடத்தில்தான் முக்கியமான கேள்வி எழுகிறது. தமது வண்டவாளங்களை இப்போது ஏன் சி.ஐ.ஏ. வெளியிட வேண்டும்? 'இந்தத் தவறுகள் இனி நேரக் கூடாது என்ப தற்காகத்தான் இதை வெளியிடுகிறோம்' என சி.ஐ.ஏ. பதில் சொல்கிறது.

இந்த பதிலை எந்தளவு நம்பலாம்? 1970 களுக்குப் பின் உண்மையிலேயே சி.ஐ.ஏ. இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடவில்லையா? அல்லது உலகில் எங்களுக்கு எதிரானவர் களை வீழ்த்த நாங்கள் எந்த மாதிரியான நடவடி க்கைகளிலும் ஈடுபடுவோம். எங்கள் வரலாறே அதுதான்... என்பதை உலகுக்கு உணர்த்த இந்த ஆவணங்களை வெளியிட்டிருக்கிறதா என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்

('விழிப்புணர்வு' இதழில் சிவராமன் தமிழாக்கியதை தழுவி எழுதப்பட்டது)

TRICO - *The name you can trust*

Door to Door Service
Western province by air & Sea
Call for details Regular Shipping service
At competitive Prices to:
Australia, Canada, Chennai, Bangalore, Cochin and Calcutta

Two more collection points:
Glasgow and South West London
Regular weekly savings means the fastest delivery to Sri Lanka.

உங்கள் வசதிக்காக **Tooting** இல்
Collecting point!

Contact **Vimal**
Tel: **020 8672 5551**
Fax: **020 8889 5445**
Email: tricont@btclick.com

A - Lanka
171 Tooting High Street,
London SW17

HOT NEWS
Extra Receiving depot in South - London SW17
You can collect packing cases and deliver packed goods to SW17.
Save your money on transport

Trico International Shipping Ltd.
Unit 4,
Bittern Place,
Coburg Road,
Wood Green, London N22 6TP

மகாகவி பாரதியின் இயற்கை மீதான காதல்

இயற்கையை இரசிக்காத, இரசிக்கத் தெரியாத புலவர்களும், கவிஞர்களும் இருந்ததுவுமில்லை, இருக்கவுமில்லை, இருக்கப் போவதுமில்லை. இயற்கையை இரசிப்பவர்களுக்கு வேதனையில்லை, வெறுப்பில்லை: அமைதி அவர்கள் பக்கம் வறுமை அவர்களை வருத்தா உடல் நலம் குறைந்தாலும் உள நலம் குன்றாது. கவிதை வானில் கொடிகட்டிப்பறந்த, பறக்கும் பாரதியும் விலக்கல்ல.

இயற்கையின் வண்ணங்கள்தாம் எத்தனை எத்தனை? மலையும் மடுவும், நிலமும் நீரும், வானும் மண்ணும், ஆறும் கடலும், செடியும் கொடியும், பூவும் பழமும், இலையும் காயும், மரமும் கிளையும், நிலவும் விண்மீன்களும், காகமும் குயிலும், மானும் மயிலும், கிளியும் குருவியும், இறைவன் படைப்பில் எத்தனை, எத்தனை விசித்திரங்கள்?

காலையும் மதியமும், மாலையும் இரவும், மழையும் வெய்யிலும், இடியும் காற்றும், மின்னலும் வானவில்லும், புயலும் பேய்க்காற்றும், அருவியும் தென்றலும் இயற்கை அன்னையின் எத்தனை, எத்தனை வண்ணக்கோலங்கள்?

இவற்றையெல்லாம் பாரதி எவ்வெவ்வாறு எல்லாம் இரசித்து மகிழ்ந்து, கவிதையாக்கி இயற்கை அன்னைக்குப் புகழாரம் சூட்டி வழிபட்டார் என விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம். பாரதியின் இரசிப்புத் திறனைப் பாருங்கள்!

அவருக்கு ஒரு காணி நிலம் வேண்டுமாம். அங்கு கேணியும், பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்களும், கீற்றுமிள நீரும், முத்துச்சுடர் போல நிலவொளியும், கத்தும் குயிலோசையும், இளந்தென்றலும் வேண்டுமாம். இயற்கையின் மீது அவருக்குள்ள காதல்தான் எத்தனை சுவையானது!

கதிரவன் எழுவதும், கதிரவன் மறைவதும் கவிஞர்களுக்கும், ஆன்மீக வாதிகளுக்கும் மிகவும் முக்கியமான அன்றாட நிகழ்வுகள்.

பாரதியின் கவிதைகளில் பற்பல கவிதைகள்- சூரிய தரிசனம், ஞாயிறு வணக்கம், ஞான பானு, வசன கவிதைகளில் ஞாயிறு - கதிரவன் பெருமை பாடுகின்றன.

கடலின் மீது கதிர்களை வீசி வான்மிசை ஏறும் அழகினையும், படரும் வானொலி இன்பத்தைக் கண்டு பாட்டுப் பாடி மகிழும் புட்களையும், உடல் பரந்த கடலினுள்ளிருக்கும் ஒவ்வொரு நுண்துளியின் வழிச்சுடரையும் அனுபவித்துக் கவிதை புனையும்போது, கதிரவனின் அழகை அவர் இரசிக்கும் பாங்குதான் எப்படி விளங்குகிறது!

எல்லையில்லாத வானக்கடலில் உலா வரும் வெண்ணிலவினையும், மெல்லிய மேகத்திரைக்குள் மறைந்திடும் நிலவின் மிகைபடக்காணும் மேனிஅழகையும் பாரதி இரசிக்கும் பாங்கினை என்னென்று பகர்வது!

சிட்டுக் குருவியின் வாழ்வை உற்று நோக்கிய பாரதி அதன் பழக்கத்தினையும், அழகினையும் கவிதையில் வடித்திருக்கும் வண்ணம்தான் எத்துணை அழகு! வாழ்வு மெய்யே என்று உணர்த்த, நிற்பதையும், நடப்பதையும், பறப்பதையும், வானகத்தையும், இளவெய்யிலையும், மரச்செறிவினையும், சோலையையும், மரங்களையும் சாட்சிக்கு அழைக்கும் அழகுதான் என்ன?

கதிரவன் எழுவதும், கதிரவன் மறைவதும் கவிஞர்களுக்கும், ஆன்மீக வாதிகளுக்கும் மிகவும் முக்கியமான அன்றாட நிகழ்வுகள்.

காலைப்பொழுதினை இரசிக்கும் பொழுது, ஞாயிறின் கேடில் சுடர்தனையும், தென்னை மரத்தின் கிளையிடையே தென்றல் சென்று, மன்னப் பருந்தினுக்கு மாலை இட்டுச் செல்வதையும், அம்மரக்கிளையிலே சிந்தனை யோடு ஒரு காகம் அழகாய் அமர்ந்து வானை முத்தமிடுவதையும், காக்கைக் கூட்டமொன்று பறப்பதையும், குருவி, பச்சைக்கிளி, அன்னப் பறவை ஆங்கே வருவதையும் பாரதி இரசிக்கும் இயற்கையைக் கண்டு வியக்கின்றோம்.

அவ்வாறே, அந்திப் பொழுதின் அழகை அவர் இரசிப்பதைக் கண்டு நாமும் இரசிக்கின்றோம். நிலாவும், வானத்து மீனும், காற்றும் பாரதிக்கு அமுதக் குழம்பைக் குடிக்கும் கோல வெறியைக் கொடுக்கின்றன. தென்னையின் கீற்றுச் சலசல என்று செய்து வரும் காற்றை இரசித்து மகிழ்கிறார். சின்னப் பறவையின் மெல்லொலியோடு சேர்ந்திடும் நல்ல காற்றை அனுபவிக்கிறார்.

திக்குகள் எட்டும் சிதறி, பக்க மலைகள் உடைந்து பாயும் வெள்ளத்தையும், பேய் கொண்டு தக்கை அடிக்கும் காற்றையும், வெட்டி அடிக்கும் மின்னலையும், கொட்டி இடிக்கும் மேகத்தையும், அண்டத்தைக் குலுக்கும் மழையையும் இரசித்து மகிழ்ந்து கவிதையிலே வடிக்கின்றார்.

நள வருடம் கார்த்திகை மாதம் எட்டாம் நாள் புதன் கிழமை அடித்த புயற் காற்றை ஒரு கணவனும் மனைவியும் பேசிக் கொள்வதைப் போன்றவாறு கவிதை வடிவிலே இரசிக்கின்றார்.

அந்தப் புயற் காற்றிலே பிழைத்த தென்னந் தோப்பினைக் கண்டு முறுவலித்துப் பாடுகிறார். அக்கினிக் குஞ்சினைக் காட்டில் ஒரு பொந்தினில் வைத்து அதன் விளைவினைக் கண்டு களி நடம் புரிகின்றார்.

ஒளியும் இருளும் பாரதிக்கு இயற்கையின் பல்வேறு பரிமாணங்களைக் காண்பித்து அவரை இன்புறச் செய்கின்றன

பாரதியின் இயற்கை இரசனைக்கு முத்தாய்ப்பாகத் திகழ்கிறது அவரது பாஞ்சாலி சபதத்தின் ஒரு பகுதியான மாலை வருணனை! எந்த அளவிற்கு அவர் இயற்கையை இரசித்திருந்தால் இவ்வளவு சிறப்பாக, நேர்த்தியாக, ஆழமாக இவ்வருணனையை இயற்றி இருக்கமுடியும் என்பது ஊன்றிப்படிப்போருக்கு விளங்கும்? வியப்பினை அளிக்கும்.

பார் வியக்கப் பாடிய பாரதியே! உனது வறுமையின் இடையிலும், சுதந்திர வேட்கைக்கு இடையிலும், இவ்வளவு ஆழ மாகவும் தீர்க்கமாகவும் இயற்கையை அனுபவித்தது எப்படி என்ற இரகசியத்தை எங்களுக்குச் சொல்லித் தருவாயா?

- என்.வி.கு.ராமன்

We are specialists in arranging finances for Residential, buy-to-let and Commercial Mortgages.

வீடு வாங்குவதற்கான கடன் ஒழுங்குகளை மிக விரைவான முறையில் வழங்க காத்திருக்கிறோம்.

AFS ADORA FINANCIAL SERVICES LTD
Business Consultants & Mortgage Advisors

வங்கி கணக்கு ஆரம்பித்தல் உட்பட வியாபார ஒழுங்கு முறைகளை ஆரம்பம் முதல் நெறிப்படுத்தி வியாபார கடன் வசதிகளும் (Commercial Mortgages) ஒழுங்கு செய்து தரப்படும். அத்துடன் வீடு வாங்குவதற்கான கடன் ஒழுங்குகளையும் மிக விரைவான முறையில் ஒரே கூரையின் கீழ் வழங்க காத்திருக்கிறோம்.

- Struggling with debts and needing to consolidate,
- Self employed with no accounts,
- Bad credit record
- CCJ, Defaults, Arrears,
- Turned down and classed as bad credit ,
- No Proof of income,
- Mortgage Arrears,
- Chased by credit card or debt collection Agency,
- Threatened with home repossession,
- Unhelpful bank
- IVA or discharged Bankrupt.

How we make the difference:

Fixed Fee , Free initial consultation , Flexible and friendly services, Frequent visits to your business premises

Call: **020 8422 3700 07916 177 513**

W: www.adorafs.co.uk, E: admin@adorafs.co.uk
Adora House, 4 Scarsdale Road, Harrow, Middlesex, HA2 8LW Fax: 020 8423 3900

Your home may be repossessed if you do not keep up repayments on your mortgage or any other debt secured on it.

The overall cost for comparison is 8.10% APR. The actual rate available will depend on your circumstances. Please ask for a personalised illustration.

A fee of up to 1.5% of the mortgage advance will be payable on completion. The level of this fee will be based on the complexity of your case (Typically it will be £ 300). In addition, we will also be paid commission from the lender.

An administration fee of £ 150 is payable when you apply for a mortgage.

"Adora Financial Services Ltd is an Appointed Representative of The Mortgage Times Group Limited,

279 Tottenham Court Road, London, W1T 7RJ, which is authorised and regulated by the Financial Services Authority No. 303007. "

Registered in England No. 5918431, Consumer credit licence No.591987

AA ACCOUNTANCY SERVICES
Accountants & Business Consultants

உங்கள் வியாபார நிறுவனங்களின் கணக்கியல், வரி தொடர்பான அனைத்து நிர்வாக தேவைகளுக்கும் எம்மை நாடுங்கள்.

இலவச ஆரம்ப ஆலோசனையுடன் நட்புடன் கூடிய சேவைகள் மிகக் குறைந்த கட்டணத்துக்கு வழங்கப்படும். ஏற்கனவே உங்களுக்கு இருக்கும் கணக்காளரை மாற்ற ஆலோசிக்கிறீர்களா?

புதிதாக வியாபாரம் ஆரம்பிக்க எண்ணுகிறீர்களா? கவலை வேண்டாம்! மதுபான விற்பனை (Off Licence) அனுமதி பெறல், வங்கி கணக்கு ஆரம்பித்தல் உட்பட வியாபார ஒழுங்கு முறைகளை ஆரம்பம் முதல் நெறிப்படுத்தி வியாபார ஆரம்பித்தலுக்கான கடன் வசதிகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.

அத்துடன் வீடு வாங்குவதற்கான கடன் ஒழுங்குகளையும் மிக விரைவான முறையில் ஒரே கூரையின் கீழ் வழங்க காத்திருக்கிறோம்.

- VAT
- Business Plans
- Book-keeping
- Bank Accounts
- Payroll
- Business Start Up
- Self Assessment Tax Returns
- Company Formation
- Management/Year End Accounts
- Secretarial Services

KIDS கூடல்

Our Win At The S.W.T.S.P Tamil Sports Festival

I play for Union Colledge F.C. we had a big tournement in Surrey, England. We had to play five matches against other teams and we won all of them. I didn't score the most goals, but my team-mates did.

Before the final we were interviewed by Tharisiam T.V. they asked us questions about the team. Finally they asked what song we would like to hear we said something, something.

In the final we played the Valvai blues and beat them 3-1 on penalties. We won the trophy and enjoyed ourselves. It was a big tournement, there were other sports too, like tennis, cricket volleyball and many more!

- By Meran Annalingam
(Year Five) Hendon School

Rebus

A REBUS is a picture representation of a name, work, or phrase.
Each "rebus" puzzle box below portrays a common word or phrase. Can you guess what it is?

UR
UR
UR

Ans: U R out of line

FAMILYYY

Ans: Extended Family

ME11111

Ans: Some-ones following me

EXIT LUNCH
LUNCH

Ans:Out to Lunch

Receipe

Masala Vada

- 1/2 cup: Toor Dal
- 1/2 cup: Channa Dal
- 1 tbsp: Urad Dal
- 1 large: Onion (finely chopped)
- 5-6: Red Chillies
- 1 inch piece: Ginger
- A few: Curry leaves
- Salt to taste

To Prepare Vada :

1. Soak all dals together for an hour.
2. Grind all ingredients except onions to a coarse paste.
3. Heat oil for deep frying.
4. Add onions to the paste.
5. Shape like Vada and deep fry.
6. Serve hot with ketchup or chutney.

Jokes

1. Why do elephants have trunks?
2. Why did the elephant jump into the lake?
3. Doctor, Doctor I keep having pains in one eye when I drink coffee!
4. Doctor, Doctor I think I need glasses!
5. If there are 10 cats in boat and one jumps out how many are left?

Answers

1. Because they don't have pockets!
2. To stop getting wet when it rained!
3. Have You Tried taking the spoon out?
4. You certainly do sir this is a fish and chip shop!
5. None they were all copy cats.

Tongue Twister

A tricky one this time!

If two witches were watching two watches, which witch would watch which watch?

Riddle

What is smaller than a mouse and taller than a house?

Ans: A Star.

Cartoon Joke

"Oh, just driving the kids to school."

Colouring

Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

Last week's winner: Harijan Nadarajan *(Age 6), London*

Ramesh Ariaratnam Age 8,
London

Kristika Sri Kantha Age 9,
Boston

Kanesh Kandegani Age 12,
Norwich

Gobi Jeyaaraman, Age 7,
Koln

"When I despair, I remember that all through history the ways of truth and love have always won. There have been tyrants, and murderers, and for a time they can seem invincible, but in the end they always fall. Think of it always."

- Mahatma Ghandi

Word Search

Z	L	A	I	B	I	L	M	A	D
P	I	E	O	E	N	I	L	M	A
B	S	P	O	D	E	L	J	E	U
A	A	A	R	M	A	G	G	I	E
R	S	M	A	R	G	E	M	R	D
T	H	O	M	E	R	V	F	T	N
G	E	Q	Y	Z	A	I	U	W	S
O	H	I	B	N	J	E	U	O	P
C	X	T	U	K	A	R	S	O	P
C	X	T	U	K	L	M	R	D	V

Hidden Words:
Subject: Simpsons Characters
Homer, Bart, Marge, Maggie, Lisa, Crusty

Submitted By:
Rathesh Krishnan (Age 12)

Our summer holiday to the Thorpe Park

Last Tuesday on 30th of August, I went to Thorpe park with mum, dad and my brother. We went in our car and it took us about 1-hour.there were a lot of attractions and they divide into three.

1) Extreme thrills > these are the highest, fastest rides.

2) Thrilling and fun> these rides are for the family.

3) Young thrill seekers> these rides are for children.

First my dad went on a fast ride called colour rush, it was in 19 seconds . After the ride my dad said it was really fast. Then we went to Octopus garden .On Octopus garden I went on a round about, I went on a Ollie Octopus ,it goes round and up.Then I went on up periscope, it with ships and it goes around .I also went on a tea pot ride called Galleon race . Then my dad and my brother went in a yellow boat called sea snakes and ladders. My dad felt dizzy and my brother was laughing at my dad. Next I went on Ramba Rapids with my brother ,mum,dad. we went into a scary cave.After we went to watch the Pirate-4D show,it was really fun.There was also a parrot and the parrot has squirted water on us and it made us wet.When me and my brother went to on loggers leap it was scary. I was really scared when it went from the top to bottom.Then I had finished wizzing. that we decided to go to my aunt's house,her house was on our way. After that we came back home.

From Thanuyaa.pathmanathan.
Grange first school –year-3.

Spot the Simpsons

Try and find: Homer, Marge, Maggie, Bart and Lisa in the picture below!

Film Review

Balls Of Glory



In the unsanctioned, underground, and unhinged world of extreme Ping-Pong, the competition is brutal and the stakes are deadly.

Now, this outrageous new comedy serves up this secret world for the first time on-screen. Down-and-out former professional Ping-Pong phenom Randy Daytona (Tony Award winner Dan Fogler) is sucked into this maelstrom when FBI Agent Rodriguez (George Lopez) recruits him for a secret mission. Randy is determined to bounce back and recapture his former glory, and to smoke out his father's (Robert Patrick) killer – one of the FBI's Most Wanted, arch-fiend Feng (Academy Award winner Christopher Walken). But, after two decades out of the game, Randy can't turn his life around and avenge his father's murder without a team of his own.

He calls upon the spiritual guidance of blind Ping-Pong sage and restaurateur Wong (James Hong), and the training expertise of Master Wong's wildly sexy niece Maggie (Maggie Q), both of whom also have a dark history with Feng. All roads lead to Feng's mysterious jungle compound and the most unique Ping-Pong tournaments ever staged. There, Randy faces such formidable players as his long-ago Olympics opponent, the still-vicious Karl Wolfschtagg (Thomas Lennon). Can Randy keep his eye on the ball? Will he achieve the redemption he craves while wielding a paddle? Is his backhand strong enough to triumph over rampant wickedness?

This movie has some of the funniest sight gags I've ever seen. I'm still laughing about the contrast between Christopher Walken's powerful, evil demeanor and his campy costumes. Both Dan Fogler and Thomas Lennon displayed excellent physical comedy skills - it's hard to watch those guys move without laughing. I also enjoyed Diedrich Bader's goofy but charismatic character. "Superbad" may end up being this summer's iconic movie, but I think that word-of-mouth and strong DVD sales will make "Balls of Fury" one of this summer's movies that will be remembered for many years to come.





A J ACCOUNTANCY
Auditors & Accountants
Over 25 years in public practise

Accounts Preparation, Self Assessment, VAT & PAYE Returns
An Efficient, Practical Service for small to Medium Size Companies, Partnerships & Sole Traders
Tel: 020 8778 8666
Fax: 020 8778 8999
Email: info@ajaccountancy.co.uk
Web: www.ajaccountancy.co.uk
43 Anerley Road, London SE19 2AS

Shop for Sale

Aylesbury, Buckingham Shire ல் News Agents Convenience Stores Leasehold Property விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
பத்மநாதன் **01296 482 402/07930 558 357**

Room for Rent

Double and Single room for rent in Mitcham From (1st September 2007)
Very clean and quite house Suitable for young couple or student - non smoker's please **Call 07894202858**

MARKANDAN & UDDIN SOLICITORS
Solicitors & Administrators for Oath
M Markandan LLB A Uddin (Hons) MA LLB Phd-RFL
Tamil House, 720 Romford Rd, London E12 6BT

For any & every legal matters

tel 020 8514 8300 / 07830 285 634
fax 020 8514 8381
email info@msssolicitors.com
Markandan : 07956 386 576
Uddin : 07957 455 670

Markandan & Uddin Solicitors

Meera Arnold & Co.



pay roll
book keeping
company formation
45 Chandos Ave, N14 7ES, Tel: 020 8882 2333

ரூட்டிங் முத்துமாரி அம்மன் கோவில்

தேர்த் திருவிழா

ஒரு புது முயற்சி

'செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம்
அச்செல்வம் செல்வத்து ளெல்லாந் தலை'

– திருக்குறள்

அதாவது மனிதர் அடைதற்குரிய செல்வங்கள் பலவற்றுள்ளும் சிறந்து விளங்குவது செவி உணர்வினால் வரும் கேள்விச் செல்வமேயாகும், அச் செல்வமே பிற செல்வங்கள் எல்லாவற்றிலும் முதன்மையானது

இது ஒரு பரபரப்பான உலகு. ஒரு புத்தகத்தை பொறுமையாக வாசிக்க எமக்கு போதியநேரம்கிடைப்பதில்லை. இதனால்தான் பேசும்புத்தகங்களின் (talking books) தேவை உலகெங்கும் இன்று பெரிதும் உணரப்படுகின்றது. மற்றைய மொழிகளுடன் ஒப்பிடும்போது குழந்தைகளுக்கான படைப்புகள் தமிழில் அதிகம் இல்லை என்றே சொல்லலாம். தொலைக்காட்சி வானொலி நிகழ்ச்சிகளோ அறவே இல்லை.

புலம்பெயர் சூழலில் எமது குழந்தைகளுக்கு எமது மொழி பண்பாட்டு விழுமியங்களை உணர்த்துவதற்கு ஏற்றதாக என்ன உள்ளது? என்ற கேள்வியே இந்த ஒலி வட்டின் உருவாக்கம்.

இதுதான் புலம்பெயர் தமிழர் மத்தியில்ான முதல் தமிழ் பேசும் புத்தகம்!, உலகில் குழந்தைகளுக்கான முதல் தமிழ் பேசும் புத்தகம் இதுவே!!.

இதில் சில தொழில்நுட்ப குறைபாடுகள் உள்ளன. இதனை நாம் தொடர்ந்து செய்வதற்கு உங்கள் ஆதரவு இருந்தால், அடுத்த வெளியீட்டிலேயே அவற்றை நிவர்த்தி செய்வோம். இந்த ஒலி வட்டை தங்களது குரல் வளத்தால் உயிரூட்டிய திரு விமல் சொக்கநாதன் அவர்களுக்கும் திருமதி கௌசி ரவிசங்கர் அவர்களுக்கும் என்றும் எமது நன்றிகள். இந்த ஒலி வட்டு மாதம் தோறும் முதலாம் திகதி வெளிவரும், வரவேண்டும் என்பதே எமது அவா.

தயவு செய்து உங்கள் கருத்துக்களையும் கண்டனங்களையும் info@vizhikal.com என்ற முகவரிக்கு அல்லது 44(0)7884629391 என்ற தொலை நகல் இலக்கத்துக்கு அல்லது 07867721725 என்ற தொலைபேசி ஊடாகவோ தெரியப்படுத்துங்கள். எம்முடன் இணைந்து பணியாற்ற விரும்புபவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளுங்கள்.

- *விழிகள்*

We have been helping our client to make the most of their money for over 35 years. How have we been able to stay in business for so long? Well that is quite simple. We understand our clients and provide them with the personal service they deserve.

- We are truly independent and can provide advice across the whole market.
- Our service focuses on your needs and meeting your financial goals.
- We provide ISA portfolios to match all types of investors.
- We provide comprehensive Inheritance Tax solutions, potentially saving 40% tax.

ARM Associates can promise you an expert, individually-tailored and cost-effective service. Whether you need specific advice or comprehensive financial planning, we can help.

ARM Associates

Professional Investment Advisers

For a free initial chat, to discuss your requirements, please call:
Mr P.Srinivasan CertPFS
Mr Suhan Srinivasan (Dip PFS, Economics BSc)
Tel: **020 8763 2221** / Fax: **020 8763 2220**
Email: **sri@srinivasan.co.uk** / Web: **www.srinivasan.co.uk**
32 Abbots Lane, Kenley, Surrey, CR8 5JH.

Authorised and Regulated by the Financial Services Authority.
The value of investments may fall as well as rise.

இலக்கியச் சுவை

தேன் சொட்டும் பழந்தமிழ்க் கவிகள்

இரசிகை

ஒரு பேப்பருக்காக

தமிழை அமுதிற்கு ஒப்பிட்டுப் பேசுகிறோம். அமுதைச் சுவைக்கச் சுவைக்கச் சுவையூறுமே. அப்படியானால் தமிழையும் சுவைக்கச் சுவைக்கச் சுவையூற வேண்டுமல்லவா?

ஆம்! சுவையூறிக் கொண்டுதானிருக்கிறது. அந்தச் சுவையை உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக இந்தப் பகுதியூடாக உங்களுடன் கலக்க இருக்கிறேன்.

அந்த வகையில் எங்கள் பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும் சினிமாப் பாடல்களிலும் பொதிந்து கிடக்கும் இலக்கியச் சுவையை சுவைத்துக் கொள்வோமா?

தமிழ் வாழ்த்துடனேயே தமிழின் அழகை ரசிக்கத் தொடங்குவோம்.

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

பாரதியாரின் எளிய சொற்கையாடலுடனான இந்தத் தமிழ் வாழ்த்திற்குப் பொருள் விளக்கம் தேவையிருக்காது என்று நினைக்கிறேன்.

பழந்தமிழ்ப் பாடல்களில் காளமேகப் புலவருக்குத் தனியிடமொன்று உள்ளது. சிலேடைப் பாடல்களைப் புனைவதிலே இவருக்கு இணை இவரே.

இவருடைய பாடல்களைப் புரிந்து கொள்வது சற்றுச் சிரமந்தான். ஆனால் அதைப் புரிந்து கொண்டால் ஒரே பாடலில் இருபொருள் ஏன் பல பொருள்கள் கூட மறைந்திருக்கும்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமல்லவா? இதோ ஒரு பாடல்

'தாதிதூ தோதீது தத்தைதூ தோதாது
- நீங்கள் வேலை செய்யும் இடங்களில் உங்களுக்கு தரப்படும் payslipல் கழிக்கப்படும் வரி (Income tax) சரியாக கணிக்கப்படுகிறதா? என்பதை எவ்வாறு கணித்துக் கொள்வது?
- புதிய வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு எவ்வளவு பணம் தேவை?
- அந்தப் பணத்தை எங்கிருந்து பெற்றுக்கொள்ளலாம்?
- இங்கிலாந்து வங்கி (Bank of England) எவ்வாறு வட்டி வீதத்தை (Interst rats) நிர்ணயிக்கின்றது என்பதைப் பற்றிய கண்ணோட்டம்.

Heat Cool Services Ltd
Refrigeration & Air Conditioning

All type of Dairy
Drinks & Fruit & Vegetables Fridges Design Supplied and Installed.
Supermarket
Freezers
Remote or Integral
Any size to Suit
Customer need.

Cold Rooms made to measure or pre sized
Air Conditioned units Commercial or Domestic
All cabinets supplied from stock and installed by experienced work force. Quality is our aim/ guaranteed we will beat any written quote
We do complete shop fitting

For a competitive quote call **Vimal** on
01895 581 103/ 077761 15 6051

இலவச பங்குச் சந்தை கருத்தரங்கு

எமது இலவச பங்குச்சந்தை கருத்தரங்கிற்கு (Stock Market Free Seminar) வருகை தந்து எவ்வாறு? எப்பொழுது? பங்குகளை வாங்கி, விற்பனை செய்து வரிகட்டாமல் இலாபம் அடையலாம் என்பதனை அறிய விரும்பினால், உங்கள் பெயர்களைக் கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்

Share market + Currency Market

You will learn how to make money whan the stock market is up or down

Tel: 0208 485 8888
(24 hour voice mail)

பறக்கும் தட்டுக்கள்- 7 (FLYING SAUCERS)

அ.மயூரன்
ஒருபேப்பருக்காக



வேற்றுக்கிரக வாசிகள் பற்றிய கதை மனித இனத்திற்குப் புதியதல்ல அது பல ஆயிரம் ஆண்டுகள் பழமையானது என்பதை உணர்த்த மேற்கு ஆபிரிக்காவில் வாழ்ந்த டோகோ நாட்டைச் சேர்ந்த ஆதி வாசிகள் வானசாஸ்திரத்தில் முன்னோடிகளாக இருந்தவர்கள் என அறிகின்றோம்.

இது பற்றி அவர்களிடம் "உங்களால் மட்டும் எப்படி வான இயல் பற்றி இத்தனை உண்மைகளையும் சுலபமாய்ப் புரிந்துகொள்ள முடிகிறது எனக் கேட்டவர்களுக்கு அவர்கள் சொன்ன பதில் வேற்றுக்கிரகங்களில் இருந்து வானஊர்திகளில் வரும் நபர்களிடம் இருந்துதான் இவற்றையெல்லாம் நாங்கள் அறிந்து கொண்டோம்" என்பதே. இதில் எவ்வளவு வீதம் உண்மை உள்ளது என்பது வேறு விடயம். ஆனால் வேற்றுக்கிரகங்களில் மனிதர்கள் வாழ்கின்றனர் என நம்பினர் என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

ஒரு காலத்தில் கற்பனையாக இருப்பது பிறிதொரு காலத்தில் நிஜமாகி விடுவதுண்டு உதாரணமாக ஜில்வொர்னி என்பவர் 100 ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய உலகைச் சுற்றிவர எண்பது நாட்கள். எனும் கற்பனை நூலில் நீருக்கடியில் செல்லும் கப்பல்கள். சந்திர மண்டலத்திற்கு வான்வெளிக்கப்பல்களின் மூலம் பயணம் செய்வது பற்றியெல்லாம் எழுதியிருந்தார் இதன்பின் நிஜமாகவே இது நிகழ்ந்தது கவனத்திற்குரியது. மேலும் பதஞ்சலி யோகசூத்திரம் எனும் நூலில் கூடு விட்டுக்கூடு பாய்தல் பற்றிய கருத்துக்களும் உண்டு.

ஆகவே வரலாற்றுக்காலங்களுக்கு முன்பிருந்தே வான்வெளிக்கப்பல்கள். வேற்றுலக மனிதர்கள். பற்றிய அறிவு இருந்திருக்கின்றது. என்பதனை உணரமுடிகிறது. நான் முதல்தொடரில் குறிப்பிட்டது போல் கிறிஸ்துக்கு முன்பிருந்து கூட பறக்கும் தட்டுக்களை புவியில் கண்டதாக ஆதாரபூர்வமான குறிப்புக்கள் உண்டு. இதிலிருந்து காலத்துக்குக் காலம் மர்ம வானஊர்திகள் அவ்வப்போது வந்து சென்றிருக்கின்றது என்றே கருத இடமுண்டு.

இதையே நம் முன்னோர்களும் வான்வெளியில் உள்ள வெளிக்கோள்களில் நம்மைப்போன்ற மனிதன் வாழ்ந்தான் என நம்பினார்கள் என்பதில் சந்தேகமில்லை. இதுவரை வரலாற்றுக் காலங்களில் வானசாஸ்திரங்கள். வானூர்திகள். வேற்றுலக மனிதன். வானியல் பற்றிய நூல்கள். ஆகியன பற்றி நோக்கினோம். இனி மீண்டும் பறக்கும் தட்டுக்கள் தரும் திகைப்பூட்டும் தகவல்களுக்குச் செல்வோம்.

அடுத்து விண்வெளி உலகின் தந்தை எனக் குறிப்பிடப்படும் ரஷ்யாவின் கொன்ஸ்டன்டின் ஸியோல்கோவிஸ்கி என்பவர் நிஜத்திலேயே காது கேட்காதவர் இவர் விண்கலங்களைப்பற்றி 1883இல் எழுதிய எல்லையற்ற விண்வெளி (free space). மற்றும் 1885ல் பூமியினதும் வானத்தினதும் கனவு. 1887இல் அம்புலியின் மேல். 1897 மார்ச் 27இல் ரொக்கட் ஊர்திகளின் மூலம் விண்வெளியை ஆராய்தல். முதலிய நூல்களை விண்வெளி மற்றும் வேற்றுக்கிரக மனிதனின் வாழ்க்கை முதலியவற்றைப்பற்றி விரிவாக கணிதமுறையில் நிறுவி எழுதினார்.

இவருடைய நூல்களைப் பின்பற்றியே ரைட் சகோதரர்கள் விமானத்தைக் கண்டுபிடித்ததும். வேர்ணர் வொன் பிரோன் என்பவர். இரண்டாம் உலகப்போரில் ஹிட்லருக்கு வி - 2 ரக ரொக்கட் களையும். அமெரிக்க ஜோன் கென்டிக்கு சந்திரனில் ஆளை இறக்குவதற்கு சர்ட்டன்-5 விண்கலத்தையும் அமைத்தார். என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றும் இவருடைய நூலைத் தழுவியே விண்வெளியில் விண்கலங்களை நிறுவுதல் மற்றும் விண்வெளி ஆய்வுகள் முதலியன நடைபெறுகின்றன என்ப தனை இங்கு நினைவு படுத்துகின்றேன்.

1930ல் அமெரிக்காவில் அலாஸ்கா என்னும் இடத்தில் வயது போனவர் ஆற்றங்கரை யோரமாக உல்லாச விடுதி நோக்கி நடந்து கொண்டிருக்கும் வழியில் மனிதனைப் போன்ற ஒரு உருவத்தினை கண்டு அதை தனது புகைப்படக் கருவியால் படம் பிடித்தார். பின் அதைத் தனது மகனிடம் கொடுத்து நடந்ததைக் கூறினார்.

துரதிஸ்டவசமாக அப்படம் பிரதி செய்யப்படு வதற்கு முன்னமே அவர் இறந்துவிட்டார். பின் அப்புகைப்படக்கருவியை புகைப்படப்பிரதி செய்து பார்க்கப்பட்டபோது அவர் புகைப்படம் எடுத்திருந்தது வேற்றுக்கிரக மனிதனை என்பது கண்டு பலரும் ஆச்சரியப்பட்டனர்.

ஒரு வேற்றுக்கிரக வாசியினுடைய அமைப்பினை மனிதன் முதலில் கண்டது இங்குதான். (ufocasebook. com) அத்துடன் 1933ல் கனடாவில் உள்ள சஸ்கச் சிவன் (saskatchewan) எனும் இடத்தில் நிபாவின் என்பவர் பெரிய வட்டவடிவமுடைய பொருள் நின்றதாகவும் அவ்வட்டப் பொருளை கால்கள் தாங்கியிருந்ததாகவும் இதன் மத்திய கதவு திறக்கப் பட்டு அதன்மூலம் 12ற்கும் அதிகமான சிறிய மனிதன் போன்ற உருவங்கள் வெளியேவந்து அதைத்திருத்தும் பணியில் ஈடுபட்டிருந்ததாகவும் கூறி அவர்கள் சில்வர் கலரான ஆடைகளை தலை முதல் கால்வரை இடைவெளிகளற்று அணிந் திருந்தனர்.

அத்துடன் தலையில் தலைக் கவசமும் அணிந்திருந்தனர். எனக்கூறி பரபரப்பை பத்திரிகைகள் வாயிலாக ஏற்படுத்தினார். {john brent Musgrave (fsr vol 22; 6.1976)} மே மாதம் 1940ஆண்டு மொன்ராணா என்ற அமெரிக்க நகரத்தில் காணப்படுகின்ற பவுல்டர் மலைப்பகுதியில் உடோவாரெனா (udo wartena) என்பவர் 35அடி உயரமும். நூறு அடி அகலமும் உடைய வட்டவடிவான பொருளைக்கண்ணுற்றார்.

கேள்வி பதில்

அஞ்சலா ஜெகநாதன்
(மூலிகை மருத்துவர்)

கேள்வி : எனக்கு வயது நாற்பதாகிறது (ஆண்). கடந்த சில காலமாக மலச்சிக்கல் ஏற்பட்டுள்ளது. வழமைபோல் தினந்தோறும் மலம்கழிப்பது மாறி. கிழமையில் மூன்று அல்லது நான்கு தடவைகள்தான் கழிக்கின்றேன். கழிக்கும் பொழுது மலம் கடினமாகவும். நோ வேதனையும் இருக்கிறது. வயிறு ஊதலாகவும், பசியின்மையும் காணப்படுகிறது. எனது வழமையான மலங்கழிக்கும் பழக்கத்திற்கு திரும்புவதற்கு ஏதாவது வழிவகை சொல்வீர்களா?

- நாதன். கொலின்டேல்

பதில்: மலச்சிக்கல் அல்லது மலங்கழிப்பது தொடர்பான பிரச்சனைகள் பலருக்கு இருக்கின்றது. பத்தில் ஒருவருக்கு மலச்சிக்கல் இருப்பதாக காணப்படுகிறது. மலச்சிக்கல் சமிபாட்டுத் தொகுதியுடன் சார்ந்த பொதுவான பிரச்சனையாகும்.

பொதுவாக நார்ச்சத்து குறைவான உணவு, போதியளவு நீர் அருந்தாமை காரணங்களா கின்றன. சில சமயங்களில் ஓமோன் சுரப்புகளில் ஏற்படும் மாற்றங் களும், வேறுநோய்களுக்கு தரப்படும் மருந்துகளும் மலச்சிக்கலை ஏற்படுத்தக் கூடும். சிறு பிள்ளைகளுக்கும், வயது முதிர்ந்தோருக்கும் இது பொதுவாக காணப் படுகின்றது. பெண்களுக்கு மாதவிடாய்க்கு முன்பும், கர்ப்ப காலத்திலும் பொதுவான தாகும்.

தினமும் மலங்கழிப்பதை விடுத்து கிழமைக்கு 3 - 4 தடவைகள் மலங்கழிப்பது மலச்சிக்கலைக் குறிக்கும். மேலும் இந்நேரங்களில் மலம்

கெட்டியானதாகவும் கழிப்பது கடினமாகவும், கழிக்கும் பொழுது நோவேதனையு மிருக்கும். சில சமயங்களில், மலம் முயல் மலங்கழித்தல் (சிறு புழுக்கைகள்) போன்றிருப்பதுடன் மலங்கழித்தபின்பும், மலம் முழுவதும் கழிக்கப்படாத உணர்வு இருக்கும். சிறிதளவு உண்டவுடனேயே வயிறு நிறைந்த உணர்வும் வயிறூதலும் வாந்திவருமுணர்வுமிருக்க கூடும்.

மலச்சிக்கல் உள்ளவர்களுக்கு, Berberis Plus என்னும் மூலிகைக் கலவையும், Conton Aoo என்னும் மூலிகைச் சேர்மானமும், Psyllium Husk என்னும் மூலிகை தூளையும் பயன்படுத்தலாம். Berberis Plus மருந்துக்கலவை சமிபாட்டை நன்கு நடைபெற உதவுகிறது. Conton Aoo மலமிளக்கியாக செயற்பட Psyllium Husk மலத்தினளவைப் அதிகரிக்கச் செய்து மலம் கழிக்குமுணர்வைத் தூண்டிவிடுமாறு செயல்படுகிறது. இவற்றுடன் கூட, போதியளவு நீர், நார்ச்சத்து கொண்ட உணவுகள், தினமும் தேகப்பயிற்சி ஆகியன முக்கியமானதாகும். Whole meal bread புதிய காய்கறிகள், நீரளவு கூடிய பழவகைகள் போன்றவற்றில் நீரளவும், நார்ச்சத்தும் கிடைக்கின்றன.

இவற்றைப் பின்பற்றிய பின்பும், மலச்சிக்கல் தொடருமாயின், நீங்கள் என்னை தொடர்பு கொள்ளலாம்.

சட்பறி தமிழ் பாடசாலை
Sudbury Thamil School
Perin Road,
Wembley,
Middlesex

சனிக்கிழமை காலை
9.30 மணியில் இருந்து
1.30 மணிவரை
தொடர்புகளுக்கு 07956 227 375

அனுமதிக்கு முந்தவும்

தமிழ் மொழி
Tamil Language

மிருதங்கம்
Miruthangam

கரத்தட்டு
Keyboard

வீணை
Veena

பரதநாட்டியம்
Bharathanatyam

வாய்ப்பாட்டு
Vocal

புல்லாங்குழல்
Flute

பிடில்
Violin

பெரியார் இயக்கம் வரலாற்றுத் தேவை

'இந்தியாவில இருந்து வரும் போது எல்லா மூடப் பழக்கத்தையும் வச்சுட்டு வந்திருப்பீங் கன்னு நினைச்சேன். எல்லாத்தையும் மூட்டை கட்டி கூடவே எடுத்துட்டு வந்திருக்கீங்களே!'

மலேசியாவில் தமிழர்களை சந்தித்த தந்தை பெரியார் மூடப்பழக்க வழக்கங்கள் மிகுந்திருப்பதைப் பார்த்து மனம் நொந்து சொன்ன வார்த்தைகள் இவை.

இந்த வார்த்தைகள் புலம் பெயர்ந்து வாழும் அத்தனைத் தமிழர்களுக்கும் இன்று பொருந்துவதாக இருக்கின்றது என்பதே வேதனையான விடயம்.

எனது அண்ணன் பெரியார் சாக்ரடீசின் மகளுக்கு தமிழீழம் என்று பெயர் வைத்தோம். 'தமிழீழம் மலர்ந்தது' என்று விடுதலைக்கு நன்கொடையும் கொடுத்தோம்.

சொல்வதற்குக் கடினப்பட்டும், பல முறை பிழையாக உச்சரிக்கப்பட்டு, எழுதப்பட்டும் இருந்தாலும், சிறு வயதிலிருந்தே ஒவ்வொரு முறையும் பள்ளியில் தன் ஆசிரியைகளுக்கு விளக்கம் சொல்லி

'எங்கள் பிரபாகரன் மாமா போராடி வெல்லப் போகும் தமிழர்களின் நாட்டுக்குப் பெயர் தமிழீழம். அது தான் என் பெயர்'

என்று வியக்க வைப்பாள் தமிழீழம்.

இப்போது அவளுக்கு பத்து வயது ஆகிறது. ஒருமுறை ஈழத் தமிழ்ப் பெண் ஒருவர் இவளது பெயரைக் கேட்டு ஆனந்தத்தில் அழுதுவிட்டார்.

ஒவ்வொருமுறை சந்திக்கும்போதும் இவளது பெயரை பிறரிடம் சொல்லச் சொல்லி மகிழ்வார் அண்ணன் அறிவுமதி.

தமிழ்நாட்டில் இப்படி எத்தனையோ தமிழீழம், பிரபாகரன், திலீபன், கிட்டு, முல்லை வீரன், யாழ் - போன்ற பெயர்கள் உண்டு.

திராவிடர் கழக மாநாட்டில் பெயர் வைப்ப தற்காக தமிழர் தலைவர் அய்யா வீரமணியிடம் ஒரு குழந்தை கொடுக்கப்பட்டபோது, 'பிரபாகரன்' என்று பெயர் சூட்டினார்.

'அய்யா, கடந்த வருடம் இவனது அண்ண னுக்கும் இதே பெயரைத்தான் சூட்டினீர்கள்'

என்றார் குழந்தையின் தந்தை. பிறகு அப்போதைய தளபதி ஒருவரின் பெயரைச் சூட்டியதாக நினைவு. அந்தளவுக்கு தமிழீ ழத்தை நேசிக்கக்கூடியவர்கள் இருக்கிறோம்.

ஆனால் புலம்பெயர் தமிழர்களில் பலர் வீட்டில் இன்னும் 'வர்ஷினி'களும், 'தர்ஷினி' களுமாக வடமொழிப் பெயர்கள் வைக்கப் படுகின்றன. சாய்பாபாவின் பக்தர்களில் பலர் யாரென்றால் ஈழத் தமிழர்களாகத் தான் இருக்கிறார்கள்.

அவரது கையசைவில் தங்கள் விடுதலையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்களோ என்ன வோ?

(இந்த லட்சணத்தில் பிரேமானந்தா வேறு புலிகளுக்கும், மகிந்த அரசுக்கும் இடையே பேசி சமாதானத்தைக் கொண்டு வருவார் என பிரேமானந்தா மடத்திலிருந்து சொல்வதாக பத்திரிகைகள் எழுதுகின்றன. என்ன நடக்குது இங்க?)

காலமெல்லாம் வழிபட்டும் தங்களைக் காக்காத முருகப் பெருமானையோ, அவரது உறவுக்கார இந்துக் கடவுள்களையோ தமிழர்கள் புறக்கணித்ததாகத் தெரியவில்லை. மாறாக ஈழத்திலிருந்து புலம்பெயரும் போதே முருகப்பெருமானை மூட்டைகட்டி எடுத்துச் சென்று விடுகிறார்கள்.

உருவாகப் போகும் தமிழீழம் மூட நம்பிக்கைகளற்ற பகுத்தறிவு தேசமாகத் திகழ வேண்டும் எனவே சிறப்புப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என தமிழீழத் தலைமை விரும்புவதாகவும் தெரிகிறது.

ஏனெனில் பகுத்தறிவற்ற தேசம் சிங்கள வர்களின் கையிலிருந்துவிடுதலை பெற்றாலும், மதப் பிடியிலிருந்து மீள்வது கடினம் என்பதை அவர் புரிந்து வைத்திருக்கிறார்.

இந்த நிலையில் தான் நம் தமிழர்கள் நாடெங்கும் கோயில்கள் கட்டுதல், அங்கேயும் 'ஏக மாதா பகுபிதா சற்சூத்திராய நமஹ' 'ஒரு தாய்க்கும் பல தகப்பன்களுக்கும் பிறந்த சூத்திரப் பயலே' என்று மந்திரம் ஓத இங்கிருந்து பார்ப்பனர்களை இறக்குமதி செய்துகொள்ளுதல் என்று இருக்கிறார்களே என்று வருந்தவேண்டியதாய் இருக்கிறது.

புலம்பெயர் தமிழர்கள் பார்ப்பனர்களை நேரடியாக ஏற்றுக் கொள்ளவில்லை என்று கருதுகிறேன்.

ஆயினும் பார்ப்பனீயக் கூறுகளாக இந்து மதச் சடங்குகள் அவர்களிடம் மிகுந்திருக்கின்றன.

'நாங்களே சிக்கலில் இருக்கிறோம். எங்களிடம் வந்து கலைநிகழ்ச்சி காட்டி பிச்சையெடுக்க வருகிறாயா?'

என்று 1990-களில் ரஜினியின் ஐரோப்பிய சுற்றுப்பயணத்தின்போது துண்டறிக்கை விநியோகித்து புறக்கணித்த ஐரோப்பியத் தமிழர்கள், சோதிடர்களிடமும் சித்துவித்தைக் காரர்களிடமும் கொட்டி அழுவதை நிறுத்தவில்லை

எனவே ஐரோப்பாவெங்கும் வாழும் தமிழர்கள் மத்தியில் பகுத்தறிவுக் கருத்துகளை எடுத்துச் செல்ல வேண்டிய தேவையிருக்கிறது.

மூட நம்பிக்கைகளற்ற தெளிவுமிக்க சமுதாயமாகத் தமிழ்ச் சமுதாயம் இருக்க வேண்டும் என்பதே தமிழை தமிழ்த் தேசத்தை நேசிக்கும் அனைவரின் விருப்பமாகும்.

- பிரின்சு என்.ஆர். சமா

ஹா ஹா ஹா...

(பொலிஸ் நிலையத்தில் நடந்த உரையாடல்)

வந்தவர் : என்னுடைய மனைவியை ஒரு மாதமாய் காணவில்லை.

பொலிஸ்: ஏன் இவ்வளவு காலமாக அறிவிக்கவில்லை.

வந்தவர் : சனிப்பெயர்ச்சியாக்கும் எண்டு நினைச்சு சத்தம் போடாமல் இருந்திட்டன்.

Kerala Ayurvedic Health Clinic (Near Wembley)

1 Odean Parade, Sudbury Heights Avenue, Greenford, Middlesex UB6 0NA
5 mins walk from Sudbury Town - Piccadly Line



- ▲ Massage Therapies by experienced and highly skilled therapists
- ▲ Treatment is designed around your individual health needs
- ▲ Safe and effective Ayurveda supplements/ medicines for your needs
- ▲ Only natural medicines are used
- ▲ No side effects at all
- ▲ Wide range of therapies



- ▲ Arthritis
- ▲ Frozen Shoulder
- ▲ High Blood Pressure
- ▲ Pulled Muscles
- ▲ High Cholesterol
- ▲ Trapped Nerve
- ▲ Paralytic Conditions
- ▲ Certain Skin Conditions
- ▲ Stress and Strain
- ▲ Back Pain
- ▲ Whiplash
- ▲ Obesity
- ▲ Joint Pain
- ▲ Digestive Disorders
- ▲ Diabetes
- ▲ Sleeplessness
- ▲ Stiffness
- ▲ Migraine

FREE Consultation

Authentic and Effective Kerala Ayurvedic Treatments
Qualified and Registered Ayurvedic Physicians
Affordable Prices

- * Providing Free Steam Bath, Shower, Towels, Shampoo etc.,
- * Male and Female therapists available
- * Can speak in Hindi Tamil or English & Malayalam
- * Free Parking



www.kahc.co.uk

Call 020 8902 1104 / 020 8902 1707

உங்கள் நோய்க்கு ஏற்ப அனுபவம் மிக்க பிரத்தியேக ஆலோசனைகளுக்கும், மருத்துவ சிகிச்சைக்கும் கேரளா ஆயுர்வேத மூலிகை மருத்துவரை நாடுங்கள்.....

20% Discount as Summer Special

TEENSபேப்பர்

Trails and tribulations of '*Oru*' writer

Uma Kumaran
ORU PAPER

Hello all, Thanks again for taking time to read this section of the paper. I have just realised that I have been writing for our paper for a year and a half. For those loyal readers who have read more or less most of these know that I have covered Tamil history, day to day problems, social problems and have cavorted with controversial issues (who can forget the debate about virginity that ensued!). I have even had the pleasure of people writing whole articles agreeing with what I have written about and sharing their personal experiences. More recently, I have been approached by email and social networking sites by various people from Austria to Australia and from Italy to India. It is always a pleasure to receive compliments and encouragement from people who enjoy what I write. I am also quietly overjoyed that so many people read what I write.

However there are always certain downfalls that come with every profession (or in my case hobby) and that for a writer is criticism. Criticism is defined as 'reasoned judgement or analysis, value judgement, interpretation, or observation. The term can be used to describe an adherent of a position disagreeing with or opposing the object of criticism'. So far, I have not been on the receiving end of such criticism. However, that has all changed this week. This week I have experienced my first bout of criticism in my journalistic endeavour and I am not going to lie to you, it hurts. It is not the criticism that hurts the questioning of my ability to write a publishable article. While life or indeed writing devoid of criticism would be ideal, it is not realistic. In addition, it would not give me an insight into what others think and have to say about what I write. There is always 'constructive criticism' to be had in almost everything that is written about. But there is a fine line between constructive criticism and just downright criticism.

> 'Criticism should be like gentle rain, enough to nourish a man's growth, without destroying his roots'

What people often don't understand is that writers all believe passionately in what they have written and therefore criticism of their beloved work is equivalent to telling a new mother that their baby is ugly! Furthermore, there are always the few in any race or country that place themselves in their self-made moral high grounds, which are unattainable to us mere mortals. It is these people who criticise and do not understand the hurt or harm they do when dishing out their opinions. After all, we live in a country where freedom of speech and freedom of thought are encouraged to flourish and thus inevitably there will always be things that we do not agree with or indeed like. However, that does not mean that those things cannot exist or should not be allowed to exist.

Another thing that has become blaringly obvious to me is that some people in our community are eternally dissatisfied. So, no matter what a person writes they will always think the contrary. This problem is especially prevalent when us 'teen' Oruwriters (some of which are past the teen stage) write about anything to do with Tamils. It stems from the belief that young (therefore inexperienced) and second generation (therefore culturally clueless) Tamil children know not of what we write and everything we write is influenced (usually by a movie) in some way, shape or form and ultimately is devoid of any real knowledge about the Tamil race. This is an age-old problem where elders think that possessing more life experience makes a person's opinions more credible. In some cases, this opinion is right, when say talking about a war and hearing it from those who have experienced it than say from someone who has read about it in a book. Then again, how do we know the person who experienced it will tell us the true reality minus their version of events and free from bias? This is where a young fresh mind can offer an opinion into the subject even though they have not experienced it first hand. Instead of thinking about it this way, people do the opposite and see being a second generation Tamil as a disadvantage when commenting on matter relating to the Island of Sri Lanka. What gives one person more or less right to comment on something? Birthright? I for one do not want such prejudice cast on me, nor do I want sympathy for being born out of Sri Lanka. In fact my first article embraced the delights of having a dual culture and acknowledged that Tamil youth Diaspora have the best of both worlds.

I may look back on this article in years to come and wonder 'what was I thinking', but, for now I can be proud to say that I am what I am, and have written what I believe and stand by it. It was once said that to avoid criticism one should do nothing, say nothing and be nothing…I for one refuse to be nothing and instead choose to believe that 'criticism is simply prejudice made plausible'.

The Tamil Girl and the Black Guy - 03

Tharmila Shabanathan
ORU PAPER

I would like to firstly inform all my readers that I do not write articles so that people can just follow me without thinking about it first. You may ask why I say this, I will explain further in the article. About this topic, I have got a lot of response from both the public and family and friends; some being in favour and let's say some being not so in favour of me writing this article. Yet I still continue to write only to justify my point, after all it is my duty to explain my self and to reply back to those of you who have asked me many questions and even went a step further into telling me to "write to encourage our youngsters to use their potential in these areas and be revolutionised and innovative".

To tell you all the truth I actually read through my pevious articles on this subject many times just to see if I did write anything that was unnecessary or unrelevent or even something inappropriate but to tell you the truth; I really do not feel as if I have commited a huge crime in writing about this.

Here is one reply to my article "born tamils live as it is and don't cross, balck boys looking for white girls because in carrebean fair people are superior is the truth… … their style is very convenient to young people who do not want reponsibilty do you want the same life style, go ahead but don't misguide the others, I am sorry for your ignorance". When I read this I was shocked and did not know what else to say. I mean yes tamils must keep their traditions and values and culture but why must we not fall in love with a guy/girl from a different race. This is not my question but many others. Just because I have written about it,you had the chance to think about it and voice your opinions. Don't you believe that it's time we make others realise that such issues like this exists and we must come to understand.

Yes, I did say in the last articles that "I know for sure that our lovely quite girl knows what she is doing and what really counts is that she has the right to decide for herself. Let them reach out, how long are we going to be keeping control of our race in one circle. If one falls in love then race, culture, beauty and colour are no boundary."

I truly understand that some girls might have found these lines very persuasive from what I have heard. However I did not write this in any way to encourage more tamil girls to do and find the next black guy. From this I tried to argue that we must have our freedom to choose and decide things without having boundries such as race and status. Once apon a time Periyaar, Bharathy and even Ghandi fought to make all humans equal without class, status , and religious differences and now I am following their path in making the world a more pieceful place by not caring so much about racial differences. Then it was about class and status and now it's about race.

To all those who are reading this article please take this point of view with an open mind.

If we can revolutianise from wearing skirts and blouses to jeans and t-shirt then can we not accept such love affairs? However I would just like to say that I hope I have not offended anyone or forced anyon in any way via writing this article. I just fealt that this was a subject that had to be discussed purely because I fealt it was necessary. It does not mean I do not write to encourage youngsters to keep our traditions and customs but in a rapidly changing world, we must also talk about things that exist now, don't u think so?

As tamils we have gone from just hating the idea of love to actually letting our children live with their lovers even before marriage (you cannot deny this as I've seen it and heard it happening)… and I know that even though some Tamils might think it's a rediculious idea now, they will not be in the near future. Though this does not this mean that I want a black boyfried or to say that I want a care free life style as I love my culture, I love my customs and most of all I love the idea of one man for one women.

All this does not change my view that "If one falls in love then race, culture, beauty and colour are no boundary…and for as long as long as we live in foreign countries let's still carry on our good traditions and custom values but leave the bad thoughts and ego behind." But it does not also change my views about my culture which is recognised for it's goodness and purity.

Study in UK

From Sri Lanka and India

9 Years Experience

Authorised Education Advisor

P.K. SUHANTHAN (MSc -UK)

Knowledge Management Systems Pvt Ltd

எமது சேவை
முற்றிலும்
இலவசம்

5 Station Chambers
Station Parade
Eatham
E6 1JD

Office at Colombo: +94112553106 Chennai: +919841199594 London: + 447905038050 Office in London: 0208 8210 107

REFLECTIONS TO THARMILA'S "A TAMIL GIRL AND A BLACK GUY"

The great duplicity of Jaffna Tamils



Poongothai
VIA ORUPAPER.COM

'Women, Pariahs and Parai (a traditional drum) are born only to be beaten'

- Arumuga Navalar

The intention of Tharmila's article was to highlight the emerging social trends and to pre-warn the not so 'civilised' Tamil parents in the diasporas community. Inadvertently Tharmila exposed that she also not clear about this issue and provoked people like 'thadaval bala" to write about her 'ignorance'.

I would say any adult with a competent mental capacity can choose her/his life partner from any ethnic / religious group as long as that person is good enough to proceed with a decent family and social life. This decision making capacity invariably depends on that person's education and socio-economic background. My position is this cultural identity should not be a barrier to relationships.

Tharmila started with the following statement before elaborating the story, "Before I go on to talk about her deeply I would like to let you all know that she is a very nice, very shy and very quiet girl (just so that you guys don't start saying she's this n that)."

In the Tamil community there are codes of conduct for women to do everything from how to laugh/smile to how to lye on the bed (The grown up girls are not allowed to sleep while lying flatly facing the roof, she has to sleep lying on her side and I don't want to go into the details of vulgar reasoning behind this). Being shy and quiet is also expected from a grown up Tamil girl and one of the eligibility criteria for marriage. By saying her friend is shy and quiet Tharmila is trying to portray her friend is a good girl, obviously she is trying to say her friend is not a promiscuous one. What she is implying is being more talkative and sociable is a sign of a 'bad girl', this is a very typical thinking of Jaffna Tamil mentality. Even though she is portraying herself as a 'revolutionised youngster', Tharmila is also the victim of the Jaffna Tamil cultural indoctrination and the typical example of second generation Tamil expatriates facing dilemma regarding their cultural identity (It's not her fault). She is the first revolutionary with a belief in god. (We are all living in a world which was given to us by God to share and be happy about and as one big family in this world.)

I would like to use this forum to highlight few embarrassing truths regarding Eelam Tamils especially Jaffna Tamils. The Jaffna, a land still boasting about Arumuga Navalar and continuously trying to portray him as one of the best products of Jaffna is still far away from liberation in terms socio cultural aspects. Very soon Jaffna will be physically liberated from Sinhala forces but Liberation Tigers have to put even more hard work to reform the society. The other problem is nearly three quarters of the Jaffna population living in expatriate countries without any reform and its undesirable social thinking has almost been institutionalised now and beyond any redemption.

> Jaffna Tamils, they will tolerate if their kids are dating white girls and boys but are not ready to accept a Tamil from a different caste.

One of the few qualifying criticisms against Liberation Tigers is they are not giving enough attention to social 'ills' of our Tamil society and not promoting progressive thinking in par with Tamil nationalism. Contrary to that they are quietly promoting remarriage of widows; inter caste marriage and other progressive aspects in the regions they are governing now. On the other hand Liberation Tigers are conspicuously silent regarding these matters in expatriate countries, obviously they don't want to upset the 'system' here because of the risk of losing the support of expatriate Tamils. The Jaffna Tamils with an excellent academic and cultural background still practicing few social customs which are equivalent to 'apartheid' policies.

I would like to share a story happened in my work place and many of you may have similar experience. In my work place there is an Indian girl works with me and she has got a Jaffna Tamil girl friend, they both studied the same course at the same university. That Jaffna girl's family migrated to a Scandinavian country in the late eighties and she came to the UK to do her university education and went back to that Scandinavian country to live with her parents after her graduation. Both the Indian and Jaffna girls are very good friends and the Indian girl has even visited the Jaffna girl's family *in Scandinavia. My Indian friend* once told me, that Jaffna girl's family is very liberal and their father had told the Jaffna girl and her siblings that they can choose their life partner from any ethnic / religious group. At that time one of the Jaffna girl's brothers is dating with a white girl and there wasn't any opposition from the family.

Here our Jaffna Tamil Romeo is entering the scene; he was also starting his first job in *my* work place. My Indian friend used to tell about her Jaffna girl friend to this guy and gradually he showed some interest in Scandinavian Jaffna Tamil girl. My Indian friend also promised him that she will speak to her friend on behalf of him. Apparently she (Jaffna girl) has told my Indian friend that she will not make any decision regarding her marriage and her father will speak to that Jaffna guy. Eventually her father phoned this Jaffna guy and inquired about his family background and his home town in Jaffna to ascertain the caste of our Jaffna friend. Later that Jaffna girl's father phoned my Indian friend and told her that our Jaffna guy is from a different caste and they don't want to proceed further in this 'quasi official" marriage proposal. This is true story believe me. A few months later my Indian friend told me it was because of the Jaffna girl's maternal grand mother's opposition to any inter caste marriage in the family they could not proceed with the marriage proposal.

I would say this is a more diplomatic way to say 'no' and increasingly grandparent's names are being used to cover their shame. These educated Tamils know very well that the caste system is not acceptable in a civilised society.

So here we have Jaffna Tamils they will tolerate if their kids are dating white girls and boys but are not ready to accept a Tamil from a different caste.

This is my question, do we really deserve to be treated as a civilised society in this modern world?

The expatriate Tamils are helping the Tamil national liberation struggle in the name liberation and on the other hand they are harbouring most disgusting customs in the modern world. What is the point in crying foul on human rights violations against Tamils by the Sri Lankan government while we are indulging in most heinous human rights violations within the Tamil community?

TOP MARKS FOR MATHS – A* TUTOR
GCSE, A/S & A/2 Students
All examination boards covered by highly experienced mathematician.
Also coach for 11+ and Grammar school exams
For further details call
Kamalanathan BSc (Hons)
Tel: 020 8442 2393
Mobile: 07970 839 507
North, North-East & North-West London areas

"கற்பித்தல் ஓர் கலை"
Tution Classes in Modern
வயது 5லிருந்து 15 வயது உள்ள மாணவர்களுக்கு
* Science * Maths and * Tamil } Exam Focus Classes
விசேட பிரத்தியேக வகுப்புகள் பரீட்சை ஒட்டிய நேரங்களில் நடைபெறும்.
British Citizenshipற்கு விண்ணப்பிக்க காத்திருப்பவர்களுக்கு Life in the UK பரீட்சைக்கான வகுப்புகளும் நடைபெறுகின்றன.
Contact: Shankarii, T: 020 8640 6228 / M: 07877 976 741
E: shankarii29@yahoo.com

Legal Secretary
Solicitor firm based in Wimbledon requires an enthusiastic Secretary to work in our busy Conveyancing and Immigration Departments. Priority will be given to the applicants who can speak Tamil fluently.
Good IT skills and relevant experience important.
Excellent Prospects!
Please apply with CV to
Oru Paper, 45B, Crusoe Road, Mitcham, Surrey CR4 3LG

PRIVATE TUITION-MATHS
For 11+Maths | For year 7 to GCSE Maths | A/L Level Maths
By: Ravi Bsc (Hons) Msc (Eng)
Tel: 07961 111 945

ESSENTIALS OF ENGLISH GRAMMAR (11+ மாணவர்களுக்கு)
ஆங்கில இலக்கணத்தை முழுமையாக, சுலபமாக, துரிதமாகக் கற்கும் முறையில், இந்நூலை நுணாவிலூர் கா. விசயரத்தினம் அவர்கள் எழுதி வெளியிட்டுள்ளார். விலை £ 2.50
தொடர்புகளுக்கு: Mr. M. Vasanthan T.P. No. 020 8694 6653 Mr. K.Wijeyaratnam T.P.No. 020 8695 1255

அழகும் ஆரோக்கியமும்
இலவச ஆலோசனை
உடல் நோய் சம்பந்தமான பிரச்சனைகள்
(மூட்டுவலி, வீக்கம், சலரோகம், கொலஸ்ரோல், அல்சைமர் நோய், கண் பிரச்சனைகள், ஆஸ்மா,அலர்ஜி மற்றும்...இதர)
தலைமுடி சம்பந்தமான பிரச்சனைகள் (வரண்ட முடி, வெடிப்பு, முடி உதிர்தல்...இதர)
தோல் , முகம் சம்பந்தமான பிரச்சனைகள் (முகப்பருக்கள், கரும்புள்ளிகள், வரண்டதோல், Sunburn ...இதர)
Personal Consulting available. In-Home Service avilable
தொடர்புகளுக்கு: KALA
020 8255 7476 / 07973 815 623

மாறுதடங்கள்

படைத்தவர்
நளினி மகேந்திரன்

பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டியபடியே சோபாவிலே சாய்ந்திருந்த ரம்யாவின் கண்களிலே அந்த மரண அறிவித்தல் பட்டது. அவள் கண்கள் அப்படியே நிலை குத்தி நின்றன.

இது நிச்சயமாக அவள்தான். கடவுளே.. .. அப்படி இருக்கக்கூடாது கண்களை அகலத் திறந்தபடி பெயர் ஊரைக் கவனமாக உற்று நிதானமாக வாசித்தாள். ஆமாம் அவள் என் மாணவி தான். அமைதி, அடக்கம், பொறுமையின் சிகரமான அவளுக்கா இக்கதி?

நெஞ்சிற்குள் ஏதோ செய்வது போலிருந்தது. இவளால் எப்படி போராட்டத்தில் இணைய முடிந்தது? எப்படி அவள் இறந்திருப்பாள்?

தனக்குத்தானே கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தவள் கண்களில் இருந்து கண்ணீர்த்துளிகள் அவள் கன்னங்களில் வடிந்தோடின.

ரீட்டா ஒரு ஏழை. அவள் தந்தையார் அன்றாடம் தோட்ட வேலை செய்பவர். ஆறு சகோதரங்களுடன் பிறந்த அவள் வீட்டில் மூன்றாவது பிள்ளை.

வறுமை தாண்டவமாடினாலும் படிப்பிலே அவளுக்கிணையாக யாருமே இருக்க முடியாது. அவ்வளவு கெட்டிக்காரி. ஸ்கொலசிப்பில் இலங்கை முழுவதிலும் முதல் மாணவியாகத் தேறியவள்.

எப்பொழுதும் தூய்மையான சீருடை. ஒரே சீருடைதான் இருந்தாலும் சீராக இருக்கும். எண்ணெய் பூசி வாரிவிட்ட நீண்ட கூந்தலை மடித்துக்கட்டியிருப்பாள். யாருடனும் அதிகம் பேசமாட்டாள். மென்மையென்றால் என்ன வென்று அவளிடம்தான் அறியவேண்டுமெனப் பலதடவைகள் நினைத்ததுண்டு.

ரீட்டாவின் வாழ்க்கையில் தடந்த அடுத்தடுத்த துன்பங்களால் அவள் வாழ்க்கை எங்கோ திசைமாறி விட்டது.

முதலில் தந்தை அண்ணா,அக்கா தம்பி தங்கை அனைவரும் ஒரே நேரத்தில் குண்டுக்கிரையாகிவிட்டார்கள்.

தாயாரும் ஒரு தம்பியும் மட்டுமே எஞ்சியிருந்தனர். கவலைகள் கஷ்டங்களால் படுத்த படுக்கையாகி தாயாரும் இறந்து விட்டார்.

தம்பியோ இராணுவத்தின் கோரப்பிடியில் அகப்பட்டுத் துடிதுடித்து இறந்தான். அதன் பின்னும் அவளால் என்ன செய்ய இயலும். இராணுவத்தின் கையிலகப்பட்டு உயிரை மாய்ப்பதிலும் பார்க்க மண் மீட்பிற்காக உயிரை மாய்ப்பதே மேலென எண்ணியதன் விளைவுதான் இது.

இவ்வளவு நடந்திருப்பதை இங்கிருந்து அவளுக்காக அவளை நினைத்து ஒரு சொட்டுக் கண்ணீரை உகுக்கும் அவள் ஆசிரியைக்குத் தெரிந்திருக்க ஞாயமில்லைத் தானே.

ஏனெனில் அவள் நீண்ட நாட்களுக்கு முன்பே தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஊர் விட்டு ஊர் மாறி வந்துவிட்டாள் அல்லவா.

தொலைபேசி மணி ஒலித்தது. நிஜ உலகிற்கு வந்தாலும் அவள் மனம் அந்தப் பத்திரிகையில் வந்த அந்தப் படத்திலேயே நிலைகொண்டிருந்தது தொலைபேசியில் அவள் தோழி நித்யா தான் அழைத்தாள்.

அவளுடன் வேலை செய்த சக ஆசிரியைதான் நித்தியா. நித்தியாவே பேச்சை ஆரம்பித்தாள். ரம்யா பத்திரிகை பார்த்தீரா? ஓமப்பா ஒரே குழப்பமாயிருக்கு.. .. எப்படி? எப்படி? அவள் இந்தப் போராட்டத்தில்... என்று இழுத்தாள் ரம்யா.

நித்தியா தான் அறிந்தவற்றை விபரமாகக் கூறினாள். பின் தங்கள் வீட்டிலே நேற்று இரவு நடந்த கிறிஸ்மஸ்பாட்டி பற்றிய கதையை சுவாரசியமாக அலசத் தொடங்கினாள்.

மெல்லத் திரைச்சீலையை விலத்திவிட்டு வெளியே பார்த்தாள் ரம்யா. வெளியில் எங்கும் வெண்மையாக இருந்தது. பல வர்ண ஒளி விளக்குகள் மின்னிக்கொண்டிருந்தன.

நேற்று அவள் தோழியின் வீட்டிலே கிறிஸ்மஸ் பாட்டி நடந்தது. ரம்யாவும் போயிருந்தாள். நித்யா சுத்த இந்து. அவர்கள் யேசு நாதரின் பிறப்பைப்பற்றி ஏதாவது கொஞ்சமாவது தெரிந்திருப்பார்களா என்றால்.. இல்லை.

எத்தனைவிதமான மதுவகைகள், உணவுப்பண்டங்கள். ஐயோ அந்தப் பெண்களின் உடைகள் பாட்டிக்கென்று புதிதாக விலை உயர்ந்ததாக வாங்கியிருந்தனர் போலும்.

பாட்டி என்றால் 'வைன்' எடுக்கலாம் எடுங்கோ.

அது ஒன்றும் செய்யாது கொஞ்சமாக எடுமப்பா இன்றைக்குக் கொஞ்சம் டேஸ்ட் பண்ணிப் பாருமன்

அதுக்கென்ன என்று அவர்கள் வற்புறுத்திய விதம் நினைக்கவே அருவருப்பாக இருந்தது.

வைன் கிளாசை ஒரு கையில் வைத்தபடி காலுக்கு மேல் கால் போட்டுக் கொண்டு தொடையில் அடித்துப் பலமாக சிரித்துக் கதைக்கும் அந்தப் பெண்களை ஒரு புழுவைப் பார்ப்பதைப் போலப் பார்த்தாள் ரம்யா.

இப்போ ரம்யாவிற்கு அந்தப் பெண்களையும் ரீட்டாவையும் மனம் ஏனோ ஒப்பிடத்தூண்டியது. யேசுநாதரைப்போல அமைதியான ரீட்டா எங்கே? இவர்கள் எங்கே?.

கிறிஸ்மஸ் பண்டிகையின் போது அவர்கள் தேவாலயம் செல்வதையும் வழிபாடு செய்வதையும் தானே பிரதானமாகக் கொள்கிறார்கள். ஆனால் இங்கு நடப்பவைகளைப் பார்க்கப் பார்க்க அவள் மனம் குமுறியது.

சிறுகதை

பாட்டி நடந்து கொண்டிருந்த போது ஒரு பெண் பொங்கல் பண்டிகை பற்றிய கதையை எடுத்தாள்.

அது என்னப்பா வீக்டேயிஸ்ல எல்லே வருகுது. எப்பிடிக் கொண்டாடுறது. வேலையால் வந்து ஏதும் பொங்கிச் சாப்பிடவேண்டியதுதான்.

அதற்கு மற்றவள்

நானென்டா காலையிலேயே எல்லாம் செய்துபோட்டு பின்னேரம் வந்து சாப்பிடுவன்.

எனக்கு அம்மா செய்வா

என்றது ஒரு குரல்.

அதற்குள் ஒரு குரல் சொன்னது சூரியன்

வெளியில வரேக்க எங்கட பிரேக் டைமும் வந்திடும் இதில சூரியப் பொங்கலாம் எப்பிடிச் செய்யிறது.

கொல்லென அனைவரிடமிருந்தும் ஒரு சிரிப்பொலி. ஒருவராவது கோவில் பற்றிய கதையைமட்டும் எடுக்கவில்லை. எல்லாவற்றையும் வேடிக்கை பார்ப்பது போல் பார்த்துக் கொண்டிருந்தாள் ரம்யா.

நினைவுகளில் மூழ்கியவள் காலரவம் கேட்டுத் திரும்பினாள். தன் கணவர் வேலையால் வந்துவிட்டதைக் கண்டதும் தான் நீண்ட நேரமாக நின்றுவிட்டதையுணர்ந்தாள். சோர்வுடன் காணப்பட்ட ரம்யாவை மெல்ல அணைத்தபடியே

என்ன நடந்தது? ஏன் ஒரு மாதிரியா இருக்கிறீர்? கண் வேற சிவந்திருக்கு.

என மிக அன்பாகவும் ஆதரவாகவும் கேட்டான்.

ரம்யாவின் கண்கள் மீண்டும் குளமாயின. அன்றைய பத்திரிகையில் இருந்த ரீட்டாவின் படத்தைக் காட்டி இவள் தன் மாணவி என்றும் அவள் பற்றி தானறிந்த விபரங்களையும் கூறினாள்.

இங்கே ரம்யாநீர் உம்மட மாணவி என்ற ஒரே காரணத்திற்காக இப்பிடி அழுகிறீர். உப்பிடி உந்தப் பேப்பர்ல எத்தன போராளியளின்ற படங்கள் வருகுது. அதுகளப் பார்த்து அழுகிறவர்கள் எத்தனை பேர்.

தங்களின்ற ஆட்கள் என்றவுடன மட்டும் அழுகை வருகுது. போராளிகள் மட்டுமில்ல அங்க கஷ்டப்படுறது. எங்கட அப்பாவிச் சனங்களும் தான். இதெல்லாம் யாருக்கும் தெரியாதென்றில்ல. ஆனா அதைப்பற்றிச் சிந்திக்கிறவை குறைவென்று தான் நான் சொல்லுவன்.

அதுகள் படுற கஷ்டங்கள் தெரிந்தும் தெரியாத மாதிரி இருக்கிறம் அதாவது பூனை கண்ணை மூடிக்கொண்டு பாலைக் குடிக்குமாம் தன்னை மற்றவர்களுக்குத் தெரியாதென்று. அது போலத்தான் எங்கட வாழ்க்கையும். சாப்பாட்டிற்கே வழியில்லாமல் எத்தின சனம் சாகுதுகள்.

சில பேரினைரை படங்கள் தான் பேப்பரில வருகுது ஆனால் எத்தின சனம் நாளுக்கு நாள் அநாதைகளாக தேடுவாரற்று ஊனின்றி. உடுக்க உடையின்றி, கிழடுகள் வீட்டிலேயே எலும்புக்கூடாகியிருக்குதுகள்.

ஏதோ தாங்களும் தங்கட முழுக் குடும்பமும் தப்பி வந்திட்டம் என்றதும் எல்லாத்தையும் மறந்து தலைகீழாக நடக்குதுகள். ஏன் நேற்றைக்குப் பாட்டியில பார்த்தீரே.

நீரோ நானோ இதுக்குக் கவலைப்பட்டு என்ன பிரயோசனம் இதையெல்லாம் வெளிநாடுகளில வாழுற எங்கட சனங்கள் உணரவேணும் .

மறுநாள் தொலைபேசி அழைப்பொன்று வந்தது. ரம்யா தான் எடுத்தாள். அது ஒரு ஆங்கிலேயனின் குரல்.

இங்கிருக்கும் அங்கவீனமான பிள்ளைகளில் ஒருவரையோ இருவரையோ தெரிந்தெடுத்து அவர்களுக்கு ஸ்பொன்சர் செய்யட்டாம் ஆளுக்கு 20டொலர்கள் தானாம்.

அவர் விபரங்களை சொல்லிக் கொண்டே போனார். ரம்யாவின் மனதிலே ஏதோ சுருக்கென்று தைப்பது போலிருந்தது. என்ன மடம் சொல்கிறீர்கள் என்றார் இறுதியாக.

எனது தாய்நாட்டிலே நிறையப் பேருக்கு என் உதவி தேவைப்படுகிறது. என் உறவினர்கள் கூட என்னை எதிர்பார்த்திருக்கையில் நான் என்ன செய்வது? தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள் என்று கூறினாள் ஒரு விதமான புத்துணர்ச்சியுடன்.

மாலை வீடு வந்த கணவரிடம் தொலைபேசி அழைப்புப் பற்றியும் ஏன் நாங்கள் எங்கள் நாட்டிலுள்ள அகதிகளுக்கு மாதம் 20 டொலர்களை ஒதுக்கக் கூடாது என்று படபடவென்று மூச்சு விடாமல் கதைத்து முடித்தாள்.

காலங் கடந்தாவது ஒரு நல்ல காரியமாவது செய்ய அந்தப் புண்ணியவான்தான் அங்கள் கண்களைத் திறந்துவிட்டார் என்று குறும்புப் பார்வையுடன் தன் மனைவியின் கன்னங்களிலே மெல்லக் கிள்ளினான் பிரசாத். அவர்கள் உள்ளமெல்லாம் ஒருவித புத்துணர்ச்சி பரவத் தொடங்கியது.

NAG & CO
SOLICITORS

Tel: 020 7737 1211 | Fax: 020 7737 0809
Unit 3 Holles House, Overton Road, Myattsfield Road South, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

- CRIME
- CONVEYANCING
- MATRIMONIAL
- IMMIGRATION
- TRAFFIC MATTERS
- LANDLORD & TENANTS
- POLICE STATION MATTERS
- EMPLOYMENT MATTERS
- WORK PERMITS

"த கிரேட் பிரமிட்"



வியப்பூட்டும் பிரமிட் மர்மங்கள் எண்ணிலடங்காமல் போய் விட்டதாலும் அதன் பயன்கள் மிகப் பெரும் அளவில் இருப்பதாலும் பிரமிடாலஜி என்ற தனிப் பிரமிட் இயலே தோன்றி விட்டது. பிரமிட் என்சைக்ளோபீடியா என்னும் பிரமிட் பேரகராதியும் இப்போது வந்து விட்டது. அப்படி என்ன மர்மங்கள்? பயன்கள்?

நெப்போலியன்

மாவீரனான நெப்போலியன் உலக அதிசயங்களில் மிகவும் தொன்மையான கிரேட் பிரமிடின் முக்கிய உள்ளறையான மெயின் சாம்பரில் ஒரு இரவைக் கழித்தான். காலையில் வெளியே வந்த அவன் எல்லையற்ற பிரமிப்புக்குள்ளாகி இருந்தான்.

என்ன நடந்தது என்று கேட்ட போது அதைச் சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள் (You wont bélieve me if I tell you) என்றான். அவனுக்கு மட்டுமல்ல ஆயிரக்கணக்கானோருக்கு அதிசய அனுபவங்களைத் தந்து வருவது பிரமிட்!

பிரமிட் கட்டிட அமைப்பு

23 லட்சம் கற்களால் அமைக்கப் பட்டது கிரேட் பிரமிட். அதன் ஒவ்வொரு கல்லின் எடையும் 2டன் முதல் 30 டன் வரை இருக்கிறது. இந்தக் கற்கள் ஒன்றொடொன்று பொருத்தப் பட்டிருப்பது அதிசயக்கத் தக்க அளவில் உள்ளது! இவை அரை மில்லி மீட்டர் - அதாவது ஒரு மயிரிழை கூட இடைவெளி இன்றி இருப்பது அதிசயத்திலும் அதிசயமே!

இந்தக் கற்களால் 30 எம்பயர் ஸ்டேட் பில்டிங்குகள் கட்டலாம்! பிரமிட் பூமியின் ஸ்கேல் மொடலாக உள்ளது. இதனுடைய லாரிட்யுட் (latitude) மற்றும் லோங்கிட்யுட் (longitude) ஆகிய இரண்டும் வெட்டிக் கொள்ளும் இடம் 30 டிகிரி வடக்கு மற்றும் 31 டிகிரி கிழக்கு! இந்த ரேகை மற்ற எல்லா ரேகைகளையும் விட அதிகமான பூமியின் பரப்பின் வழியே செல்கிறது என்பது இன்னொரு அதிசயம்!

பிரமிடின் மொத்தக்கற்களின் எடையான ஐம்பத்தி மூன்று லட்சம் டன்னை 1,000,000,000,000,000 (ten to the power of 15) என்ற எண்ணால் பெருக்கினால் பூமியின் எடை கிடைக்கிறது! பிரமிடின் வெவ்வேறு அளவு விகிதாசாரங்கள் ஆங்காங்கே 'பை' எனப்படும் 3.142 என்ற அளவையும் தங்க விகிதம் என்று கூறப்படும் 1.618 என்ற அளவையும் காண்பிக்கின்றன.

பிரமிடில் உள்ள கிங் சேம்பரின் தெற்கு மற்றும் வடக்கு முனைகள் முறையே பீடா ஓரியன் நட்சத்திரத்தையும், ஆல்ஃபா டிராகோனி நட்சத்திரத்தையும், க்வீன் சேம்பரின் தெற்கு, மற்றும் வடக்கு முனைகள் முறையே சிரியஸ் நட்சத்திரத்தையும், ஓரியன் நட்சத்திரத்தையும் நோக்கி இருக்கின்றன! நமது புராணங்கள் போற்றும் விஸ்வாமித்திர நட்சத்திரம் தான் சிரியஸ்! இதனுடைய மர்மம் பிரமிட் மர்மத்தை விடப் பெரியது!

மாமல்ல புரம் கோவில்

இந்தியாவில் மாமல்ல புரத்தில் உள்ள கோவில் பிரமிட் அமைப்பிலேயே உள்ளது. நம்து கோவில்களின் கோபுரங்களும் கலசங்களும் பிரமிட் அமைப்பிலேயே உள்ளன! ஆகவே பெரும் சக்தி கேந்திரங்களாகப் பிரமிட் இருப்பது உண்மையே! ஸ்ரீ சக்கரத்தின் மூலமான 43 முக்கோணங்களுக்கும் பிரமிடின் கோணங்களுக்கும் பெரும் ஒற்றுமை உள்ளது. ஸ்ரீ சக்கரத்தின் கோடுகள் வெட்டிக் கொள்ளும் புள்ளிகளையும் சேர்த்தால் வருவது 108 கோணங்கள்! ஆகவே ஸ்ரீ சக்கரம் பிரமிடைப் போல 108 மடங்கு அதிக ஆற்றல் வாய்ந்ததாக ஆகிறது!

அமெரிக்க டாலர் மர்மம்

அமெரிக்க டொலரில் (ஒரு டொலர் நோட்டு) பிரமிட் படம் இருப்பது அதன் மர்ம ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்வதற்காகவே! அமெரிக்க டொலரின் இன்றைய செல்வாக்கிற்கு அதிலுள்ள பிரமிடே காரணம்! அதில் உள்ள பூர்த்தியாகாத பிரமிட் அமெரிக்கா எப்போதும் வளர்ந்து கொண்டே இருக்கும் என்பதை உணர்த்துகிறது.

பிரமிடில் உள்ளே வைத்த பொருள்கள் அழுகுவதில்லை. அதில் முறைப்படி தெற்கு வடக்காகக் கீழிருந்து மூன்றில் ஒரு பங்கு உயரத்தில் வைக்கப்படும் பிளேடு தினசரி சார்ஜ் ஆகிஎத்தனைமுறைவேண்டுமானாலும் பயன்படுத்தக் கூடிய அளவு கூர்மையாக இருக்கும்!

அளவுகள் முக்கியம்

பிரமிட் சக்தியைச் சோதிக்க விரும்புவோர் அதன் அளவுகளை அப்படியே கடைப்பிடிக்க வேண்டும். கீழே தந்துள்ள அளவு விவரங்களைக் கவனித்தால் உயரம், அடிப்பக்கம், பக்க அளவு ஆகியவற்றின் விகிதங்கள் தெரிய வரும்! பிரமிடின் அளவு விபரம் (அனைத்து அளவுகளும் சென்டி மீட்டரில்)

உயரம்	அடிப்பக்கம்	பக்கஅளவு
05	7.85	7.47
10	15.70	14.94
15	23.56	22.41
20	31.41	29.89
25	39.27	37.36
30	47.12	44.83

இந்த அளவுகளைக் கவனித்தால் ஒவ்வொரு அலகு உயரத்திற்கும் அதன் அடிப்பக்கம் 1.5708 மடங்காகவும் பக்க அளவு 1.4945 ஆகவும் இருப்பது தெரிய வரும்!

பயன்கள் என்ன?

பிரமிடை அமைத்து உள்ளே தியானம் செய்யலாம். படிக்கலாம். புத்திக் கூர்மை கூடும். வாஸ்து முறைப்படி அமையாத திசைகளில் உள்ள டொய்லட்டின் வெளியே பிரமிடை வைத்துத் தீய சக்திகளை நீக்கலாம். பிரமிட் தொப்பியை அணிந்து வியாதிகளைப் போக்கலாம். பிரமிட் வடிவில் அமைக்கப் பட்டு (சரியான அளவில் தான்) சந்தையில் விற்கும் பிரமிட் பிளேட்டின் மீது தினசரி ஒரு ஐந்து நிமிடம் நின்று வியாதிகளைப் போக்கிக் கொள்ளலாம்?

கம்ப்யூட்டர் மற்றும் எலக்ட்ரொனிக் சாதனங்கள் பழுதுபடாமல் இருக்க அதன் மேல் பிரமிடை வைக்கலாம்! ஆயிரக் கணக்கான அபூர்வங்களைத் தன்னுள்ளே அடக்கி வைத்திருக்கும் பிரமிப்பூட்டும் பிரமிடின் மர்மங்களை விளக்க ஆயிரமாயிரம் பக்கங்கள் எழுத வேண்டும். பலன்களும் அதே அளவு இருப்பது தான் பெரிய அதிசயம்!

- ச.நாகராஜன்

MARKANDAN & CO

SOLICITORS & ESTATE AGENTS

We also Specialise in....

- ▲ ஒப்பந்த தகராறுகள்
- ▲ நுகர்வோர் பிரச்சினைகள்
- ▲ மரண சாசனம் உறுதி தயாரித்தல்
- ▲ Bankruptcy Problems
- ▲ மதுபான அனுமதிகள்
- ▲ கட்டட அனுமதிகள்
- ▲ Cafe அனுமதிகள்
- ▲ House / Flat Purchase or Sale
- ▲ Remortgages
- ▲ Right to Buy
- ▲ Highly skilled migration
- ▲ Power of Attorney
- ▲ Sponsorship for UK Visas
- ▲ Work Permit application
- ▲ Civil Litigation

No Win – No Fee

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்.

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்
விவாக விண்ணப்பங்கள் | அகதி விண்ணப்பங்கள்
14, 10 அல்லது 7 வருட வதிவிட தகமை விண்ணப்பங்கள்
பிரித்தானிய பிரஜாவுரிமை || வீதிப் போக்குவரத்து | சம்பந்தமான வழக்குகள்

கடன் சுமையில் இருக்கிறீர்களா?

உங்கள் வங்கிகளுடன் / நிதி நிறுவனத்துடன் உரையாடி உங்கள் கடன் தொகையைக் குறைப்பதுடன் முடிந்தால் வட்டியையும் நீக்கிவிட முயல்வோம். No Win – No Fee (Subject to assessment)

நீங்கள் உரிய காலத்திற்கு முன்னரே ஈட்டுத் தொகையை மீளச் செலுத்தியதற்காக உங்கள் வங்கி / நிதி நிறுவனம் மேலதிக கட்டணத்தை அறவிட்டுள்ளதா?
உங்களிடமிருந்து மேலதிகமாக கட்டணம் அறவிடப்பட்டதாக நீங்கள் கருதினால் FSAயின் விதிப்படி. அதனை வங்கியிடமிருந்து மீளப் பெற்றுத் தர முயல்வோம்.
No Win – No Fee (Subject to assessment)

அண்மைக் காலத்தில் விநியோகிக்கப்பட்ட மாசுபடுத்தப்பட்ட எரிபொருளால் உங்கள் வாகனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதா? அப்படியானால் எரிபொருள் நிலையத்திலிருந்து நஷ்ட ஈடு பெற்றுத் தருவோம். No Win – No Fee (Subject to assessment)

வரிச்சுமைகளை குறைப்பதற்கும் ஆலோசனைகள் வழங்கப்படும்
No Win – No Fee (Subject to assessment)

845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: **020 8514 8188** Fax: **020 8514 8303**
Web: www.markandan-solicitors.com
Email: mm@markandan-solicitors.com

எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்...

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.
ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.
வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்..

எங்கள் ஊரில் ஒரு வாசிகசாலை

எங்கள் ஊர்களில் கிராமந்தோறும் ஒரு வாசிகசாலை இருக்கும். அவற்றில் தவறாமல் பாரதி விழா நடக்கும் என்று முன்பொரு முறை எழுதியிருக்கிறேன்.

ஆனால் தொடக்கத்தில் எங்கள் ஊரில் வாசிகசாலை இருக்கவில்லை. அருகில் உள்ள பகுதியின் வாசிகசாலைக்குத்தான் போய் வந்தோம். ஆனால் அவர்கள் எங்களை அங்கத்தவர்களாக சேர்த்துக் கொள்ள வில்லை.. எனவே வாசிகசாலையின் பல வசதிகள் எங்களுக்கு மறுக்கப்பட்டன.

முக்கியமாக எங்களில் பலர் மிகுந்த வாசிப்புப் பசி கொண்டவர்களாக இருந்தோம். ஜெகசிற்பியன், நா. பார்த்தசாரதி, அகிலன், சாண்டில்யன் ஆகியோரின் நீண்ட நாவல்களையே ஐந்து, ஆறு நாட்களில் வாசித்து முடித்து விடுவோம். ஆரம்பத்தில் அயலூர்க்காரர்கள் எங்களுக்கும் நாவல்கள் வாசிக்க இரவலாகத் தரத்தான் செய்தார்கள். ஆனால் நாளைடைவில் எங்கள் வேகம் அவர்களுக்கு எரிச்சல் மூட்டியிருக்கவேண்டும். அங்கத்தவர்களாகிய தங்களை விட தங்களின் வாசிகசாலை நூலகத்தின் முழுப்பயனையும் நாங்கள் அனுபவிப்பதாக அவர்கள் கருதியிருக்கவேண்டும். திடீரென்று ஒரு நாள் ஒரு அறிவித்தல் பலகை வாசிகசாலையின் முன் பக்கத்தில் தொங்கியது.

'அங்கத்தவர்கள் அல்லாதோர்க்கு நூல்கள் இரவல் கொடுக்கப்படமாட்டாது.'

நாங்கள் கூனிக் குறுகிப்போனோம். வந்ததுதான் வந்தோம். பேப்பரையாவது வாசித்து விட்டு போவோம் என்று பார்த்தால் பேப்பரின் ஒவ்வொரு தாளையும் (sheet) விரித்து வைத்துக் கொண்டு அக்கறையாக வாசிப்பது போல அவர்கள் பாவனை செய்தார்கள். நாங்கள் வேண்டாத விருந்தாளிகள் என்ற புரிந்து விட்டது. அப்படியே புறப்பட்டு எங்கள் ஊர் கோயில் வீதிக்கு வந்தோம். மற்றப் பொடியன்களுக்கும் தகவல் சொல்லி அனுப்பி வரவழைத்தோம். அரசமரத்தின் அடியில் எங்கள் ஆலோசனைக்கூட்டம் ஆரம்பமாகியது.

'எல்லோர் பேச்சிலும், மூச்சிலும் எங்களுக்கென ஒரு வாசிகசாலை அமைக்கவேண்டுமென்ற எண்ணம் மேலோங்கி இருந்தது. காலந்தாழ்த்தாமல் உடனடியாக நடவடிக்கையில் இறங்கினோம். நாங்கள் கூட்டம் நடத்திய அந்த இடத்திலேயே வாசிகசாலை நிறுவத் தீர்மானித்து மண்வெட்டி, உளவாரம் சகிதம் சிரமதானப்பணியில் குதித்து, இடத்தை சுத்தப்படுத்திக் கொண்டிருக்கும்போது எங்கள் கோயிலின் தர்மகர்த்தா அவிழும் நாலுமுழத்தைச் சரிசெய்து கொண்டே ஓடோடி வந்தார்.

'என்ன செய்கிறீர்கள்?', 'யாரைக்கேட்டு செய்கிறீர்கள்?' என்று இரண்டு கேள்விகளுக்கும் பதில் சொன்னோம். இரண்டாவது கேள்விக்கான பதில்தான் அவருக்கு ஆத்திரமூட்டியிருக்கவேண்டும்.

'யாரைக்கேக்க வேணும்.. இது பொது இடம்' - என்பதுதான் எங்களில் ஒருவர் சொன்ன பதில்.

'தோம்பு உறுதி பார்த்துத்தான் சொல்றீங்களோ' என்று சற்று உறுதியாகச் சொன்னார், தர்மகர்த்தா.

சொன்ன தோரணை எங்களைக் கொஞ்சம் தடுமாற வைத்தது

'இந்த மூலைத்துண்டு எட்டுப் பனையோடை என்ரை பெயரிலைதான் இருக்கு. என்ரை காணியுக்கை கொம்மினிசக் கூட்டம் நடத்த போறீங்களோ' என்றார். இவர் போட்ட சத்தத்துக்கு, நாலைந்து பேர் கையில் தடிகளுடன் ஓடிவருவது தெரிந்தது.

முன்னுக்கு வந்தவர் என் மாமா.. 'யார்ரா அவன்.. சண்டித்தனமோ? காட்டட்டோ விளையாட்டு' என்று கம்பு சுற்றத் தொடங்கி விட்டார். அவர் சீனடி, சிலம்படி தெரிந்தவர் என்று ஊரெல்லாம் கதை இருந்தது. அவர் கையில் இருந்த கம்பு 'விர்..விர்' என்று காற்றைக் கிழித்துச் சுழன்றது.

வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த நாங்கள் ஒருமித்து கரகோசம் செய்தோம். பாராட்டுக்களுக்கும், கைதட்டல்களுக்கும் மசியாத யாரும் இருக்கிறார்களா என்ன?. மாமாவின் கோபம் சட்டென்று இறங்கி விட்டது. ஒரு சின்ன புன்னகையுடன் 'என்னடா பொடியள்.. என்ன நடந்தது.?' என்று எங்களைப் பார்த்துக் கேட்டார். மாமா கட்சி மாறுகிறார் என்று புரிந்து கொண்ட தர்மகர்த்தா ஏதோ இடையில் சொல்லப்புறப்பட, தனது இடது கையாலேயே அவரைப் பேசாமல் நிற்கப் பணித்தார். மாமா ஒரு 'ஒற்றை றோட்டு ஆள்' என்று பிரக்யாதி பெற்றவர், தர்மகர்த்தா பணிந்து போனார்.

நாங்கள் எங்களது கடைசி அஸ்திரத்தையும் பாவித்தோம்.

'மாமா.. நாங்கள் இதிலை வாசிகசாலை கட்ட கூட்டம் நடத்தி உங்களைத்தான் தலைவராகப் போட முடிவு எடுத்திருக்கிறம்'

அதன்பிறகு மாமாவின் முகத்தில் தலைவருக்கான தேஜஸ் தானாகவே வந்த விட்டது.

'என்ன மனுசரப்பா நீங்கள்.. பிள்ளையள் ஒரு நல்ல வேலை செய்யவும் விடமாட்டியளே' என்று கேட்கவும், தர்மகர்த்தாவும், மற்றவர்களும் இடத்தைவிட்டுப் போயே விட்டார்கள்.

'நீங்கள் செய்யிறதைச் செய்யுங்கோடா பொடியள்.. என்ன வேணும் எண்டாலும் என்னட்டை வாங்கோ' என்று அமெரிக்கா மூன்றாம் உலக நாடுகளுக்கு உறுதி மொழி கொடுக்கிற மாதிரி சொல்லிவிட்டுப் போனார், மாமா.

பிறகென்ன.. காரியம் மளமளவென்று நடந்தது. நான்கு மரங்கள் நட்டு, சுற்ற வர அரைச்சுவர் களிமண்ணால் எழுப்பி, மேலே பனம் சலாகைகளில் பொருத்திய சாக்குகளினால் மறைப்பு எற்படுத்தி, நெருக்கமாக அடுக்கிய கிடுகுகளினால் கூரை வேய்ந்து, உள்ளே வெண்புழுதி பரவி, இப்படி இரண்டே நாட்களில் வாசிகசாலை றெடியாகி விட்டது. பொருட்கள் எல்லாம் தலைவரின் (மாமாவின்) உபயந்தான்.

கடந்தது நடந்தது

எழுதுவது: **கே.எஸ்.பாலச்சந்திரன்**

ஏதோ தன்பணத்தில் இவற்றையெல்லாம் வாங்கித் தந்தார் என்று நினைத்து விடாதீர்கள், அவரது வழிகாட்டலில் பலரின் வீடுகளிலும் காணிகளிலும் நாங்கள் 'அபேஸ்' பண்ணியவைதான். பொதுவாக தலைவர்களே இப்படித்தானே?

சங்கக்கடைகாரரின் மகனின் உதவியுடன் அவருக்குத் தெரியாமலே 'தூள் தேயிலை' வருகிற பெட்டி ஒன்று கொண்டு வந்தோம். வீடு வீடாக போய் எங்கள் நூலகத்திற்கு புத்தகங்கள் கேட்டோம்.'பெரிய எழுத்து நல்லதங்காள் கதை', முதலான புத்தகங்களை சிலர் மனமுவந்து தந்தார்கள். பல புத்தகங்கள் பெயர் போன வையாக இருந்தன. அதாவது முன் அட்டை, பின் அட்டைகள் இல்லாமல் எட்டாம் பக்கத்தில் தொடங்கி 88ம் பக்கத்தோடு நின்று விட்டிருந்தன. கதைகளின் முடிவுகளை யூகித்துத்தான் கண்டுபிடிக்கவேண்டும்.

இனி பேப்பர். சிங்கப்பூர் பென்சனியர் கடைக்கு நிறுத்து விற்க வைத்திருந்த கட்டிலிருந்து உருவி நாலு இங்கிலீஸ் பேப்பர் தந்தார், பத்திரமாகத் திருப்பித் தரவேண்டுமென்ற ஒப்பந்தத்துடன். திகதிகளைப்பற்றி நாங்கள் அக்கறைப்படவேயில்லை. எங்கள் வாசிக சாலையில் இங்கிலீஸ் பேப்பரும் இருக்கிறது என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாமே !

தமிழ்ப்பேப்பர் சொந்தமாக வாங்கி வாசிக்கும் இரண்டு ஆசிரியர்களிடமும் போய் கெஞ்சிக்கூத்தாடி, அவர்கள் பின்னேரம் 5 மணிக்கு மேல் வந்து பேப்பரை வீட்டில் வாங்கிக் கொண்டு போகும்படி சொன்னார்கள்.?.

எல்லாம் ஒப்பேறியது. வெகு அடக்கமாக வாசிக சாலையை ஆரம்பித்தோம். நாங்களே எல்லாப் பத்திரிகைகளையும் மாறி, மாறி வாசித்தோம். கயிற்றில் தொங்கிய பழைய ஆனந்தவிகடன், குமுதம் உட்பட ஒன்றையுமே விட்டு வைக்கவில்லை. கும்மிருட்டாகும் வரைக்கும் இருந்து எதிர்காலத்திட்டங்கள் பற்றிக் கதைத்துவிட்டு வீடு சென்று ஏச்சு வாங்கினோம். ஆனாலும் சாதித்து விட்ட பெருமிதம் எங்களிடம் இருந்தது.

அடுத்த நாள் போனபொழுது வாசிகசாலை கதவைக் காணவில்லை. விசாரித்தபொழுது, 'சிவமயம்.. க.செ'என்று எழுதப்பட்டிருந்த அந்த தகரக் கேற்றை அதன் உண்மையான சொந்தக்காரரான தென்னங்காணிக்காரர் கொண்டுபோய் விட்டார் என்று தெரிய வந்தது. உள்ளே எட்டிப் பார்த்தால் எங்கள் தலைவர் புழுதிக்குள் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தார். நன்றாகக்குடித்து விட்டு வந்து படுத்திருக்கிறார் என்று தெரிந்தது. அவரது நாய் 'வீரன்' இங்கிலீஸ் பேப்பருக்கு மேல் சாவதானமாகப் படுத்திருந்தது.

அதற்குப் பிறகு தலைவர்(மாமா) அடிக்கடி மாமியுடன் தகராறு பண்ணிக்கொண்டு வந்து வாசிகசாலைக்குள் படுக்கத் தொடங்கினார்.

நாங்கள் பழையபடி அடுத்த பகுதி வாசிகசாலைக்கு போகத் தொடங்கினோம். அந்த வாசிகசாலைக்காரர் கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டார்கள். நாங்கள்தான் நிமிர்ந்தே பார்ப்பதில்லையே!

தரமான சேவை! நியாமான கட்டணம்!

THURAI & CO

ACCOUNTING

Comprehensive Accounting & Tax

- Personal Tax
- Corporation Tax
- Value Added Tax
- Capital Tax
- Business Advice

Tel: **01865 247 109**

9A, Arnold Road, Oxford, OX4 4BH

PERMA

INTERNATIONAL SHIPPING LTD

உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வாகனங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?

இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும் தரமான பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்

தொடர்புகளுக்கு: சிவம்

45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL
Tel: **020 8646 5222**, Mobile: **07939 550397**

VISION

"Building your business dream"

T: 020 8772 7991
020 8772 7992
F: 020 8772 7993

890 Garratt Lane
London SW17 0NR

Buying or Selling your Business?

Business Transfer & Commercial Financial Specialists

Finance arranged for any type of business

NACFB

ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £25 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: _____

Address : _____

_____

_____

Postcode: _____

Telephone: _____

Email: _____

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £25 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், Oru Paper, 45'B' Crusoe Road, Mitcham, Surrey CR4 3LJ, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

யார் இந்த ரஜினிகாந்த்

பரதேசி

(ஒரு பேப்பருக்காக)



1) 1950 களான காலம். 1952ஆம் ஆண்டில் பராசக்தி திரைப்படம் வெளியானதிலிருந்தே சிவாஜிகணேசன் உச்சத்தில் ஏறிவிட்டிருந்தார். அதுவரை சிவாஜிகணேசன் ஒரு நாடக நடிகராகவே இருந்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரச்சார நாடகங்களில் நடித்துக் கொண்டுமிருந்தார். அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோர் எழுதிய நாடகங்களே அவை.

வி.சி.கணேசன், சிவாஜிகணேசன் ஆனது கூட அண்ணா எழுதிய சிவாஜிகண்ட இந்து ராச்சியம் நாடகத்தில் நடித்த சிறப்பினைப் பாராட்டி ஈ.வே.ரா.பெரியார் கணேசனுக்கு வழங்கிய பட்டந்தான் சிவாஜி. இன்னும், பராசக்தியின் நாயகனான சிவாஜிகணேசனைச் சிபார்சு செய்தவர்கள் அண்ணாவும், கலைஞரும் தான். இதே நாட்களில்தான் எம்.ஜி.ஆர். தமிழ்த்திரையில் தோன்றி நாயகனாவதற்கு கடும் பிரயத்தனப் பட்டுக்கொண்டிருந்தார். அவருக்கு வலுமிக்க கொழுகொம்பு தேவைப் பட்டது. இதே காலத்தில் கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.ஆருக்கு நண்பராக வாய்த்தார்.

சிறுசிறுவேடங்களில்நடித்துக்கொண்டிருந்த எம்.ஜி.ஆர். முதன் முதலாக கதாநாயகனாக கருணாநிதி கதைவசனத்தில் உருவான ராஜகுமாரி திரைப்படத்தில் நடித்தார். எனவே சிவாஜி கணேசனுடன் நண்பனாக இருந்த கருணாநிதி எம்.ஜி.ஆரின் நட்புக் கிடைத்தவுடன் சிவாஜியிடமிருந்து விலகிப் போக ஆரம்பித்தார். அதுமாத்திரம் செய்தாரல்லர்.

எம்.ஜி.ஆரை முதன்மைச் சக்தியாக்க முயன்றார். அரசியலில் அக்கறை அற்றிருந்த எம்.ஜி.ஆரை அண்ணா முன்னிலையில் தி.மு.கவில் உறுப்பினராக்கினார். அத்துடன் ஏற்கனவே தி.மு.க.வில் உறுப்பினராக இருந்த சிவாஜிகணேசனை கலைஞர் தி.மு.க.வில் இருந்து விலக்கி வைக்கத் தொடங்கினார். கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்டிருந்த கலைஞர், சிவாஜிகணேசன் திருப்பதி சென்றதைக் கண்டித்து 'திருப்பதி கணேசா திரும்பிப் போ' என்ற கண்டனச் சுவரொட்டியை சென்னை முழுவதும் ஒட்டி சிவாஜியை தி.மு.கா.விலிருந்து நீக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கினார்.

கருணாநிதியின் கைங்கரியம் இது மாத்திரமல்ல தி.மு.க.வில் பல ஆயிரக்கணக்கான தொண்டர்களைத் திரட்டி, அவர்களுக்குப் பணம் கொடுத்து, எம்.ஜி.ஆர் நடித்த திரைப்படங்களுக்கு அனுப்பி வைத்தார்.அங்கு அவர்கள் செய்யவேண்டிய வேலை எம்.ஜி.ஆர். திரையில் தோன்றுகின்ற போதெல்லாம் கைதட்டி, விசிலடித்து ஆர வாரிக்க வேண்டியது.

இவ்வாறு எம்.ஜி.ஆர் மீதான போலியான மாயையை உருவாக்கி, அது, எம்.ஜி.ஆர் மக்கள் ஆதரவுமிக்கவர் என்னும் நிலையான விம்பத்தை உருவாக்க வழிசெய்தார் கலைஞர். இவ்வாறு சொல்வதானால் எம்.ஜி.ஆரின் மக்கள் ஆதரவு விம்பத்திற்கு கலைஞர் தான் முழுக்காரணமும் என்று சொல்வதாக யாரும் கருதிவிடக்கூடாது. ஆனால், கலைஞர்தான் முதற்காரணம்.

எம்.ஜி.ஆரின் கடும் உழைப்பு, முயற்சி, திட்டமிடல், முகராசி இவைகளும் முக்கிய காரணங்கள்.

இந்த இடத்தில் இன்னுமொன்றினையும் சொல்ல வேண்டும். எம்.ஜி.ஆரால் தி.மு.க. வளர்ச்சி அடைந்தது என்று சொல்வதிலும் பார்க்க, தி.மு.கவால் எம்.ஜி.ஆர் வளர்ச்சி அடைந்தார் என்பதே உண்மை.

2) நடிகர் பிரசாந்த் பற்றிய கதை இது. பிரசாந்தின் தந்தை தியாகராஜனும் ஒரு நடிகர். ஆனால், அவர் நடிகராக அறியப்பட்டதிலும் பார்க்க 'பினான்சியர்' (financier) திரைப்படம் எடுப்பதற்கு பணம் வழங்குபவராகவே அறியப்பட்டவர். தியாகராஜன் முகபாவத்தில் சிறுமாற்றமும் கொண்டுவரத் தெரியாத ஒரு நடிகர். ஆயினும் பாலுமகேந்திரா, பாரதிராஜா போன்ற ஆளுமை மிகுந்த இயக்குனர்களின் திரைப்படங்களில் அவர் நடித்ததற்குக் காரணம் அவர் பினான்சியராக இருந்ததே.

தன்னை நாயகனாக்கி திரைப்படம் தயரித்தால், குறைந்த வட்டிக்கு அல்லது வட்டி இல்லாமலேயே கடன் தருவதாக அவர் சொல்லியிருந்ததே காரணம். தனது மகன் பிரசாந்த்தை நாயகன் ஆக்குவதற்கும் அவர் இதே முறையைப் பயன்படுத்தினார். அதனால், பாலுமகேந்திரா, மணிரத்தினம் போன்றோர் கூட தங்கள் திரைப்படங்களில் பிரசாந்த்தை நாயகனாக்கினார். இத்துடன் தியாகராஜன் மேலும் ஒரு காரியம் செய்தார். சினிமாப் பத்திரிகைகள், சஞ்சிகைகள்,சினிமா நிருபர்கள், என்று எல்லோருக்கும் ஆயிரக் கணக்கில், இலட்சக்கணக்கில் பணத்தை அள்ளி இறைத்தார்.

இலங்கை, சிங்கப்பூர்,மலேசியா ஆகிய நாடுகளையும் அவர் விட்டுவைக்கவில்லை. 1990களின் ஆரம்பத்தில் இலங்கை வீரகேசரியின் வாரவெளியீட்டில் பிரசாந்த் பற்றிய சிறப்புச்செய்திகள் ஒவ்வொருவாரமும் வெளிவரும் ஆயினும், திறமை சற்றுக் குறைந்திருந்ததால் பிரசாந்த்தால் வெற்றி பெறமுடியவில்லை.

3)நடிகர் விஜய் வெற்றி பெற்றுக் கொண்டு இருந்த நேரம் இடையில் ஒரு சறுக்கல்.மற்றும், வெற்றியைத் தக்கவைத்துக் கொண்டிருக்க வேண்டிய கட்டாயம். காரணம், போட்டியாக விக்ரம் மற்றும் அஜித் வந்துவிட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தில் பகவதி, புதியகீதை, யூத் என்ற படங்கள் தோல்வி கண்டன. விஜயின் தந்தை இயக்குநர் சந்திரசேகர் விஜயை இதிலிருந்து மீட்க ஒரு வழி செய்தார். பணங்கொடுத்து ஆயிரக்கணக்கில் விஜயின் இரசிகர்களை வரவழைத்தார்.

அவர்கள் சென்னை நகரமெங்கும் ஊர்வலம் சென்று கோசம் எழுப்பி, விஜயின் கட் அவுட்டுக்கு பாலாபிஷேகம் எல்லாம் செய்தனர். அதுமாத்திரமன்று, விஜய் நடித்த யுத் திரைப்படத்தினைப் பார்க்கச் சென்று, 'ஆல்தோட்டப் பூபதி' என்ற பாடல் காட்சிக்கு எழும்பி ஆடி அந்தப் பாடல்க் காட்சியை மீண்டும் ஒலிபரப்புமாறு (oncemore) ஆய்க்கினை கொடுத்து. அட்டகாசம் செய்தனர். இவையெல்லாம் விம்பத்தை மீண்டும் கட்டியெழுப்புகின்ற முயற்சியாகவே இருந்தது. ஆனால், எல்லோரும் இவர்கள் போன்று இப்படிக் குறுக்குவழியை நாடினார்கள் அல்லர்.

சிவாஜிகணேசன், கமல்காசன், விக்ரம், அஜித் போன்றோர் குறுக்குவழியை நாடாது தங்கள் உழைப்பையும், திற மையையுமே நம்பினார். ரஜினிகாந்த் இந்த இரண்டு வழிகளை நம்பியிருந்தாலும் குறுக்குவழியையும் நம்பினார்.

இன்னும் வரும்...

Sunshine Maintenance & Shop Fitters

Specialists In All Kinds Of Shop Floorings

Shelving

Designed to be totally flexible in accomadating all display requirements for all trades.

Gondolas

Suspended Ceilings



We can find the perfect ceiling to match any style of room or building.

Flooring
(Vinyl, Laminate, and Carpet Tile)

We will work with you to find the right type of flooring.
Our competitive prices and professional staff will ensure you are delighted with the outcome.

Till Counters

Installation is simple and the result is a display that is truly on of a kind.

Lighting & Electrical Air Conditioning



We have unrivalled experience in the installation and maintenance of high quality refrigeration units. We also offer an extensive range of the most up to date established refridgeration equipment, from cold stores to display freezers that can be adapted to suit your needs.

Our clients can be sure that we are at the forefront of, and are utilising the latest technologies in the electrical field.

Fax Us On:
07075 024 507

Call Us On:
07852 352 678 | 07931 335 298
07877 110 537 | 07957 615 535
0707931 335 2

Contact Us At
21 Montacute Rd,
Morden,
Surrey,
SM4 6RJ

ஊரின் வாசம் கல்யாணமாம் கல்யாணம்

ப.வை. ஜெயபாலன்
(ஒரு பேப்பருக்காக)

ஆவணி மாதம் சடங்குகளுக்கு உரிய மாதம். கல்யாணம், வீடு குடிபுகுதல், பூப்பு நீராட்டு, என்று ஊரில் மட்டுமல்ல, புலம் பெயர் வாழ்விலும் ஆவணி என்றால் ஆரவாரம்தான்.

கல்யாண எழுத்து, பொன்னுருக்கு, தாலிகட்டு, என்று நாள் காரியங்களுக்கு சுப முகூர்த்த நாட்கள் அதிகம் உள்ள மாதம்ஆவணி. நாள் நேரம் இவற்றிற்கு பார்ப்பது மரபுதானே.

கனடா, ஐரோப்பிய நாடுகளில் ஒரு எடுப்பான கல்யாணம் என்றால் ஒருவருடத்திற்கு முன்னதாகவே நாள் பார்த்து மண்டபம் பதிவு செய்ய வேண்டிய நிலை.

ஆண்டாண்டாக தொடரும் இந்த சடங்குகளும் சம்பிரதாயங்களும் உறவினர் நண்பர்களின் ஒரு சந்தோச சந்திப்பாக, ஒன்று கூடலாக அமைகின்றன.

ஆனால் ஊர் கல்யாண வைபவங்களில் அன்று கண்ட ஒரு ஆரவாரத்தை, உயிர்த் துடிப்பை இன்று காண முடியவில்லை,. என்ற ஏக்கம் எழுத்தான் செய்கிறது.

அழைப்புக்கு சமூகமளிப்பது,சிற்றுண்டிப் பொதியை சுவைத்தபடி வைபவத்தைப் பார்ப்பது, தாலி கட்டு முடிய முண்டியடித்துக் கொண்டு அறுகு அரிசி போட நிற்பது, மணமக்களுக்கு அன்பளிப்பை வழங்கி புகைப்படம், வீடியோவுக்கு முகம் கொடுப்பது, விருந்தை வரிசையில் நின்று பெற்று உண்டபின் உறவினர் நண்பர்களுக்கு ஒரு கைகுலுக்கலோடு அடுத்த அலுவலுக்கு குடும்பத்தோடு பறப்பது என்பதே ஒரு கல்யாணத்தில் உறவுகளின் பங்களிப்பாகின்றது.

அதி முக்கிய உறவுகள் பால் தப்புதல் முதலான வீட்டுக் காரியங்களுக்கு அழைக்கப்படுவார்கள். எல்லோரையும் அழைக்க வீடு போதாத குறைபாடும் இங்கு உண்டு. சோடனை விருந்துச் சமையல் என்று திருமண ஏற்பாடுகளை இன்று வர்த்தக அமைப்புக்களே செய்து முடித்து விடுகின்றன.

ஆட்பலம் அதிகம் தேவைப்படாமலே வீட்டுக்காரர் ஒரு தடல் புடலான திருமணத்தை செய்து முடித்து விடலாம் என்பதே இங்கு இன்றய நிலைப்பாடு. கொழும்பு அல்லது இந்தியாவில் எம்மவர் சென்று திருமணம் செய்வதிலும் இதே முறை கடைப்பிடிக்கப் படுகின்றது. காலத்துக்கு ஏற்ற மாற்றங்கள் இவை.

முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர்வரை யுத்த சூழலோ இடப்பெயர்வோ ஆரம்பிக்காத அந்த நாட்களில் ஒருவீட்டில் திருமணம் என்றால் ஊருக்கே அது ஆரவாரம்தான்.

வீடுவீடாகச் சென்று அழைப்பதில் இருந்து பலகாரச்சூடு, எழுத்து, பொன்னுருக்கு, வீட்டுக்கு முன்னால் முற்றத்தில் விசாலமான கொட்டகை போட்டு, வெள்ளைகட்டி, அலங்கரித்து, வீட்டுக்கு பின்பாக கிடாரத்தில் கல் அடுப்பில் விருந்து சமைத்து தாலிகட்டு முடிய மூன்றாம் சடங்குக்கு கிடாய் அடித்து விருந்து வைத்து சடங்குகள் தடல்புடலாக நிறைவேறும் வரை கல்யாண வீடு ஆரவாரமாக இருக்கும்.

திருமணம் பெண் வீட்டில் அல்லது கோயிலில் நடக்கும். பனையிலோ அல்லது வீட்டு மரத்திலோ கட்டிய ஒலிபெருக்கி பகல் இரவாகப் பாடி ஊருக்கே திருமணம் நடப்பதை உணர்த்தும்.

பாய், கம்பளம், பாத்திரம் எல்லாம் வீட்டுக்கு வீடு இரவல் கொடுக்கும். திருமணப்பந்தலில் கம்பளம்தான் இருக்கை. சபை வைக்க பந்திப்பாய் என ஒரே அமர்க்களம்.

இரண்டாம்நாள் மாப்பிள்ளை வீட்டில் வைபவம். திருமணத்திற்கு அழைக்கப்படாத அயலவர், உறவினர் கூட 'பொம்பிளை பார்க்கப் போற' முறை அந்த நாட்களில் இருந்தது.

வருவோரில் எல்லோரும் பலகாரம், தேனீர் அருந்தச் சம்மதிக்க மாட்டார்கள்.'அந்த வீட்டில் நாங்கள் செம்பு தண்ணி எடுக்கிறதில்லை' என்ற சாதிக் கௌரவம்.

ஊர் கல்யாண வைபவங்களில் அன்று கண்ட ஒரு ஆரவாரத்தை, உயிர்த் துடிப்பை இன்று காண முடியவில்லை

இதனால் பந்தலில் வைத்து அடுத்தவர் பார்த்திருக்க ஒரு சிலருக்கு பரிமாறுவது அழகல்ல என்பதால் மணப் பந்தலில் ஒருபுறத்தில் தனியாக வெள்ளை கட்டிய ஒரு அடைப்பு. அதற்குள்ளே அழைத்து சென்று தம்வீட்டில் கைநனைக்கக் கூடியவர்களை உபசரிப்பார்கள்.

Loud speaker பின் Sound box ஆகமாறி, மணப்பந்தல் தகரப்பந்தலாகி ஊரிலும் படிப்படியாகப் பல மாற்ற ங்கள். கோலாகலமான திருமண ஊர்வலங்களும் அந்தநாட்களில் கல்யாணத்தில் முக்கிய அம்சம்.

பொருத்தம் பாப்பதும் சில சமநிலைகளைப் பேணுவதும் புலம்பெயர் பேச்சுக் கலியாணங்களிலும் தொடரத்தான் செய்கிறது. ஆனால் காதல் திருமணங்களின் விகிதம் பொருமளவு உயர்ந்துள்ளது.

சாதகப் பொருத்தம் அமையாமல் முப்பது வயதிற்கு மேலும் பெண்கள் வீட்டோடு இருந்த நிலைப்பாடும் அந்தக் காலத்தில் அதிகம்.

ஒரு குடும்பத்து ஆண் பெண் இன்னொரு குடும்ப பெண் ஆணைத் திருமணம் செய்யும் மாற்றுச் சடங்கு முறையும் முறை மச்சாளை திருமணம் செய்யும் முறையும் வழமையில் இருந்து வருகிறது:

நாள் பார்த்து பலகாரச்சட்டி வைப்பது பலகாரச்சூடு, வாழைக்குலை பழுக்கப் போடுதல். இவற்றைப் பழுக்க வைக்க காலை மாலை என்று மூன்று நாட்களுக்கு புகை ஊதுதல், பந்தல் அமைப்பு, பந்தல் சோடனை மரக்கறிக் கொள்முதல், விருந்துச் சமையல் என்று எல்லா ஏற்பாடும் உறவினர் நண்பர்கள் உதவியுடன் அந்தக்காலத்தில் சுமமாகவே நடைபெற்றன.

திருமணச் செலவுக்கும்,சீதனத்திற்கும் உறவுகள் உதவும் முறையும் இருந்தது. மொய் எழுதுதல் என்ற முறையும் ஆளுக்கு ஆள் திருமணச் செலவுக்கு உதவும் ஒரு பணச்சடங்கே. இவ்வாறு கல்யாணங்கள் உறவுச் சமுதாயத்துக்குள் இறுக்கமான ஐக்கியத்தை வளர்த்தன.

திருமணம் ஒரு ஆயிரங்காலத்துப்பயிர். சந்ததி வழியாக உறவுச்சங்கிலிக் கோர்வை தொடர திருமணபந்தம் நன்கு அமைய வேண்டும் என்பதை எமது புலம்பெயர் சந்ததி சிந்தித்து செயற்படுமா?.

கஸ்மீர்ப் பள்ளத்தாக்கு

மாசிலாமணி
(ஒரு பேப்பருக்காக)

இந்தியாவின் கூரை என்று சொல்லப்படும் கஷ்மீர் பள்ளத்தாக்கு அதன் அடைமொழிக்கு ஒப்ப பூமத்திய ரேகையிலிருந்து 2500 மைல் தொலைவில் இமயமலையின் அடிவாரத்தில் தன் வட எல்லையைக் கொண்டுள்ளது. உலகின் சிகரமாகத் திகழும் எவறஸ்ட் சிகரம்கூட இதன் வட எல்லையை விட 400 மைல் தெற்கிலேயே அமைந்துள்ளது.

இந்தியாவின் 28 மாநிலங்களிலும் இரு பகுதிகளினது பெயரை ஒன்ற டக்கிய ஒரே ஒரு மாநிலம் இந்த கஷ்மீரை உள்ளடக்கிய ஜம்மு கஷ்மீர் மாநிலம்தான். உண்மையில் இது இந்துக்கள் செறிந்து வாழும் ஜம்மு, தனி முஸ்லீம்கள் அடங்கிய கஷ்மீர், பௌத்தர்கள் செறிந்து வாழும் லடாக் என்று மூன்று பகுதிகளைக் கொண்டது. மூன்று பகுதிகளைக் கொண்ட ஒரு பிரதேசத்தை ஏன் ஒரு மாநிலமாக வைத்துள்ளார்கள் என்ற கேட்டால் அது அரசியலாகிவிடும். நம்நாட்டில் தமிழ் பேசும் கல்முனைப் பகுதியையும் சிங்களம் பேசும் அம்பாறையையும் எப்படி ஒரு மாவட்டமாக வைத்துள்ளார்களோ அதே காரணம்தான் இங்கேயும் சொல்லலாம்.

ஸ்ரீ என்றால் செல்வம். செல்வ நகரம் என்ற அர்த்தத்தில் உள்ள ஸ்ரீ நகர்தான் கஷ்மீரின் தலை நகரம். இயற்கையின் அழகை விரும்புவர்கள் வாழ்நாளில் ஒருமுறையாவது அங்கு சென்று விடுமுறையைக் கழித்து களிக்க வேண்டுமென்று விரும்பும் பிரதேசமான கஷ்மீர் பள்ளத்தாக்கின் அழகு பற்றி மட்டும் இங்கு பார்ப்போம்.

கடல் மட்டத்திலிருந்து 4000 அடி உயரத்தில் அமைந்துள்ள இந்த நகர் தன்னைச் சுற்றிய மலைகளாலும் பச்சைப் பசேல் என்ற புற்தரைகளாலும், அழகிய மரங்களாலும் உலகப் புகழ் பெற்ற கைப்பணிப் பொருட்களாலும் 10 சதுர மைல்பரப்பளவு கொண்ட தல் ஏரி உட்பட நீலம் கலந்த பச்சை வர்ண ஏரிகளாலும், இதமான காற்றாலும் எல்லோரையும் கவர வல்லது.

பல மக்கள் தண்ணீர் சூழலிலேயே வாழ்கிறார்கள். தண்ணீரிலான பாதைக்கு இரு மருங்கும் பல இடங்களில் வீடுகள் காணப்படுகின்றன. வீட்டை விட்டு ஒருசில அடிகள் வெளியே செல்லவேண்டுமானாலும் வள்ளத்தில்தான் செல்ல வேண்டும். உல்லாசப் பயணிகள் தங்குவதற்கு ஒவ்வொன்று ஆகக் குறைந்தது ஐந்து அறைகளுக்கு குறைவில்லாத தண்ணீரில் மிதக்கும் வீடுகள் ஆயிரத்திற்கு மேல் உள்ளன. இந்த வீடுகளின் ஒரு பக்கம் நிலத்துடன் தொடர்பு உடையதாக இருக்கும். மறுபக்கம் தண்ணீருடன் தொடர்பு உடையதாக இருக்கும். அவற்றுள் தங்குவதன்மூலம் எமக்கு ஒரு புதிய அனுபவம் உண்டாகும்.

அமைதியான மக்கள். களவு என்ற பயம் அங்கு இல்லாவிட்டாலும் பொருட்களை வாங்கும்போது கட்டாயம் பேரம் பேச வேண்டும். கடைகளின் பெயர்ப் பலகைகள் ஆங்கிலத்தில் மட்டும்தான் காணப்படும். இந்த அழகுக்கு மெருகு ஊட்டுவது போல் ஒவ்வொன்றும் 50 அடிக்கு குறை யாத 300க்கு மேற்பட்ட மரத்தூண்களினால் ஆன ஒரே நேரத்தில் 30.000 பேரை உள்ளடக்கக்கூடிய பள்ளிவாசலும், மலையில் அமைந்துள்ள சங்கராச்சாரியார் கோயிலும் அங்கு காணப்படுகின்றது.

30 மைல்களுக்கு அப்பால் உள்ள குல்மாக் செல்வோமானால் உலகிலேயே உயரமான கடல் மட்டத்திலிருந்து 13,000 அடிகளுக்கு மேலுள்ள கேபிள் காரில் செல்லும் புதிய அனுபவத்தைப் பெறலாம். அங்குள்ள பனிச் சறுக்கு வசதி குளிர் காலங்களிற்கூட உல்லாசப் பயணிகளைக் கவருகிறது. குதிரைச் சவாரி செய்பவர்களுக்கு நூற்றுக் கணக்கான குதிரைகள் வாடகைக்கு உண்டு. பயப்படாதீர்கள் குதிரைக்கு பொறுப்பானவர் உங்கள் பாதுகாப்பிலும் அக்கறையாக இருப்பார்.

60 மைல்களுக்கு அப்பால் உள்ள பகலகம் செல்வோமானால், போகும்போதே பாதையில் சிறந்த குங்குமப் பூ தரும் தோட்டங்களையும் அப்பிள் தோட்டங்களையும் பார்க்கலாம். கண்ணைக் கவரும் இந்தப் பள்ளத்தாக்கின் அழகினால் பல உல்லாசப் பயணிகள் கவரப்படுகிறார்கள். இங்கும் பல குதிரைகள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

இமய மலை யாத்திரை செல்லும் இந்துக்களின் புனிதக் குகையான அமரநாத் குகைக்கு செல்ல உள்ள இரு பாதைகளில் ஒன்று இங்குதான் உள்ளது. இதனால் இங்கு கடும் பரிசோதனை உள்ளது. மற்றைய வழி லடாக் பாதையில் உள்ளது.

இச் சுற்றாடல்களில் கண்டு களிக்கக்கூடிய இன்னும் பல இடங்கள் உள்ளன.

Criminal Defence Service
Community Legal Service

S .Satha & Co Solicitors
We are always at your service

PRINCIPAL PARTNER
S .SATHANANTHAN

- Injunction
- Family Law
- Immigration
- Criminal Law
- Conveyancing
- Legal Aid Work

Tel: 020 8471 9484 Fax: 0208471 9485
Emergency No: 07956 288 671 Property Department Fax: 020 8471 1887

376-378 High Stret North, Manor Park, London E12 6PH.
DX:133012 Upton Park2

வாழ்க்கைத் துணை

இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 416-297-4999
Fax: 416-335-6009

பிரான்ஸ்:
Tel: 01 7289 8165

சுவிஸ்:
Tel: 043 5000 277

email: info@orupaper.com

மணமகள் தேவை

1) அவுஸ்திரேலியா பிரஜாவுரிமையுள்ள, computer engineer, 27 years, 5'8",மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1137

2) கனடா பிரஜாவுரிமை, 28 வயது, 5'6", Engineer மணமகனுக்கு, தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1136

3) பிரான்ஸில் வசிக்கும், 29 வயது, 5'11", M Sc பட்டதாரி மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1135

4) பிரான்ஸில் வசிக்கும், 34 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1134

5) லண்டனில் 8 வருடங்களாக வசிக்கும், 42 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1133

6) லண்டனில் 6 வருடங்களாக வசிக்கும், 34 வயது, 5'7",A/L படித்த,மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1132

7) லண்டனில் வசிக்கும், 30 வயது, 5'9", மணமகனுக்கு, பிரஜாவுரிமையுள்ள மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1131

8) In the UK since 1998, an honers Graduate, 35 years, 5'6", seeking a bride with a permanant residence from EU,Aus.or Canada. Ref: 1130

9) பிரான்ஸில் வசிக்கும், 38 வயது, 5'4",மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1129

10) இலங்கையில் வசிக்கும், 33 வயது, 5'9", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1128

11) இந்தியாவில் வசிக்கும், 29 வயது, 5'5", Electronic Technician, மணமகனுக்கு தகுந்த மணமகளை EU, Canadaவில் தேடுகின்றனர். Ref:1127

12) லண்டனில் 7 வருடங்களாக வசிக்கும், 32 வயது, 5'9", பட்டதாரி மணமகனுக்கு, தகுந்த மணமகளை EU வில் தேடுகின்றனர். Ref:1126

13) ஜோர்தானில் படித்த Doctorம், தற்சமயம் UK ல் student visa வில் இருக்கும், 32 வயது, 5'5", மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1125

14) சுவிஸில் 10 வருடமாக வசிக்கும், 36 வயது, 5'6", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1124

15) கொழும்பில் வியாபாரம் செய்யும், 32 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1123

16) யாழ்ப்பாணத்தில் ஆசிரியராக பணிபுரியும், 28 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1122

17) UK ல் வசிக்கும், 31வயது, 5'6", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1121

18) UK ல் நிரந்தரவதிவுடமை உள்ள, 29 வயது, 5'9", மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1120

19) லண்டனில் வசிக்கும்,39 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1119

20) IT graduate, 28 years, 5'11", on permanent stay ,looking for a suitable bride. Ref: 1118

21) Top professional 29 years, '6 ' tall,in the U.K since childhood, seeking a suitable bride. Ref: 1117

22) லண்டனில் வசிக்கும், 33 வயது, 5'6", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref:1116

23) பிரான்ஸ் பிரஜாவுரிமை, 32 வயது, 5'11", படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref: 1115

24) கனடா பிரஜாவுரிமை, 38 வயது, 5'10", CIMA கணக்காளர், விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு, தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1114

25) லண்டனில் 9 வருடம், லண்டன் பட்டதாரி, 32 வயது, 5'4", மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாட்டில் தேடுகின்றார். Ref: 1113

26) Employed in Doha- Qatar, 28 years, 5'8", A/L qualified looking for a bride, an E.U citizen. Ref : 1112

27) In the U.K, with PR, 41 years, 5'7", working as assistant financial controlar, looking for a suitable bride. Ref : 1111

28) லண்டனில் வசிக்கும், 26 வயது, 5'6", O/L படித்த மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாட்டில் தேடுகின்றார். Ref: 1110

29) British citizen, a professional, 41 years, 5'8", a divorcee, looking for asuitable bride. Ref: 1109

30) லண்டனில் 7 வருடங்களாக வசிக்கும், 28 வயது, 5'7", Plumberக்கு, தகுந்த மணமகளை EU வில் தேடுகின்றனர். Ref:1108

31) Canadian citizen, 45 years, 5'10", O/L qualified, looking for a suitable bride. Ref: 1107

32) Top professional 28 years, 5'9", In Europe since childhood, presently in the UK, seeks an educated bride. Ref : 1106

33) Jaffna born 37 years , 5' 6" presently working in Pondicherry, India as a Computer specialist, looking for a suitable bride. Ref: 1105

34) Hotel employee, 31 years, 5'7", in the UK for the last 8 years, looking for a suitable bride with citizenship abroad . Ref :1104

35) Canadian citizen, 31 years, 5'11', A top professional Phd, a Divorcee, looking for a suitable bride. Ref: 1103

36)வவுனியாவை பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'3" உயரமுள்ள A/L படித்த தற்போது மலேசியாவில் வேலை செய்யும் மணமகனிற்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref: 1102

37) Canadian citizen, 44 years, 5'11", educated and well employee, a Divorcee, looking for a suitable bride. Ref: 1101

38) Network Engineer, 7yrs. in the U.K, 29 years, 5'11", seeks a suitable bride.Ref: 998

மணமகன் தேவை

1) வவுனியாவில் அதிபராக கடமையாற்றும், 43 வயது 5'5", மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1473

1) Born in Britain, a Graduate, 26 years, 5'4", seeking a suitable groom, from EU or USA. Ref:1472

2) Born in Britain, Professional Graduate, 33 years, 5'4", seeking a suitable groom, from EU or USA. Ref:1471

3) UK Citizen, 24 years, 5'6", a Professional & a divorcee, seeking a suitable groom. Ref:1470

4) சென்னையில் வசிக்கும் பட்டதாரி, 28 வயது, 5'1", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1469

5) யாழ்ப்பாணத்தில் அரசாங்க உத்தியோகராக இருக்கும், 34 வயது 4'8", பட்டதாரி மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1468

6) யாழ்ப்பாணத்தில் அரசாங்க உத்தியோகராக இருக்கும், 37 வயது 4'5", பட்டதாரி மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1467

7) யாழ்ப்பாணத்தில் வசிக்கும், 43 வயது 5'2", மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1466

8) German citizen, 30 years, 5'3", educated & well employed, looking for a suitable groom. Ref:1465

9) தாயகத்தில் பட்டதாரியாக வேலை செய்யும், 29 வயது, 5'3",மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1464

10) கொழும்பில் கணக்காளராக பணி புரியும், 26 வயது, 5'5", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1463

11) கொழும்பில் வசிக்கும், 24 வயது, 5'5", படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை ஐரோப்பிய நாடுகளில் தேடுகின்றனர். Ref:1462

12) மலேசியாவைச் சேர்ந்தவரும்,40 வயது, 5'5", படித்த, கணவனை இழந்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை கனடா, ஐரோப்பிய நாடுகளில் தேடுகின்றனர். Ref:1461

13) கொழும்பில் வங்கியில் முகாமையாளராக வேலை செய்யும், 41 வயது, 5'1", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1460

14) பிரான்ஸ் பிரஜாவுரிமை, 33 வயது, 5'4", படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை பிரான்ஸில் தேடுகின்றனர். Ref:1458

15) பிரித்தானிய பிரஜாவுரிமை, 36 வயது, 5'1", படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1457

16) கொழும்பில் வசிக்கும், 47 வயது, 5'6", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1456

17) கொழும்பில் வேலை செய்யும், 25 வயது, 5'2", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1455

18) Educated bride, working in Colombo, 24 years, 5'2", seeks a suitable groom in the U.K. Ref:1453

19) கொழும்பில் வேலை செய்யும், பட்டதாரி மணமகள், 32 வயது, 4'10", தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1452

20) Professional bride, 34 years, 5'8", a U.K citizen, looking for a suitable groom. Ref:1451

21) Working in Colombo, 36 years, 5'1", A/L quarlified, seeks a suitable groom in the E.U or Canada . Ref:1450

22) In the U.K, on student visa, doing Ph.D, 34 years, 5'1", looking for a qualified groom in Europe with PR Ref:1449

23) லண்டனில் வசிக்கும், விவாகரத்துப் பெற்ற, 34 வயது, 5'6", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1448

24) Teacher in Jaffna, 34 years, 5'2", looking for a suitable groom. Ref:1447

25) கனடாவில் வசிக்கும், 30 வயது, 5'2", விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு, தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1446

26) கனடா பிரஜாவுரிமையுள்ள, 46 வயது, 5'5",Hotel Management படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1445

27) Govt. servant in Jaffna, 29 years, 5'3", a graduate, seeks a groom in Sri Lanka or abroad. Ref:1444

28) Jaffna born, in the U.K on student visa, 35years, 5'4", A/L qualified seeks a suitable groom. Ref:1443

29) மட்டக்களப்பில் பிறந்து A/L படித்து ஆசிரியையாக கடமை புரியும் 26 வயது 5'1" தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1442

30) கனடாவில் வசிக்கும் பட்டதாரியும் Accountants and Advisors company-யில் வேலை பார்க்கும் 26 வயது 5'5" மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1441

31) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'2" கொழும்பில் வேலை செய்யும் மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1440

32)வவுனியாவை பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'3" மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref: 1439

33) Uni. student, 24 years, 5'4", a British citizen, in the UK since her teenage seeks a suitable groom. Ref:1438

34) Professional 27 years, 5'5",Ten years in the UK, looking for a Professional groom.Ref:1437

35) பிரான்ஸில் வசிக்கும், 35 years, 5'7", A/L படித்த,மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1436

36) பிரான்ஸில் வசிக்கும், 33 years, 5'5", A/L படித்த,மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1435

37) கொழும்பில் தொழில் புரியும், 36 வயது, 5', படித்த,மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref:1434

38) கொழும்பில் தொழில் புரியும் பட்டதாரி, 38 வயது, 5'4", தகுந்த மணமகனை Canadaவில்/ இலங்கையில் தேடுகின்றார். Ref: 1433

39) பல்கலைக்கழக மாணவன், 21 வயது, 5'4", மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref:1432

40) இந்தியாவில் Docterஆக பணிபுரியும், 38 வயது, 5'3", மணமகளுக்கு தகுந்த மணமகனை India/ Sri Lankaவில் தேடுகின்றார். Ref:1430

41) Professional bride, 29 years, 5'4", a German Citizen, in UK for 6 years, a Divorcee, looking for a suitable groom. Ref:1429

42) பிரான்ஸ் பிரஜாவுரிமை, 25 வயது, 5'5', International Affairs Degree Final year, தகுந்த மணமகனை UK/ Canada/Colombo இல் தேடுகின்றார். Ref:1428

43) Professional bride, a Canadian citizen 31 years,5'3',with traditional values seeking a suitable groom Ref: 1427

44) இந்திய மருத்துவ கல்லூரியில் பட்டம் பெற்ற 29 வயது, 5'8", கொழும்பில் வசிக்கும், மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1426

45) Professional bride, born in France, 24 years, 5'4', seeking a suitable groom. Ref:1425

46) டென்மார்க்கில் வசிக்கும், 24 வயது, 5'5', இறுதியாண்டு பல்கலைக்கழக மணமகளுக்கு தகுந்த மணமகனை ஐரோப்பாவில்/ இலங்கையில் தேடுகின்றார்.Ref: 1424

47) Canadian Citizen, 35 வயது, 5',விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு, தகுந்த மணமகனை லண்டனில் தேடுகின்றார். Ref: 1422

48) இலங்கையில் வசிக்கும் B.A பட்டதாரி ஆசிரியை, 33 வயது, 5'3", தகுந்த மணமகனை UK/ Australia/Europe/Canada/swiss இல் தேடுகின்றார். Ref:1421

49) கொழும்பில் வசிக்கும், B.A பட்டதாரி ஆசிரியை, 39 வயது, "5', தகுந்த மணமகனை UK/Europe இல் தேடுகின்றார். Ref:1420

50) வடமராட்சியில் வசிக்கும், பட்டதாரி ஆசிரியை, 27 வயது, 5'4', தகுந்த மணமகனை லண்டனில் /இலங்கையில் தேடுகின்றார். Ref: 1419

51) வடமராட்சியில் வசிக்கும்,39 வயது, 5'5', தகுந்த மணமகனை UK/ Europe/ Canada இல் தேடுகின்றார். Ref:1418

52) இலங்கையில் வசிக்கும்,,ஆசிரியை, 26வயது, 5'3', தகுந்த மணமகனை UK/ Europe/swiss இல் தேடுகின்றார். Ref: 1417

53) Brother living in UK seeks in a suitable groom for his sister 28 years, 5'5', A.Graguate,, well employed Ref: 1416

54) Graguate, 27 years, 5'3' tall,in Britain since childhood,a Bank employee, seeks a suitable groom. Ref: 1415

55) Bride in colombo, 23 years, 5'6' Elocution teacher, looking for a groom in Canada, able to sponsor her. Ref: 1414

மட்டைக் கிளப்பானின்....

அலசுவோம் -40

தேவாங்கும் குறளியும்

சென்ற முறை தேவாங்கு என்னும் நோஞ்சான் மிருகத்தைப்பற்றி எழுதத் தொடங்கினேன். அதன் கண்களில் எப்போதும் கண்ணீர் வழிந்தபடியே இருப்பதால் அடிக்கடி கண்கலங்கும் அல்லது அழுது அரற்றும் பெரியவர்களையோ அல்லது குழந்தைகளையோ தேவாங்குக்கு ஒப்பிடுவது எங்களூர் வழக்கம். இந்தத் தேவாங்கைத் தேடி எங்களூர்ப் பற்றைக் காடுகளில் நானும் எனது நண்பர்களும் வேட்டை நாய்களைப்போல அலைந்திருக்கிறோம்.

அது சரி! தேவாங்குக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? குறளி பற்றி எழுதும்போது தேவாங்கு ஏன் குறுக்கே வந்தது என்று குழம்புவீர்கள் அதனால் மேலும் புதிர் போடாமல் விடயத்துக்கு வருகிறேன்.

அந்த விபரமறியாக் காலத்தில் யாரோ ஒருவர், தேவாங்கைப் பிடித்து அதன் கண்களில் வழியும் கண்ணீரை நமது கண்ணைச் சுற்றிப் பூசிக்கொண்டால் குறளியை நமது கண்ணால் காணும் பாக்கியத்தைப் பெற்றுவிடலாமென்று ஒரு புழுகைப் போட்டுவிட்டார். தேவாங்கிற்கு குறளியை நன்கு தெரியுமாம். அதுவே எங்களைத் தேவாங்கைத் தேடித்திரியும் வேட்டை நாய்களாய் அலைய வைத்தது.

கண்களில் தேவாங்கின் கண்ணீரைப் பூசிக்கொண்டதும். விடிகாலைப் போதில் எருமை மாடுகள் பட்டியாகச் செல்லுமிடத்திற்குப் போய் எங்காவது ஒழிந்துகொள்ள வேண்டுமாம். அப்போது குறளி கையில் ஒரு மந்திரக் கோலுடன் அந்த எருமை மாடுகளில் ஏதாவது ஒன்றில் அமர்ந்து ஜாலியாகச் சவாரி செய்யும் காட்சியைக் காணமுடியுமாம். அதைச் சொன்னவர் அத்தோடு மட்டும் நிறுத்திவிடவில்லை.

குறளியின் கையிலிருக்கும் மந்திரக்கோலைப் பறித்தெடுத்துவிட்டால் அதை வைத்துக்கொண்டு அந்தக் குறளியையே ஆட்டிப்படைத்து விடலாமாம். அது நம் கட்டளைகளுக்குப் பயந்து நாம் சொல்வதையெல்லாம் நிறைவேற்றி வைக்குமாம். மாயாஜால வித்தைக் காரர்களின் கையிலிருக்கும் மந்திரக்கோல் அந்தக்குறளியிடமிருந்து பெறப்பட்டதுதானாம். அது சரி! மந்திரக்கோலை எப்படிப் பறிப்பது? அதற்கும் அவர் சுலபமானவொரு வழியைக் கூறினார். அவரின் அளப்பையெல்லாம் நானும் எனது நண்பர்களும் வாயைப் பிளந்துகொண்டு கேட்டோம். ஏதோ அந்தக்காலத்திலேயே "லோட் ஒப் த றிங்ஸ்" படம் பார்த்த மாதிரியிருந்தது.

எருமை மாடுகள் தண்ணி குடிக்கப் போகும்போது குறளிக்குத் தண்ணீரின் அருகில் செல்லப் பயமாதலால் கரையிலேயே இறங்கி நின்றுவிடும். கையிலிருக்கும் கம்பை அது கீழே வைக்கும் நேரம் பார்த்து ஓடிச்சென்று அந்தக்கம்பை எடுத்துக்கொண்டு தண்ணீருக்குள் இறங்கி விடவேண்டும். குறளியால் நம்மை நெருங்க முடியாது. அது கம்பைக் கொடுத்துவிடும்படி இரந்து கேட்கும். அச்சமயத்தில் அதனிடம் கம்பைத் திருப்பித் தந்தால் நான் கேட்கும்போது உதவி செய்வாயா என்று வாக்குக்கேட்கவேண்டும். குறளி வாக்களித்துவிட்டால் கம்பை முறித்து ஒரு துண்டை வைத்துக்கொண்டு மறுபாதியை குறளியிடம் எறிந்துவிடவேண்டும்.

ஒப்பந்தப் பிரகாரம் கம்பு திரும்பக் கொடுக்கப்பட்டதனால் குறளி ஏமாற்றப்பட்டு நமக்கு அடிமையாகிவிடும். பிறகு அந்த மந்திரக்கோலை வைத்துக்கொண்டு நாம் மாயாஜால வித்தைகளைச் செய்யலாம். ஆட்களின்மீது குறளியை ஏவியும்விடலாமாம்.

சிறு வயதில் மந்திர மாயாஜால வித்தைகளின் மீதிருந்த ஆர்வமும் போதாக்குறைக்கு எங்களது ஊரில் அந்த இரு பெண்களையும் குறளி பிடித்து ஆட்டியதும் எனக்கு நண்பர்களுடன் தேவாங்கைத் தேடித்திரிய வைத்துவிட்டது. தேவாங்கு மயில்கள் வாழும் பெருங் காடுகளிலேயே வாழும்.

ஆனால் எங்களூரில் சிறிய பற்றைகளுடன் கூடிய புன்செய் நிலங்கள்தானிருந்தன. ஆனாலும் முயற்சியில் சற்றும் மனம் தளராது வேதாளத்தைப் பிடிக்கப்போன விக்கிரமன் மாதிரி காடுகளில் அலைய வேண்டியேற்பட்டது. ஆனால் தேவாங்கு எங்களுக்கு அகப்படவேயில்லை. அதனது நல்ல காலம் அது எங்கள் கண்களில் சிக்கவில்லை.

அதனைக் கொழும்பு மிருகக் காட்சி சாலையில்தான் எனக்குத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. பாவம் அது என்னைப் பார்த்துப் பேந்தப் பேந்த விழித்தது. நம்மைப் பார்த்து ரசிக்கட்டுமென்று தானே மிருகங்களை அங்கு பிடித்து வைத்திருக்கிறார்கள். என்னைப் பார்த்த தேவாங்கு நான் குறளியின் சாயலில் இருக்கிறேன் என்று பயந்து விழித்ததோ என நான் சற்றுக் கலவரப்பட்டதாக ஞாபகம்.

அந்தக் காலத்து அம்புலிமாமாக் கதைகளும் மந்திர தந்திரங்களின் மீதிருந்த எங்கள் ஆர்வத்துக்குத் தூபம் போட்டன. அவற்றில் பேய் பிசாசுகளைப் பற்றி எழுதப்பட்டதால் அவற்றை ஆர்வத்தோடு வாசித்த எனது நண்பர்களுக்கும் எனக்கும் குறளி பிடித்ததைவிடக் குறளியைப் பிடிக்கவேண்டுமென்ற பைத்தியம் அதிகரித்துவிட்டது.

போதாதற்கு ஊர்ச் சைவமகா சபையார் வேறு அப்பாவிக் குழந்தைகளைக் கூப்பிட்டுச் சம்பந்தர் இரண்டு வயதில் உமாதேவியாரிடம் ஞானப்பால் உண்டு "தோடுடைய செவியன்" பிரமபுரத் திருப்பதிகம் பாடியதிலிருந்து மாணிக்க வாசகர் நரியைப் பரியாக்கியது வரை போதித்துக் கொண்டிருந்தார்கள். மாணிக்க வாசகர் ஒரு பெரிய மகான். அவர் அப்படியெல்லாம் கதையளந்திருக்கமாட்டார். பிற்காலத்தில் வந்தவர்கள் அவரைப்பற்றி இப்படியெல்லாம் கதைகட்டி விட்டு விட்டார்கள். இந்த சைவ சமய பாடத்தை நானும் போய்க் குந்தியிருந்து கேட்பேன். போகாவிட்டால் சைவசமய பாடப் புத்தகத்தைக் கையில் திணித்து கையில் பிரம்புடன் ஒவ்வொரு சனி ஞாயிற்றுக் கிழமைகளிலும் அம்மா கலைப்பா. ஏலாது என்று அடம்பிடித்துக் கடைசியில் அடிவாங்கி அழுது கொண்டு புத்தகத்தோடு போய்க் குந்தியிருப்பேன்.

ஆனால் பாடத்தில் மனம் ஓடாது. பெரிய பகுத்தறிவு வாதியென்பதாலல்ல. ஆர்வம் முழுக்கக் குறளியிலும் தேவாங்கிலுமிருந்தது. எப்பாடுபட்டாவது மந்திரம் படிக்கவேண்டும், பரமக்குட்டிப் பரிசாரிபோல பெரிய மந்திரவாதியாகவேண்டும், மாயாஜால வித்தை களைக்கற்று அவற்றை ஊரில் செய்துகாட்டிக் காசுழைக்க வேண்டுமென்ற ஆர்வத்தினால் நமது இந்து சமயபாடங்களிலும் புராண இதிகாசப் பேருண்மைகளிலும் இளமையில் ஆர்வ மில்லாமல் இருந்தது. மொத்தத்தில் மந்திரம், குறளி போன்ற வற்றைப் பற்றிய பொய்களும் புரட்டுகளும் சைவசமயப் புராணப்பேருண்மைகளை அறியவிடாமல் தடுத்தன.

நமது சமுதாயத்தில் இந்தப் புராணப் பேருண்மைகள் என்றுகூறப்படும், அதாவதுசமயமெய்ஞானத்திற்கப்பால் நான் மேற்குறிப்பிட்டதுபோல அதாவது குறளிபற்றிய விபரங்களையொத்த மேலதிக பொய்களும் புரட்டுகளும் கலந்த பல நாடோடிச் செய்திகளும் நிறையவுள்ளன.

சிறுவர்களையும் பெரியவர்களையும் ஓர் இருண்ட அறிவுவெளிச்சமற்ற ஏமாளித்தனத்தில் வைத்திருக்கக் கூடிய அத்தகைய விடயங்களைச் சமயம் வரும்போது இத்தொடரில் அவ்வப்போது சிலாகிக்க முடியும். ஆனாலும் வாசகர்களின் விருப்பு வெறுப்புகளை ஆராயாமல் என்பாட்டில் அத்தகைய விடயங்களை எழுதுவது பொருத்தமல்ல.

தொடருவம்

இல்லந்தோறும் இனிய வாழ்வு

மூளைத் திறன் - 2

Dr. பாலேந்திரன்
(ஒரு பேப்பருக்காக)

வயதாகும்போது மூளைத்திறனைப் பாதிக்கும் சில நோய்கள் உள்ளன. அவற்றில் முக்கியமான ஒன்று அல்சைமர் நோய் ALZHEIMER'S DISEASE. இந்நோய் தோன்றுவதற்கு முக்கிய காரணி வாழ்கை முறையும், உணவுப் பழக்கமும் ஆகும். அல்சைமர் நோயினால் பாதிக்கப்பட்டவருக்கு ஆரம்ப காலத்தில் ஞாபகமறதி அதிகமாக காணப்படும். எப்போதும் உற்சாகம் குறைந்து காணப்படுவார். புதியவிடையங்கள் புரிந்து அதற்கான தீர்மான முடிவுகளை எடுக்க முடியாது காணப்படுவார். நாளாந்தம் செய்யும் சிறு காரியங்களைக்கூட செய்ய முடியாது தடுமாறுவார். படிப்படியாக தனது வழமையான இயல்புத் தன்மையிலிருந்தும் மாறுபடுவர். இவ்வாறான மாற்றங்கள் வளர மாதங்கள் அல்லது வருடங்கள் செல்லலாம்.

அடுத்தகட்டமாக நிகழ்கால அல்லது கடந்தகால ஞாபகங்கள் அற்றுப்போகும், தான் இருக்கும் இடம் பற்றிய நினைவும் குறைவடையும் அதனால் தன் வீட்டிலேயே படுக்கை அறை, சமையல் அறை, குளிக்கும் அறை ஆகியவற்றை இனம் கண்டு முறையாக பயன்படுத்த முடியாது போகும். உரையாடும் திறன் குறைந்துவிடும். மற்றவர்களை அச்சத்துடனும் சந்தேகத்துடனும் நோக்குவார்கள். இந்தநிலையில் பாதிக்கப்பட்டவர் அல்சைமர் நோயாளி என நோய் நிர்ணயம் செய்யப்படும்.

1906 ம் ஆண்டு ஜெர்மன் நாட்டு நரம்பியல் மருத்துவ நிபுணரான ALOIS ALZHEIMER என்பவர் அல்சைமர் நோயாளிகளின் மூளையின் குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். இதற்குக் காரணம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மூளைக் கலங்கள் இறந்துவிடும். அப்பகுதியில் beta amyloid plaque எனப்படும் புரதப்பொருள் தோன்றும்.

அல்சைமர் நோயில் பெரும்பாலும் பாதிப்படையும் பகுதி பெருமூளையின் அடிப்பகுதியில் உள்ள HIPPOCAMPUS மற்றும் PARAHIPPOCAMPAL GYRUS ஆகிய பகுதிகளாகும். இப்பகுதிகளே மனிதனின் ஞாபகசக்திக்கும், மனோநிலை மாற்றங்களுக்கும் முக்கிய காரணிகளாகும். மூளையின் பெரும்பகுதி நரம்புத் தெடர்புகள் மூளையின் அடிப்பகுதியை அடைந்து அங்கிருந்து Spinal Gord இனூடாக செல்வதால், இப்பகுதியில் ஏற்படும் நோய்கள் படிப்படியாக முழு நரம்பு மண்டலத்தையும் பாதிக்கும்.

உணவில் அதிக சர்க்கரை சத்தி சேர்த்துக்கொள்பவர்கள், சர்கரைநோய் உள்ளவர்கள், அதிக மது அருந்துபவர்கள் அல்சைமர் நோயில் பாதிகப்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம். மேலும் வழக்கமான Vitamin B, Omega 3 ஆகியவற்றை உண்டு வருபவர்களை இந்நோய் பாதிப்பது மிக குறைவு. நோய் அதிகரிக்கும்போது பாதிகப்பட்டவர் முழுமையாக தனது மூளை, உடல் ஆற்றல்களை இழந்து விடுகிறார்.

மூளைசெயலாற்றுவதற்கு சுமார் 40 வகையான இரசாயனப்பொருட்கள் ENZYMES தேவை. இவற்றில் ACETYLCHOLINE, DOPAMINE, ADRENALIN, NORADRENALIN, GABA SEROTONIN என்பன முக்கியமானவையாகும். உணவில் போதிய அளவு விட்டமின்கள், கனிப்பொருட்கள் இருப்பது மூளை சிறப்பாக தொழிற்பட உதவும். மேலும் எள்ளில் செய்த உணவுகள், சூரியகாந்தி விதை, பூசனி விதை போன்ற வற்றை தினம் உண்பது நன்மைபயக்கும்.

மீன் உணவில் MACKERAL, SALMON, HERRING போன்ற மூளைக்கு நன்மைபயக்கும். உங்கள் மூளைத்திறனை அதிகரிக்கவும் , மூளையை நலமாக வைத்துக்கொள்ளவும் பின்வரும் 10 வழிகளை கடைப்பிடிக்கவும்.

1. உணவில் பெருமளவு மீன், மரக்கறிவகைகளைச் சேர்க்கவும் கொழுப்பு அதிகமான மாமிசங்களை தவிர்க்கவும். 2. தினமும் பழவகைகள், இலைவகைகள் SALAD போன்றன உண்ணவும். 3. தினமும் உணவில் உள்ளி GARLIC சேர்க்கவும். 4. உணவில் மேலதிக உப்பு சேர்க்கவேண்டாம். 5. தேனீர், காப்பி அருந்துவதை கட்டுப்படுத்தவும். 6. மதுவகை தவிர்க்கவும். 7. மனவுளைச்சல் STRESS உங்களை பாதிக்காது காத்துக்கொள்ளவும். 8. புகைபிடித்தலைத் தவிர்க்கவும். 9. பெண்கள் நடுத்தரவயதை அடையும்போது பெண்மைக்கான OESTROGEN, PROGESTERONE கார்மோன்கள் குறை வடைந்தால் அதற்கான மாற்று பரிகாரங்களை உங்கள் மருத்துவரிடம் பெறவேண்டும். 10. தினமும் HIGH STRENGTH MULTIVITAMIN AND MINERAL மாத்திரை உண்டுவருவது பயன்தரும்.

Nathan & Co

Properties
Crime
Immigration
&
Matrimonial

with best compliments

Tel: 020 8542 1805

106 Kingston Road
Wimbeldon,
London SW19 1LX

அறுவைப் பக்கம்

கண்மணி அருள்வாக்கு அம்மணி ஆனது எப்படி!!!

காக்கை உட்கார பனம்பழம் விழுந்த கதைன்னு சொல்லுவாங்க. காக்கையோட குச்சியான காலுக்கும், பழத்தோட வெயிட்டுக்கும் பொருந்துமா தெரியாது ஆனா பாருங்க நமக்கு நல்லாவே பொருந்துது. நம்ம கொஞ்சம் நல்ல மனசுக்காரங்களாச்சா, அதனால எதையுமே பாசிட்டிவா நடக்கட்டும்னு சொல்லிடுவேன்.

அப்படித்தான் நம்ம அம்புஜம் மாமி பேத்திக்கு வரன் தகையாம இருந்தது. மாமி ரொம்ப வருத்தப்பட்டா, நான் சொன்னேன் 'மாமி கூடிய சீக்கிரமே அவளுக்கு வரன் அமையும் பாருங்கோ மாப்பிள்ளை அமெரிக்காவிலேர்ந்து வரப்போறான்னேன். *காசா பணமா நாலு வார்த்தை மாமிக்கு ஆறுதலா* இருக்கட்டுமேன்னு எதையோ சொல்லி வச்சேன். மூணாம் மாசமே மாமி யோட தூரத்து சொந்தக்காரர் யு.எஸ்ல இருந்த தம் புள்ளைக்கு மாமியோட பேத்திய கட்டினுட்டார்.

மாமி என்னைக் கொண்டாடாத குறைதான். தங்கமணி உன் நாக்குல நல்ல வாக்கு சுத்தம் டின்னு சிலாகித்தார். பின்னாளில் மாமி பேத்திய தனியாக் கூப்பிட்டு விசாரிச்சப்ப அவ சொன்னா அந்த பையனுக்கும் அவளுக்கும் 6 மாசமா 'சட்' மூலம் பழக்கமாம். விசாரிந்ததில் மாமி உறவுன்னு தெரிந்ததும் ஓகே சொல்லிட்டாங்களாம்.

இப்படித்தான் போன வருஷம் ரங்கமணியோட நண்பர் தன் பையன் ஒழுங்காப் படிக்கிறதில்ல பாஸ் ஆவாதே சந்தேகம்னு வருத்தப் பட்டார். நானும் என் நல்ல மன சோட 'நீங்க ஒன்னும் கவலைப் படாதீங்க அவன் பர்ஸ்ட் கிளாஸ்ல பாஸ் பண்ணுவான் பாருங்கன்னு சொல்லவும் அவர், 'ஏம்மா கிண்டல் பண்றதுக்கும் ஒரு அளவில்லையான்னுன்னுட்டு' போனவர் ரிசல்ட் வந்ததும் நிறைய ஸ்வீட்டும், சிரிப்புமாக வந்து, 'தாயீ உன் வாக்குல சரஸ்வதிதான் குடியிருக்கா எம் பையன் பர்ஸ்ட் கிளாஸ்ல பாஸாயிட்டான் 'என்றார்.

அடுத்து நம்ம டிடெக்டிவ் வேலைய ஆரம்பிச்சி அவனை மடக்கியபோது, கமல் தான் தனக்கு ஹெல்ப் பண்ணதாச் சொன்னான். 'யாருடா உனக்கு முன்னாடி எக்ஸாம் எழுதுனவனா'

'இல்லை ஆன்டி வசூல் ராஜா கமல். அவர மாதிரியே புளூடூத் போன் வாங்கி காதுல ஹெட் செட் வச்சிக்கிட்டு வெளியில இருந்த என் பிரண்ட் ஆன்சர் சொல்ல சூப்பரா எழுதினேன்' ஆனா என்ன ஒன்னு போனுக்கு,பிரண்டுக்கு எல்லாம் ஒரு 20,000 வரை செலவாயிடுச்சி' என்றானே பார்க்கனும்.

எது எப்படியோ நம்மள மக்கள் அருள் வாக்கு சொல்லும் அம்மணி ரேஞ்சுக்கு கொண்டு போயிட்டாங்க.

இப்படித்தான் போன மாசம் வேலைக்காரி முனியம்மா ஒரு நட்டுல வெத்திலை, பாக்கு, பழம்னு என் முன்னாடி வச்சி, 'தாயீ, ஆத்தா நாலு நாளைக்கு முன்னால 100 ரூபா பணம் காணாமப் போய்ட்டுது எங்கிருக்குன்னு கண்டுபிடிச்சி சொல்லு தாயீங்கறாள். வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு போய் உன் புருஷனக் கேளு என்று விரட்டினேன். மறுநாள் வேலைக்கு வந்தவ ஓடி வந்து கால்ல விழுந்து 'ஆத்தா நீ சொன்ன மாதிரியே எம் புருஷந்தேன் எடுத்துப் போயி குடிச்சிருக்கு' என்றாள். முனியம்மா புருஷன் குடிகாரன் என்பதால் நான் சொன்னது அருள் வாக்காகி விட்டது.

அப்படி இப்படி பலதும் நடக்கவும் நெசமாவே எனக்கு எதோ பவர் இருக்குன்னு ரங்கமணியும் புள்ளைங்களும் முடிவே செய்து விட்டனர். ரங்கமணி அம்மாக்கு E.S.P [extra sensory power] இருக்குன்னு சொல்ல சின்னது வந்து என் தலையை ஆராந்துவிட்டு ஆண்டெனா எங்கப்பா என்றது. தலையில ஈ.டி மாதிரி ஆண்டெனா இருக்கும்னு நெனச்சிட்டது.

மாமியாரோ குல தெய்வம் 'பேச்சியம்மன்'தான் மருமக ரூபத்துல வாக்கு சொல்லுதுன்னுவெள்ளிக்கிழமையானா என்னை மஞ்ச புடவதான் கட்டனும்னு உத்தரவு இல்லயில்ல வேண்டிக் கொண்டாங்க.

முந்தா நாள் சின்னவன் கையில் ஒரு வெத்தலையோடு வந்து 'மம்மீ என் புது இரேசர் காணம் கண்டுபுடிச்சி சொல்லு 'என்றான்.

அதுக்கு வெத்தலை ஏண்டா என்றால் 'மை டியர் பூதத்துல வர்ர மந்திரவாதி மாதிரி மை தடவி கண்டு புடிங்கிறது. சின்னவன் பொருளை பெரியவன் தானே எடுப்பான்னு போய் பிச்சுவோட பையில பாருன்னேன். இரேசர் கிடைத்ததும்

ஐய் மம்மி மை தடவாமலேயே கண்டு புடிச்சிட்டாங்க என்று குதித்தது. நேத்திக்கு பிச்சுமணியோட கு.சுப்புவும் வாலை ஆட்டிக் கொண்டே வந்தது. (கு.சுப்பிரமணி யாருன்னு தெரியாதவங்க சுப்பிரமணிக்கு என்ன இனிஷியல் பதிவு பார்க்கவும்)

என்னப்பா என்றாலும் பிச்சு தயங்கியபடியே 'மம்மீ சுப்பிரமணிக்கு வச்ச பிஸ்கட்டைக் காணோம் தேடிக்குடு' என்றதும் கு.சுப்புவும் வாலை வாலை ஆட்டியபடி என்னிடம் 'கண்டுபிடி' என்றது. கோபப்படுவதா சிரிப்பதா என்று தெரியாமல் பக்கத்து வீட்டுப் பூனை தின்னிருக்கும் போய்ப்பாரு என்றேன்.உண்மையிலேயே பக்கத்து வீட்டுப் பூனைதான் சரப்பிட்டிருக்கிறது.

இந்த சுப்பு முளைச்சி மூணு பல்லு கூட விடவில்லை அதுக்குள்ள பக்கத்து வீட்டு ரோஸியைப் பார்த்து ஜொள்ளு. அதான் பிஸ்கட்டை பூனை தின்னுடிச்சி. இது எங்கு போய் முடியும் ஏன் இப்படி நடக்கிறது என்று குழம்பிப்போனேன்..

நாம் எது சொன்னாலும் வானத்திலிருந்து தேவர்கள் 'ததாஸ்து'ன்னு ஆசிர்வதிப்பார்கள். அதனால் எப்போதும் நல்லதையே சொல்ல வேண்டும் என்று பாட்டி சொன்னது ஞாபகம் வந்தது.

அதற்காக தேவர்கள் ஒரேயடியாய் எங்க வீட்டுப் பக்கத்திலேயே 'டேரா' போட்டு நான் சொல்ற தெல்லாம் பலிக்கச் செய்கிறார்களோ என்று இரவு மொட்டை மாடிக்குப் போய் மேல ஏதாச்சும் 'டெண்ட்' போட்டிருக்கான்னு பார்த்தேன் (நான் வியர்டுன்னு ஏற்கனவே கன்பெஸ் பண்ணிட்டேன்)

இருந்தாலும் இதிலிருந்து தப்பிக்கனும்னா ஏதாச்சும் தப்பா சொல்லி பொய்யாக்கனும்னு முடிவோட இருந்தப்ப எங்க காய்கறி வண்டிக்காரர் சொன்னார்,

'அம்மா அல்லாருக்கும் நல்ல குறி (குறி சொல்ற னாம்!!) சொல்றயே எம் பொண்ணு எப்ப கல்யாணம் ஆயி 'மாமியார்வீட்டுக்குப் போகும்னு சொல்லும்மா. பையந்தான் உருப்படமா சுத்திக்கிட்டிருக்கான் 'என்ற படியே வெற்றிலையை எடுக்க

நான் ஏகக் கடுப்பாகி ,'உங்க பையந்தான் கூடிய சீக்கிரம் மாமியார் வூடு போவான்' என்றேன். பிக்பாக்கெட் வழக்கில் மாட்டி நெசம்மாவே அவர் பையன் 'மாமியார் வூடு' (ஜெயில்) போனதும் அவர் எங்கால்ல விழுந்ததும் தனிக்கதை. யாருக்காவது 'அருள் வாக்கு சொல்லனுங்களா? 'ஏன் மக்கா இப்படி ஓடுறாங்க?

- கண்மணி

மெல்லச் சிரியுங்கள்

வரதன்

எங்கள் வீட்டில் முடிவெடுக்கும் அதிகாரத்தை நானும் குஞ்சியாச்சியும் பகிர்ந்து கொள்வதால் எங்களுக்குள் சண்டையே வருவதில்லை

பகிரதன்

கொஞ்சம் விளக்கமாச் சொல்லுங்கோவன். பிறகு எனக்கும் உதவும்

வரதன்

அது வந்து தம்பி சின்னச் சின்ன விசயங்களிலை குஞ்சியாச்சி தான் முடிவெடுப்பா. அதுகளிலை நான் தலையிட மாட்டன். அது மாதிரி பெரிய பெரிய விசயங்களிலை நான் தான் முடிவெடுப்பன். குஞ்சியாச்சி தலையிட மாட்டா

பகிரதன்

அதென்ன சின்ன விசயம். பெரிய விசயம்

வரதன்

எட அதோடா இப்ப வீட்டுச் சாமான வாங்கிறது, யார் யார் வீட்டுக்குப் போறது, வீட்டு வரவு செலவு, என்ன சமைக்கிறது, ரிவியிலை என்ன நிகழ்ச்சி பாக்கிறது வங்கிக்கணக்கு வழக்கு இப்படியான சின்ன விசயங்களிளை எனலாம் குஞ்சியாச்சி தான் முடிவெடுப்பா.

ஈராக்கிலை அமெரிக்கா படையெடுத்தது சரியா, மகிந்த ஆட்சியிலை இருந்து மங்கள சமரவீரா பிரிஞ்சது சரியா, டேவிட் பெக்கம் அமெரிக்காவிற்கு விளையாடப் போனது சரியா இது மாதிரி பெரிய பெரிய விசயங்களிளை எல்லாம் நான் தான் முடிவெடுப்பன். அவ தலையிட மாட்டா.

- சனியன்

தண்ணியடிச்சால் உடம்புக்கு

நியூயார்க்: மது அருந்துவதால் சிறுநீரக புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புகள் குறைவதாக ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளதாம். சுவீடனின் ஸ்டோக்ஹோம் நகரில் உள்ள கரோலின்ஸ்கா கழகத்தைச் சேர்ந்த டாக்டர் அலிக்ஜா உல்க் மற்றும் அவரது குழுவினர் மேற்கொண்ட ஆய்வில் இந்த முடிவு தெரிய வந்துள்ளதாக இங்கிலாந்திலிருந்து வெளியாகும் ஒரு இதழில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அலிக்ஜா குழுவினர்,

பல்வேறு வகையான மது பானங்களில் ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது மது அருந்துபவர்களிடையே சிறுநீரக புற்றுநோய் ஏற்படுவது குறைவாக இருப்பது தெரிய வந்துள்ளது.

சிறுநீரக புற்றுநோயுடன் இருக்கும் 855 பேரிடமும், புற்றுநோய் இல்லாத 1204 பேரிடமும் ஆய்வுகள் நடத்தப்பட்டன.

இதில் நிலையான அளவுக்கு மது அருந்துவோருக்கு சிறுநீரக புற்றுநோய்க்கான வாய்ப்புகள் மிக மிக குறைவாக இருந்தது தெரிய வந்துள்ளது. அதாவது 200 மில்லி லிட்டர் கொண்ட ஒரு கோப்பை பீர், 100 மில்லி ஒயின், 40 மில்லி மது ஆகியவற்றை அருந்துபவர்கள் இவர்கள். 100 கிராம் பீரில் 2.8 கிராம் அளவுக்கு ஆல்கஹால் உள்ளது. 100 கிராம் சிவப்பு ஒயினில், 9.9 கிராம் ஆல்கஹால் உள்ளது.

பிற மது வகைகளில் 100 கிராம் மதுவுக்கு 32 கிராம் ஆல்கஹால் கலந்திருக்கிறது. மது அருந்தாதவர்களை விட, ஒரு மாதத்திற்கு சராசரியாக 620 கிராம் எத்தனால் அருந்துவோரிடையே சிறுநீரக புற்று நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் 40 சதவீதம் குறைவாக உள்ளதாம்.

வாரத்திற்கு 2 கிளாஸ் சிவப்பு ஒயின் அருந்துவோருக்கு சிறுநீரக புற்றுநோய் ஏற்படுவற்கான வாய்ப்புகள் 40 சதவீதம் குறைவாக உள்ளதாம்.

அதேபோல, சிறுநீரக செல் புற்றுநோய்க்கும், சாதாரண வகை பீர், நடுத்தர வகை பீர், ஸ்டிராங் ஒயின் மற்றும் பிற ஆல்கஹால் அதிகம் உள்ள மது வகைகளை அருந்துவதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் தெரிய வந்துள்ளது.

பீர் மற்றும் ஒயினில் ஆன்டி ஆக்கிடன்ட் மற்றும் ஆன்டி மியுடோஜெனிக் குணம் இருப்பதால்தான் இவற்றை அருந்துவோருக்கு சிறுநீரக புற்றுநோய் வருவது குறைவாக இருப்பதாகவும் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், வேறு என்னென்னவோ வரலாம். அதனால குடிக்காதீங்க..

சப்பறம் பாக்கலாம்

சிறி
ஒரு பேப்பருக்காக

கடந்த ஞாயிறன்று பாரிஸ் மாணிக்க பிள்ளையார் கோவில் தேரிற்கு சென்றிருந்த வேளை ஊர் நண்பனுடன் எங்கள் ஊர் பிள்ளையார் கோவில் திருவிழா ஞாபகங்களை நினைத்து பேசிய பொழுதுதான் வாழ் நாளில் எப்படி எங்கள் சில நகைச்சுவை அனுபவ ங்களை மறக்க முடியாதோ அது போலவே எங்களால் ஏதோ ஒரு சில காரணங்களிற்காக சில நகைச்சுவையான அல்லது வேடிக்கை யான மனிதர்களையும் வாழ் நாளில் மறக்க முடியாது.

அப்படியான ஒரு உறவுக்காரர் எங்கள் ஊரில் இருந்தார். கதைக்காக அவரிற்கு ராசா என்று பெயர் வைக்கிறேன்.

ராசா நன்றாக படித்து புகையிரத ஓட்டுன ராக வேலையும் செய்தார். ஆனால் அவருக்கு தண்ணியிலை கண்டம். நான் சொல்லுறது கடல் தண்ணி ஆத்து தண்ணியில்லை இது அடிக்கிற தண்ணி. இவர் காங்கேசன் துறைக்கு கொழும் பில் இருந்து வரும் இரவு புகையிரதத்தை ஓட்டி வந்தால் மறுநாள் மாலை காங்கேசன் துறையில் இருந்து இவர்தான் கொழும்பிற்கு ஓட்டிசெல்ல வேண்டும் ஆனால் இவர் பகல் முழுதும் மப்படித்து விட்டு எங்காவது படுத்து நித்திரையாகி விடுவார்.

மாலையானதும் புகையிரதத்தை எடுக்க ஆளை காணவில்லையென்று றெயில்வே திணைக்கள ஜீப்பில் அதன் ஊழியர்களும் ஒரு பொலிஸ்காரரும் இவரை தேடி ஊருக்கு வருவார்கள். பிறகு நாங்களும் சேந்து அவர் கோயிலடியிலையா அல்லது கள்ளு கொட்டில் களில் படுத்திருக்கிறாரா என்று தேடிப்பிடித்து ஜீப்பில் ஏற்றி அனுப்பி விடுவோம். ஆனாலும் மறுபடியும் அதே கதைதான்.

கார் பஸ் என்றால் அவசரத்திற்கு யாராவது ஓடலாம் ஆனால் றெயின் ஓட யாரை பிடிக்கிறது என்கிற கவலையில் றெயில்வே திணைக் களமும் இவரை வேலையில் இருந்து நீக்காமல் பொறுமை காத்தது. ஆனாலும் அது நீடிக்கவில்லை காரணம் ஒரு முறை இவர் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த பயணி ஒருவருடன் ஏதோ தகராறாம். அந்த பயணி கோண்டாவில் நிறுத்தத்தில் இறங்க வேண்டியவர் என்பதை தெரிந்து கொண்ட ராசா கோண்டாவில் நிலையத்தில் புகையிரதத்தை நிறுத்தாமல் கொஞ்ச தூரம் கொண்டு போய் இணுவில் தோட்டவெளிப் பக்கமாக நிறுத்தியிருக்கிறார். பயணிகள் எல்லாம் திட்டியபடி இறங்கி போய் பின்னர் பெட்டிசங்களும் இவருக்கு எதிராக போய் விழ பிறகென்ன வேலை காலி.

அதுக்கு பிறகு அவரும் எங்களுடன் கோயிலடி மடத்து உறுப்பினராகி தனது புகையிரதம் ஓட்டிய அனுபவங்களை பிறிஸ்ரல் சிகரற் பிடித்த வாயால் பீடி புகையை இழுத்து விட்டபடி சொல்லிக்கொண்டிருப்பார்.

அப்போது எங்கள் கோயில் திருவிழாவும் தொடங்கியிருந்தது. கோயிலில் இருபத் தைந்து திருவிழாவையும் சிலர் தனிக்குடும் பங்களாகவும் சிலர் சொந்தங்கள் ஒன்று சேர்ந்தும் செய்வது வழமை.

சொந்தங்கள் அல்லது பலர் ஒன்று சேர்ந்து செய்யும் திருவிழாக்கள் பலரும் பணம் சேர்த்து செய்வதால் ஆடம்பரமாக பலகூட்டம் மேளம். பாட்டு கச்சேரி. சின்னமேளம். கலர் கலரா ரியூப்லைற் சோடனைகள் என்று களை கட்டும்.

அது போலத்தான் எங்களது திருவிழா சப்பறத் திருவிழா. நாங்களும் சொந்தங்கள் பலர் சேர்ந்து செய்வதால் திருவிழா களை கட்டும். அதிலை சின்னமேளத்திற்கான மொத்த செலவையும் என்ரை தாத்தா தான் பொறுப்பெடுக்கிறவர். அண்டைக்கு தாத்தா காத்தாலை எழும்பி உடம்பெல்லாம் எண்ணை தேச்சு கொஞ்ச நேரம் வெய்யிலை நிண்டு தோஞ்சு குளிச்சு பட்டுவேட்டி சால்வை கழுத்திலை புலிப்பல்லு சங்கிலியெண்டு மைனர் குஞ்சு மாதிரித்தான் வலம் வருவார்.

மற்ற நாளிலை நாங்கள் என்ன கேட்டாலும் மறுக்காமல் வாங்கிதாற பாட்டி அண்டைக்கு நாங்கள் என்ன கேட்டாலும் புறு புறுத்தபடி எங்களிலை எரிஞ்சு விழுவா. அது ஏனெண்டு எங்களுக்கு அப்ப விழங்கிறெல்லை.

பிறகு நாங்கள் வளருகின்ற காலங் களிலை திருவிழாக்களிலை பொப்இசைக்குழு பிறகு ரி.வி. எண்டு வந்ததாலை சின்ன மேளம் இல்லாமல் போட்டுது. அதிலை எங்களுக்கு சின்னமேளம்பாத்த அனுபவங்கள் இல்லை. அதாலை கனடாவிலை இருக்கிற பாலச்சந்திரன் அண்ணைதான் அதைப்பற்றி எழுத வேணும்.

சரி நான் சப்பறத்துக்கு வாறன். அந்த வருச சப்பறத்திருவிழாவை நாங்கள் எப்பிடி செய்யிறதெண்டு பெரியாக்கள் எல்லாரும் கோயிலடியிலை நிண்டு திட்டம் போட்டு கொண்டு நிக்க ராசா வந்து சொன்னார் இந்த வருசம் தானும் ஊரிலை நிக்கிற படியா எல்லாரும் காசை சேத்து தன்னட்டை தாங்கோ மிச்ச காசை தான் போட்டு இதுவரை செய்யாத மாதிரி விசேசமா செய்து காட்டுறணெண்டார்.

எங்கடை பெருசுகளும் கதைச்சு பேசி ராசாண்ணையிடமே பெறுப்பை குடுக்கிறதா முடிவெடுத்தினம். ஆனாலும் எனக்கு சந்தேகம் தான்.

பிறிஸ்ரலுக்கு வழியில்லாமல் பீடி இழுத்து கொண்டு திரியிறவரிட்டை நம்பி பொறுப்பை குடுக்கினம் ஏதாவது வில்லங்கத்திலை தான் முடியும் என்று யோசித்தாலும் நான் சொல்லி பெருசுகள் கேட்கவா போகினம் எதுக்கு வாயை குடுப்பான் என்று பேசாமல் இருந்து விட்டேன். ஆனாலும் பாதி காசுக்கு மேலை பொறுப்பெடுங்கிறீங்களே உங்களாலை இயலுமா எண்டு ராசாண்ணையிடம் சந்தே கத்தை கேட்காமல் இருக்க முடியவில்லை. அவர் சொன்னார்.

டேய் என்னை வேலையாலை நிப்பாட்டி னதுக்கு றெயில்வே ஒரு தொகை காசு தந்து பாங்கிலை போட்டிருக்கிறன். பார் இந்த முறை இதுவரை காலமும் நடத்தாத மாதிரி திருவிழாவை நடத்திக் காட்டுறன் எண்டார்.

தாத்தா காத்தாலை எழும்பி குளிச்சு பட்டுவேட்டி, சால்வை கழுத்திலை புலிப்பல்லு, சங்கிலியெண்டு மைனர் குஞ்சு மாதிரித்தான் வலம் வருவார்

சரி என்னமோ எங்களுக்கு திருவிழா நடந்தால் சரி முக்கியமா பாட்டு கோஸ்ரி பிடிக்க வேணும் என்று விட்டு போய் விட்டேன். ராசாண்ணை சொன்னபடியே செய்தும் காட்டினார்.

திருவிழா காலங்களிலை மேளம். பாட்டு கச்சேரி. வில்லுப்பாட்டு ஆகியவற்றை நாங்கள் விரும்பின படி ஒழுங்கு பண்ணித்தர அதுக்கெண்டு புறோக்கர்மார் இருப்பினம் அவைக்கு அதிலை ஒரு கொமிசன் இருக்கும்.. ராசாண்ணையும் ஒரு புறோக்கரை பிடித்து முற்பணத்தை கொடுத்து நாலு கூட்டம் மேளம் பாட்டு கோஸ்ரி வில்லுப்பாட்டு காரர் எண்டு வந்து இறங்கி கொண்டே இருந்திச்சினம்.

அது மட்டுமில்லை வழைமையா கோயில் வீதியிலை மட்டும் கட்டிற சப்பறம் அந்த முறை ஊர் சந்தியிலையும் கட்டி கோயிலை சுத்தி ஒரு கிலோ மீற்றர் தூரமளவிற்கு கலர் கலரா லைற்றுகள் எவ்வொரு தந்தி கம்பத்தி லையும் ஸ்பீக்கர் என்டு ஒரு கலக்கு கலக் கிச்சது. ஊர் சனமும் ராசா ஏதோ தண்ணி யடிச்சு குளப்படி பண்ணினாலும் ஆள் விசயகாரன் எண்டு கதைக்க இதையெல்லாம் மேற்பார்வை பாத்தபடி புறோக்கருடன் ராசாண்ணையும் ராச நடை நடந்து திரிந்தார்.

திருவிழா எல்லாம் நல்ல படியாக நடந்து முடிந்து சனமும் போய் இசை நிகழ்ச்சிகள் நடத்தினவையும் போய் சேர்ந்திட்டினம். புறோ க்கர் மட்டும் மடத்திலையே படுத்திருந்தார் காரணம். நிகழ்ச்சிகளை செய்தவர்களிற்கு ஒரு தொகை முற்பணம் மட்டுமே கொடுத்து நிகழ்ச்சிகளை ஒழுங்கு பண்ணுவது வழமை. பின்னர் நிகழ்ச்சி முடிந்து மறுநாள் மீதி பணத்தை திருவிழாகாரரிடம் புறோக்கரே வாங்கி கொண்டு போய் நிகழ்ச்சி செய்தவர்கள் வீடுகளில் போய் கொடுத்து விட்டு தனது பங்கையும் எடுத்து கொள்வார்.

பாம்பின் மேல் பால்கடலில் பள்ளிகொண்ட திருமாலைப்போல ஸ்ரைலாக தலைக்கு ஒரு கையை வைத்தபடி ராசாண்ணை குளக்கட்டில் படுத்திருந்தார்.

இந்த பண கொடுக்கல் வாங்கல்கள் எல்லாம் ஒரு நம்பிக்கையின் அடிப்படையிலே நடைபெறுவது வழமை. மறு நாள் காலை ராசாண்ணை எப்படியும் மீதி பணத்துடன் வந்து விடுவார் என்று காத்திருந்த புறோ க்கர் நேரம் செல்ல செல்ல அக்கம் பக்கம் ராசா ண்ணையை தேடி விசாரிக்க தொடங்கினார்.

நேரம் மதியத்தையும் தாண்டி மாலையாகி விட்டது அதற்கிடையில் ஊரெங்கும் கதை பரவி புறோக்கருடன் நாங்களும் தேடிக் கொண்டிருக்க ராசாண்ணை கோயில் குளத் தடியில் படுத்திருப்பதாக செய்தி வந்ததும் அங்கு ஓடிபோய் பார்த்தோம்.

பாம்பின் மேல் பால்கடலில் பள்ளிகொண்ட திருமாலைப் போல ஸ்ரைலாக தலைக்கு ஒரு கையை வைத்தபடி,ராசாண்ணை குளக்கட்டில் படுத்திருந்தார். புறோக்கர் அவரிடம் போய் தம்பி காத்தாலை இருந்து தேடுறன் எனக்கு பயமும் வந்திட்டிது மிச்ச காசை தந்தால் நான் கொண்டு போய் குடுக்கிறவைக்கு குடுத்திட்டு என்ரை வேலையை பாக்கலாம் எண்டு இழுக்கவும் கோபம் வந்தவராய் துள்ளி எழும்பிய ராசாண்ணை புறோக்கரை பார்த்து என்னவோய் மேளம் பிடிச்சனீர் ஒருதனும் ஒழுங்கா அடிக்கேல்லை சரி பாட்டு கோஸ்ரி தான் நல்ல பாட்டு பாடுமெண்டால் அதுவும் இல்லை அதைவிட சோடிச்ச ரியூப்லைற்றிலை பாதி ராத்திரி எரியேல்லை

அதாலை உங்களுக்கு தாற காசை இந்த குளத்துக்கை எறியலாம் என்றபடி இடுப்பில் இருந்த பேஸ்(பணப்பை) ஒன்றை எடுத்து குளத்தினுள் எறிந்தார். அவர் ஆத்திரத்திலை காசை குளத்திலை எறிஞ்சிட்டார் என்று நினைத்து பதறியபடி புறோக்கர் குளத்துக்கை குதிக்க நாங்களும் சேர்ந்து குளத்தினுள் குதித்துசுழியோடிபணப்பையைஎடுத்துபிரித்து பார்த்தால் வெறும் கடதாசிகள் மடித்து வைக்கப் பட்டிருந்தது.

வெளியே வந்து பார்த்தால் ராசாண்ணையை காணவில்லை ஓடிவிட்டார். பிறகென்ன புறோ க்கரின்ரை பரிதாபத்தை பார்த்து நாங்கள் மீண்டும் பணம் சேர்த்து கொடுத்து அனுப்பி வைத்தோம். அன்று ஓடியராசாண்ணையைபல வருடங்களாக ஊர்ப்பக்கம் காணவில்லை வன் னியில் கண்டதாக யாரோ சொன்னார்கள்.

THIGAN MOTORS
CAR SALES & MOT

உங்கள் வாகனங்களை உத்தரவாதத்துடனும் திறமையுடனும் திருத்திக் கொள்வதற்கும்
புதிய பழைய வாகன உதிரிப் பாகங்களை பெற்றுக் கொள்வதற்கும்
நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

- All Types of Repairs
- We also do Recovery Services
- Computer Diagnosis
- Painting
- Car Electrical
- Bodywork

Open 7 Days a Week
9:00am - 6:00pm (Mon- Sat)

திகன் மோட்டோர்ஸ்

Unit No.65, Barking Industrial Park
Barking, 1G11 OYU
Tel: 0208 594 7272
Mob: 07930 749 325
Email: thileethigan@aol.com

KINGSTONS
SOLICITORS

- குடும்பத்துடன் தஞ்சம், கோருவதற்கு, வசிப்போருக்கு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Home office சட்டத்தின் கீழ் குடும்ப விசா (Family Visa) பெற்றுத் தருவதற்கான ஏற்பாடுகள்.
- உங்கள் விண்ணப்பம் 2001 ஜனவரியிற்கு முன் நிராகரிக்கப்பட்டிருந்தால், Home office இன் புதிய நடைமுறையின் கீழ் விசா பெற்றுத் தருவதற்கான ஒழுங்குகள்.
- புதிதாக தஞ்சம், கோருவோருக்கான, Home office ல் விசாரணை, ஒழுங்குகள் மற்றும் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள்.
- தஞ்சம் நிராகரிக்கப்பட்டோருக்கு மேன் முறையீடு (High court Appeal) மற்றும் (Judicial Review) செய்தல்.
- நீண்ட காலமாக தஞ்ச மனு நிராகரிக்கப்பட்டோருக்கு புதிய மனு. (Fresh Application)
- ஐரோப்பிய நாடுகளில் குடியுரிமையோடு வசிப்போரின் இங்கிலாந்து உறவினர்களுக்கு விசா விண்ணப்பம்.
- சிறைச்சாலையில் வைக்கப்பட்டோர் தொடர்பில் பிணை மனுச்செய்தல் (Bail)
- நாட்டை விட்டு வெளியேற்றப்படுவோர் தொடர்பில், அவர்களைத் தடுத்து நிறுத்தவதற்க்கான மனு மற்றும் விடுவிப்பதற்கான விண்ணப்பம்
- இங்கிலாந்தில் உயர்கல்வி கற்பதற்கான விசா ஏற்பாடுகள். (Student visa)
- இங்கிலாந்தில் நீண்டகாலமாக தொழில் செய்வோருக்கு வேலை புரிவதற்கான விசா (Work Permit) மற்றும் வியாபாரம் செய்வதற்கான விசா (Business visa)

இது தவிர பல்வேறு சட்ட சேவைகளை உங்களுக்கு அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் மூலம் வழங்குவதற்குத் தயாராக உள்ளோம்.

KINGSTONS
SOLICITORS
269 A, Haydens Rd, Wimbledon, London SW19 8TY

Contact: **Chrishanthi Vincent** (LLB Hons)

Tel: **0208 540 0577** Mobile: **0777 5777 188** Fax: **0208 540 7504**

கவிதை

என் அம்மா

ஈரைந்து மாதம் எனை கருவில் சுமந்தாள்— எத்தனை
மாதம் என் கனவைச் சுமந்தாள்?
அன்னைக்கு ஈடாக யாரும் இல்லை— அவள்
அன்பிற்கு இணையாக தெய்வம் இல்லை

கோயிலில் மட்டுமா தெய்வம்? இல்லை
எம் கோவத்தில் மகிழ்வாளே அவள் தான் அன்னை
நாம் நோயுற்ற போதெல்லாம் விழிப்பாள் கண்ணை
தனை வருத்தி நிற்பாளே அவள் தான் அன்னை!

பாலூட்டி வளர்ப்பதால் பிள்ளை இல்லை —நல்ல
பண்போடு வளர்த்தாளே அவள் என் அன்னை
சீரோடு! சிறப்போடு வாழ்க்கை தந்தாள் என்
சிரிப்பில் அவள் அல்லவா மனம் குளிர்ந்தாள்

அன்னையாய் நான் உன்னைப் பெற்றதெல்லாம்
அவனியில் நான் செய்த புண்ணியமே!
கண்ணியமான வாழ்க்கை தன்னை கற்று
தந்தவள் அல்லவா என் அன்னை!

பரீட்சை என்று நான் கண் விழித்தால்!
பக்கத்தில் அவள் அல்லவா துணை இருப்பாள்
சிறு பிள்ளை நான் செய்யும் தவறையெல்லாம்—
இனம்கொள்ளாது அன்போடு எடுத்துரைப்பாள்!

கருணைக்கு வேறேதும் மொழியும் உண்டோ? அந்த
கருத்துக்கு என் தாயே பொருத்தம் அன்றோ?!
எண்ணற்ற கவிதைகள் வடித்தாலும்! கண்ணாக
எனைக் காத்த கருவறையை மறப்பேனோ?!

விண்ணிலே அல்ல! தெய்வங்கள்! மண்ணிலே
எம் கண்முன்னே கோடி உண்டு! பொறுமைக்கு
மறுபெயரே "தாய் தானே! அந்த தெய்வத்தை
நாள் தோறும் போற்றி நிற்போம்!!

- தமிழ்த் தங்கை

அம்மாவைத் தேடி

அம்மா...அம்மா...அம்மா —உன்
பிள்ளை அழைக்கிறேனம்மா....
கண்ணீர்ச் சூட்டில் கரைந்து
இமை கனக்குதே அம்மா...

மடி தேடும் நான் அன்பு மகனல்லவோ...
தலைமுடி கோதும் விரலெங்கு தூரத்திலோ..
தாயே நான் செய்த தவறென்ன சொல்லு..

ஜீவனிரண்டை சுமந்த தாயே
எந்தன் நெஞ்சும் ஈரம்தானே..

அன்பு என்பது ஆதாரம்
தாயினன்போ பெரிதாகும்..

கண்கள் கருணைக்கடலல்லவோ..
எந்தன் உருவம் தந்ததுன்னுடல்லவோ...

கருவறை ஒளியும்
தாய்நெஞ்சு வலியும்
மனதுக்குத்தானே தெரியும்

அன்னையினன்பைப் பிரித்திட நினைத்தால்
பூலோகம் தீயினில் எரியும்...

இடிஇடியென பல இன்னல்கள் நேரிலும்
தாயின்நிழலின் கீழ் மனம் தாங்கும்..

வேரின்றி மரமில்லை
தாயின்றி வாழ்வில்லை
நீயின்றி நானில்லை அம்மா..

தீர்க்கமுடியாத கடனே..
பிறர் தீண்ட முடியாத உறவே..
இனிவரும் பிறவிகள் யாவிலும்..அம்மா
நீயே வேண்டுமென் தாயாக..
நீயே வேண்டுமென் தாயாக..

- விடிவெள்ளி

நான் பெற்ற செல்வம்

கண் மூடியபடி நான் பிறந்தேன்..
அன்று முதல் — தன் கண்களை தூக்கம்
காவு கொள்ள விடாதிருந்து
எனைக் காத்தவள் தாய்.

நான் தவழ தொடங்கினேன்.. தரையோடு தனை
விழுத்தி தானும் சேர்ந்து தவழ்ந்து..
என் தத்தக்கா பித்தக்கா ஊர்தலில் தன் உயிர்
மூச்சை ஒளித்து வைத்தாள்
வளர்ந்தேன்... கங்காரு போல் எனை உடலில்
காவி காவியே தான் மெலிந்தாள்.

கண்ணு இல்ல.....செல்லம் இல்ல....
காகம் சொல்லு...மேகம் சொல்லு.....
அம்மா...என்னை பேச பழக்கினாள்!

காலம் காற்றில் மிதக்கும் தூசி என பறந்தது!
இப்போ அம்மா கை தடியுடன் நடக்கிறாள்....
தட்டு தடுமாறி படியேறி வருகிறாள்..பிள்ளை
சாப்பிட்டு போட்டு படியேன் என்கிறாள்.....

முகம் சிவக்கிறது எனக்கு.....
"உன்னை பேசாம இரு எண்டு சொன்னன்
தானேமா.. பெரிய கரைச்சல்"

எனக்கு பேச கற்று கொடுத்தவளை பேசாமல்
இருக்கச் சொல்லி நன்றி செய்தேன்!

ஓடி வாடி..ஓடி வாடி.... அம்மா உலகத்தை மறந்து..
நடை பழக்கினாள்!
தன் இரு கை நீட்டி அதனிடையுள்
என்னை நடக்கவைத்தாள்..

வாழ்வு புத்தகத்தை கால தூற்று மறுபடியும்..
பக்கம் வேறாய் புரட்டுகிறது
அம்மா தலை வெள்ளி சரிகை கொண்டு நெய்த
கறுப்பு துணி என்றாகிறது!

"பிள்ளை கால் வலிக்குது ஒருக்கா
கடைக்கு போட்டு வாயேன்" இது..அம்மா!
"எனக்கு ஏலாது சும்மா போமா" அது..நான்!

முழங்கால் வலிக்க..
முக்கி முனகி அம்மா நடப்பாள் —கடை திசையில்!
எனக்கு நடை பழக்கியவளை..
பாதம் கொதிக்க நடக்கவிட்டு..
நான் நன்றி செய்தேன்!

திரும்பி வந்தபின்
தேநீர் போடுவாள்— மூக்கு வாங்குமே!
எனக்கு முதல் தந்துவிட்டு.. தான் குடிப்பாள்!
கால் கடுக்க சென்றது அவள்....
களைப்பாறியது ..நான்!

காலம் ஓடும் ...அம்மா ஒருபொழுதில்
காலமாவாள்.. கதறி அழுவேன் ..நான்

அம்மா போயிட்டாளே என்றா? இல்லை இனி
எல்லாம் நானே செய்யவேண்டும் என்றா?

கண்ணீருக்குள்ளும் சுயநலம்.. சீ...
நன்றி கெட்ட நான்!!

- மாலதி

தெய்வமும் நீயே!

அன்புக்கு இலக்கணமும் நீ தான்
தமிழ் பண்புக்குபுதகமும் நீ தான்
கற்புக்கு கண்ணகியும் நீ தான்
பொறுமைக்கு பூமியும் நீ தான்
கண்டிப்பதில் கிட்லரும் நீ தான்
அன்புக்கு அன்னை திரேசாவும் நீ தான்
படி என்று சொல்லவதற்கு ஆசானும் நீ தான்
வீட்டில் இரட்சியத்துக்கு அரசியும் நீ தான்
அன்போடு பேசும் தோழியும் நீ தான்
பூவுலகில் வாழும் உயிர் உள்ள தெய்வமும் நீ தான்

- இலக்கியன்

வந்தவழி

பத்து மாதங்கள் கருவறையில் கருவாய்
பக்குவமாய் எனைச் சுமந்தாள்
உற்றார் பலர் இருந்தும் தினம் தினம்
உன் நினைப்பில் கலங்குகின்றேன்

அம்மா உன்னை நினைத்ததாலே
அனுதினமும் கலங்கும் என் இதயம்
அடிமனதின் துயர் துடைத்து எனை அணைக்க
அருகினிலெ வந்துவிட மாட்டாயா?

சுமைகள் மறந்து உன் மடி சாய்ந்து
சுதந்திரமாய் ஒருமுறை அழவேண்டும்
எனைத் தொட்டுத் தழுவி மகனே என்று
எனை அழைத்து கண்ணீர் துடைக்க வருவாயா?

- கறுப்பி

பயன்

பெற்ற பொழுதினிலே உற்ற பெருவலியும்
இற்றை வரையெனது வெங்குறும்பும் — என்முகங் கண்ட
சொற்ப கணத்தினிலே தான்மறக்கும் என்தாயை
பெற்ற பயனே பயன்

- சுழத்திருமகன்

ஒருமுறை வாருங்கள் பாருங்கள் வேலை
நிறைவென்றால் காசு தாருங்கள்.

A & K MOTORS
Specialist in Diagnostic Tests
Repairs & Servicing
All makes & Models.

குரொய்டன் / மிச்சம் / ரூற்றிங் / ஸ்ரெதம் / மோடன் /விம்பிள்டன் / நியூ மோல்டன் / றெய்ன்ஸ்பாக் / சற்றன். இந்த நகரங்களில் மோட்டார் வாகனம் வைத்திருப்பவர்கள் நம்பி நாட வேண்டிய இடம்.

பரந்த இடம், குறைந்த செலவு, நிறைந்த பயன்

A & K MOTORS
106 HILL RD,
MITCHAM CR4 2H2
ஆனந்தன்:
07985 588 565
குலன்:
07903 742 518

WORCESTER PARK

Mini Market

Off Licence & Grocery

Off Licence
Groceries
News Agent
Pay Point Agent
&
Buspass Agent

தரமான இலங்கை உணவுப் பொருட்கள், கடலுணவு வகைகள் மரக்கறி வகைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்...

PayPoint

Tel: 020 8330 1113

180 Central Road
Worcester Park
Surrey KT4 8HQ

Open 6am to 11pm daily (Sunday 10.30pm)

31ம் நாள் நினைவஞ்சலி

தாயக மண்ணில்
29.01.1949

விண்ணுலகில்
26.07.2007

அமரர் வைரமுத்து அற்புதசிங்கம் (குணம்)

யாழ்ப்பாணம், கோண்டாவிலை பிறப்பிடமாகவும், இலண்டனில் வசித்து வந்தவருமான குணம் என்று அழைக்கப்படும் வைரமுத்து அற்புதசிங்கம் இவ்வுலகை நீத்து இறையுலகெய்திய 31ம் நாள் நிறைவை நெஞ்சம் நிறைந்த துயரத்துடன் நினைவு கூறுகிறோம்.

அவரை இழந்த துயரத்தில் பங்கு கொண்டு அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு வணக்கங்களைத் தெரிவித்த அனைவருக்கும் நன்றிகள்.

அன்னாரின் அந்தியேட்டி 26.08.2007 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்கனம்
மனைவி, அக்கா
மருமக்கள்

57 Hanor Farm Road
Wembley, HA0 1BN
தொடர்புகளுக்கு:
Ravi 07956 989655, 020 8566 9418

லண்டன் மாநகரில் ஓர் புதிய உதயம்!

Ganesh Cash & Carry



உங்களுக்குத் தேவையான Sri Lankan, Indian, English, Groceries ஆபிரிக்கன் உணவு வகைகள் Halal meat மற்றும் Off Licence பொருட்களை. . .

ஒரே இடத்தில் . . .

ஒரே நேரத்தில். . .

பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்.

பிரமாண்டமான Parking வசதிகள் எம்மிடம்.



Call:
Tel: **020 8597 9983**
Mob: **07946 058 177**

Ganesh Cash & Carry
112, Aldborough Road South, Newbury Park London 1G3 8EZ

என் ஞாபகப் பதிவிலிருந்து...

சுதந்திரா
(ஒரு பேப்பருக்காக)

அடிக்கடி வந்து குற்றிய நுளம்பின் கடியைத் தவிர்த்துத் தூங்கி விழித்த போது நேரம் 2 மணியென்றது மணிக்கூடு. அனேகர் எழுந்திருந்தனர். அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் போய்விட வேண்டும் எனும் ஆவல் எல்லோர் முகங்களிலும் அந்தச் சிமினி விளக்கின் ஒளியிலும் தெரிந்தது.....

நேரம் 4 மணியாகிவிட்டிருந்தது. ஒவ்வொருவரும் தங்கள் இயற்கைக் கடன்களை முடிக்கவென எழுந்து போய்க்கொண்டிருந்தனர்.

ஒருவர் நாங்கள் படுத்திருந்த இடத்தை பாதுகாத்திருந்த தகரத்துக்கு பின்னே நின்று கடமை புரிந்ததன் விளைவு பலரது கோபம் அவர்மீது விழ அவர் ஒளிந்த ஒளிப்பு அந்த விடியலில் சிரிப்பாயிருந்தது.

சாரதிகளும் சனங்களும் ஒழுங்கான போக்குவரத்துச் சட்டத்தை ஏற்று பயணிக்கக் கற்றுக் கொண்டுள்ளதும் மலரவிருக்கும் சுதந்திர தேசத்தின் ஒழுங்குகள் எத்தகைய சீர் பெறும் என்பதைக் கூறியது.

அந்தத் தேனீர்க் கடையில் நீண்டிருந்த வரிசையில் நானும் சுதான்ரியும் காத்து நின்றோம். பாரும் இந்த நிலமையளை? ஒரு நாளிலை முடியிற பயணங்கள் எத்தினை கரைச்சலுக்கை நடக்குது.....?

பொழுது புலர்த்து நேரம் 6.40 எல்லோரும் தங்கள் கடமைகள் முடித்து ஒவ்வொரு கொட்டகைக்குள்ளும் வரிசையாய் நின்றனர்.

தமிழீழ காவல்துறையின் அனுமதி பெறுவதற்கான நேரமது. அந்த வரிசையில் நானும் சுதான்ரியும்.... பெடியளிட்டையிருந்து போகிலாம் ஆனா அவங்களிட்டையிருந்து உள்ளுக்கை போறதுதானே பிரச்சனையே.

அங்கு நின்ற பலரது அங்கலாய்ப்பு அது.....அந்த அங்கலாய்ப்புக்கு மத்தியிலும் நகைச்சுவைப் பேச்சுகளும், சிரிப்புகளுமாய் கழிந்து கொண்டிருந்த அந்த நிமிடங்கள்.....அந்தக் காத்திருப்பின் கனத்திலும் பலரை மனம் விட்டுச் சிரிக்க வைத்தது.

துயர்வந்து அள்ளிப்போகிடினும் அஞ்சாது துணிந்து நின்று இன்றுவரை வன்னி மண்ணைத் தங்கள் கைகளிலே சுமந்து நிற்கும் இந்த மக்களின் முகங்களில் துயர் சுமந்த வடுவே மறந்து சிரித்த காட்சி நினைவிலிருந்து அகலாத ஞாபகம்.....

அங்கு எங்களது கொட்டகையில் இருந்த ஒரு அம்மாவின் ஓயாத கதையில் அனேகர் அவர் பக்கம் தங்கள் பார்வைகளைக் கொடுத்து லயித்து நிற்க அந்த அம்மா கேட்டா தேத்தண்ணி ஊத்துங்கோ பிள்ளையள் ஒரே களைப்பாயிருக்கு....என சீனி முடிஞ்சுபோச்சு இந்த நேரம் பாத்து தேத்தண்ணி கேக்கிறியள் என்றாள் அருகிருந்த ஒருத்தி.

அவள் கேட்ட விதம் எல்லோரையும் சிரிக்க வைக்க சுவையான உரையாடல்களும், ஆமிவந்தபோது ஓடிய ஓட்டமும், ஓயாத அலையெழுந்து வன்னி வெல்லப்பட்ட போது அவர்களடைந்த ஆனந்தத்தின் நினைவுபற்றியெல்லாம் நிறைய விடயங்கள் அலசப்பட்டு அரசியலிருந்து பல விடயங்கள் அந்த நிமிடங்களில் பகிரப்பட்டுக் கொண்டிருந்தது.

தமிழீழ காவல்துறையிடமிருந்து அனுமதி பெற்று விளக்கு வைச்சகுளம் பகுதிக்குப் போவதற்கான வாகனத்தில் ஏறுகிறோம். கே.கே.எஸ் வீதியில் பலாலி வீதியில் பயணம் செய்த அந்த நாட்களின் நினைவுகள் வந்து போனது.

முன்னைய அந்தப் பயணங்களின் போது உள்ளே காற்றுப்புக முடியாது இருப்பவர்களே திணறப் பின்னுக்கு போங்கோ பின்னுக்குப் போங்கோவென சனத்தை அடையும் அந்த வாகன உரிமையாளர்கள் கத்தும் கத்தில்லாமல் ஒரு வாகனத்தில் கொள்ளக் கூடியவர்களை மட்டுமே ஏற்றியபடி பயணிக்கவிருந்தன.

இந்தச் சாரதிகளும் சனங்களும் ஒழுங்கான போக்குவரத்துச் சட்டத்தை ஏற்று பயணிக்கக் கற்றுக் கொண்டுள்ளதும் மலரவிருக்கும் சுதந்திர தேசத்தின் ஒழுங்குகள் எத்தகைய சீர் பெறும் என்பதைக் கூறியது.

வெளிநாடுகள் போல் அளவுக்கு அதிகமானோரை ஏற்றவிடாது வாகன ஒழுங்கு விதிகள் அருமையாகக் கடைப்பிடிக்கப்படும் இந்தச் சட்டத்தை உருவாக்கி அருமையான கட்டுப்பாட்டையும் கடைப்பிடிக்க வழியமைத்துத் தந்துள்ள எங்கள் தேசியத்தலைவனை எங்கள் தேசத்தவர் ஒவ்வொருவரும் என்றென்றும் நினைவு கூரப்போம்.

அக்கா போறீங்களா? களைக்கக் களைக்க வந்து கேட்ட அந்த இளைஞனை யாரென நினைவுபடுத்து முன்னம் அவனே தன்னை அடையாளப்படுத்தி வைத்தான்.

ஓ....வன்னியை தரிசிக்க நான் இவனது வாகனத்திலல்லவா போனகிழமை வன்னிக்குப் போனேன். ஓம் போப்போறன். சரியக்கா அடுத்தமுறை வரேக்கை சந்திப்பமக்கா....சொல்லிவிட்டுப் போனான் அவன்.

அதிகம் ஆட்டம், அசைவு, குலுக்கல், பிரட்டல் இல்லாதிருந்த விளக்கு வைச்சகுளமிருந்து வவுனியா நகரம் வரையான அந்தக்கண்டிவீதியில் நீண்டிருந்த வரிசையில் நானும், சுதான்ரியும் அந்தப்பத்தரை மணி இளவெயில் சூட்டிலிருந்து எம்மைக் காத்துக்கொள்ள சுதான்ரி தனது குடையை விரித்து எனக்கும் பிடித்தா.

ஊர்ந்து கொண்டிருந்த வரிசை வேகமெடுத்தது. அருகிருந்த அழிபட்ட மரங்களுக்கு நடுவேயும் , அதற்கப்பாலும் நின்றிருந்தது சிங்களப்படையும் , அதன் அதிகாரமும்....

நெஞ்சு கனக்கிறது நினைவெல்லாம் முல்லை மண்ணிலும் , அந்த முதிசமண்ணில் என் சொந்தமாகிய அனைத்து உறவுகளையும் ஞாபகத்தில் பதிவாக்கியபடி போகிறேன் தாய்மடியே போகிறேன் உன் வாசம் சுமந்தபடி போகிறேன். மீண்டும் வருவேன் தாய்மடியே உன் மடியில் வாழ்வதற்கு.

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர்

இங்கிலாந்துச் செய்திகள்

சீருடையுடன் காட்சிதரும் குடிவரவு அலுவலர்கள்.

இந்த மாத முடிவிற்குள் நாடு பூராவும் குடிவரவு அலுவலர்கள் சீருடையுடன் கடமையில் ஈடுபட உள்ளார்கள். சென்ற மாதமே கற்விக், ஸ்ரான்ரெட் ஆகிய விமான நிலையங்களில் சீருடையுடன் குடிவரவு அலுவலர்கள் கடமையில் இருந்தனர். சீருடை அறிமுகம் பல மாற்றங்களின் ஆரம்பம். மின்னியற் கடவுச் சீட்டுக்களை வாசித்து அவற்றின் உண்மைத் தன்மையைத் திடப்படுத்தல், அவை மாற்ற மோசடிக்கு உள்ளாகவில்லை என்பதை திடப்படுத்துதல் ஆகியவற்றை செய்யும் கருவிகள் உபயோகத்துக்கு வருகின்றன. இந் நடவடிக்கைகள்மூலம் பிரித்தானியாவில் பதிவில் இருக்கும் குற்றவாளிகளின் பயணங்களை உடனுக்குடன் கண்காணிக்க வசதி உண்டாகின்றது.

குடியினால் வலுச் சண்டைக்குச் செல்வோர் கட்டுப் படுத்துப்படுவர்

காவல்துறையினர் பெறும் புதிய அதிகாரத்தின் கீழ் குடிபோதையில் வலுச் சண்டைக்கு செல்வோரை நகர மத்தி, கிராமத்தில் மக்கள் கூடும் இடம் ஆகியவற்றுள் நுழையவிடாது தடுக்கும் அதிகாரம் அவர்களுக்கு கிடைக்கின்றது. கூடிய பட்சம் 48 மணி நேரத்திற்கு அவர்கள் அத்தடையை அமுல் படுத்தலாம். இதை எப்படி எந்தச் சூழலில் அமுல்படுத்த வேண்டுமென்ற ஆலோசனையும் வழிக்காட்டலும் காவல் துறையினருக்கு வழங்கப் பட்டுவிட்டது. இந்த நடவடிக்கைமூலம் பல இப்படியான வலுச் சண்டைகள் நீதிமன்றம்வரை செல்லாது தவிர்க்கப்படுகிறது.

நடக்க இருக்கும் நிகழ்வுகள்

செப்ரெம்பர் 8 சனி

மாலை 5.30 மணி: உலகத்தமிழர் கலை கலாச்சார மன்றத்தின் இன்னிசை மாலை 2007. இடம்: Greenford Assembley hall, Grrenford, Middlesex அனுமதி £7 தொடர்புகளுக்கு: 079 0365 2581

செப்ரெம்பர் 9 ஞாயிறு

மாலை 6.00 மணி: கோண்டாவில் பஞ்சமூர்த்தி குழுவினரின் நாதஸ்வர தவில் இசையரங்கம். இடம்: Dulwich College, Dulwich, London SE21 7LD. தொடர்புகளுக்கு : தெய்வேந்திரன் 07711 225 336 பஞ்சமூர்த்தி: 07944 712 969

செப்ரெம்பர் 9 ஞாயிறு

மாலை 4.30 மணி: நட்சத்திரங்கள் 2007 திருமதி ரஜனி சுரேஸ்குமாரின் மாணவிகளின் ஆட்டம்-பாட்டம்-கொண்டாட்டம். இடம்: Beck Theatre, Grange Road, Hayes, Middlesex. தொடர்புகளுக்கு: சுரேஸ் 07803 596 930, சுதா 07956 825 105, ரஜனி 07796 146 251

செப்ரெம்பர் 15 சனி

மாலை 6.30 மணி: தமிழ் ஆதரவற்றோர் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் லால்குடி இசைப்பள்ளி வழங்கும் திவ்வியாஞ்சலி. இடம்: Winston Churchill Hall, Pinn Way, Ruislip, Middlesex அனுமதி:£10 தொடர்புகளுக்கு: 020 8909 1101, 0208422 3943

செப்ரெம்பர் 16 ஞாயிறு

மாலை 5 மணி முதல் 9.30 மணி வரை : தியாகி திலீபன் நினைவு விழா. கலை, கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம்பெறும்..இடம்: St Matthias Hall, 62 Llanvanor Rad, Barnet, London NW2 2AP

செப்ரெம்பர் 22 சனி

மாலை 6.30 மணி: திருமதி ரேணுகா சிறியானந்தாவின் மாணவி செல்வி மானசி பாலேந்திராவின் வாய்பாட்டு அரங்கேற்றம். இடம்: Beck Theatre, Grange Road, Hayes, Middlesex

Strand Motor Co.
156 - 158 Handcroft Road, West Croydon CR0 3LE
Service
MOT
Parts
Bodywork

Italian Specialists French Specialists Japanese Specialists
தமிழில் பேசி உங்கள் காரின் எந்தத் திருத்த வேலைகளையும் முழுமையாகச் செய்ய வசதி
Tamil Specialist Service Centre Croydon
Monday to Friday 8.00am - 6.30pm Saturday 9.00am - 2.00pm
Tel: 0208 686 0868 Fax: 0208 686 0667

நாளைய தலைவர்களுக்காக
தரணியில் ஒரு தனியிடம்

Edutec
TRAINING CENTRE

"If excellence is what you are craving for, we are here to make it happen. Come and join our classes and see for yourselves."

TUITION CLASSES



For GCE 'AS' & 'A' Levels GCSE (Key stage 4)

Key Stage 3 & Key Stage 2 (11+ examinations for Grammer schools & Independent schools)

www.edutec.org.uk

EDUTEC TRAINING CENTRE
(opposite East Ham tube Station)
Suite 6, Station Chambers
High Street North
East Ham, London E6 1JE

T/F. 020 3200 1006, M: 07950343181
E-mail. edutec@kmgsai.co.uk

- *Classes will be conducted during the weekends & weekdays evenings*
- *Our Tutors are well qualified and have wealth of experience with proven track records.*

சினித்துளி

கரண்

ஏகப்பட்ட வளைவுகள் கொண்டது கரணின் கிராஃப். ஆனால் சமீபகாலமாக ஏறுமுகத்தில் இருக்கும் இந்த கிராஃப் தீ நகரில் சற்று சரிந்து மீண்டும் தலைதூக்க ஆரம்பித்திருக்கிறது. காத்தவராயன் என்ற படத்தின் மூலம் முந்தைய இழப்பை சரி செய்வார் என்ற நம்பிக்கையும் ஏற்படுகிறது. சாராய வியாபாரியாக நடிக்கிற ார் கரண். தொழில்தான் சாராயம் காய்ச்சுவதே தவிர, படத்தில் இவர் ஆண்ட்டி ஹீரோ இல்லையாம். கல்லூரி மாணவியான விதிஷா கரணை காதலிக்கிறார். இடைவேளைக்கு பிறகு திருந்திவிடும் ஹீரோ தொழிலை கைவிடுகிறார். பிறகு என்ன நடக்கிறது என்பதை சுவாரஸ்யமாக சொல்ல போகிறார்களாம். வரட்டும் பாப்பம்...

இயக்கம்

அப்பாவுக்கு புகழ் சேர்க்கும் அடுத்த தலை முறையின் வரிசையில் சிம்பு, தனுஷ், செல்வராகவன், சூர்யா, கார்த்தியை தொடர்ந்து மற்றுமொருவர் அந்த வரிசையில் இடம்பிடிக்க போகிறார், ஹீரோவாக நடித்திருந்தாலும், அவரை எதிர்பார்த்த இடத்தில் வைக்கவில்லை நடிப்பு. இயக்குனர் ஆகவேண்டும் என்பதுதான் மனோஜின் அடிமனசு ஆசை. இதற்காக அமெரிக்கா சென்று தியேட்டர் இன் ஆர்ட்ஸ் படிப்பை முடித்தார். பாரதிராஜா இயக்கிய பல படங்களில் உதவி இயக்குனராக பணியாற்றியிருக்கிறார். இனி தானே இயக்கப்போகிறாராம். என் படத்தில் அப்பாவின் சாயல் இருக்காது என்னும் மனோஜ். தனக்கென்று ஒரு தனித்துவம் வேண்டுமாம். சரி...

ஆயிரத்தில்

ஒருவழியாக ஆயிரத்தில் ஒருவன் படத்தின் படப்பிடிப்பு ஆரம்பம் ஆகிவிட்டது. இது செல்வராகவன் படம் என்பதைவிட பருத்திவீரன் படத்திற்கு பிறகு கார்த்தி நடிக்கும் படம் என்பதுதான் விசேஷம். தாடி மீசையை எடுத்துவிட்டு கல்லூரி மாணவன் போல் நடிப்பார் கார்த்தி என்று எதிர்பார்த்திருந்தவர்கள் மனசை திடப்படுத்திக் கொள்க. இந்த படத்திலும் பருத்தி வீரன் போலவே தோன்றுகிறார் கார்த்தி. என்ன ஒன்று அந்தளவுக்கு அடர்த்தியில்லாத தாடி, அதற்கேற்ற மீசை. இந்த படத்தில் கார்த்தியுடன் ஜோடியாக நடிக்கிறார் கள் ரீமாசென்னும், ஆன்ட்டிரியாவும். இசை யுவன்சங்கர்ராஜா ஒளிப்பதிவு பருத்தி வீரன் ராம்ஜி. வாழ்க வளர்க!!!

செய்திகள்

திரையுலக மார்கண்டேயனை தாத்தாவாக்கி விட்டு ஜோதிகா, குழந்தை பெற்றுவிட்டார். இந்த சந்தோஷத்தை கொண்டாடுகிற அனைத்து ரசிகர்களும் கேட்கிற கேள்வி... இனி ஜோதிகா நடிக்கமாட்டாரா என்பதுதான். இதுபற்றி முடிவு செய்ய வேண்டிய சூர்யா என்ன சொல்கிறார்? நானோ என் குடும்பத்தை சேர்ந்தவங்களோ, அவங்க நடிக்க கூடாதுன்னு சொல்லவே இல்லை. நடிக்க வேண்டாம்ங்கிறது அவங்களே எடுத்த முடிவு. திரும்பவும் நடிக்கணும்னு எப்போது தோணுதோ, தாராளமாக அவங்க நடிக்கலாம். ஆனா, ஏதோ ஒரு கரக்டர்ல நடிச்சுட்டு போறதுல அவங்களுக்கு விருப்பம் இல்ல. மொழி மாதிரி நல்ல கேரக்டரா, சவாலான கேரக்டரா இருக்கணும் என்கிறார். ஆக அவர் நல்ல கரக்டர் கிடைச்சா நடிப்பார்.

சிறுதுளி!

புதிய கட்சியை துவங்கினார் நடிகர் சரத்குமார். பல மாதங்களாக தனிக்கட்சி ஆரம்பிக்க போகிறார் என்று எழுந்த யூகத்திற்கு பதிலளிக்கும் விதமாக அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி என்ற பெயருடன் ஓகஸ்ட் 31-ந் தேதி மாலை சரியாக 6.03 மணிக்கு ரிமோட் கண்ட்ரோல் மூலம் தன் கட்சியின் கொடியை மக்களுக்கு அறிமுகப்படுத்தினார் அவர்.

❖ ❖ ❖

சினிமாத்துறையில் சாதனை படைத்தவர் களுக்கு இந்திய ஆந்திர அரசு சார்பில் ஆண்டு தோறும் என்.டி.ஆர். நினைவு விருது வழங்கப்பட்டு வருகிறது. 2004-ம் ஆண்டுக்கான இவ்விருது அமைப்பாளர் இளையராஜாவுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதாம். களிப்பில் ராஜா

❖ ❖ ❖

காதல் படத்தில் தன் வசீகர பார்வையால் ரசிகர்களை கொள்ளை கொண்ட சந்தியா கண்ணாமூச்சி ஏனடா படத்தின் ரிலீசுக்காக ஆர்வமுடன் காத்துக் கொண்டிருக்கிறார். காதலுக்கு பிறகு என்னுடைய மிகப்பெரிய வெற்றி படமாக கண்ணாமூச்சு ஏனடா அமையும் என்கிறார் சந்தியா.

❖ ❖ ❖

கே.பிரபாகரனின் அன்பாலயா பிலிம்ஸ் பட நிறுவனம் தயாரித்து வரும் படம் பழனியப்பா கல்லூரி. கதாநாயகனாக பிரதீப் என்ற புதுமுகம் அறிமுகமாகிறார். கதாநாயகிகளாக மதுசாலினி, அர்ஜிமான் மொகல், அட்சயா ஆகியோர் நடிக்கிறார் கள். மற்றும் ரோகிணி, ஷகீலா, கஞ்சா கருப்பு, சண்டைக் கோழி ராஜா, தரணி, பாபூஸ் ஆகியோர் நடிக்கிறார்கள்.

❖ ❖ ❖

அடுத்த படத்துக்கு தயாராகிறார் ரஜினி. அதை இயக்குவது மணிரத்னம் என முடிவாகி விட்டது. ஹிட் படங்கள் கொடுத்த நிறைய டைரக்டர்கள் பெயரை பரிசீலித்து இறுதியில் மணிரத்னத்தை தேர்வு செய்தாராம் ரஜினி. தளபதி, நாயகன் சாயலில் கதையை உருவாக்குமாறு அவரிடம் கேட்டுமுள்ளாராம் ரஜினி.

❖ ❖ ❖

'தயா' தொடங்கி 'மொழி' வரை பிரகாஷ்ராஜ் தயாரித்த அனைத்துப் படங்களும் ஓரளவு நேர்மையானவை. பணத்துக்காக அவர் மேற்கொண்ட சூதாட்டமல்ல இப்படங்கள். தயாரித்துக்கொண்டிருக்கும் 'வெள்ளித்திரை'யும் தயாரிக்கப் போகும் 'அபியும் நானும்' படங்களும் இதே ரகம்தான்! சம்பாதிக்கிற பணத்தை நல்ல சினிமாவுக்கு செலவிடும் இவர், பணம் வாங்காமலே ஒரு படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டுள்ளார்.



பாரதிராஜா சொல்றார்...

16 வயதினிலே படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு புதிய பாதை அமைத்துக் கொடுத்தவர் பாரதிராஜா. 30 வருடங்களுக்கு மேலாக சினிமாவில் இமாலய இயக்குனராக வலம் வந்து கொண்டிருக்கும் அவர் இயக்கும் 39-வது படமான பொம்மலாட்டத்திற்கு பலத்த எதிர்பார்ப்பு கிளம்பியுள்ளது.

தமிழ், இந்தி என இரண்டு மொழிகளில் தயாராகும் இப்படத்தில் இந்தி நடிகர் நானாபடேகர் கதாநாயகனாக நடிக்கிறார். அர்ஜுன் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். பொம்மலாட்டம் பற்றியும் அரசியல் பற்றிய தனது எண்ணத்தையும் இங்கே கூறுகிறார் பாரதிராஜா.

பொம்மலாட்டம் சினிமா இயக்குனரை பற்றிய கதை. முதலில் இதை இந்தியில்தான் தயாரிக்க நினைத்தேன். எனவே நானா படேகரை கதாநாயகன ாக்க முடிவு செய்தேன். இசையமைப்பாளராக ஹ்மேஷ் ரேஷாம்மியாவை ஒப்பந்தம் செய்தேன்.

இதுவெல்லாம் கடந்த மார்ச்சில் நிகழ்ந்தது. பிறகுதான் இந்த படத்தை தமிழிலும் எடுப்பது என்று முடிவெடுத்தோம். படத்தின் ஷீட்டிங் எல்லாம் முடிந்து தற்போது போஸ்ட் புரொடக்ஷன் வேலை கள் நடந்து கொண்டிருக்கிறது.

நானாபடேகர் சிந்தனைத்திறன் மிகுந்த ஒரு நடிகர். முதலில் தமிழ் படத்தில் நடிக்க தயக்கம் காட்டிய அவர் பிறகு ஒப்புக்கொண்டார். மிகவும் அர்ப்பணிப்பு உணர்வுடன் இந்த படத்தில் அவர் நடித்தி ருக்கிறார். தனது சொந்த குரலில் அவர் தமிழ் பேசி நடித்தது எங்களை ரொம்ப சந்தோஷப்படுத்தியது.

அடுத்து அர்ஜுனின் நடிப்பைப்பற்றிக் குறிப்பிட வேண்டும். இரண்டு பேரும் அற்புதமான திறமையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். கமலுக்கும், பாலச்சந்தருக்கும் படத்தை போட்டுக் காண்பித்தேன். இரண்டு பேரும் என்னை வெகுவாக பாராட்டினார்கள். இரண்டு பேரும் மிகச்சிறந்த டெக்னீஷியன்கள்.

எனது அடுத்த படமான குற்ற பரம்பரை ஒரு கிராமிய படைப்பு. மிகப்பெரிய பட்ஜெட்டில் இந்த படம் தயாராகும். சமீபத்தில் வந்த கிராமிய படங்களான 'காதல்', 'தவமாய் தவமிருந்து', 'பருத்திவீரன்' உள்ளிட்ட அனைத்தையும் ரசித்தேன். குறிப்பாக பருத்திவீரன் என்னை ரொம்பக் கவர்ந்தது.

ஒரு காலத்தில் நான் காங்கிரஸ் அனுதாபியாக இருந்தேன். ஆனால் விருது நகரிலேயே காமராஜர் தோற்கடிக்கப்பட்ட பிறகு அரசியல் மீது வெறுப்பு ஏற்பட்டு இனி அரசியலில் நுழையக்கூடாது என்று தீர்மானித்தேன். சினிமாவிலேயே முழு திருப்தி உடையவனாக இருக்கிறேன் என்கிறார் பாரதிராஜா.

- மாலைமலர்

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.

BIRAVENAAS
South Indian & Sri Lankan Restaurant and Bar

சிறிய வைபவங்களுக்கு ஏற்ற 40 இருக்கைகள் கொண்ட வசதிகளுடன் கூடிய உணவகம்... குடும்பத்துடன் வந்து சுடச்சுட உணவுகளைச் சுவைத்து மகிழுங்கள்.....

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு
Buffet on Saturday & Sunday for £5.50
10% Discount for all Take Away
25 பவுண்க்கு மேல் வாங்கினால் 1 Wine Bottle Free

Open Daily:
Monday-Thursday
12pm to 11.30pm

Friday to Sunday
12pm to 12pm

Free Delivery*

Tel: 020 8695 8625
* Orders over £12 within 3 miles 6-10pm
1 Sandhurst Market, Sandhurst Road, Catford, London SE6 1DL

சினிமா

தமிழக சினிமா விருதுகள் 2005-2006

தமிழக அரசின் திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. சந்திரமுகி படத்தில் சிறப்பாக நடித்ததற்காக ரஜினிகாந்த்திற்கும், வேட்டையாடு விளையாடு படத்தில் நடித்த கமல்ஹாசனுக்கும் சிறந்த நடிகர்களுக்கான விருதுகள் கிடைத்துள்ளன. இதேபோல ஜோதிகா, பிரியா மணி ஆகியோருக்கு சிறந்த நடிகைகளுக்கான விருது கிடைத்துள்ளது.

2005 மற்றும் 2006ம் ஆண்டுகளுக்கான சிறந்த திரைப்படக் கலைஞர்களுக்கான தமிழக அரசின் விருதுகள் அண்மையில் அறிவிக்கப்பட்டன. இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம்.

விருது பெறும் கலைஞர்கள் – 2005

சிறந்த நடிகர் – ரஜினிகாந்த் (சந்திரமுகி)
சிறந்த நடிகை – ஜோதிகா (சந்திரமுகி)
சிறந்த வில்லன் – பிரகாஷ் ராஜ்.
சிறந்த நகைச்சுவை நடிகர் – விவேக்.
சிறந்த இயக்குநர் – ஷங்கர்.
சிறந்த படங்கள் – சந்திரமுகி, கழுகு.
2வது இடம் – அந்நியன்.
3வது இடம் – தவமாய் தவமிருந்து.
சிறந்த குணச்சித்திர நடிகர் –ராஜ்கிரண்.
சிறந்த இசையமைப்பாளர் – ஹாரிஸ் ஜெயராஜ்.

2005ம் ஆண்டுக்கான சிறந்த நடிகர் களுக்கான சிறப்புப் பரிசை விஜய், சூர்யா பெறுகிறார்கள். சிறந்த நடிகைக்கான சிறப்புப் பரிசை மீரா ஜாஸ்மின் பெறுகிறார்.

விருது பெறும் கலைஞர்கள் – 2006

சிறந்த நடிகர் – கமல்ஹாசன்
சிறந்த நடிகை – ப்ரியா மணி
சிறந்த நகைச்சுவை நடிகர் – வடிவேலு.
சிறந்த இயக்குநர் – திருமுருகன்.
சிறந்த படம் – வெயில்.
2வது இடம் – பருத்தி வீரன்.
3வது இடம் – திருட்டுப் பயலே.
சிறந்த குணச்சித்திர நடிகர் – நாசர்.
சிறந்த வில்லன் – பசுபதி.
சிறந்த இசையமைப்பாளர் – யுவன் ஷங்கர் ராஜா.

2006ம் ஆண்டுக்கான சிறந்த நடிகர்களுக் கான சிறப்புப் பரிசை கார்த்தியும், பக்ருவும் பெறுகிறார்கள். சிறந்த நடிகைக்கான சிறப்புப் பரிசு சந்தியாவுக்குக் கிடைத்துள்ளது.

கலை வித்தகர் விருதுகள் – 2006

அண்ணா விருது
– ராமநாராயணன்.

கலைவாணர் விருது
– விவேக்.

ராஜா சாண்டோ விருது
– தங்கர் பச்சான்.

பாவேந்தர் பாரதிதாசன் விருது – கவிஞர் தாமரை.

எம்.ஜி.ஆர். விருது
– அஜீத்.

கவியரசு கண்ணதாசன் விருது
– பா.விஜய்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் விருது
– விக்ரம்.

தியாகராஜ பாகவதர் விருது
– டி.எம்.சௌந்தரராஜன்.

சென்னையில் நடைபெறும் விழாவில் முதல்வர் கருணாநிதி விருதுகளை வழங்கி கலைஞர்களைக் கௌரவிப்பார் என தமிழக அரசுச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

- சம்பார் வடையிடம் இருந்து



விமர்சனம்
அம்முவாகிய நான்

இதுவரை பெரும்பாலும் துணைக் கதை களாகவே கையாளப்பட்டுள்ள, மரணம் தப்பி னால் மரணம் வகையிலான வில்லங்கமான ஒரு கதைக்களத்தை எடுத்துக் கொண்டு 'அம்முவாகிய நான்' திரைப்படத்தை இயக்கி உள்ள இயக்குனர் திரு.பத்மா மகனை நிச்சயம் பாராட்டலாம்.

அழகி படத்தில் நடுத்தட்டு தமிழ் குடும்பத்து ஆண்மகனை திரையில் பிரதிபலித்த பார்த்திபன் இப்படத்தில் எழுத்தாளனுக்கே உரிய மிருக்கு, கண்ணியம், எள்ளல், சமூக அக்கறை, உணர்ச்சி வசப்படுதல் என அனைத்து பரிமாணங்களையும் காட்டி தூள் பண்ணி இருக்கிறார்.

இயற்பிலேயே பார்த்திபன் எழுத்தாளனாக இருப்பதால் கௌரிசங்கர் கதாபாத்திரத்திற்கு தேவையான குணாதிசயங்கள் பார்த்திபனை மனதில் வைத்துத்தான் உருவாக்கப்பட்டதோ என மனதில் எண்ணம் எழுவதை தவிர்க்க முடியவில்லை.

படத்தில் மொத்தம் இருக்கும் கதா பாத்திரங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். படம் பார்த்துவிட்டு வெளியே வரும்போது ஒரு முறை 'ரீவைண்ட்' பண்ணி பார்த்தால் அத்தனை கதாபாத்திரங்களுக்கும் ஒரு காட்சியாவது மனதில் நிற்கும் படி இயக்குனர் அமைத்துள்ளார்.

"தங்கச்சின்னு சும்மாச்சுட்டா தப்பாயிடும், நீ நல்லா இரு" னா சொல்லும் அபிஷேக் ஆகட்டும், டாக்டரிடம்போய்விட்டுகண்கலங்கி பேசும் "விஜியக்கா" ராஜஸ்ரீ ஆகட்டும் துணை கதாபாத்திரங்கள், சாதனா, ராகதா, தென்னவன், பிதாமகன் மகாதேவன், சாந்தி வில்லியம்ஸ் உட்பட அனைவரும் பாத்திர மறிந்து அளவாக நடித்து இருக்கிற ார்கள். பாத்திர படைப்புகளும் கதையின் போக்குடனேயே இருப்பது இயக்குனர் ஒரு நல்ல திரைக்க(வி)தை ஆசிரியர் என நிருபிப்பதாக உள்ளது.

"கடவுள் சொன்னாரா?" "இல்லை கடவுள் கிட்ட நான் சொன்னேன்" இதுபோல நான் ரசித்த இன்னொரு வசனம் அம்முவாகிய நாவலை அறிமுகப்படுத்தும் காட்சியில் வரும் வசனம், ' இது ஒரு மொழிபெயர்ப்பு நூல் ஆம், வாழ்க்கை வார்த்தைகளாய்'

குழந்தையாணிமடத்தின் தலைவி சாதன ாவிடம் கொடுக்கும் காட்சியை பின்னணியாகக் கொண்டு, முன்னே காய்கறி பேரம்பேசும் வியாபாரக் காட்சி. இன்னக்கி உனக்கு ஃப்ர்ஸ்ட் நைட் என சொல்லி கதாநாயகியை பார்த்திபன் தூங்க வைக்கும் காட்சி என நிறைய காட்சிகள் உண்மையிலேயே வீவல் டிரீட்.

முதல் முறையாக படம் பார்க்கும் பொழுதுதான் பாடல்களைக் கேட்டாலும், திரையரங்கத்தை விட்டு வெளியே வந்த பின்னும் உன்னைச் சரணடைந்தேன் தோரணம் ஆயிரம் பாடல்கள் காதில் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன. சபேஷ்-முரளி பாடல் இசை மட்டுமின்றி, பின்னணி இசையிலும் சிறப்பாக உழைத்து இருப்பது

கண்கூடாகத் தெரிகிறது. பழனிபாரதியின் பாடல் வரிகளும் அருமை. படத்தில் இயக்குனரின் கண்களாக ஒளிப்பதிவு உள்ளது என்றால் அது மிகையாகாது. கதைக்கு தேவைப்படுவதினால் நெருக்கமான காட்சிகள் அதிகம். ஆனால் எதுவும் வரம்பு மீறவில்லை. பாராட்டுக்கள் பத்மாமகன்.

படத்தைப்பற்றி கிட்டத்தட்ட அனைத்து விசயங்களையும் சொல்லியாகிவிட்டது. ஏதோ ஒன்று குறைகிறதே!! ஆமாம் ஆமாம் படத்தின் கதாநாயகி அம்முவைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே என கேட்கலாம். 'லைஃப் டைம் ரோல்' அப்படின்னு நடிகைகளுக்கு 30, 40 படங்களுக்கு பின்புதான் வரும், அம்முவாக வாழ்ந்து காட்டியுள்ள பாரதிக்கு முதற்படத்திலேயே அப்படிப்பட்ட கதாபாத்திரம். இந்தப்படம் திரைப்பட விழாக்களில் பங்கு

வெறும்பொழுது பாரதிக்கு 'ஸ்டாண்டிங் ஓவேஷன்' நிச்சயம் கிடைக்கும்... திறமை அழகு ஒரு சேர அமைந்த பாரதிக்கு திரை உலகில் பெரிய சகாப்தம் காத்திருக்கின்றது.. மொத்தத்தில் ஒரு 'பிரீ டேய்ட் காதல் கதை' அம்முவாகிய நான்.

அம்முவிற்காக இன்னொருமுறை கூட படம் பார்க்கலாம்.

- வினையூக்கி

SARA SOLICITORS

Prosper House - 207
146 - 154 Kilburn High Road, Kilburn, London NW6 4JD
Tel: 020 7624 5030 Fax: 020 7624 5131 Mob: 07949 415 205

Email: mail@sarasolicitors.com | Web: www.sarasolicitors.com

We Specialise in following categories of Law
Immigration & Nationality
Residential Conveyancing
Commercial Conveyancing
Divorce & Domestic Violence
Landlord & Tenant | Employment

Please Contact:
Mr. Kris Saravanan
020 7624 5030
Sole Principal
Free Advice on Wednesdays

புதன் கிழமைகளில் இலவச ஆலோசனை

TILMAX®

Quality Comes First

EPOS SYSTEMS

We are here to support your business

CASIO QT-6000

WIRELESS WAITRESSING

XN 900

AURES ODYSSE

130 CR
£79

CASIO TE-M80
£159

CASIO TE-100
£249

CASIO TE-2000
£289

CASIO TE-2200
SPECIAL PRICE
£399

CASIO QT-2100
£999

CASIO TE-800F
£1,099

24/7 SUPPLY AND INSTALL SERVICE, MAINTAIN ALL MAKES OF EPOS & PRINTERS

ORDEMAN WIRELESS WAITRESSING

FREE DEMONSTRATION AND CONSULTATION ON YOUR REQUEST

ALL KINDS OF CATERING EQUIPMENT AND CHILLED DISPLAYS

INSTALMENT/RENTAL FACILITIES AVAILABLE(SUBJECT TO STATUS)

£179

0208 55 55 055 / 07852 184 510

WWW.TILMAX.CO.UK 328 HIGH ROAD LEYTONSTONE, LONDON E11 3HS

அருள்மிகு கற்பக வினாயகர் ஆலயம்

SRI KARPAHA VINAYAGAR TEMPLE

2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX
Tel: 020 8527 3819 charity No: 1092252



கொடியேற்றம்:	இரதோற்சவம்:	தீர்தோற்சவம்:
07.09.07	**16:09:07**	**17.09.07**
வெள்ளிக்கிழமை	ஞாயிற்றுக்கிழமை	திங்கட்கிழமை
காலை 11.00 மணி	காலை 10.00 மணி	காலை 10.45 மணி

ஆறாம் ஆண்டு வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம்

07.09.07 முதல் 17.09.07 வரை

அடியார்கள் அபிசேகத்திற்கு வேண்டிய பால் தயிர் பூக்கள் பூசைப் பொருட்கள் கொண்டுவந்து உற்சவத்தில் கலந்து ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானின் பேரருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

06.09.07 வியாழன் விநாயக வழிபாடு அனுக்கை கணபதி ஹோம் திராயசாந்தி
மாலை 5.00மணி பிரவேச பலி வாஸ்து சாந்தி மிருத்சங்கிரஹணம் அங்குரார்ப்பணம்

07.09.07 வெள்ளி	காலை 7.00 மணி: ஸ்நபனாபிஹேகம் ஆரம்பம்
	காலை 8.00 மணி காலைச்சந்திப் பூஜை
	காலை 9.00 மணி பேரிதாடனம்
	காலை 9.30 மணி வசந்தமண்டப பூஜை கொடியேற்றக்கிரியைகள்
	காலை 11.00 மணி துவஜாரோஹணம் தம்பபூஜை சுவாமி வீதியுலா
	மதியம் 1.00 மணி பிரிசாதம் வழங்கல்
	மாலை 6.00 மணி யாக பூஜை ஆரம்பம்
	மாலை பூஜைகள் நேர அட்டவணைப்படி நடைபெறும்

08.09.07 சனிக்கிழமை முதல் 15.09.07 சனிக்கிழமை வரை

காலை 8.30	மணி பூஜை
காலை 9.30	மணி தம்ப பூஜை
காலை 11.30	மணி வசந்தமண்டப பூஜை
காலை 12.45	மணி பிரசாதம் வழங்கல்
மாலை 5.30	மணி சாயரட்டைப் பூஜை பூ
மாலை 6.30	மணி தம்ப பூஜை
இரவு 7.00	மணி கலை நிகழ்வு
இரவு 8.00	மணி வசந்தமண்டப பூஜை
இரவு 9.00	மணி சுவாமி வீதி உலா
இரவு 9.30	மணி அர்த்தசாமப் பூஜை

16.09.07 ஞாயிறு — தேர்த்திருவிழா

காலை 8.30	மணி வசந்த மண்டப பூஜை
காலை 10.00	மணி சுவாமி தேரில் எழுந்தருளுவார்
காலை 10.30	மணி தேர்வடம் பிடிதல்
பிற்பகல் 12.45	மணி தேர் இருப்பிடத்தை அடைதல்
பிற்பகல் 1.00	மணி பச்சை சாத்துதல்
பிற்பகல் 1.30	மணி பிராயச்சித்த அபிசேகம்

17.09.07 திங்கள் — தீர்த்தோற்சவம்

காலை 7.00	மணி ஸ்நபநாபிசேகம்
காலை 9.00	மணி பேரிதாடனம்
காலை 10.00	மணி வசந்த மண்டப பூஜை
காலை 10.45	மணி தீர்த்தோற்சவம்
மாலை 8.00	மணி கொடியிறக்கம்

18.09.07 செவ்வாய் — பூங்காவனம்

காலை 10.00	மணி 108 சங்காபிசேகம்
மாலை 6.00	மணி சாயரட்டைப் பூஜை
இரவு 8.00	மணி திருக்கல்யாணம்

19.09.07 புதன் — வைரவர் மடை

காலை 10.30	மணி நடேசரபிசேகம்

15.09.07 சனி — விநாயகர் சதுர்த்தி விரதம்

காலை 8.00	மணி 1நி பால்குட அபிசேகம்

கடந்த ஆண்டு போல் விநாயகப் பெருமான் புதிய 22 அடி தேரிலும் முருகன் வள்ளி-தெய்வானை கந்தரேஸ்வரர் - மீனாட்சி இரண்டு தேர்களிலும் பவனி வருகின்றார்கள்.

07.09.07	வெள்ளி	கொடியேற்றம் மாலை மூஷிக வாகனக் காட்சி
08.08.07	சனி	2ம் திருவிழா மாலை துர்வா கணபதி உற்சவம்
09.09.07	ஞாயிறு	3ம் திருவிழா சக்தி கணபதி உற்சவம்

ஆவணி சதுர்த்தி 108 சங்காபிசேகம்

10.09.07	திங்கள்	4ம் திருவிழா புஷ்ப கணபதி உற்சவம் - தேவ பாராயணத் திருவிழா
11.09.07	செவ்வாய்	5ம் திருவிழா பக்தி முக்தி பாவநோற்வசந்த உற்சவம் - திருமுறைப் பாராயணம்
12.09.07	புதன்	6ம் திருவிழா வசந்த உற்சவம் - வீணை மிருதங்க வயலின்
13.09.07	வியாழன்	7ம் திருவிழா மாம்பழத் திருவிழா
14.09.07	வெள்ளி	8ம் திருவிழா வேட்டைத் திருவிழா
15.09.07	சனி	9ம் திருவிழா சப்பறத் திருவிழா
16.09.07	ஞாயிறு	10ம் திருவிழா தேர்த்திருவிழா
17.09.07	திங்கள்	11ம் திருவிழா தீர்த்தத் திருவிழா
18.09.07	செவ்வாய்	12ம் திருவிழா பூங்காவனம்
19.09.07	புதன்	வைரவர் மடை

தினமும் காலையும் மாலையும் உலகப்புகழ் தவில் மேதை காலஞ்சென்ற தவில் வித்துவான் தட்சணாமூர்த்தியின் மைந்தன் ஈழத்தின் பிரபல தவில் வித்துவான் உதயசங்கர் கேதீஸ் சிதரம்பரநாதன் குழுவினரின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும். அவர்களுடன் தமிழநாடு புகழ் (அரச கலைஞர்) முத்துக்குமாரன், காரைக்குடி புகழ் மணிகண்டன் குழுவினரும்.

உங்சவ காலத்தில் பக்தர்கள் செலுத்தும் காணிக்கைப் பணம் அனைத்தும் அண்மையில் திருகோணமலையில் யுத்தத்தால் பாதிப்புற்ற தமிழ் மக்கள் துயர் தீர்க்க தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக அனுப்பி வைக்கப்படும்.

அடியார்கள் அபிசேகத்திற்கு வேண்டிய பால் தயிர் பூக்கள் பூசைப் பொருட்கள் கொண்டுவந்து உற்சவத்தில் கலந்து ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானின் பேரருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.